KURIKULUM STANDARD SEKOLAH RENDAH

# தமிழ்மொழி
# BAHASA TAMIL

ஆண்டு
TAHUN
6

SEKOLAH JENIS KEBANGSAAN TAMIL
தேசிய வகைத் தமிழ்ப்பள்ளி


*Penulis*

Saraswathy Kannan
Chandran Veramuthu
Kalaiyamuthan Ravindran

*Editor*

Pithaullah Hayath Basha
Haji Mydin Sultan

*Pereka Grafik*

Sivakumar Perumal

*Ilustrator*

Azrul Helmi Bin Abd. Wahab
Armizan Bin Yunos
Maseh Bin Supian

**ஆசிரியர்கள்**
சரஸ்வதி கண்ணன்
சந்திரன் வீரமுத்து
கலையமுதன் ரவீந்திரன்

**பதிப்பாசிரியர்கள்**
பிதாவுல்லாஹ் ஹயாத் பாஷா
ஹாஜி மைதீன் சுல்தான்

**வடிவமைப்பாளர்**
சிவகுமார் பெருமாள்

**ஓவியர்கள்**
அஸ்ருல் ஹெல்மி பின் அப்துல் வஹாப்
அர்மிசான் பின் யூனூஸ்
மாசேஹ் பின் சுப்பியான்



**Multi Educational Book Enterprise**
**2015**

pendahuluan 1_Munnurai 10/2/2015 1:58 PM Page 2

KEMENTERIAN PENDIDIKAN MALAYSIA

No. Siri Buku : 0039

ISBN : 978-983-9286-88-5

Cetakan Pertama 2015

© **Multi Educational Book Enterprise**

Hak Cipta Terpelihara. Tidak dibenarkan menerbitkan semula mana-mana bahagian artikel, ilustrasi dan isi kandungan buku ini dalam apa juga bentuk dan dengan cara apa jua sama ada secara elektronik, fotokopi, mekanikal, rakaman atau cara lain sebelum mendapat izin bertulis daripada **Multi Educational Book Enterprise.**

**Penerbit:**

**Multi Educational Book Enterprise**
No. 22A-2, Jalan PJS 8/4, Dataran Mentari,
Bandar Sunway, 46150 Petaling Jaya,
Selangor Darul Ehsan.
Tel : 03-5636 2568 Faks : 03-5636 0825
E-mel : multiedu@yahoo.com
www.multiedu.com.my

**Muka Taip teks :**

**KBSR ROM** 12 **poin**
**LT-TM Dhanyeta** 13 **poin**

***Dicetak Oleh :***

**Aslita Sdn. Bhd.** (146102-U)
No. 20, Jalan 4/10B,
Spring Crest Industrial Park,
Batu Caves, 68100 Kuala Lumpur.
Tel : 03 - 6186 7645 Faks : 03 - 6186 7635
E-mel : aslita2000@yahoo.com

## *Penghargaan*

Penghasilan buku ini telah melibatkan kerjasama banyak pihak. Oleh itu, **Multi Educational Book Enterprise** merakamkan penghargaan dan jutaan terima kasih kepada semua pihak yang telah bersama-sama memberikan sumbangan sehingga buku ini sempurna diterbitkan. Sekalung penghargaan dan ucapan terima kasih ditujukan khusus kepada semua pihak yang berikut:

- Bahagian Buku Teks, Kementerian Pendidikan Malaysia
- Bahagian Pembangunan Kurikulum, Kementerian Pendidikan Malaysia
- Kementerian Pelancongan Malaysia
- Jabatan Penerangan Malaysia
- Jawatankuasa Kawalan Mutu Penerbit
- SJKT Hicom, Shah Alam, Selangor
- SJKT Bangi, Selangor
- SJKT Kajang, Selangor
- SJKT Castlefield, Selangor
- Akhbar Malaysia Nanban
- Barathi Fine Arts, Taman Melawati, Kuala Lumpur

# உள்ளடக்கம்

முன்னுரை v

**தொகுதி 1 மொழியும் நாமும்**

1 தமிழ் வாழ்த்து 1 - 3
2 இனிமைத் தமிழ்மொழி 4 - 5
3 செம்மொழிச் சிறப்பிகள் 6 - 7
4 செய்யுளும் மொழியணியும் 8 - 9
5 இலக்கணம் 10 - 11

**தொகுதி 2 இயற்கை**

1 இயற்கையை நேசிப்போம் 12 - 13
2 பசுமைத் திட்டம் 14 - 15
3 காடுகளின் அருமை 16 - 17
4 செய்யுளும் மொழியணியு 18 - 19
5 இலக்கணம் 20 - 21

**தொகுதி 3 அறிவியல்**

1 செயற்கைக் கோள் 22 - 23
2 சாதனை செய்தோம் 24 - 26
3 இபோலா நோய்க் கிருமி 27 - 28
4 செய்யுளும் மொழியணியும் 29 - 30
5 இலக்கணம் 31 - 32

**தொகுதி 4 நிருவகிப்பு**

1 நேர ஒதுக்கீடு 33 - 34
2 காலம் போற்றுவோம் 35 - 36
3 அளவான செலவு 37 - 38
4 செய்யுளும் மொழியணியும் 39 - 40
5 இலக்கணம் 41 - 42

**தொகுதி 5 நலமான வாழ்வு**

1 சீராக வாழ்வோம் 43 - 44
2 உணவும் குணமும் 45 - 46
3 நோய் தீர்க்கும் பழங்கள் 47 - 49
4 செய்யுளும் மொழியணியும் 50 - 51
5 இலக்கணம் 52 - 53

**தொகுதி 6 வாழ்வும் சேவையும்**

1 இளையோர் உலகம் 54 - 55
2 கூர்ந்து வாசிப்போம் 56 - 58
3 தொண்டு செய்வோம் 59 - 60
4 செய்யுளும் மொழியணியும் 61 - 62
5 இலக்கணம் 63 - 64

**தொகுதி 7 வரலாறு அறிவோம்**

1 அன்றும் இன்றும் 65 - 66
2 வரலாற்று மாநிலம் 67 - 68
3 உருவாக்குவேன் 69 - 70
4 செய்யுளும் மொழியணியும் 71 - 72
5 இலக்கணம் 73 - 74

**தொகுதி 8 தகவல் உலகம்**

1 சாதகமா பாதகமா 75 - 76
2 இணையத்தளம் 77 - 78
3 தகவல் தொழில்நுட்பம் 79 - 80
4 செய்யுளும் மொழியணியும் 81 - 82
5 இலக்கணம் 83 - 84

**தொகுதி 9 புராணங்களை அறிவோம்**

1 தசரத மன்னன் 85 - 86
2 பாண்டவர்களின் தானம் 87 - 89
3 தன்னம்பிக்கை 90 - 91
4 செய்யுளும் மொழியணியும் 92 - 93
5 இலக்கணம் 94 - 95

**தொகுதி 10 பண்பு போற்றுவோம்**

1 பள்ளியா சமுதாயமா 96 - 97
2 எங்கள் வெற்றி 98 - 99
3 கவரும் ஊடகங்கள் 100 - 101
4 செய்யுளும் மொழியணியும் 102 - 103
5 இலக்கணம் 104 - 105
மீள்பார்வைப் பயிற்சிகள் 106 - 108

**தொகுதி 11 நாட்டுப் பற்று**

1 வரலாற்றுத் திரட்டேடு 109 - 110
2 நெகிரி செம்பிலான் 111 - 113
3 ஆண்டுக் கூட்ட அறிக்கை 114 - 115
4 செய்யுளும் மொழியணியும் 116 - 117
5 இலக்கணம் 118 - 119

**தொகுதி 12 குறியீடுகளும் வரைபடங்களும்**

1 கணினிப் பயன்பாடு 120 - 121
2 பொதிகைப் பேரங்காடி 122 - 123
3 சொல்வளம் 124 - 126
4 செய்யுளும் மொழியணியும் 127 - 128
5 இலக்கணம் 129 - 130

**தொகுதி 13 கதைகளும் அனுபவங்களும்**

1 முடிவைக் கூறுங்கள் 131 - 132
2 சுகாதாரக் கருத்தரங்கு 133 - 134
3 அன்புப் பரிசு 135 - 136
4 செய்யுளும் மொழியணியும் 137 - 138
5 இலக்கணம் 139 - 141

**தொகுதி 14 கதம்ப மேடை**

1 தனித்திறமை வேண்டும் 142 - 143
2 இயற்கைச் சீற்றம் 144 - 145
3 அலுவல் கடிதம் 146 - 147
4 செய்யுளும் மொழியணியும் 148 - 149
5 இலக்கணம் 150 - 152

**தொகுதி 15 பழைமையில் இனிமை**

1 சமையலோ சமையல் 153 - 154
2 கவிதை மேடை 155 - 156
3 நினைவில் கொள்வோம் 157 - 159
4 செய்யுளும் மொழியணியும் 160 - 161
5 இலக்கணம் 162 - 163

**தொகுதி 16 பொதுநலம் பேணுவோம்**

1 சாலை விபத்து 164 - 165
2 சுற்றுலா அறிக்கை 166 - 168
3 கூட்டுப்பணி 169 - 170
4 செய்யுளும் மொழியணியும் 171 - 172
5 இலக்கணம் 173 - 174

**தொகுதி 17 நம்மைச் சுற்றி அறிவோம்**

1 வாழ்க்கைத் தரம் 175 - 176
2 சுத்தம் பேணுவோம் 177 - 178
3 உலக அதிசயங்கள் 179 - 181
4 செய்யுளும் மொழியணியும் 182 - 183
5 இலக்கணம் 184 - 185

**தொகுதி 18 வளம் பெறுவோம்**

1 சீரான உணவுப் பழக்கம் 186 - 187
2 பறக்கும் பட்டம் 188 - 190
3 பல பொருள் அறிவோம் 191 - 192
4 செய்யுளும் மொழியணியும் 193 - 194
5 இலக்கணம் 195 - 196

**தொகுதி 19 தொழில்நுட்பமும் அறிவியலும்**

1 புத்தாக்கம் 197 - 198
2 செல்லிடப்பேசி 199 - 200
3 படித்ததில் பிடித்தது 201 - 202
4 செய்யுளும் மொழியணியும் 203 - 205
5 இலக்கணம் 206 - 207

**தொகுதி 20 காரணங்களும் காரியங்களும்**

1 பண்புடன் உரையாடுக 208 - 210
2 சுற்றுச்சூழலைப் பேணுக 211 - 212
3 சிறந்தது 213 - 214
4 செய்யுளும் மொழியணியும் 215 - 216
5 இலக்கணம் 217 - 218

# முன்னுரை

‘இன்பத் தமிழ்க் கல்வியை யாவரும் கற்றவர் என்றுரைக்கும் நிலை எய்திவிட்டால், துன்பங்கள் நீங்கும், சுகம் வரும், நெஞ்சினிலே தூய்மை உண்டாகிடும்; வீரம் வரும்’ என்கின்றார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன். இத்துணைப் பெருமையும் சிறப்பும் வாய்ந்த கல்வியை நம் மாணவமணிகள் குறைவின்றிப் பெறக் கல்விக் கூடங்கள் முக்கியப் பங்காற்றுகின்றன.

**கற்றறி வாளர் கருதிய காலத்துக்**
**கற்றறி வாளர் கருத்திலோர் கண்ணுண்டு**
**கற்றறி வாளர் கருதி உரைசெயும்**
**கற்றறி காட்டக் கயலுள ஆக்குமே. (திருமந்திரம் 291)**

கல்வி நிறைந்தவர் வாழும் நாடு வளமில்லாது இருப்பின், அந்நாட்டை வளமாக்கும் திறமை கற்றோருக்கு மட்டுமே உளது. கல்வி மட்டுமே திறமைகளை வளர்க்கும் ஆற்றலையும் சிறப்பையும் கொண்டது என்பதுதான் மேற்கண்ட திருமந்திரத்தின் பொருளாகும். எனவே, கற்றோர் வரிசையில் முதலிடத்தில் இருக்கும் அன்புசால் ஆசான்களாகிய நாம் மாணவர்களுக்குச் சிறப்பான கல்வியைக் கற்பிப்பதைக் கடமையாகக் கொள்ள வேண்டும். கற்றல் கற்பித்தலைச் செவ்வனே ஆற்றுவதற்குச் சிறந்ததொரு மேற்கோள் நூலாகத் திகழ்வது பாடநூலேயாகும். அதுமட்டுமின்றி, தேசியக் கல்வித் தத்துவத்தின் அடிப்படையில் தமிழ்மொழிக் கல்வியானது நம் மாணவர்களின் அறிவாற்றல், ஆன்மிகம், உடல், உள சமச்சீர் ஆகியவற்றை மேலும் வளப்படுத்தும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

நாம் கற்பிக்கும் கல்வியானது மாணவர்களின் உடல், உள்ளம், ஆன்மா ஆகிய ஆளுமைக் கூறுகளின் சிறந்த பண்புகளையும் வெளிக்கொணரும் செயல்முறையாகும். இப்பாடநூலின்வழி மாணவர்கள் மொழித்திறன்களை அடைவது மட்டுமின்றி அறிவாற்றலுடன் நற்பண்புகள் நிறைந்த மானிடராய்த் திகழவும் செய்யும்.

இப்பாட நூல் மொத்தம் இருபது கற்றல் தொகுதிகளாய்ப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு தொகுதியிலும் கேட்டல், பேச்சு, வாசிப்பு, எழுத்து ஆகிய மொழித் திறன்களோடு செய்யுளும் மொழியணியும் இலக்கணமும் ஒருசேர அமைக்கப்பட்டுள்ளன. சின்னஞ்சிறு வயதில் போதிக்கும் போதனைகளே நம் மாணவர்களை ஒழுக்கச் சீலர்களாகவும் சான்றோர்களாகவும் ஆக்கும். கற்பவை அனைத்தும் பசுமரத்தாணி போல ஆழமாகப் பதிந்து நிற்கும். இவற்றைக் கருத்தில் கொண்டு மாணவர்களின்

pendahuluan 1_Munnurai 10/2/2015 1:58 PM Page 6

தேவைகளையும் திறன்களையும் அறிந்து இலக்கணப் பிரிவும், அவர்களின் பண்பு வளர்ச்சிக்கு நீதி நெறிப் பாடல்களும் செய்யுளும் மொழியணியும் அலங்கரிக்கின்றன.

மாணவர்கள் இன்பத் தமிழ்மொழியை இனிமையாகவும் எளிமையாகவும் கற்கும் வகையில் கூடிக் கற்றல், நாடிக் கற்றல் போன்ற நடவடிக்கைகளும் குழு நடவடிக்கைகளும் இப்பாடநூலில் இணைக்கப்பட்டுள்ளன. மேலும், மாணவர்களின் கருத்துப் பரிமாற்ற அணுகுமுறையை மையமாகக் கொண்டும் உயரிய சிந்தனை ஆற்றலை வெளிக் கொணரவும் பல நடவடிக்கைகள் இணைக்கப்பட்டுள்ளன.

கல்வித் துறையில் ஏற்படும் புதுப்புது பரிமாணங்களுக்கு ஏற்பவும் எதிர்கொள்ளவும் நம் மாணவர்களை ஆசிரியர்களான நாம் வடிவமைக்க வேண்டும். எனவே, நல்லாசான்களாக விளங்கும் நாம் அனைவரும் ஒருங்கிணைந்து தமிழ்க்கல்வி சிறந்தோங்கப் பாடுபடுவோம். இறுதியாக, எங்களின் எண்ணங்களை எழுத்து வடிவமாக்கி அதனைத் தொகுத்து ஒரு சிறந்த பாடநூலாக்க உதவி நல்கிய மலேசியக் கல்வி அமைச்சின் பாடநூல் பிரிவுக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கல்வி கற்ற சமுதாயத்தை உருவாக்குவோம்
கல்லாமையை இல்லாமை ஆக்குவோம்.

நன்றி,
ஆசிரியர்கள்.

## மொழிக்கூறுகளுக்கான படச் சின்னங்கள்


தொகுதி


கேட்டல் பேச்சு


வாசிப்பு


எழுத்து


செய்யுளும் மொழியணியும்


இலக்கணம்


நடவடிக்கை


இடுபணி

BT Year 6 1_Layout 1 10/2/2015 1:18 PM Page 1



# தொகுதி 1 மொழியும் நாமும்

## பாடம் 1 தமிழ் வாழ்த்து

கவிதையை நயத்துடன் பாடுக.

காப்பியனை ஈன்றவளே!
காப்பியங்கள் கண்டவளே!
கலைவளர்த்த தமிழகத்தின்
தலைநிலத்தில் ஆள்பவளே!
தாய்ப்புலமை யாற்புவியில்
தனிப்பெருமை கொண்டவளே!
தமிழரொடு புலம்பெயர்ந்து
தரணியெங்கும் வாழ்பவளே!

எங்களெழில் மலேசியத்தில்
சிங்கைதனில் ஈழமண்ணில்
இலக்கியமாய் வழக்கியலாய்
இனக்காவல் தருபவளே!
பொங்கிவளர் அறிவியலின்
புத்தாக்கம் அத்தனைக்கும்
பொருந்தியின்று மின்னுலகில்
புரட்சிவலம் வருபவளே!




1.7.6 விளக்கம் பெறப் பொருத்தமான வினாச் சொற்களைப் பயன்படுத்திக் கேள்விகள் கேட்பர்.


BT Year 6 1_Layout 1 10/2/2015 1:18 PM Page 2




செவ்வியலின் இலக்கியங்கள்
செழித்திருந்த பொற்காலம்
சேர்த்துவைத்த செயுள்வளத்தில்
செம்மாந்த பழையவளே!
அவ்வியலில் வேரூன்றி
அறிவுயர்ந்த தற்காலம்
அழகழகாய் உரைநடையும்
ஆளுகின்ற புதியவளே!

குலங்கடந்து நெறிகடந்து
நிலவரம்பின் தடைகடந்து
கோமகளாய்த் தமிழர்மனம்
கொலுவிருக்கும் தமிழணங்கே!
நிலவினுக்கே பெயர்ந்தாலும்
நினதாட்சி தொடருமம்மா!
நிறைகுறையாச் செம்மொழியே
நிலைபெறநீ வாழியவே!

- இறையருட் கவிஞர் செ. சீனி நைனா முகம்மது



## நடவடிக்கை I

**கொடுக்கப்பட்ட வினாச் சொற்களைப் பயன்படுத்திக் கேள்விகள் கேட்டிடுக.**

எங்கு
எவ்வாறு
ஏன்
எப்படி
யாது

- வேறு வாழ்த்துப் பா
- நிகழ்ச்சிகள்
- இயற்றியவர்
- தமிழ் வாழ்த்து
- அவசியம்
- கருத்துகள்
- உணர்வுகள்


**அருஞ்சொற்கள்**

- காப்பியங்கள்
- ஆள்பவளே
- தரணியெங்கும்
- புத்தாக்கம்
- பொற்காலம்
- வேரூன்றி
- தடை கடந்து
- புரட்சி வலம்
- இலக்கியங்கள்
- தற்காலம்

## நடவடிக்கை 2

**பொருத்தமான வினாச் சொற்களைப் பயன்படுத்திக் கேள்விகளைக் கேட்டிடுக.**

**எடுத்துக்காட்டு :**



காப்பியன் என்ற சொல்
**எதைக்** குறிக்கின்றது?

காப்பியன் என்ற சொல்
தொல்காப்பியரைக் குறிக்கின்றது.





என்ன? ________

தொல்காப்பியம் என்றால் மொழிக்கும்
இலக்கியத்திற்கும் இலக்கணம் கூறும் நூல்.




எவ்வாறு? ________

தொல் + காப்பு + இயம் + என்று
பிரிக்கலாம்.



யாது? ________

தொன்மரபுகளைக் காக்கும் நூல்
எனப் பொருள்படும்.



எவற்றை? ________

முத்தமிழ் என்பது இயல், இசை, நாடகம்
ஆகியவற்றைக் குறிக்கும்.





பாடம் 2

# இனிமைத் தமிழ்மொழி



## உரையை வாசித்து அறிக.

என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறு

பெருமதிப்பிற்குரிய அவைத் தலைவர் அவர்களே!
பேரன்புக்குரிய தலைமையாசிரியர் அவர்களே! பாசமிகு ஆசிரியப் பெருந்தகைகளே!
என் சக நண்பர்களே! உங்கள் அனைவருக்கும் எனது முத்தான முத்தமிழ்
வணக்கத்தைக் கூறிக் கொள்கின்றேன்.

இவ்வினிய காலை வேளையில் இனிமைத் தமிழ்மொழியைப் பற்றிப் பேச வந்துள்ளேன்.

அன்பார்ந்த அவையோர்களே!

மிகத் தொன்மையான மொழிகளுள் தமிழ்மொழியும் ஒன்று. தமிழ்மொழி மீது தமிழர்க்கு அளவு கடந்த பற்றுண்டு. தமிழ்மொழியைத் தேன்தமிழ், தீந்தமிழ் என்றும் இனிமைப்படுத்திக் கூறுவர். பைந்தமிழ் எனப் பெயரிட்டு அதன் இளமைத் தன்மையைச் சுட்டுவர். செந்தமிழ் என அழைத்து அதன் செம்மையைக் குறிப்பர்.

அவையோர்களே!

தமிழ் எனும் சொல்லில் ‘த’ வல்லினத்தைச் சார்ந்தது. ‘மி’ மெல்லினத்தைச் சார்ந்தது. ‘ழ்’ இடையினத்தைச் சார்ந்தது. தமிழ்மொழியில் உள்ள ழகர ஒலியானது பிற மொழிகளில் இல்லாத சிறப்பு அம்சமாகக் கருதப்படுகின்றது. இவ்வாறு தமிழ்மொழி இனிமை எனும் பொருள் கொண்டு சிறப்பானதாகக் கருதப்படுகின்றது.

எனதருமை நண்பர்களே!
தமிழ்மொழியை முத்தமிழ் எனவும் சிறப்பித்துக் கூறுவது அம்மொழிக்கு மேலும் பெருமை தருகின்றது. இயற்றமிழ் என்பது செய்யுள், உரைநடை நூல்களைக் குறிக்கும். இசைத்தமிழ், இசைப் பாடல்களைக் குறிக்கின்றது. இவை நம் உள்ளத்தை

2.6.24 உரையை வாசித்துப் புரிந்து கொள்வர்.

நெகிழச் செய்வன. நாடகத் தமிழ் என்பது பேச்சாலும் நடிப்பாலும் கருத்துகளைக் கூறுவதாகும்.

தமிழ்மொழிக்குள்ள சிறப்புகளுள் சொற்சிறப்பும் ஒன்றாகும். தமிழ்ச் சொற்கள் பல, ஒரு பொருளின் பெயரைச் சுட்டிக்காட்டுவதுடன் அதன் பல்வேறு பருவத்தையும் உணர்த்துகின்றன. எடுத்துக்காட்டாகக் கொழுந்து, தளிர், இலை, பழுப்பு, சருகு என்று ஓர் இலையின் உருவத்தையும் பருவத்தையும் அழகாகக் காட்டுகின்றது. இதுபோன்ற பல சொற்கள் தமிழ்மொழியில் உருவம், பருவம் ஆகிய இரண்டையும் ஒருங்கே காட்டும் தன்மை வாய்ந்தவையாக அமைகின்றன.

எனதருமை சபையோரே!

தமிழ்மொழியைப் போற்றிய பலரும் இம்மொழியில் புலமை பெற்றுத் திகழ்ந்தனர். புலமையின் அடையாளமாகப் பல சிறந்த நூல்களையும் படைத்தனர். தங்களின் படைப்புகளின் மூலம் உயர்ந்த கருத்துகளையும் கூறினர்.

**‘யாதும் ஊரே யாவரும் கேளிர்’** என்று பாடினார் புலவர் கனியன் பூங்குன்றனார். ஆம், உலக மக்கள் அனைவரையும் தமிழர்கள் உறவினராகக் கொண்டனர். சொல்லில் இனிமை, பொருளில் இனிமை, ஓசையில் இனிமை, இலக்கணத்தில் இனிமை, இலக்கியத்தில் இனிமை எனப் பல இனிமைகள் நிறைந்த தமிழ்மொழியை நமதாகப் பெற்றிருப்பது நாம் பெற்ற பெருமையல்லவா! எனவே, இவ்வினிய மொழியைப் போற்றிப் பாதுகாப்போம் எனக் கூறி எனதுரையை முடிக்கின்றேன். நன்றி, வணக்கம்.



நடவடிக்கை 1

**உரையை ஏற்ற தொனியுடன் வாசித்திடுக.**



நடவடிக்கை 2

**வினாக்களுக்கு விடை கூறுக.**

1. தமிழ்மொழியை வேறு எப்படி அழைக்கலாம்?
2. தமிழ்மொழியை எவ்வாறு இனிமைப்படுத்துகின்றனர்?
3. தமிழ்மொழியின் சிறப்பு அம்சம் யாது?
4. தமிழ்மொழிக்கு மேலும் பெருமை தருபவை எவை?
5. புலவர் கனியன் பூங்குன்றனார் கூறிய கூற்றை விளக்கிக் கூறுக.

**தகவல் உலகம்**

நல்ல தமிழ் அறிக.

| | |
|---|---|
| ✗ அகண்ட | ✓ அகன்ற |
| ✗ புட்டு | ✓ பிட்டு |
| ✗ பயறு | ✓ பயிறு |
| ✗ மோர்ந்து | ✓ மோந்து |
| ✗ புடவை | ✓ புடைவை |
| ✗ புண்ணாக்கு | ✓ பிண்ணாக்கு |
| ✗ தமயன் | ✓ தமையன் |

BT Year 6 1_Layout 1 10/2/2015 1:19 PM Page 6

# பாடம் 3 செம்மொழிச் சிற்பிகள்

## உரையை வாசித்து எழுதுக.

தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும்வகை செய்தல் வேண்டும்

எனும் மகாகவி பாரதியாரின் கவிதை வரிகளைக் கூறி என் மனமார்ந்த வணக்கத்தை அவையோர் அனைவருக்கும் சமர்ப்பிக்கின்றேன்.
அன்பார்ந்த அவையோரே!

தமிழ்மொழியின் மீது பற்றுக் கொண்டு இன்று இவ்வரங்கத்தில் திரளாகக் கூடியிருக்கும் தமிழ் நெஞ்சங்களே, உங்கள் அனைவரையும் வருக வருக என வரவேற்பதில் பெருமிதம் கொள்கிறேன்.

உலகில் எவருக்கும் கிடைக்காத பெருமை நமக்கு உண்டு. அதுதான் உலகின் முதன்மொழிக்குச் சொந்தக்காரர்கள் நாம் எனும் பெரும்பேறு. தொல்காப்பியம் தொடங்கி, சங்க இலக்கியம், திருக்குறள் போன்ற தலைசிறந்த படைப்புகள் தமிழ்மொழியின் இலக்கிய வளத்திற்குச் சான்றுகள். வரலாறு, வாழ்க்கை முறைமை, பண்பாட்டுச் செழுமை, மனித நேயம், இயற்கையை நேசித்தல், இசை, கலைகள் போன்ற பலவற்றை வெளிப்படுத்துகின்றன.
அவையோரே!

காலத்தால் முந்தியது என்பதோடு கருத்து வளத்திலும் சிறந்து விளங்கும் தமிழ்மொழியின் ஆற்றலைக் கண்டு பன்னாட்டு மொழி ஆய்வாளர்கள் வியந்தனர். தமிழ்மொழியைச் செம்மொழி எனப் போற்றும் நிலைக்கு அடித்தளமாக இருந்தவர்கள் பலர். உலகம் போற்றும் செம்மொழிச் சிற்பிகளைப் பற்றிய நினைவுகளை இன்று உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் பெருமை கொள்கிறேன். மொழி என்பது குணத்தோடும் உணர்வோடும் தொடர்புடையது என்பதற்கு எடுத்துக்காட்டாகத் திகழ்ந்து தமிழுக்குத் தொண்டாற்றியவர் வீரமாமுனிவர். தமிழின் முதல் அகரமுதலி எனப்படும் சதுரகராதியை முதலில் வெளியிட்டவர் இவரே. தமிழ்மொழியின் மீது ஈர்ப்புக் கொண்ட இவர் ஜோசப் பெஸ்கி என்றிருந்த தமது பெயரை வீரமாமுனிவர் என்றிருந்த தமிழ்ப் பெயராக மாற்றிக் கொண்டார். திருக்குறளின் மகத்துவம் அறிந்து அதன் அறத்துப்பாலையும் பொருட்பாலையும் லத்தீன் மொழியில் மொழிபெயர்த்தார். செந்தமிழ் இலக்கணம்,




வீரமாமுனிவர்

3.7.9 உரையை நினைவு கூர்ந்து எழுதுவர்.

ஞானக்கண்ணாடி, வேத விளக்கம் போன்ற நூல்களை இயற்றித் தமிழுக்கு எண்ணற்ற அணிகலன்களைத் தந்து பெருமைப்படுத்தினார் என்பதையும் நாம் அறிந்திருக்க வேண்டியது அவசியம்.

அன்பானவர்களே!




தந்தை பெரியார்

20ஆம் நூற்றாண்டில் போற்றத்தக்கவர்களுள் தந்தை பெரியாரும் ஒருவர். அவர் தமிழ்மொழியும் தமிழினமும் பெருமைப்படும் அளவிற்குப் பல அரிய செயல்களை ஆற்றியவர். இவர்போல் இன்னொருவர் இனிப் பிறக்க முடியாது என்று கூறும் அளவுக்குப் பெரும் பங்காற்றியவர் தந்தை பெரியார். இவரது இயற்பெயர் ஈ.வே. ராமசாமி. இவர்தான் தமிழ்மொழியில் எழுத்துச் சீர்திருத்தம் கொண்டு வந்தார். மக்களிடையே பகுத்தறிவு, சுயமரியாதை போன்ற உணர்வுகளை விளக்கப் பாடுபட்டார்.

சமூகத்தின் வளர்ச்சிக்காக அல்லும் பகலும் கவலைப்பட்டார். தமிழர்கள் மது அருந்தி போதை தெளியாமல் இருக்கும் நிலையை எண்ணித் தமது தோட்டத்தில் இருந்த ஆயிரக்கணக்கான கள் இறக்கும் தென்னை மரங்களை வெட்டிச் சாய்த்தார். இந்திய தேசத் தந்தை காந்தியடிகள் இதற்காக அவரைப் பெரிதும் பாராட்டினார். தாமே முன்னுதாரணமாக இருந்து தமிழர்களின் விடியலுக்காக அயராமல் பாடுபட்ட பெரியார், மூட நம்பிக்கைகளுக்கு எதிராகப் பெரும் புரட்சியை உண்டாக்கினார்.

எனதருமை பெரியோர்களே!




பெருஞ்சித்திரனார்

மொழி என்பது கருத்துப் பரிமாற்றக் கருவி மட்டும் அல்ல. அதுவே, அறிவின் அடிப்படை என்பதை ஆய்வுப்பூர்வமாக நிறுவியவர் பெருஞ்சித்திரனார் அவர்கள். தமது அனல் வீசும் பேச்சினால் மாணவர்களிடையே தமிழுணர்வை ஊட்டினார். ‘ஐயை’ எனும் தனித்தமிழ்ப் பாவியத்தின் முதல் தொகுதியை எழுதினார். கனிச்சாறு, எண்சுவை எண்பது, மகுபுகுவஞ்சி போன்ற இவரின் நூல்களின் தலைப்புகளே தமிழுக்குத் தொண்டு செய்வதாய் அமைந்தன. சிறுவர்களிடையே தமிழுணர்வை வளர்க்கும் வகையில் தமிழ்ச் சிட்டு எனும் இதழையும் நடத்தினார்.

பெரியோர்களே!

தமிழ்மொழிக்காகத் தங்களை முழுதும் ஈடுபடுத்திய இவர்களைப் போன்ற சான்றோர்களை நாம் என்றென்றும் மறக்கலாகாது என்று கூறி விடைபெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.



## நடவடிக்கை 1

**உரையை வாசித்து நினைவு கூர்ந்து எழுதுக.**

BT Year 6 1_Layout 1 10/2/2015 1:19 PM Page 8



# பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

## பல்வகைச் செய்யுளின் பொருளை அறிக.

வாசுகி : அப்பா, இணையத்தளத்தில் என்ன திரைப்படத்தைப் பார்க்கிறீர்கள்?

அப்பா : அருட்பெருஞ்சோதி எனும் திரைப்படத்தைப் பார்க்கிறேன் வாசுகி.

வாசுகி : இக்கதை யாரைப் பற்றிச் சித்தரிக்கின்றது அப்பா?

அப்பா : வள்ளலார் இராமலிங்க அடிகளார் பற்றிய கதைதான் இது. “வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடி நின்றேன்” எனக்கூறித் தம் தீந்தமிழால் அன்பைப் போதித்த மனித நேயர் இவர்.

வாசுகி : வள்ளலாரைப் பற்றி நான் நிறைய தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன் அப்பா.

அப்பா : மிக்க நன்று வாசுகி. வள்ளலார் சிறந்த அருளாளர். உள்ளத்தால் ஒருவன் இறைத்தன்மை அடைய முடியும் என்பதற்கு இலக்கணமாக வாழ்ந்தவர். எல்லா உயிர்களிடத்திலும் அன்பு வேண்டும் எனப் போதித்தவர்.

வாசுகி : வள்ளலாரின் திருவருட்பாவை நான் படித்துள்ளேன். அதைப் பற்றிச் சற்று விளக்க முடியுமா அப்பா?

அப்பா : எனக்குத் தெரிந்தவற்றைக் கூறுகிறேன். மொத்தம் 5,818 பாடல்களைக் கொண்ட இவரது தொகுப்பு, திருவருட்பா எனப்படுகிறது. இவரது பாடல்கள் சமூக மாறுதல்களைப் பேசின; சடங்குகளைக் கடுமையாக எதிர்த்தன; உயிர்ப்பலி கூடாது என வலியுறுத்தின. பசித்திரு, தனித்திரு, விழித்திரு என்பதும் ஒன்றே செய், நன்றே செய், இன்றே செய் என்பதும் அவர் கூறிய சிறந்த வரிகளாகும். வள்ளலார் தமது ஆறாவது திருவருட்பாவில்

**கல்லார்க்கும் கற்றவர்க்கும்**
**களிப்பருளும் களிப்பே**

**காணார்க்கும் கண்டவர்க்கும்**
**கண்ணளிக்கும் கண்ணே**

**வல்லார்க்கும் மாட்டார்க்கும்**
**வரமளிக்கும் வரமே**

**மதியார்க்கும் மதிப்பவர்க்கும்**
**மதிகொடுக்கும் மதியே**



4.8.4 ஆறாம் ஆண்டுக்கான பல்வகைச் செய்யுளின் பொருளை அறிந்து கூறுவர்; எழுதுவர்.



**நல்லார்க்கும் பொல்லார்க்கும்**
**நடுநின்ற நடுவே**

**நரர்களுக்கும் சுரர்களுக்கும்**
**நலங்கொடுக்கும் நலமே**

போன்ற வரிகளைப் பாடியுள்ளார்.

வாசுகி : வள்ளலார் இறுதியில் சுடர் ஒளியில் ஒன்றாகிவிட்டதாகக் கூறுகின்றனரே அப்பா!

அப்பா : ஆமாம் வாசுகி. அன்பு என்னும் அற்புதத்தைக் கையாண்டு ஆண்டவனின் பெருமையை உணர்ந்தால் எதனையும் பெறலாம் என்பது வள்ளலாரின் சிந்தனையாகும். அன்பு கொண்டு அகமகிழ்ந்து வாழும் உயிர்களுக்குத் தீங்கு இல்லை என்பது வள்ளலார் வாக்கு. வள்ளலாரின் அடிமனம் ஆழமானது. அதனால்தான் கடலைக் காட்டிலும் ஆழமான கருத்துகள் நிரம்பிய இதயத்தை அவர் கொண்டிருந்தார். அன்பின் அடுத்த நிலை அருள். அருள்நிலை ஒன்றுதான் அனைத்திற்கும் பெருநிலை என்று வாழ்ந்தவர் வள்ளலார் இராமலிங்க அடிகளார்.

வாசுகி : அருமையான தகவல்களை எனக்குக் கூறியதற்கு மிக்க நன்றி அப்பா.

## செய்யுளின் பொருள்

- கற்றவர், கல்லாதவர் என்ற வேறுபாடு இல்லாமல் எல்லார்க்கும் இன்பத்தைத் தருகின்ற பேரின்பமானவன் இறைவன்.
- தன்னை உணர்ந்தவர்களுக்கும் உணராதவர்களுக்கும் வேறுபாடின்றி அகக்கண்களைக் கொடுக்கின்ற அருட்கண்ணாளன் இறைவன்.
- வலிமையுள்ளவர், வலிமையற்றவர் என்ற வேறுபாடு இல்லாமல் எல்லார்க்கும் கேட்பவற்றைத் தந்தருள்பவன் இறைவன்.
- தன்னை மதித்தவர்களுக்கும் மதியாதவர்களுக்கும் வேறுபாடு காட்டாமல் எல்லார்க்கும் அறிவைத் தருகின்ற பேரறிவாளன் இறைவன்.
- நல்லவர், கெட்டவர் என்ற வேறுபாடு காட்டாமல் அனைவர்க்கும் நடுநிலையில் நின்று அருள் புரிபவன் இறைவன்.
- மனிதர், தேவர் என்ற வேறுபாடு இல்லாமல் எல்லார்க்கும் நல்லதைத் தருகின்ற கருணையாளன் இறைவன்.

### அருஞ்சொற்கள்

- சித்தரிக்கும்
- இறைத்தன்மை
- போதித்தவர்
- ஆழமான
- சடங்குகளை
- அகமகிழ்ந்து
- பெருநிலை

### நடவடிக்கை 1

**செய்யுளையும் அதன் பொருளையும் மனனம் செய்து எழுதுக.**

BT Year 6 1_Layout 1 10/2/2015 1:19 PM Page 10



# பாடம் 5 இலக்கணம்

## பெயரடை அறிக.


- சொல்லின் தன்மையை அல்லது இயல்பை விளக்குவது அடையாகும்.
- அடை இரு வகைப்படும். அவை பெயரடை, வினையடை எனப்படும்.

**பெயரடை** பெயர்ச்சொல்லின் தன்மையை விளக்குவது பெயரடையாகும்.
பெயரடை பெரும்பாலும் 'ஆன' என்ற சொல் உருபு பெற்று வரும்.

**எடுத்துக்காட்டு**




- அழகான (பெயரடை) பெண் (பெயர்ச்சொல்)
- உயரமான (பெயரடை) மலை (பெயர்ச்சொல்)
- மென்மையான (பெயரடை) மெத்தை (பெயர்ச்சொல்)



## நடவடிக்கை 1

**வாக்கியங்களில் கோடிட்ட சொற்களைப் பெயரடையாக மாற்றி எழுதுக.**

1. அத்தைக்கு <u>அழகுப் பெண்</u> குழந்தை பிறந்தது.

   ______________________

2. மாமா <u>சுவை உணவு</u> சமைப்பதில் தேர்ந்தவர்.

   ______________________

5.3.25 பெயரடை, வினையடை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.



3. பூனை கூர்மை நகம் உள்ள பிராணி.

4. விமலன் உயரம் மரத்தில் ஏறிப் பழங்களைப் பறித்தான்.

5. சுத்தம் நீரைப் பருகுவது அவசியம் என ஆசிரியர் கூறினார்.

6. கரடு முரடு சாலையில் வாகனங்கள் சீராகச் செல்ல இயலவில்லை.

7. கவிஞர் பசுமைக் காட்சிகளைக் கண்டு இரசித்தார்.



8. கனம் மூட்டைகளைத் தூக்கிச் சென்று கனவுந்தில் வைத்தனர்.

9. தமிழ்மொழி தொன்மை மொழியாகும்.

10. முயல் ஒரு சாது விலங்கு என்பதால் அதனைச் சிலர் விரும்பி வளர்க்கின்றனர்.

## நடவடிக்கை 2

**பத்தியில் விடுபட்ட பெயரடையைப் பூர்த்தி செய்க.**



வீரன் ஒருவன் காட்டு வழியே நடந்து சென்றான். கரடு ______ பாதையில் காலணி அணியாமல் சென்றான். ______ மரங்கள் அவனை வரவேற்பது போல உணர்ந்தான். ______ தென்றல் காற்று மனத்திற்கு இதமாக இருந்தது. கண் எதிரில் ______ இளம்பெண் ஒருத்தி வருவதைக் கண்டான். அவளின் ______ தோற்றத்தைக் கண்டு மெய்மறந்து நடந்து சென்ற வீரனின் காலில் திடீரென ______ முள் ஒன்று குத்தியது. வீரன் என்றாலும் வலியைத் தாங்க முடியாமல் மனத்திற்குள் அழுதான்.

# தொகுதி 2 இயற்கை

## பாடம் 1 இயற்கையை நேசிப்போம்

குழுவில் கலந்துரையாடுக.



நடவடிக்கை 1

**கொடுக்கப்பட்ட படங்களைத் துணையாகக் கொண்டு இயற்கையை நேசிப்போம் எனும் தலைப்பில் கலந்துரையாடுக.**

1.6.23 தலைப்பிற்கேற்பப் பொருத்தமான சொல், சொற்றொடர், வாக்கியம் ஆகியவற்றைப் பயன்படுத்திப் பேசுவர்.

## நடவடிக்கை 2

**வன அழிப்பு எனும் தலைப்பில் கொடுக்கப்பட்ட சொல், சொற்றொடர், ஆகியவற்றைப் பயன்படுத்திக் கருத்துகளைக் கூறுக.**

| | | |
|---|---|---|
| பசுமை | சுத்தமான ஆறு | உயிரினங்கள் |
| பறவைகளின் இருப்பிடம் | சுகமான வாழ்வு | |
| வாழும் நிலை | மாற்றம் | காடுகளின் அழிவு |
| மேம்பாடுகள் | தூய்மைக்கேடு | மண்சரிவு |
| நீரோட்டத்தடை | வெள்ளம் | இயற்கைப் பேரிடர் |

## நடவடிக்கை 3

**பசுமைத் திட்டம் எனும் தலைப்பில் குழுவில் உரையாடுக.**

## நடவடிக்கை 4

**தலைப்புக்கேற்ப உரையாடுக.**

- பள்ளியில் பசுமைத் திட்டம்
- நம் வசிப்பிடம் ஒரு பூங்கா
- இயற்கையை நேசிக்கும் பண்பு
- நம் பூமி நம் சொத்து

## இடுபணி

**‘இயற்கையை நேசி’ எனும் தலைப்பில் திரட்டேடு தயாரித்திடுக.**

### தகவல் உலகம்

- உலகச் சுற்றுச் சூழல் விருது ஐ.நா. சபையால் வழங்கப்படுகிறது.
- உலகின் மிகப் பெரிய தீவு கிரீன்லாந்து.
- உலகிலேயே மிகப் பெரிய காடு அமேசான்.
- ஆசியா கண்டத்தைப் போல் மூன்று மடங்கு பெரியது பசிபிக் பெருங்கடல்.
- கரையான் அரிக்காததும் காளான் உண்டாகாததும் இரும்புத் துரு ஏறாததுமான ஒரே மரம் தேக்குமரம்தான்.
- ஒருவகை மரத்தின் பிசினே “சாம்பிராணி” ஆகும். சாம்பிராணி மரம் வளர்ந்து ஆறாவது ஆண்டில் பட்டையைக் கீறினால் பிசின் வடிந்து உறைகிறது.

மூலம்: மாணவர் களஞ்சியம்



BT Year 6 1_Layout 1 10/2/2015 1:19 PM Page 14



# பாடம் 2 பசுமைத் திட்டம்

## வாசித்து அறிக.



**பசுமைத் திட்டம்**

**வீட்டிற்கு ஒரு மரம் நடுவோம்**

- நாம் சிறப்புற வாழ வேண்டும் என்பது அனைவரின் கனவு. அதற்கு நாம் செய்ய வேண்டியது என்ன? நாம் வசிக்கும் இல்லத்திலிருந்து தொடங்குவோம்.
- வீட்டிற்கு ஒரு மரம் நடுவோம். செடிகளை வளர்ப்போம்; சுற்றுப்புறத்தைத் தூய்மைப்படுத்துவோம்.
- நாம் மகிழ்ச்சியாக வாழவும் அமைதியாக வாழவும் தாவரங்களே முதலீடு. எனவே, இயற்கையை மாசுப்படுத்தாமல் வாழ்வோம். மரங்களை நடுவோம்.
- ஒரு மரம் ஒரு வருடத்திற்கு 118 கிலோ உயிர்வளியை வெளியிடுகிறது.



- ஓர் ஏக்கரில் உள்ள மரங்களிலிருந்து ஒரு வருடத்திற்குக் கிடைக்கும் உயிர்வளியானது 19 மனிதர்கள் ஆயுள் முழுவதும் சுவாசிக்க உதவுகிறது.
- ஓர் ஏக்கரில் உள்ள மரங்கள் 2.6 டன் கரிவளியைக் காற்றிலிருந்து ஈர்த்துக் கொள்கின்றன.
- நிழல் தரும் ஒரு மரம்,° வெயில் காலத்தில் 20 c அளவுக்கு வெயிலின் தாக்கத்தைக் குறைக்கின்றது.
- மரங்களை நடுவோம் மனிதத்தைப் பேணுவோம்.

2.6.21 கையேடுகளை வாசித்துப் புரிந்து கொள்வர்.

## நடவடிக்கை 1

**கையேட்டினை வாசித்து வினாக்களுக்கு விடையளித்திடுக.**

1. பசுமை உருவாக்கத்தை எங்கிருந்து தொடங்க வேண்டும்?
2. மகிழ்ச்சியான வாழ்வுக்கு முதலீடு யாது?
3. மரங்களினால் ஏற்படும் நன்மைகளை விவரித்துக் கூறுக.
4. சுற்றுப்புறத்தைத் தூய்மையாக வைத்திருக்கும் நடவடிக்கைகள் சிலவற்றைக் கூறுக.
5. உயிர்வளியின் முக்கியத்துவத்தைப் பற்றிக் கூறுக.

## நடவடிக்கை 2

**சொற்றொடர்களைக் கொண்டு வாக்கியம் அமைத்திடுக.**

1. பசுமையைப் பேணுவோம் = ______
2. சுற்றுப்புறத் தூய்மை = ______
3. இயற்கையை நேசிப்போம் = ______
4. நிழல்தரும் மரங்கள் = ______
5. சுத்தத்தைப் பேணுவோம் = ______
6. வெயிலின் தாக்கம் = ______
7. ஆரோக்கிய வாழ்வு = ______
8. தூய்மைத் திட்டம் = ______
9. மரம் நடுவோம் = ______
10. நோயின்றி வாழ்வோம் = ______
11. காற்று மண்டலம் = ______
12. இதமான காற்று = ______
13. நிழலின் அருமை = ______
14. இயற்கைக் காட்சி = ______
15. வளமான வாழ்வு = ______
16. உடல் உளத்தூய்மை = ______

### அருஞ்சொற்கள்

- சுற்றுப்புறம்
- முதலீடு
- கரிவளி
- ஈர்த்து
- மனிதம்
- மாசு
- உயிர்வளி

### தகவல் பேழை

- இருமை - இம்மை, மறுமை
- இருசுடர் - ஞாயிறு, திங்கள்
- ஈரெச்சம் - பெயரெச்சம், வினையெச்சம்
- முந்நீர் - ஆற்று நீர், ஊற்று நீர், மழை நீர்
- நான்மறை - ரிக், யசூர், சாமம், அதர்வணம்
- நாற்குணம் - அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு
- நாற்படை - தேர், யானை, காலாள், குதிரை


BT Year 6 1_Layout 1 10/2/2015 1:19 PM Page 16



# பாடம் 3 காடுகளின் அருமை

## கருத்துகளை வாசித்து விவரித்து எழுதுக.

காடுகளின் பயன்கள்



- காட்டு விலங்குகளின் இருப்பிடம்
- பூமியின் வெப்பத்தைக் குறைக்கின்றன
- காற்றில் உள்ள தூசுகளைக் கட்டுப்படுத்துகின்றன
- உயிர்வளியின் இருப்பிடம்
- மழையைப் பெய்விக்கின்றன
- மண் சரிவு, நிலச் சரிவு, இயற்கைப் பேரிடர்களைத் தவிர்க்கின்றன

## நடவடிக்கை 1

**தலைப்பையொட்டிக் கொடுக்கப்பட்ட கருத்துகளைத் துணையாகக் கொண்டு 120 சொற்களில் கட்டுரை எழுதுக.**

**முன்னுரை:**

சுகமான வாழ்வுக்கு அடிப்படையாகத் திகழ்வது காடுகளே. மரங்கள் அடர்த்தியாக வளர்ந்திருக்கும் தொகுதிகளையே காடுகள் என்கின்றோம். காடுகள் உயிரினங்களுக்குப் பல வகையில் பயனளிக்கின்றன என்றால் அது மிகையாகாது.

**அருஞ்சொற்கள்**

- வெப்பம்
- மகிழ்வுடன்
- வாழுமிடம்
- தூசுகள்
- மண்சரிவு
- அணிகலன்
- மிகையாகாது


3.10.21 120 சொற்களில் கருத்து விளக்கக் கட்டுரை எழுதுவர்.

BT Year 6 1_Layout 1 10/2/2015 1:19 PM Page 17


## நடவடிக்கை 2

**திரட்டிய கருத்துகளை விவரித்து 120 சொற்களில் கட்டுரை எழுதுக.**

அ.




ஆ.




### தகவல் உலகம்

- உலகிலேயே அதிக வயதான மரம் தைவான் நாட்டிலுள்ள மூன்யுக், இதன் வயது 4142 ஆண்டுகளாகும்.
- மருதாணியில் உள்ள நிறமிதான் நம் கைகளைச் சிவப்பு நிறமாக மாற்றுகிறது.
- கரும்பு கி.மு. 1000ஆம் ஆண்டிலேயே இந்தியாவில் பயிரிடப்பட்டிருக்கிறது.

மாவீரன் அலெக்சாண்டருடன் இந்தியா வந்த அதிகாரிகள் கரும்பைத் தேன்மரம் என்று குறிப்பிட்டனர்.

14ஆம் நூற்றாண்டில் கொலம்பஸ் மேற்கு இந்தியத் தீவுகளுக்குக் கரும்பைக் கொண்டு சென்றார்.

- மாணவர் தகவல் களஞ்சியம்

BT Year 6 1_Layout 1 10/2/2015 1:19 PM Page 18




# பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

## திருக்குறளின் பொருள் அறிக.

வாருங்கள் தோழர்களே! எனதருமை நண்பர்களே! எங்களை நாடி வந்த உங்கள் அனைவரையும் வரவேற்கின்றோம். பசுமையான இலைகளையும் கிளைகளையும் கொண்டுள்ள எங்களைப் பார்க்கும் போது உங்கள் கண்களுக்கு நிச்சயம் குளிர்ச்சியாகத்தான் இருக்கும்.

தோழர்களே! எங்களின் நிழலில் அமர்ந்து சற்று நேரம் இளைப்பாருங்கள். நாங்கள் வெளிப்படுத்தும் உயிர்வளி உங்கள் உடலையும் மனத்தையும் இதமாக்கும்.

எல்லா உயிரினங்களுக்கும் நாங்கள் பெரிதும் பயனாகத்தான் இருக்கிறோம் என்பதை நீங்கள் அறிவீர்கள். அங்கே பாருங்கள்! சில விவசாயிகள் ஆனந்தமாகத் தங்களின் வயலில் நாற்று நடுகின்றனர். இதற்குக் காரணம் யார் தெரியுமா? ஆம், தேவையான மழை நீர். பயிர்கள் செழித்து வளர மழை வேண்டும் அல்லவா!



மழை இல்லையேல் விவசாயம் தடைப்பட்டுவிடும். தாவரங்கள் வெயிலில் வாடி வதங்கிவிடும். உணவுப் பொருள்களுக்குப் பஞ்சம் ஏற்பட்டுவிடும். எனவே, விவசாயிகள் மழையை நம்பியே பயிர்த் தொழிலைச் செய்கின்றனர். இன்னும் சற்றுத் தூரத்தில் பாருங்கள். ஒரு வீட்டின் வாசலில் நீர்த்தொட்டி இருக்கிறது. அதில் என்ன உள்ளது தெரியுமா? ஆம், மழை நீர். மழை நீரைச் சேமித்துப் பலவகைத் தேவைகளுக்கும் பயன்படுத்துகின்றனர்.

**துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்**
**துப்பாய தூஉம் மழை.** (12)

எனும் திருக்குறளை மாணவர்களாகிய நீங்கள் நிச்சயம் படித்திருப்பீர்கள். உண்பவர்க்குத் தக்க உணவுப் பொருள்களை விளைத்துத் தருவதோடு, பருகுவார்க்குத் தானும் ஓர் உணவாக இருப்பது மழைதானே நண்பர்களே!

| 4.6.6 | ஆறாம் ஆண்டுக்கான திருக்குறளின் பொருளை அறிந்து கூறுவர்; எழுதுவர். |
|---|---|



மாணவர்களாகிய நீங்கள் மழைநீர் சேமிப்பு அமைப்புகளை உருவாக்கவும் அதனைச் செம்மையாகப் பராமரிக்கவும் கற்றுக் கொள்ளுங்கள்.

நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் எனும் பஞ்ச பூதங்களின் கூட்டுச் சேர்க்கையால்தான் உலகமே இயங்கிக் கொண்டிருக்கின்றது என்பதை அனைவரும் உணர வேண்டும். அதனால்தான் திருவள்ளுவரும் 'நீரின்றி அமையாது உலகு' என்று கூறினார். மேலும், அவர் மழையின் சிறப்பை உணர்த்தும் வகையில் வான்சிறப்பு என்று ஓர் அதிகாரத்தையும் படைத்துள்ளார். இதிலிருந்து மழையின் சிறப்பையும் முக்கியத்துவத்தையும் உலகுக்கு அறிவிக்கின்றார் என்று தானே பொருள்.

## திருக்குறளும் பொருளும்

- **துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்**
  **துப்பாய தூஉம் மழை. (12)**

– உண்பவர்க்குத் தக்க உணவுப் பொருள்களை விளைத்துத் தருவதோடு, பருகுவார்க்குத் தானும் ஓர் உணவாக இருப்பது மழையாகும்.

### நடவடிக்கை 1

**திருக்குறளையும் பொருளையும் மனனம் செய்து கூறுக; வரிவடிவத்துடன் எழுதுக.**

### நடவடிக்கை 2

**திருக்குறளுக்கேற்ற சூழல் ஒன்றனை உருவாக்கிக் கூறுக; கதையாக எழுதுக.**

**அருஞ்சொற்கள்**
- நிச்சயம்
- இளைப்பாறுங்கள்
- விவசாயிகள்
- அறுவடை
- உறுதுணையாக
- தடைபட்டு
- நீர்த்தொட்டி

BT Year 6 1_Layout 1 10/2/2015 1:20 PM Page 20



# பாடம் 5 இலக்கணம்


## வினையடை அறிக.

- சொல்லின் தன்மையை அல்லது இயல்பை விளக்குவது அடையாகும்.
- அடை இருவகைப்படும்.
  - பெயரடை
  - வினையடை

**வினையடை** → வினைச்சொல்லின் தன்மையை விளக்குவது வினையடையாகும்.

→ வினையடை 'ஆக' என்ற சொல் உருபு பெற்று வரும்.

எடுத்துக்காட்டு




| | |
|---|---|
| வேகமாக (வினையடை) | ஓடினான் (வினைச்சொல்) |
| கடுமையாகப் (வினையடை) | பேசினார் (வினைச்சொல்) |
| உயரமாகப் (வினையடை) | பறந்தன (வினைச்சொல்) |


## நடவடிக்கை 1

**வினையடைச் சொற்களைக் கொண்டு நிறைவு செய்க.**

1. ஆசிரியர் கொடுத்த கட்டுரையை மாணவர்கள் ____ எழுதினார்கள். (விரைவு)
2. பாடும் திறன் போட்டியில் மாலதி ____ பாடினாள். (இனிமை)
3. பேராசிரியர் கூறிய அறிவுரைகள் அனைத்தும் மனத்தில் ____ பதிந்தன. (ஆழம்)

5.3.25 பெயரடை, வினையடை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

4. உறவினர் அனைவரும் ஒன்றுகூடியதால் ______ இருந்தோம். (மகிழ்ச்சி)
5. பொதுவிடுமுறை நாள்களில் சாலையில் வாகனங்கள் ______ நகர்ந்தன. (மெது)
6. அப்பா கொடுத்த வேலைகள் அனைத்தையும் அண்ணன் ______ செய்தார். (பொறுப்பு)
7. தோட்டத்தில் ______ வளர்ந்த செடி கொடிகளைத் தாத்தா வெட்டிச் சுத்தம் செய்தார். (உயரம்)
8. எல்லாரிடமும் நாம் ______ பேச வேண்டும். (பணிவு)
9. தம்பியின் சரளமான பேச்சு எங்களுக்கு ______ இருந்தது. (வியப்பு)
10. வகுப்பறையில் மாணவர்கள் ______ அமர்ந்து பாடங்களைச் செய்தனர். (அமைதி)







## நடவடிக்கை 2

**வினையடைச் சொற்களைப் பூர்த்தி செய்து வாக்கியங்களை அமைத்திடுக.**

1. கம்பீரமாக = ______
2. நகைச்சுவையாக = ______
3. கவனமாக = ______
4. கலகலப்பாக = ______
5. அருமையாக = ______
6. வியப்பாக = ______
7. சுறுசுறுப்பாக = ______
8. தெளிவாக = ______
9. சிறப்பாக = ______
10. திறமையாக = ______
11. நளினமாக = ______
12. துல்லிதமாக = ______
13. சுருக்கமாக = ______
14. விரைவாக = ______
15. சுத்தமாக = ______

### தகவல் உலகம்

- வினையடை ‘ஆக’ என்ற சொல் உருபு பெற்று வந்து வருமொழி க,ச,த,ப வரின் வலிமிகும்.
- ஒரு பொருளின் தொழில், நிகழ்ச்சியை உணர்த்தும் சொல் வினைச் சொல் ஆகும்.
- வினை என்பது செயல், தொழில் அல்லது இயக்கம் என்பதாகும்.

BT Year 6 1_Layout 1 10/2/2015 1:20 PM Page 22



# தொகுதி 3 அறிவியல்

## பாடம் 1 செயற்கைக் கோள்



### குழுவில் கலந்துரையாடுக.

- மின்காந்த அலைகள் வளைந்து செல்லப் பயன்படுவது செயற்கைக் கோள்கள்.
- உலகின் குறிப்பிட்டப் பகுதியில் ஒளிபரப்பாகும் தொலைக்காட்சி, வானொலி நிகழ்ச்சிகள், தொலைபேசி உரையாடல்கள் போன்றவை உடனுக்குடன் வேறு பகுதிக்குச் செல்வது இதன்மூலம்தான்.

- செயற்கைக் கோள்கள் தகவல் தொடர்புக்கு அரிய பணியாற்றுகின்றன.
- தொலைபேசி, தொலைக்காட்சி, வானொலி போன்ற கம்பியில்லாத் தொடர்புசாதனங்கள் பல இதனால்தான் இயங்குகின்றன.







- அமெரிக்கா, சோவியத் யூனியன் ஆகிய இரண்டு நாடுகள் போட்டி போட்டுக் கொண்டு செயற்கைக் கோள்களைத் தயாரிக்க முற்பட்டன.
- 04.10.1957இல் சோவியத் யூனியன் உலகின் முதல் செயற்கைக் கோளான 'ஸ்புட்னிக்' கலத்தை விண்ணில் பாய்ச்சியது.

- உலக மக்களையும் அமெரிக்கர்களையும் திகைப்பில் ஆழ்த்தியது.
- சோவியத் யூனியனுக்கு இணையாகச் சாதிக்க அமெரிக்காவும் பல முயற்சிகளில் இறங்கியது.
- உலகம் பல நன்மைகளை அடைந்தது.

1.4.9 செவிமடுத்தவற்றிலுள்ள முக்கியக் கருத்துகளைக் கூறுக.

- பலவித வடிவங்களில் செயற்கைக் கோள்கள் உருவாக்கப்படுகின்றன.
- பெரும்பாலான செயற்கைக் கோள்கள் ஒரு பூச்சியைப் போல இருக்கும்.
- மையப் பகுதியில் பருமனான ஒரு பகுதி இருக்கும்.
- இருபுறமும் இறக்கை போன்ற நீண்ட தகடுகள் இருக்கும்.
- இந்தத் தகடுகளே அந்தச் செயற்கைக்கோள் இயங்குவதற்கான மின்சக்தியை உருவாக்குகின்றன.
- சூரிய ஒளியை மின்சாரமாக மாற்றும் ஆற்றல் கொண்டவை இவை.






நடவடிக்கை 1

**‘செயற்கைக் கோள்’ எனும் தலைப்பில் கூறப்பட்ட தகவல்களில் முக்கியக் கருத்துகளை அடையாளம் கண்டு கூறுக.**

நடவடிக்கை 2

**கண்டறிந்த முக்கியக் கருத்துகளைக் குழுவில் உரையாடுக.**

**தகவல் உலகம்**

- சூரியனைப் பூமி சுற்றி வருகிறது என்பதை முதன் முதலில் கண்டுபிடித்தவர் கோபர் நிகஸ்.
- சூரியனை அடிப்படையாகக் கொண்டு முதன்முதலில் நாள்காட்டியை உருவாக்கியவர்கள் ரோமானியர்கள்.

BT Year 6 1_Layout 1 10/2/2015 1:20 PM Page 24



# பாடம் 2 சாதனை செய்தோம்



## நேர்காணலை வாசித்து அறிக.

வணக்கம் நேயர்களே! இந்த வாரம் 'சந்திப்போம்' நிகழ்ச்சியில் நம் நாட்டைச் சேர்ந்த மூன்று இளம் சாதனையாளர்களைச் சந்திக்க உள்ளோம். ரிஷிகேஸ், பிரவினா, சுஷ்மிதா ஆகிய மூவரும் லண்டன் மாநகரில் நடைபெற்ற அனைத்துலக பிரிட்டிஷ் புத்தாக்கக் கண்காட்சியில் பங்கெடுத்தனர். அக்கண்காட்சியில் இம்மூன்று சாதனைச் சிட்டுகளும் தங்களின் கண்டுபிடிப்புகளுக்கு இரட்டைத் தங்கம் வென்று நாட்டிற்குத் திரும்பியுள்ளனர்.




விமான நிலையத்தில் நம் நாட்டு மக்கள் ஆவலுடன் நிற்கின்றனர். நேயர்களே! இதோ மூன்று சாதனையாளர்களும் கம்பீர நடையில் கையில் பூங்கொத்துகளுடன் வருகின்றனர். பார்வையாளர்கள் கரவோசையுடன் அவர்களை வரவேற்கும் காட்சி மெய்சிலிர்க்க வைக்கின்றது. இப்பொழுது அவர்கள் தங்கள் பெற்றோரிடம் ஆசி பெறுகின்றனர்.


நிருபர் : வணக்கம் இளம் சாதனையாளர்களே! முதலில் உங்கள் மூவருக்கும் நம் நாட்டு மக்கள் சார்பில் மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மாணவர்கள் : வணக்கம் அண்ணா. மிக்க நன்றி.

நிருபர் : தமிழ்ப்பள்ளி மாணவர்களாகிய நீங்கள் படைத்த இச்சாதனை மிகவும் பெருமைக்குரியது. மேலும், கடல் கடந்து லண்டன் மாநகரம் சென்று கண்டுபிடிப்புகளைப் படைத்து, வெற்றி வாகை சூடிய உங்கள் மூவரையும் வாழ்த்துவதற்கு வெறும் வார்த்தைகள் போதா.

2.8.7 நேர்காணலில் உள்ள தகவல்களைச் சேகரிப்பர்.





நீங்கள் லண்டன் மாநகரில் நடைபெற்ற புத்தாக்கக் கண்காட்சியில் படைத்த பொருள்களைப் பற்றிச் சற்றுக் கூற இயலுமா?



நாங்கள் இரண்டு பொருள்களைப் படைத்தோம். ஒன்று, கண்களுக்குச் சொட்டு மருந்திடும் கருவி. மற்றொன்று, மின்சக்தியைச் சேமிக்கும் கருவி அண்ணா.



குறிப்பிட்ட இவ்விரண்டு பொருள்களை மட்டும் தேர்ந்தெடுக்க ஏதேனும் காரணம் உண்டா மாணவர்களே?



ஆமாம், அண்ணா. எங்கள் பாட்டி பார்வை குறைந்தவர். ஒவ்வொரு நாளும் தூங்குவதற்கு முன் சொந்தமாகத் தமது கண்களுக்குச் சொட்டு மருந்தை இடுவார். பல சமயம் சொட்டு மருந்து கீழே சிந்திவிடும். நாங்கள் அருகில் இருந்தால் அவருக்கு உதவுவோம். இல்லையெனில் சிறிதளவு கண்ணிலும் மீதி வெளியிலும்தான் அந்த மருந்து சிந்தும். இப்படிச் சிரமப்படுவதைப் பார்த்துப் பல நாள்கள் சிந்தித்தோம். அதன் வெளிப்பாடாகத்தான் ஒரு கருவியை வடிவமைத்தோம்.



அடடா! கேட்பதற்கே ஆர்வமாக இருக்கின்றதே ரிஷிகேஸ்! மற்றொரு பொருள் என்ன?



நாம் தினமும் மின்சாரப் பொருள்களைப் பயன்படுத்துகின்றோம். இதனால், மின் கட்டணம் அதிகரிக்கின்றது என என் அம்மா அலுத்துக் கொள்வார். இதனைச் சமாளிக்க மின்சக்தியைச் சேமிக்கும் கருவியைக் கண்டறிந்தோம் அண்ணா.

BT Year 6 1_Layout 1 10/2/2015 1:20 PM Page 26




உங்களின் அற்புதமான புத்தாக்க உருவாக்கத்திற்கு உறுதுணையாக விளங்கியவர்கள் யாரெனக் கூற முடியுமா?



எங்களது பெற்றோர் மறுபயனீடு செய்வதில் ஆர்வம் மிகுந்தவர்கள். எனவே, எங்களையும் இத்துறையில் ஆர்வம் செலுத்த ஊக்கமளித்தனர். எங்கள் பள்ளியின் அறிவியல் ஆசிரியர்கள் திருமதி சூரியா, குமாரி கிருஷ்ணம்மாள், திருமதி கிரண் ஆகியோர் எங்களுக்குப் பெரிதும் துணை புரிந்தனர்.




வெளிநாட்டில் ஆங்கில மொழியில் விளக்கங்களைக் கூறத் தடுமாற்றம் ஏற்பட்டதா?



பங்கேற்றவர்களும் பார்வையாளர்களும் அதிசயிக்கும் வகையில் சரளமாகப் பேசி அருமையாக எங்களது படைப்புகளைச் சமர்ப்பித்தோம் அண்ணா.




வணக்கம் அம்மா. பிரவினா, ரிஷிகேஸ் ஆகியோரின் தாயாரான உங்களது மனநிலை எப்படி உள்ளது?



தமிழ்ப்பள்ளியில் படித்த பிள்ளைகளாகிய இவர்களின் வெற்றியை எண்ணிப் பெரிதும் உவகை கொள்கிறேன். இதேபோன்று மற்ற மாணவர்களும் முயற்சி செய்து வெற்றி பெற இறைவனிடம் வேண்டுகிறேன். நம்மால் முடியாதது ஒன்றுமில்லை. முயன்றால் எதுவும் நம் வசமே!




“மாபெரும் சபைதனில் நீ நடந்தால் உனக்கு மாலைகள் விழ வேண்டும்” எனும் பாடல் வரிகள்தான் எனக்கு நினைவுக்கு வருகின்றன. வாழ்த்துகள் மாணவர்களே! நீங்கள் இன்னும் பல புதிய கண்டுபிடிப்புகளை இந்த நாட்டிற்கு வழங்கி முன்மாதிரி மாணாக்கர்களாகத் திகழ வாழ்த்துகிறோம். நல்லது நேயர்களே! மீண்டும் உங்களை வானொலி நிலையத்திற்கு அழைத்துச் செல்கிறேன். விடைபெறுகிறேன், நன்றி.

## நடவடிக்கை 1

**நேர்காணலைப் பாகம் ஏற்று வாசித்திடுக.**

## நடவடிக்கை 2

**நேர்காணலில் கூறப்பட்ட தகவல்களைப் பட்டியலிடுக.**

### தகவல் உலகம்

கண்டுபிடிப்பாளர்களும் பொருள்களும்

- தொலைக்காட்சி
  - ஜான் பேர்ட்
- இடிதாங்கி
  - பெஞ்சமின் பிராங்கிளின்
- கிரகங்களின் சுழற்சி
  - கெப்ளர்

BT Year 6 1_Layout 1 10/2/2015 1:20 PM Page 27



# பாடம் 3 இபோலா நோய்க் கிருமி

## வாசித்து எழுதுக.



- கை கால்களை அடிக்கடி சுத்தம் செய்ய வேண்டும். நோய் பரவும் காலங்களில் புலால் சாப்பிடுவதைத் தவிர்ப்பது நல்லது. நோயாளிகளிடம் நெருங்கிப் பழகுவதையும் தவிர்க்க வேண்டும்.

- 1976ஆம் ஆண்டு சூடான், காங்கோ ஆகிய நாடுகளில் இந்நோய் தோன்றியது. காங்கோ நாட்டின் இபோலா நதிக்கரையில் முதன் முதலில் இந்நோய் பரவியதால் இந்தக் கிருமிக்கு 'இபோலா வைரஸ்' என்று பெயரிடப்பட்டது.

- கடுமையான காய்ச்சல், தலைவலி, மூட்டுவலி, தசைவலி, தொண்டைவலி, வாந்தி, வயிற்றுப்போக்கு, அம்மைக் கொப்புளங்கள், நெஞ்சுவலி, இரத்தக் கசிவு போன்றவை இந்நோய்க்கான அறிகுறிகளாகும்.

- இந்நோய் கண்டவருக்குச் சிகிச்சை அளிப்பது கடினம். மேலும், உயிருக்கு ஆபத்து ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளன.
- கினி, லைபீரியா, நைஜீரியா, சியாரா லியோன் ஆகிய மேற்கு ஆப்பிரிக்க நாடுகளில் பரவி வருகின்றது.
- நுண்ணோக்கியின் மூலம் பார்த்தால் இக்கிருமி படமெடுக்கும் நாகம் போல் தெரியும்.





- இக்கிருமி பழந்தின்னி வௌவால், ஆடு, மாடு, பன்றி, மான், எலி, குரங்கு போன்ற விலங்குகளின் மூலம் பரவுகின்றது. இந்நோயால் பாதிக்கப்பட்ட நோயாளியுடன் பாதுகாப்பின்றிப் பழகினால் இருமல், தும்மல், உமிழ் நீர், சிறுநீர், இரத்தம், வியர்வை போன்றவற்றின் மூலம் எளிதில் 'இபோலா வைரஸ்' பரவுகின்றது.

3.10.25 | 120 சொற்களில் நேர்காணல் எழுதுவர்.

BT Year 6 1_Layout 1 10/2/2015 1:20 PM Page 28


## நடவடிக்கை 1

**குறிப்புகளைப் பயன்படுத்தி நேர்காணலைத் தொடர்ந்து எழுதுக.**

மாணவன் : இபோலா என்றால் என்ன ஐயா?

மருத்துவர் : இபோலா என்பது ஒரு வகைக் கிருமியாகும். இக்கிருமியால் ஏற்படும் நோய்க்கு இபோலா நோய் என்று பெயர்.

மாணவன் : மிகவும் கொடிய நோய்களில் ஒன்றான இந்நோயைப் பற்றிய வரலாற்றைக் கூறுங்களேன்!



மருத்துவர் : கொடிய நோயான இது 1976ஆம் ஆண்டு சூடான், காங்கோ ஆகிய நாடுகளில் தோன்றியது.

மாணவன் : ஐயா, இந்நோய் எவ்வாறு மனிதர்களைத் தாக்கும்?

மருத்துவர் : ______________________

மாணவன் : இந்நோயின் அறிகுறிகளைப் பற்றி விளக்கிக் கூற வேண்டுகிறேன்.

மருத்துவர் : ______________________

மாணவன் : இந்நோய் தாக்குவதிலிருந்து தவிர்க்கும் பாதுகாப்பு நடவடிக்கைகள் யாவை?

மருத்துவர் : ______________________

மாணவன் : பொதுமக்களுக்குத் தாங்கள் கூறும் அறிவுரைகள் யாவை ஐயா?

மருத்துவர் : ______________________

மாணவன் : ஐயா, நம் நாட்டில் இந்நோயின் தாக்கம் உள்ளதா?

மருத்துவர் : ______________________

மாணவன் : இந்நோய் கண்ட ஒருவரை மருத்துவர்கள் எவ்வாறு நாடுவர் ஐயா?

மருத்துவர் : ______________________

**தகவல் உலகம்**

- ஒரு முழுமையான வைரஸ் ‘விரியான்’ என்று அழைக்கப்படுகிறது.
- வெண்ணிற இரத்தம் கொண்ட உயிரி கரப்பான் பூச்சி.

BT Year 6 1_Layout 1 10/2/2015 1:20 PM Page 29



# பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

## மரபுத்தொடர்களின் பொருளை அறிக.

தெனாலி எனும் ஊரில் இராமன் என்பவர் வாழ்ந்தார். பெயரையும் ஊரையும் சேர்த்து அவரைத் தெனாலிராமன் என்று அழைத்தனர்.

தெனாலிராமன் அரண்மனையில் வேலை செய்தார். தெனாலிராமன் நகைச்சுவையாகப் பேசி அனைவரையும் மகிழ்விப்பதில் **கரை கண்டவர்**. விகடகவி என்றும் அவரைச் சிறப்பாக அழைப்பதுண்டு.

ஒருநாள் அரசர் தெனாலிராமன் மீது கடுஞ்சினம் கொண்டார். "தெனாலிராமனே! உன்னைப் போல் ஒரு முட்டாளை நான் எங்குமே பார்த்ததில்லை," என்றார். தெனாலிராமனோ, "அரசே நான் பார்த்துள்ளேன். இப்போது நீங்களும் பாருங்களேன்," என்று ஒரு கண்ணாடியை எடுத்து அரசர் முன் வைத்தார். கண்ணாடியில் தம் உருவத்தைப் பார்த்த அரசர், தெனாலிராமன் மீது மேலும் கோபம் கொண்டார்.

தெனாலிராமனைத் தூக்கிலிடும்படி உத்தரவிட்டார். அரசனின் **ஆணித்தரமான** ஆணை தெனாலிராமனுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இருப்பினும், அரசரை வணங்கி, "அரசே! என் இறுதி ஆசையாக எனக்குப் பிடித்தமான மரத்திலேயே என்னைத் தூக்கிலிட வேண்டுகிறேன்," என்றார்.



வேண்டுகோளை ஏற்றுக் கொண்ட அரசர் தெனாலியை வீரர்கள் சிலருடன் அனுப்பி அவருக்குப் பிடித்தமான மரத்தைத் தேடி வரச் சொன்னார். வீரர்களும் பல இடங்களுக்குச் சென்று மரத்தைத் தேடினர்.

தமக்குப் பிடித்த மரத்தைத் தேடும் பொருட்டுத் தெனாலியும் பல இடங்களை மகிழ்ச்சியாகச் சுற்றிப் பார்த்தார். இறுதியில், பல நாள்களுக்குப் பிறகு அரண்மனைக்கு வீரர்களுடன் திரும்பினார். "அரசே! எனக்குப் பிடித்தமான மரத்தைத் தேடுவது **முயல் கொம்புதான்**. எனவே, காட்டில் முனிவர்

4.12.6 ஆறாம் ஆண்டுக்கான மரபுத்தொடர்களின் பொருளை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

BT Year 6 1_Layout 1 10/2/2015 1:20 PM Page 30



ஒருவரைச் சந்தித்து எனக்குப் பிடித்த அபூர்வமான மரத்தின் விதையை வாங்கி வந்துள்ளேன். இந்த விதையை முளைக்க வையுங்கள். வளர்ந்து மரமானதும் என்னை அதில் தூக்கிலிடுங்கள்," என்றார்.

தெனாலியின் சாதுரியமான நகைச்சுவை கலந்த பேச்சைக் கேட்டு அரசர் சிரித்தார்.

## மரபுத்தொடர்களும் பொருளும்

| | | |
|---|---|---|
| **கரை கண்டவர்** | : | ஒரு கலையில் அல்லது துறையில் சிறந்த தேர்ச்சி பெற்றவர். |
| **ஆணித்தரம்** | : | உறுதி |
| **முயல் கொம்பு** | : | இல்லாத / பிறவாத ஒன்று |

### அருஞ்சொற்கள்

- அழைத்தனர்
- கரை
- விகடகவி
- ஆணித்தரமான
- நகைச்சுவை
- கடுஞ்சினம்
- அபூர்வமான

### நடவடிக்கை 1

**மரபுத்தொடர்களை வாசித்துப் பொருள் கூறுக.**

### நடவடிக்கை 2

**மரபுத்தொடர்களைப் பொருள் விளங்க வாக்கியங்களில் அமைத்திடுக.**

### தகவல் உலகம்

- 1981ஆம் ஆண்டு மைக்கேல் சாட்டிலைட் என்பவரால் எய்ட்ஸ் நோய் கண்டுபிடிக்கப்பட்டது.

### நடவடிக்கை 3

**சரியான மரபுத்தொடரை எழுதிடுக.**

1. அமுதன் மருத்துவத் துறையில் பயில வேண்டும் என்ற தனது ஆசையில் மிகவும் உறுதியாக இருந்தான்.
2. விமலன் கணினித் துறையில் மூன்று ஆண்டுகள் சிறப்புப் பயிற்சி பெற்று அத்துறையில் சிறந்து விளங்கினான்.
3. கல்வியைச் சிறப்பாகக் கற்காமல் வாழ்க்கையில் சிறந்த நிலையை அடைவது நடக்காத ஒன்று என்று அம்மா அடிக்கடி கூறுவார்.



பாடம் 5

# இலக்கணம்

## விகாரப் புணர்ச்சியில் கெடுதல் அறிக.

- இரண்டு சொற்கள் ஒன்றுபடப் புணர்வது புணர்ச்சி.
- இவ்விரண்டு சொற்களில் முதல் சொல்லை நிலைமொழி என்றும் இரண்டாவது சொல்லை வருமொழி என்றும் குறிப்பிடுவர்.
- நிலைமொழியின் ஈற்றெழுத்தும் வருமொழியின் முதலெழுத்தும் ஒன்றுபடப் புணர்வதே புணர்ச்சி.
- புணர்ச்சி இருவகைப்படும்.

இயல்பு புணர்ச்சி | விகாரப் புணர்ச்சி

### அ. கெடுதல் விகாரம்

- நிலைமொழி ஈறும் வருமொழி முதலும் புணரும்போது **ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட எழுத்துகள் கெடுவது (மறைவது)** கெடுதல் புணர்ச்சியாகும்.

அ. மகரம் + இடையினம்

- நிலைமொழி ஈற்றில் மகர மெய் வரும் பொழுது வருமொழி முதல் இடையினமாக இருக்குமாயின் அவ்விடத்தில் **மகரம் கெடும்.**

எடுத்துக்காட்டு ➤

| | | | | |
|---|---|---|---|---|
| அறம் | + | வினை | = | அறவினை |
| காரம் | + | வடை | = | காரவடை |

### ஆ. திசைப் புணர்ச்சி

திசையைக் குறிக்கும் சொல்லைத் திசைப்பெயர் என்பர். அவ்வாறு திசைப்பெயரோடு வேறொரு திசைப்பெயரும் பிற சொல்லும் பின்வரும் முறையில் புணரும்.

எடுத்துக்காட்டு ➤

| | | | | |
|---|---|---|---|---|
| வடக்கு | + | கிழக்கு | = | வடகிழக்கு |
| தெற்கு | + | மேற்கு | = | தென்மேற்கு |

5.7.4 விகாரப் புணர்ச்சியில் கெடுதல் பற்றி அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

BT Year 6 1_Layout 1 10/2/2015 1:20 PM Page 32

## நடவடிக்கை 1

**சொற்களைச் சேர்த்து எழுதுக.**

| | | | | |
|---|---|---|---|---|
| மரம் | + | வீடு | = | |
| ஈரம் | + | விறகு | = | |
| வனம் | + | விலங்கு | = | |
| மனம் | + | வலிமை | = | |
| புறம் | + | மேடு | = | |
| தூரம் | + | விலகு | = | |
| குலம் | + | விளக்கு | = | |

| | | | | |
|---|---|---|---|---|
| வடக்கு | + | மேற்கு | = | |
| தெற்கு | + | கிழக்கு | = | |
| கிழக்கு | + | நாடு | = | |
| மேற்கு | + | நாடு | = | |
| கிழக்கு | + | திசை | = | |
| வீரம் | + | வசனம் | = | |
| சரம் | + | வெடி | = | |

## நடவடிக்கை 2

**கோடிட்ட சொல்லைப் பிரித்து எழுதுக.**

1. விவசாயிகள் நிலவரி கட்டுவதிலிருந்து விடுவிக்கப்பட்டனர்.
2. அண்ணன் காரவடையை விரும்பி உண்பார்.
3. பலாப்பழம் அதன் மரவேரிலும் காய்க்கும்.
4. அந்த முதியவர் அறவழி கூறும் வாழ்க்கை நெறிகளைப் பின்பற்றி நடந்தார்.
5. பொருள்களை மொத்தவியாபாரிகள் மலிவாக வாங்கினார்கள்.
6. மாமாவும் அத்தையும் மேற்றிசை நாடுகள் அனைத்தையும் சுற்றிப் பார்த்தனர்.
7. தென்னாடுகள் அனைத்தும் பொருளாதாரத் துறையில் மேம்பாடு அடைந்துள்ளன.

## நடவடிக்கை 3

**கெடுதல் விகாரப் புணர்ச்சியில் மேலும் சில சொற்களைக் கண்டறிந்து பட்டியல் இடுக.**

### சிந்தனைக்கு

- தன்னைத் தானே நம்பாதவன் தனக்கே பகைவன் ஆவான்.
- உன்னால் முடிந்தவரை உன் பணியினை நன்றாகச் செய். நாளை அதனிலும் நன்றாகச் செய்யும் ஆற்றலை நீ பெறக்கூடும்.

  - நியூட்டன்

BT Year 6 1_Layout 1 10/2/2015 1:20 PM Page 33




# தொகுதி 4 நிருவகிப்பு

## பாடம் 1 நேர ஒதுக்கீடு

குழுவில் கலந்துரையாடுக.

நகுலனின் ஒரு நாள் நேர ஒதுக்கீடு






குறியீடு :

- தூங்கும் நேரம்
- பள்ளியில்
- உணவு, ஓய்வு
- மீள்பார்வை
- வீட்டுப் பாடம்
- விளையாட்டு
- பிரத்தியேக வகுப்பு

1.9.4 குறிவரைவில் காணப்படும் விவரங்களை விளக்கமாகவும் தெளிவாகவும் கூறுவர்.

## நடவடிக்கை 1

**குறிவரைவில் காணப்படும் நேர ஒதுக்கீடு பற்றிக் குழுவில் கலந்துரையாடுக.**

## நடவடிக்கை 2

**வினாக்களுக்கு ஏற்ற விவரங்களைச் சேகரித்து விளக்கமாகவும் தெளிவாகவும் கூறுக.**

1. நகுலன் அதிகமான நேரத்தை ஒதுக்கீடு செய்த நடவடிக்கை யாது? ஏன்?
2. பிரத்தியேக வகுப்பிற்குச் செலவழிக்கும் நேரத்திற்கு ஈடாக உள்ள மற்ற நடவடிக்கைகள் யாவை?
3. வீட்டுப் பாடங்களைச் செய்ய ஒதுக்கப்பட்ட நேரம் போதுமானதா? உனது கருத்தைக் கூறுக.
4. மிகக் குறைவான நேர ஒதுக்கீட்டைக் கொண்ட நடவடிக்கை யாது? ஏன்?
5. மீள்பார்வைக்கான நேர ஒதுக்கீடு குறைக்கப்படுகிறது? அதன் விளைவுகள் யாவை?
6. நகுலனின் நேர ஒதுக்கீடு குறிவரைவு பற்றிய உனது கருத்துகளைக் கூறுக.
7. நகுலன் எந்தப் பகுதிக்கு அதிக நேரம் ஒதுக்க வேண்டும் என நீ நினைக்கிறாய்?
8. நகுலனின் நேர ஒதுக்கீட்டில் வேறு என்னென்ன பகுதிகளைச் சேர்த்துக் கொள்வது அவசியம்?
9. நேர ஒதுக்கீடு அவசியமான ஒன்று என்பதைப் பற்றி நீ கூற விரும்பும் கருத்துகள் யாவை?
10. உனது சுய நேர ஒதுக்கீடு பற்றிய பொருத்தமான குறிவரைவு ஒன்றனை வரைந்து விளக்கிடுக.

## இடுபணி


ஒவ்வொரு மாதமும் நீ சேமிக்கும் பணம், செலவு செய்யும் விபரங்கள் பற்றிய குறிவரைவு ஒன்றனை வரைந்து ஆசிரியரிடம் காட்டுக.

BT Year 6 1_Layout 1 10/2/2015 1:20 PM Page 35

# பாடம் 2 காலம் போற்றுவோம்

## வாசித்து விளக்கிக் கூறுக.

விமலா தன் பள்ளி மாணவர்களிடையே நடத்திய ஆய்வின்படி, வீட்டுப் பாடங்களை மாணவர்கள் குறிப்பிட்ட இடங்களில் செய்கின்றனர்.




## நடவடிக்கை 1

**குறிவரைவிலுள்ள தகவல்களைக் கொண்டு வினாக்களுக்கு விடையளித்திடுக.**


1. மாணவர்கள் வீட்டுப் பாடங்களைச் செய்ய அதிகமாக விரும்பும் இடம் எது? ஏன்?
2. மிகக் குறைந்த அளவில் மாணவர்கள் வீட்டுப் பாடம் செய்யும் இடம் எது? ஏன்?
3. மாணவர்கள் தங்களின் வீட்டுப் பாடங்களைச் செய்ய ஏற்ற இடம் எ.்.து என்பதைக் காரணங்களுடன் கூறுக.
4. வீட்டில் முறையான வசதிகள் இன்றித் தவிக்கும் மாணவர்கள் எவ்வாறு தங்களின் வீட்டுப் பாடங்களைச் செய்து முடிக்கலாம்?

2.8.6 குறிவரைவிலுள்ள தகவல்களைச் சேகரிப்பர்.


## நடவடிக்கை 2

**கொடுக்கப்பட்ட குறிவரைவுகளுக்கு ஏற்பத் தகவல்களைச் சேகரித்துக் கூறுக.**

அ. விளையாட்டுகளைப் பற்றிய விதிமுறைகளை அறிந்துள்ள மாணவர்களின் விழுக்காடு




ஆ. மின்வணிகத்தில் காலணிகள் விற்பனை




பாடம் 3

# அளவான செலவு

## அறிந்து எழுதுக.

பார்கவி பெற்றோரின் மாத வருமான நிருவகிப்பு.




## நடவடிக்கை 1

**வினாக்களுக்கு விடை எழுதுக.**


1. பார்கவியின் பெற்றோர் தங்களின் வருமானத்தைப் பயன்படுத்தும் விதத்தையும் விழுக்காட்டையும் பட்டியலிடுக.
2. பார்கவியின் பெற்றோர் மிக அதிகமாகச் செலவிடும் பகுதிக்கு ஏற்ற காரணங்களை எழுதுக.

3.5.11 குறிவரைவு தொடர்பான கேள்விகளுக்குப் பதில் எழுதுவர்.

3. பார்கவியின் பெற்றோர் எதிர்காலத் திட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யும் விழுக்காட்டினைப் பற்றிய உன் கருத்துகளை எழுதுக.
4. பார்கவியின் பெற்றோர் எந்தெந்தச் செலவினங்களைக் குறைக்க இயலும் என்பனவற்றையும் அவற்றிற்கான காரணங்களையும் எழுதுக.
5. பார்கவியின் பெற்றோர் எதற்குக் கூடுதல் ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று நீ கருதுகிறாய்?
6. உன் பெற்றோரின் வருமானத்தையும் செலவிடும் விதத்தையும் குறிவரைவு ஒன்றனை வரைந்து குறிப்பிடுக.
7. எதிர்காலத் தேவைக்கு உதவும் வகையில் எந்தப் பகுதியை அதிகரிப்பது சிறப்பாகும்? காரணத்தைக் கூறுக.

## நடவடிக்கை 2

**வினாக்களுக்கு விடையளித்திடுக.**




1. மாவார் குடியிருப்புப் பகுதியில் வாழும் மக்களின் தொழில்களை எழுதுக.
2. இப்பகுதி வாழ் மக்களின் வாழ்க்கைத் தரம் எவ்வாறு இருக்கும் என நினைக்கிறாய்?
3. தொழிற்சாலையில் வேலை செய்யும் மக்கள் தொகை ஏன் அதிகம் என நினைக்கிறாய்?
4. மிகக் குறைந்த அளவில் ஈடுபடும் தொழில் யாது? காரணம் என்ன?



# பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

## மூதுரையின் பொருளை அறிக.

நல்லவரிடம் நல்ல செயல்கள் இருக்கும். நல்ல நோக்கம், மனம் இருக்கும். மக்களிடத்தில் பெரிய மதிப்பும் இருக்கும். நல்லவர்கள் இறைவனை வணங்கினால் உலகில் நல்ல மழையும் பெய்யும் என்பது ஔவையின் அருளுரையாகும்.

புகழூர் என்ற கிராமத்தில் பொன்னழகன் என்பவர் வாழ்ந்து வந்தார். நிலம், பணம் எனப் பல சொத்துகளை உடையவராயினும் நல்ல குணமும் படைத்தவர். சுற்றத்தார் அனைவரும் நலமாக இருக்க வேண்டும் என்ற நல்லெண்ணம் கொண்டவர். பொன்னழகனின் செல்வாக்கும் சொல்வாக்கும் அவ்வூர் மக்கள் அறிந்த ஒன்று.

பொன்னழகன் வாழும் புகழூருக்கான சாலைகள் குண்டும் குழியுமாக இருந்தன. பொன்னழகனின் சேவையையும் அவரின் நற்குணத்தையும் கருத்திற்கொண்டு அரசாங்கம் அந்த ஊருக்கான சாலையைச் சீர்படுத்தியதோடு பேருந்துச் சேவையையும் ஏற்பாடு செய்தது.

பொன்னழகன் பொருட்டு வரும் பேருந்துச் சேவையை அக்கிராம மக்கள் அனைவரும் பயணத்திற்குச் செல்லப் பயன்படுத்தினர். நெல்லுக்குப் பாய்ச்சிய நீர் வாய்க்காலில் செல்லும்போது புல்லுக்கும் உதவியாய் இருக்கிறதே என்பதுபோலப் பொன்னழகனுக்காக வந்த பேருந்துச் சேவை



4.7.3 ஆறாம் ஆண்டுக்கான மூதுரையின் பொருளை அறிந்து கூறுவர்; எழுதுவர்.

BT Year 6 2_Layout 1 10/2/2015 1:22 PM Page 40

அக்கிராம மக்கள் அனைவரும் பயன்பெறச் செய்ததே என எண்ணிப் பொன்னழகன் மகிழ்ந்தார்.

புகழூர் கிராம மக்களை மகிழ்ச்சிப்படுத்த பொன்னழகன் மேலும் பல முயற்சிகளைச் செய்தார். அக்கிராமத்தில் சிறியதொரு மண்டபம், நூல் நிலையம், பள்ளிக்கூடம், கோயில், பொதுக் கழிப்பறை போன்ற வசதிகளை அரசாங்கத்திடமிருந்து பெற்றுத் தந்தார். அனைத்து வசதிகளையும் பெற்ற கிராம மக்கள் பொன்னழகனை வாழ்த்தினர். மலர்ந்த முகங்களுடன் கிராம மக்கள் வேலை செய்வதையும் சிட்டுக் குருவிகள் போல் சிட்டாய்ப் பறந்து பள்ளிக்குச் சென்று படிக்கும் சிறுவர்களையும் கண்டு அகம் மகிழ்ந்தார் பொன்னழகன்.

### மூதுரையும் பொருளும்

**நெல்லுக்குக் கிறைத்தநீர் வாய்க்கால் வழியோடிப்**
**புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம் - தொல்லுலகில்**
**நல்லார் ஒருவர் உளரேல் அவர்பொருட்டு**
**எல்லார்க்கும் பெய்யும் மழை.**

நெற்பயிர்கள் செழித்து வளர வாய்க்கால் வழி பாய்ச்சப்படும் நீரானது நெற்பயிர்களை மட்டும் சேராமல் அங்குள்ள புற்களுக்கும் போய்ச் சேருகின்றது. இதனால், நெல்லோடு புல்லும் பயனடைகின்றது. அது போன்று இவ்வுலகில் வாழும் நல்லவர் ஒருவருக்காகப் பெய்யும் மழை அனைத்து உயிரினங்களுக்கும் பாகுபாடின்றி நன்மை அளிக்கிறது.



## நடவடிக்கை 1

**மூதுரைக்கு ஏற்ற வரிகளை அடையாளமிடுக.**

1. அப்பெரியவர் அவ்வூர் மக்களுக்காகப் பல சேவைகள் செய்தார்.
2. கிராமத்தில் பொது நூலகம் அமைத்ததால் அவ்வூர் மக்கள் அனைவரும் பயனடைந்தனர்.
3. ஆசிரியர்கள், பொதுமக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து பொது மண்டபம் கட்டுவதற்காக நிதி திரட்டினர்.
4. குடும்பத்திற்கெனக் கட்டிய கோயிலில் பலரும் வந்து இறைவழிபாடு செய்தனர்.
5. திருமகள் சுயமாக வாழ நினைப்பவள்.
6. புதுப்பித்த பொது மண்டபத்தில் மக்கள் பல குடும்ப நிகழ்ச்சிகளையும் நடத்தி மகிழ்ந்தனர்.

### சிந்தனைக்கு

- நல்லதை என்னால் செய்து காட்ட முடியும் என்பதை ஆழ்மனத்திற்குள் சொல்லிச் சொல்லி உங்கள் மன உறுதியைப் பலப்படுத்துங்கள்.
- துன்பம் வரும்போது கண்ணை மூடாதே. அஃது உன்னை வென்றுவிடும். கண்களைத் திறந்து பார். அதை நீ வென்றுவிடலாம்.

BT Year 6 2_Layout 1 10/2/2015 1:22 PM Page 41



# பாடம் 5 இலக்கணம்

## பெயரெச்சம், வினையெச்சம் அறிக.

- எச்சம்/எச்ச வினை
- பொருள் முற்றுப்பெறாத வினைச்சொல் **எச்சம்/எச்ச வினை** எனப்படும்.
- அது முற்றிய பொருளைத் தருவதற்கு இன்னொரு சொல்லின் துணை அவசியமாகின்றது.
- எச்சம் பெயர்ச்சொல்லையோ வினைச்சொல்லையோ தழுவி வரும்.

எடுத்துக்காட்டு ➤ பாடினான் (வினைமுற்று)

- பாடிய
- பாடுகின்ற
- பாடும்

➤ எச்சம்




எச்சம் இருவகைப்படும்

பெயரெச்சம் | வினையெச்சம்

**பெயரெச்சம்** எச்சம் பெயர்ச்சொல்லைத் தழுவி நின்றால் பெயரெச்சம் எனப்படும்.

எடுத்துக்காட்டு

➤ பாடிய (எச்சம்) பெண் (பெயர்ச்சொல்)

➤ ஓடிய (எச்சம்) பையன் (பெயர்ச்சொல்)




5.3.26 பெயரெச்சம், வினையெச்சம் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

BT Year 6 2_Layout 1 10/2/2015 1:22 PM Page 42

**வினையெச்சம்** எச்சம் வினைமுற்றைத் தழுவி நின்றால் வினையெச்சம் எனப்படும்.

**எடுத்துக்காட்டு**

➤ படித்து → எச்சம்; முடித்தான் → வினைமுற்று


➤ ஆடிப் → எச்சம்; பாடினான் → வினைமுற்று




## நடவடிக்கை 1

**வாக்கியங்களில் உள்ள பெயரெச்சம், வினையெச்சம் ஆகிய சொற்களைப் பட்டியல் இடுக.**

1. இனிமையாகப் பாடிய இளம்பெண்ணை அனைவரும் பாராட்டினர்.
2. பந்தயத்தில் விரைவாக ஓடிய சிறுவனைப் பார்த்துக் கைத்தட்டி ஆரவாரம் செய்தனர்.
3. மு. வரதராசன் எழுதிய நாவல்கள் அனைத்தையும் அப்பா படித்து முடித்தார்.
4. கூடையில் உள்ள பழங்களை அத்தை அள்ளிக் கொடுத்தார்.



## நடவடிக்கை 2

**சரியான பெயரெச்சத்தையும் வினையெச்சத்தையும் எழுதுக.**

1. அமுதன் சிறப்பாகப் படித்த பையன். ______
2. இனியன் சிறப்பாகப் படிக்கின்ற பையன். ______
3. எழிலன் சிறப்பாகப் படிக்கும் பையன். ______
4. விவசாயி நிலத்தை உழுது வந்தான். ______
5. முத்து ஓவியத்தை வரைந்து பழகினான். ______
6. குயவன் பானையை வனைந்து முடித்தான். ______



BT Year 6 2_Layout 1 10/2/2015 1:22 PM Page 43

# தொகுதி 5 நலமான வாழ்வு

## பாடம் 1 சீராக வாழ்வோம்

### பண்புடன் உரையாற்றுக.



1. **ஆரோக்கிய உணவு**
   - ➤ சத்துள்ள உணவு அவசியம்
   - ➤ சீரான வளர்ச்சி இருக்கும்
   - ➤ இரத்த ஓட்டம்
   - ➤ சரிவிகித உணவு
   - ➤ அறிவாற்றல் பெருகும்



2. **உடற்பயிற்சியின் அவசியம்**
   - ➤ வியர்வையை வெளியேற்றச் சிறந்த வழி
   - ➤ நோயின்றி வாழ
   - ➤ உடல் பருமனைக் குறைக்கலாம்
   - ➤ சிறப்பான நேர நிருவகிப்பு



3. **குடும்பச் சுற்றுலா**
   - ➤ சிறந்த மகிழி
   - ➤ குடும்ப உறவு வலுப்படும்
   - ➤ அன்பான குடும்பம்
   - ➤ குடும்பச் சிக்கல்களைக் களையலாம்.



1.10.6 தலைப்பையொட்டிப் பண்புடன் உரையாற்றுவர்.



4. **பாராட்டும் பண்பு**
- ➤ மனமகிழ்ச்சி ஏற்படும்
- ➤ உற்சாகம், உந்துதல், தன்னம்பிக்கை ஏற்படும்
- ➤ மனத்தில் பெரும் ஆறுதலை ஏற்படுத்தும்
- ➤ நல்லுறவை வளர்க்கும்



## நடவடிக்கை 1

**கொடுக்கப்பட்ட தலைப்புகளையும் குறிப்புகளையும் வைத்துப் பண்புடன் உரையாற்றுக.**

## நடவடிக்கை 2

**தலைப்புகளையொட்டிப் பண்புடன் உரையாற்றுக.**



1. தானம் - அன்னதானம், இரத்த தானம், உடல் உறுப்புகள் தானம்.
2. இயற்கையைப் பேணுவோம் - மரம் வளர்ப்போம், தூய்மையைப் பேணுவோம், குப்பைகளைக் குறைப்போம்.
3. உடல் நலமே வாழ்வில் சிறந்தது.
4. குடும்ப நல்லுறவு மிகவும் முக்கியம்.
5. ஊருடன் கூடி வாழ்வதே சிறப்பு.
6. நம் பூமி நம் சொத்து.
7. மாணவர்களும் உடற்கல்வியும்.
8. பொறுப்புள்ள சமுதாயத்தில் மாணவர்களின் பங்கு.

## இடுபணி

நலமாக வாழும் முறைகளைக் கருத்து வரைபடம் மூலம் வரைந்து எழுதுக.



# பாடம் 2 உணவும் குணமும்

## உரையை வாசித்திடுக.

அன்பைப் போன்ற அரும்பெரும் செல்வம்
மனிதன் பெறுவது மற்றெதும் இல்லை.
அறிந்தவர்க்கெல்லாம் அன்பே தெய்வம்.

பெருமதிப்பிற்குரிய அவையோரே!

இங்குத் திரளாகக் கூடியிருக்கும் பொது மக்களே! இயற்கை மருத்துவத்தின் அவசியத்தையும் முக்கியத்துவத்தையும் அறிந்து கொள்ள ஆவலாக வந்திருக்கும் உங்கள் அனைவருக்கும் எனது பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்பிற்கினியோரே!

நமது வாழ்க்கையில் செயற்கை உரங்கள் கலக்காத இயற்கைப் பொருள்களால் ஆன மருத்துவ நன்மைகள் பல உள்ளன. பழந்தமிழர்கள் இயற்கைப் பொருள்களைப் பயன்படுத்திப் பல நோய்களிலிருந்து விடுபட்டனர். தங்களின் வாழ்க்கை அனுபவங்களிலிருந்து பல நோய்களுக்கு இயற்கைப் பொருள்கள், தாவரங்கள், மூலிகைகள் போன்றவற்றைப் பயன்படுத்திப் பலனையும் கண்டனர்.

எனதருமை நண்பர்களே!



இயற்கை மருத்துவ முறைகளைப் பல வகையில் அவர்கள் கையாண்டனர். வழக்கமான உணவு உண்ணுதல், நோய் வந்த பின் குறிப்பிட்ட உணவுப் பொருளை உட்கொள்ளுதல் போன்ற முறைகளைப் பின்பற்றினர். பாகற்காய், சுண்டைக்காய், அகத்திக் கீரை, முருங்கைக் கீரை ஆகியவற்றைத் தங்களின் உணவில் அடிக்கடி சேர்த்துக் கொண்டனர். ஆனால், இன்றைய சூழலில் அப்படிப்பட்ட உணவு வகையை விரும்புபவர்கள் மிகக் குறைவே. துரித உணவகங்களை நோக்கி நாம் ஓடிக் கொண்டிருக்கிறோம். சத்துக் குறைவானவற்றையும் உடலுக்குக் கேடு விளைவிப்பவற்றையுமே உண்டு மகிழ்கின்றோம்.

2.6.24 உரையை வாசித்துப் புரிந்து கொள்வர்.

BT Year 6 2_Layout 1 10/2/2015 1:22 PM Page 46

அன்பர்களே!

பகவத் கீதையில் நாம் எப்படிப்பட்ட உணவை உண்ண வேண்டும் என்பது குறித்து அழகாகச் சொல்லப்பட்டுள்ளது. பொதுவாக, மனிதர்களுக்கு மூன்று விதமான குணங்கள் இருக்கின்றன. அவை தாமசம், ராஜசம், சத்துவம் என்பனவாகும். நாம் உண்ணும் உணவுக்கும் இந்த மூன்று குணங்களுக்கும் நெருங்கிய தொடர்புள்ளதாக கீதை கூறுகின்றது. “ஒரு யாமம் கழிந்து உணவை உண்ணாதே” என்று கீதை மனுக் குலத்திற்குப் போதிக்கிறது. அதாவது, சமைத்த உணவையே சாப்பிட வேண்டும். நேரத்தோடு உண்ண வேண்டும் என்று சொல்லித் தருகின்றது. ஆனால், இன்றைய நவீன உலகில் குளிர்சாதனப் பெட்டியில் வைத்து மீண்டும் அடுத்த நாளோ அதற்கடுத்த நாளோ சூடாக்கி உண்கிறோம். அத்தகைய உணவில்தான் பலரது வாழ்க்கைச் சக்கரம் சுழல்கின்றது.

எனதருமைப் பெரியோர்களே!

தாமசம் குணம் கொண்டவர்கள் பழைய உணவுகளை விரும்பி உண்பார்கள். இப்பழக்கம் சோம்பலையும் மந்தத்தையுமே உண்டாக்கும். ராஜச குணம் உடையவர்கள் அதிகக் கார்ப்பு, புளிப்பு, அதிகசூடான உணவு உண்பவர்களாக இருப்பார்கள். உடல் நலத்திற்குப் பகையே புளிப்பு, கார்ப்பு, வெப்பம் என்ற இம்மூன்றும்தான். சத்துவ குணமுள்ளவர்கள் பால், தயிர், தேன், பழம் போன்ற உணவு வகையை விரும்பி உண்பார்கள். இவர்கள் அமைதியாகவும் சாந்தமாகவும் இருப்பார்கள்.

ஆகவே, நவீன காலத்தில் வாழ்ந்தாலும், நாம் அனைவரும் சரியான உணவு முறைகளைப் பின்பற்றி இயற்கையான உணவு வகையை உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும். முறையான உணவே அனைவரின் வாழ்கையையும் செம்மைப்படுத்தும் எனக்கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.



நடவடிக்கை 1

**வினாக்களுக்கு விடையளித்திடுக.**

1. இவ்வுரை எதன் முக்கியத்துவத்தை விளக்குகின்றது?
2. பழந்தமிழர்களின் உணவுப் பழக்கம் எவ்வாறு அமைந்திருந்தது?
3. மனிதர்களுக்கும் உணவு வகைகளுக்கும் உள்ள தொடர்பு யாது?
4. மூவகை குணங்களையும் அவற்றின் உணவுப் பழக்கங்களையும் கூறுக.
5. இவ்வுரையின் கருத்துகள்படி நீ எவ்வாறான உணவைத் தெரிவு செய்வாய்? ஏன்?

## தகவல் பேழை



இன்னாட்டு



இழுது



மாச்சில்



வெதுப்பி



பழச்சாறு



அணிச்சல்



பாடம் 3

# நோய் தீர்க்கும் பழங்கள்

## வாசித்து எழுதுக.

கனவு மெய்ப்பட வேண்டும்
கைவசமாவது விரைவில் வேண்டும்
தனமும் இன்பமும் வேண்டும்
தரணியிலே பெருமை வேண்டும்.

மதிப்பிற்குரிய அவையோர்களே,

உங்கள் அனைவருக்கும் இதயங்கனிந்த வணக்கத்தைக் கூறிக் கொள்வதில் பெருமை அடைகின்றேன்.

அன்புசால் அவையோர்களே!

இன்று உங்களுடன் நான் பிணி தீர்க்கும் பழங்கள் பற்றிய விவரங்களைப் பகிர்ந்துகொள்வதில் பெருமிதம் கொள்கின்றேன். பழங்கள் நம் உடல் நலத்திற்கும் நோய்களைத் தீர்க்கவும் உடலைச் சுறுசுறுப்பாகவும் இளமையாகவும் எழிலாகவும் வைத்துக் கொள்ளவும் பெரிதும் உதவுகின்றன.

இயற்கை அளித்துள்ள பழங்களை அப்படியே நாம் உண்ணும்போது அதிலுள்ள சத்துகள் வீணாவதில்லை. தேவையற்ற அமிலங்களும் தோன்றுவதில்லை. உடல் நலம் குன்றியவர்களுக்கு ஆரஞ்சுப்பழம், எலுமிச்சம் பழச்சாறு ஆகியவற்றைக் கொடுக்கின்றோம். இதற்குக் காரணம் பழங்கள் மனித உடலுக்கு விரைவில் புத்துணர்ச்சி அளிக்கக்கூடியவை.



அன்பார்ந்த சகோதர சகோதரிகளே!

பழங்களில் எளிதில் செரிக்கும் தன்மைகளுடைய புரதச் சத்து, கொழுப்புச் சத்து, மாவுச் சத்து, உயிர்ச் சத்துகள் இயற்கையாகவே அமைந்துள்ளன. எனவே, பழங்கள் மனித உடலுக்கு ஏற்ற சிறந்த மருந்தும் உணவும் ஆகும். பழங்கள் பல்வேறு சுவைகளைக் கொண்டவை. அறுசுவைகளும் பழங்களில் உள்ளன. இனிப்புச் சத்து, தசைகளுக்கு வலுவூட்டுகிறது. புளிப்பு, கொழுப்பைப் பாதுகாக்கிறது. கசப்பு, நரம்புகளுக்கு

3.7.9 உரையை நினைவு கூர்ந்து எழுதுவர்.

BT Year 6 2_Layout 1 10/2/2015 1:23 PM Page 48







வலிமையூட்டுகிறது. துவர்ப்பு, இரத்த விருத்தி செய்கின்றது. கரிப்பு, எலும்பு வளர்ச்சிக்கு உறுதுணையாகின்றது. கார்ப்பு, உடல் பலத்தைப் பெருக்குகின்றது.

பெரியோர்களே!

இப்பழங்களைப் பற்றிய மேலும் ஒரு சிறப்பு யாதெனில், பருவ நிலைக்கு ஏற்ப மனிதனுக்குத் தேவையான பழங்களை இறைவன் அளித்திருப்பவைதான்! சீத்தாப்பழம் சாப்பிடுவதன் மூலம் புற்று நோயாளிகளுக்கு எதிர்ப்புச் சக்தி உண்டாகிறது என்று கண்டுபிடித்திருக்கிறார்கள். புற்று நோய்க் கிருமிகளை எதிர்க்கும் ஆற்றல் சீத்தாப் பழத்திற்கு உள்ளது எனக் கண்டறியப்பட்டுள்ளது. நெல்லிக் கனிக்குச் சிறுநீரக நோய்களையும் மஞ்சள் காமாலை, மூல நோய் ஆகியவற்றையும் குணப்படுத்தும் ஆற்றல் உண்டு. இக்கனிகளை அருமருந்து என ஆயுர்வேத நூல்கள் போற்றுகின்றன.

பழங்களின் இராணியான மாதுளை உடல் சூட்டைத் தணிக்கும் வல்லமை பெற்றது. மேலும், இருதய நோயாளிகளுக்கு நல்லது. பித்தம் போக்கும்; மலச்சிக்கலையும் நீக்கும். புனிதமான பழமாகக் கருதப்படும் வில்வப் பழத்தை உண்பதால் மூல நோய், வாதம், பித்தம் ஆகியவை குணமாகும். தக்காளி உண்டோமானால் நாம் முக அழகைப் பெறுவதோடு, தோல் நோய்களிலிருந்தும் பாதுகாப்புப் பெறலாம். உடல் பருமனையும் மலச்சிக்கலையும் போக்கவும் தக்காளி உதவுகின்றது.

### தகவல் பேழை


குமளி


கிச்சிலி


செந்தாழை


செம்புற்று


கொடிமுந்திரி


பசலி


குருதிநெல்லி


குமுட்டி

அன்பானவர்களே!

காலையில் பழம் உண்பது பொன் போன்றது. மதியம் வெள்ளி போன்றது. இரவில் ஈயம் போன்றது என்பது ஸ்பெய்ன் நாட்டுப் பழமொழியாகும். எனவே, நாம் அனைவரும் பழங்களை முக்கிய உணவாக உட்கொண்டு நோய்களைத் தீர்ப்போம்.

BT Year 6 2_Layout 1 10/2/2015 1:23 PM Page 49

## நடவடிக்கை 1

**உரையை வாசித்து நினைவு கூர்ந்து எழுதுக.**

## நடவடிக்கை 2

**குறிப்புகளைக் கொண்டு உரை ஒன்றனை எழுதுக.**

- வயிற்றுக் கோளாறுகளைக் குணப்படுத்தும்
- மார்புச் சளியைப் போக்கும்
- இரத்த ஓட்டத்தைச் சீராக்கும்
- மன அழுத்தம் குறையும்
- எடை குறையும்
- வாயுத் தொல்லைகளைக் குறைக்கும்

- புற்று நோய்க் கிருமிகளை எதிர்க்கும்
- உடல் எடை குறையும்
- கொழுப்புக் குறையும்
- நோய் எதிர்ப்புச் சக்தியைக் கொடுக்கும்
- சருமத்தின் அழகைப் பெருக்கும்


இஞ்சி


ஏலக்காய்


மஞ்சள்


சீரகம்

- வாசனைத் திரவியங்களின் அரசி
- செரிமான சக்தியைக் கூட்டும்
- பசியைத் தூண்டும்
- தலைவலி, வாந்தி, மார்புச் சளியைக் குணப்படுத்தும்
- விக்கலை நிறுத்தும்
- தேவையற்ற கொழுப்பினைக் குறைக்கும்
- புற்று நோய்க் கிருமிகளைக் கொல்லும்
- சிறுநீரகக் கோளாறுகளைக் குறைக்கும்

- பழமையானது, அதிகச் செல்வாக்கு நிறைந்த வாசனைத் திரவியம்
- சீரகத் தண்ணீர் வயிற்றுக் கோளாறுகளைக் குணமாக்கும்
- சீரகப் பொடி தலைச்சுற்றல், மயக்கம் நீக்கும்
- சீரகத்தை எலுமிச்சம் சாறு, கருப்பஞ்சாறு போன்றவற்றில் கலந்து உட்கொண்டால் நோய் எதிர்ப்புச் சக்தி மிகும்

BT Year 6 2_Layout 1 10/2/2015 1:23 PM Page 50



# பாடம் 4 செய்யுளும் மொழியணியும்



## வெற்றி வேற்கையை அறிக.

பல ஆண்டுகளுக்குப் பிறகு தன் ஆசிரியைக்கு ஆசை ஆசையாக வாங்கி வந்த அன்புப் பரிசினைக் கொடுக்க முடியவில்லையே என்ற வருத்தம் மருத்துவத் துறை மாணவனான பொன்வண்ணனின் முகத்தில் இழையோடியது. சோகமும் ஏமாற்றமும் நிறைந்தவனாகப் பேருந்து நிலையத்தில் அமர்ந்திருந்தான்.


கைக்கடிகாரத்தைப் பார்க்கிறான். பேருந்து வருவதற்கு இன்னும் இருபது நிமிடங்கள் ஆகும். “ஏன் ஆசிரியை வேறு இடத்துக்கு மாறிப் போனாங்க?” என்று தனக்குத் தானே கேள்விகளைக் கேட்டு விடையில்லாமல் தவித்தான்.

ஆம், அன்று மட்டும் பனிமலர் ஆசிரியை தனக்கு உதவி செய்யாமல் இருந்திருந்தால் இன்று அவன் எங்கிருந்திருப்பான்? ஏழ்மைச் சூழல்தான் பொன்வண்ணனுக்குக் குறையே தவிர மற்ற எல்லா வகையிலும் சிறந்தவனாகவே விளங்கினான். காய்கறித் தோட்டத்தில் வேலை செய்த பொன்வண்ணனின் பெற்றோர் தங்களின் பிள்ளையை எப்படியாவது படிக்க வைத்து நல்ல நிலைக்குக் கொண்டு வர வேண்டும் என்ற வேட்கை உள்ளவர்களாக இருந்தனர்.

பொன்வண்ணன் கல்வியிலும் புறப்பாடத்திலும் சிறந்து விளங்கினான். பல போட்டிகளில் பங்கெடுத்துப் பள்ளிக்கும் பெற்றோருக்கும் பெருமை தேடித் தந்தான். வருட இறுதித் தேர்வு நெருங்கிய நேரம் அது. பொன்வண்ணனை அவசரமாக வீட்டிற்கு அழைத்துச் செல்ல அண்டை வீட்டுக்கார இளைஞர் வந்தார். பள்ளி அலுவலகத்திற்குச் சென்று விவரத்தைத் தலைமையாசிரியரிடம் கூறிவிட்டுப் பொன்வண்ணனைத் தமது வாடகை வண்டியில் ஏற்றிச் சென்றார். பல முறை அவரிடம் காரணம் கேட்ட பொன்வண்ணனுக்கு வீட்டை அடைந்ததும்தான் அனைத்தும் புரிந்தது. பொன்வண்ணன் தன் பெற்றோர் சாலை விபத்தில் இறந்த செய்தி கேட்டு அதிர்ந்து போனான். யாரும் இல்லாச் சிறுவனாகவும் இனி, தனது படிப்பைத் தொடர முடியாது என்ற நிலையையும் நினைத்து மனம் நொந்தான்.

ஒரு வாரத்திற்குப் பிறகு பொன்வண்ணனின் ஆசிரியை பனிமலர் அவனைக் காண வீட்டிற்கு வந்தார். “என்னால் இனி படிக்க முடியாது ஐயை. நாங்கள் வசதியில்லாதவர்கள். எனக்கென்று இனி யாருமில்லை ஐயை,” என்று வருத்தத்துடன் கூறினான்.

| 4.5.3 | ஆறாம் ஆண்டுக்கான வெற்றி வேற்கையின் பொருளை அறிந்து கூறுவர்; எழுதுவர். |
|---|---|



"எத்தகைய வறுமை நிலைமை வந்தாலும் மனம் தளராமல் கல்வியைக் கற்க வேண்டும் பொன்வண்ணன். நீ தங்கிப் படிப்பதற்கு நான் ஏற்பாடு செய்கிறேன். நீ படிப்பில் மட்டும் கவனம் செலுத்து," எனப் பலப்பல ஆறுதல் வார்த்தைகளைக் கூறித் தேற்றினார்.

**"கற்கை நன்றே கற்கை நன்றே**
**பிச்சை புகினும் கற்கை நன்றே"** எனும் வெற்றி வேற்கை வரிகளை நினைவுபடுத்திக் கல்விக்கு ஏழ்மை தடையல்ல என்பதை உணர்த்திய பனிமலர் ஆசிரியையைப் பொன்வண்ணன் மறக்க மாட்டான்.

வாழ்வில் எத்தனை சோதனைகள் வந்தாலும் கல்விக்கு முற்றுப்புள்ளி வைக்கலாகாது. துன்பங்களையும் துயரங்களையும் கடந்து செல்ல உறுதியோடு போராடினால் நிச்சயம் வெற்றி பெறுவோம் என்பதைப் பொன்வண்ணனுக்கு உணர்த்திய பனிமலர் ஆசிரியையை என்றாவது ஒருநாள் சந்திக்க முடியும் என்ற நம்பிக்கையோடு, செல்ல வேண்டிய பேருந்து வரவே அதில் ஏறினான்.

## வெற்றி வேற்கையும் பொருளும்

- **கற்கை நன்றே கற்கை நன்றே**
  **பிச்சை புகினும் கற்கை நன்றே**
- எத்தகைய வறுமை நிலையிலும் கல்வி கற்பதை விடலாகாது.

### தகவல் உலகம்

- தமிழ்த் தென்றல் என்று அழைக்கப்படுபவர் திரு.வி.கல்யாணசுந்தரம்.
- தமிழ்த் தாத்தா என அழைக்கப்படுபவர் உ.வே.சாமிநாத ஐயர்.
- கவிமணி எனும் சிறப்புக்குரியவர் தேசிக விநாயகம் பிள்ளை.

### நடவடிக்கை 1

**வெற்றி வேற்கையையும் பொருளையும் அறிந்து கூறுக.**

### நடவடிக்கை 2

**வெற்றி வேற்கையையும் பொருளையும் அழகிய கையெழுத்தில் எழுதுக.**

### சிந்தனைக்கு


- முயற்சிதான் வெற்றியின் முதற்படி என்றால் அந்த முதற்படியை அடைய நீ முந்நூறு முறை தோற்றாலும் முயற்சியை இழக்காதே.
- அனைவருக்கும் ஒரே மாதிரியான திறமை இல்லாமல் இருக்கலாம். ஆனால், நம் திறமைகளை வளர்த்துக் கொள்ள ஒரே மாதிரியான வாய்ப்புகள் உள்ளன.

BT Year 6 2_Layout 1 10/2/2015 1:23 PM Page 52



# பாடம் 5 இலக்கணம்

## வடமொழிச் சந்தி இலக்கணம் அறிக.




- வடமொழித் தொடர்களில் நிலைமொழியின் ஈற்றில் குற்றொலி அல்லது நெட்டொலி இருந்து, வருமொழி குற்றொலி அல்லது நெட்டொலியில் தொடங்கினால் குற்றொலி மறைந்து நெட்டொலி தோன்றும்.
- நிலைமொழி ஈற்றில் ‘அ / ஆ’ + ‘அ / ஆ’ = ‘ஆ’ தோன்றும்.

எடுத்துக்காட்டு

| | | | | |
|---|---|---|---|---|
| சர்வ | + | அதிகாரி | = | சர்வாதிகாரி |
| குண | + | அதிசயம் | = | குணாதிசயம் |

### நடவடிக்கை 1

**சொற்களைச் சேர்த்து எழுதுக.**

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | குண | + | அனுபவம் | = | | 6. | சிவ | + | ஆலயம் | = | |
| 2. | தேச | + | அதிபதி | = | | 7. | பரம | + | ஆனந்தம் | = | |
| 3. | கீத | + | அஞ்சலி | = | | 8. | வேத | + | ஆகமம் | = | |
| 4. | பஞ்ச | + | அமிர்தம் | = | | 9. | பரம | + | அதிபதி | = | |
| 5. | கங்கா | + | அமிருதம் | = | | 10. | அமிர்த | + | ஆனந்தம் | = | |

5.7.5 வடமொழிச் சந்தி இலக்கணம் பற்றி அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

## நடவடிக்கை 2

**கோடிட்ட சொற்களைப் பிரித்தெழுதுக.**

1. பக்தர்கள் ஆலயத்தில் கும்பாபிஷேகம் செய்வதைப் பார்த்து மெய்மறந்து வணங்கி நின்றனர்.
2. அருள்மொழி அழகான பெண் மட்டுமல்லாமல் சிறந்த குணாதிசயங்களையும் கொண்டவள் என்று அனைவரும் பாராட்டினர்.
3. அரசர் தமது சேனாதிபதிகள் அனைவரையும் போருக்குக் கூட்டிச் சென்றார்.
4. மருதன் தம்பதிகள் நம் நாட்டில் உள்ள பல சிவாலயங்களுக்குச் சென்று தரிசனம் பெற்றனர்.
5. பல தேசங்களைக் கைப்பற்றிச் சிறந்த தேசாதிபதிகள் என்று புகழ் பெற அக்கால மன்னர்கள் ஆவல் கொண்டிருந்தனர்.
6. மக்கள் போற்றும் அப்பெரியவர் குணானுபவம் மிக்கவர் என்பதைப் பலரும் அறிந்திருந்தனர்.
7. அந்நிறுவனத்தின் முதலாளி ஒரு சர்வாதிகாரி என்பதால் தொழிலாளர்கள் பலர் அவரை வெறுத்தனர்.





## நடவடிக்கை 3

**சொற்களுக்கு ஏற்ற வாக்கியம் அமைத்திடுக.**

1. குணாதிசயம்
2. வேதாகமம்
3. அமிர்தாஞ்சனம்
4. சேனாதிபதி
5. கும்பாபிஷேகம்
6. சிவாலயங்கள்

### தகவல் உலகம்

'கலண்டே' எனும் இலத்தீன் மொழிச் சொல்லிலிருந்து உருவானதே 'காலண்டர்' என்ற ஆங்கிலச் சொல்.

கலண்டே என்றால் கணக்கினைக் கூட்டுவது என்று பொருள்.

கலண்டே என்பது இலத்தீனில் ஒவ்வொரு மாதத்திலும் வருகின்ற முதல் நாளின் பெயராகும்.

## இடுபணி

வடமொழிச் சந்தி இலக்கணம் பற்றிய திரட்டேடு ஒன்றனைத் தயாரித்திடுக.



# தொகுதி 6 வாழ்வும் சேவையும்

## பாடம் 1 இளையோர் உலகம்

### தலைப்புகளைப் பற்றிப் பேசுக.

- **தொடர்புச் சாதனம்**
  - கைத்தொலைபேசி, தொலைபேசி ஆகியவற்றில் அதிக நேரத்தைச் செலவு செய்யக்கூடாது.
  - கல்வி கற்கும் நேரம் தடைப்பட நேரிடும்.
- **இணையம்**
  - இணையத்தின் மூலம் விளையாடும் விளையாட்டுகள் படிப்பில் ஆர்வத்தைக் குன்றச் செய்யும்.
  - தவறான வழியில் இணையத்தைப் பயன்படுத்த வழி வகுக்கும்.
- **சமூக வலைத் தளங்கள்**
  - போலியான தகவல்கள் நம் நடவடிக்கைகளைப் பாதிக்கும்.
  - நேரத்தை வீணே கழிப்பது
  - தவறான நண்பர்களின் நட்பு

### நடவடிக்கை 1

**தற்போது இளைஞர்கள் தங்களின் நேரத்தைச் செலவழிக்கும் வழிகளில் தொடர்பு சாதனம், இணையம், சமூக வலைத் தளங்கள் ஆகியவை முக்கியமாகத் திகழ்கின்றன. கொடுக்கப்பட்ட கருத்துகளைப் பயன்படுத்தி, ஆதரித்துப் பண்புடன் பேசுக.**

1.10.7 தலைப்பை ஆதரித்துப் பண்புடன் பேசுவர்.

BT Year 6 2_Layout 1 10/2/2015 1:23 PM Page 55

## நடவடிக்கை 2

**கொடுக்கப்பட்ட தலைப்புகளைக் கொண்டு ஆதரித்துப் பண்புடன் பேசுக.**

எடுத்துக்காட்டு : புறப்பாட நடவடிக்கைகளில் மாணவர்கள் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும்.




1. விளம்பரங்களினால் இளைஞர்களும் சிறுவர்களும் ஈர்க்கப்படுகின்றனர்.
2. கூடா நட்பு பெரும் பாதிப்பை ஏற்படுத்துகின்றது.
3. பணத்தை அதிகமாகச் செலவு செய்வதில் ஆர்வம் காட்டுகின்றனர்.
4. இளைஞர்கள் சேமிப்பின் முக்கியத்துவத்தை இன்னும் உணரவில்லை.
5. மாணவர்கள் பெற்றோரின் ஆலோசனைப்படி செயல்படுவதே சிறந்தது.

## நடவடிக்கை 3

**கருத்து வரைபடத்தில் உள்ள கருத்துகளைக் கொண்டு ஆதரித்துப் பேசுக.**

சுயதொழில் நடத்துவது சிறந்தது

- சுதந்திரமான சிந்தனை - கட்டுப்படுத்தாத நிலை
- தன்னம்பிக்கையுடன் இயங்கலாம்
- குடும்ப உறவுகளுக்கு வேலை வாய்ப்புகள் கிடைக்கும்
- வருமானத்தைச் சிறுகச் சிறுகப் பெருக்கிக் கொள்ளலாம்
- பிறருக்கு அடிபணிந்து செயல்பட வேண்டியதில்லை

BT Year 6 2_Layout 1 10/2/2015 1:23 PM Page 56



# பாடம் 2 கூர்ந்து வாசிப்போம்



## கூர்ந்து வாசித்து அறிக.

- நாம் அறிய விரும்புவதைத் துல்லியமாகத் தெரிந்துகொண்டு நமது சிந்தனையைக் குவிநிலைப்படுத்த வேண்டும்.
- செய்திகளையும் கருத்துகளையும் அடையாளம் காண ஒவ்வொரு பக்கத்தின் மேற்பகுதியில் கொடுக்கப்பட்டுள்ள தலைப்புகளையும் துணைத் தலைப்புகளையும் பயன்படுத்தலாம்.
- ஒவ்வொரு சொல்லையும் நிறுத்தி வாசிப்பதைத் தவிர்க்க வேண்டும்.
- கண்களை விரைவாக நகர்த்தி வாக்கியத்தில் காணப்படும் முக்கியக் கருச்சொற்களை அடையாளம் காணும் திறனைப் படிப்படியாக வளர்க்க வேண்டும்.

**எடுத்துக்காட்டுகள்**

அ. தினகரன் பதிவு எண்களின் துணையோடு தன்னுடைய மதிப்பீட்டுப் புள்ளிகளைக் கண்டறிய முனைகிறான். அவன் வகுப்பின் புள்ளி விவரப் பட்டியல் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. தினகரின் பதிவு எண்: 1127

| எண் | பதிவு எண் | கேட்டல் பேச்சு 10% | வாசிப்பு 10% | எழுத்து 20% | மொத்தம் 40% |
|---|---|---|---|---|---|
| 1 | 0412 | 10 | 10 | 20 | 40 |
| 2 | 1224 | 5.5 | 9.0 | 7.0 | 21.5 |
| 3 | 0116 | 8.5 | 6.0 | 6.5 | 21 |
| 4 | 0619 | 6.5 | 16.5 | 7.5 | 30.5 |
| 5 | 0725 | 7.5 | 17.5 | 9.5 | 34.5 |
| 6 | 0909 | 7.5 | 16.5 | 9.4 | 33.4 |
| 7 | 1127 | 6.0 | 11.5 | 7.0 | 24.5 |
| 8 | 1229 | 9.4 | 17.4 | 9.0 | 35.8 |
| 9 | 0207 | 9.0 | 15.5 | 7.0 | 31.5 |

2.7.2 கூர்ந்த வாசிப்பின்வழி தகவல்களைப் பெறுவர்.

- 1127 எனத் தொடங்கும் பதிவு எண்ணை அடையாளம் காணத் தினகரன் விரைவாகக் கூர்ந்து நோக்குகிறான்.
- விரலை விரைவாக மேலிருந்து கீழே நகர்த்துகின்றான்.
- ஐந்தாவது வரிசையை அடைந்தவுடன் அடுத்த இரண்டு எண்களை உற்று நோக்குகின்றான். அவ்வெண்கள் பொருந்தவில்லை.
- ஏழாம் வரிசையைப் பார்க்கிறான். தன் புள்ளி விவரங்களை உற்றுப் பார்க்கின்றான்.

ஆ. பெருங்காயம் எனும் சொல்லைத் தேட விரும்புகிறீர்கள்.

| சொற்கள் | பக்கம் |
|---|---|
| பக்குவம் | 652 |
| பகடி | 653 |
| பசலை | 657 |
| பண் | 668 |
| பாதம் | 707 |
| பாயிரம் | 710 |
| பிணை | 722 |
| புனிதம் | 755 |
| பூதம் | 759 |
| பெருங்காயம் | 767 |
| பேதம் | 772 |
| பொழுது | 783 |



(க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி)

அகர வரிசையில் கொடுக்கப்பட்ட இப்பட்டியலை மேலிருந்து கீழே விரைவாக நகர்த்தி ‘பெ’ எனும் எழுத்தில் தொடங்கும் சொற்களை அடையாளம் காண்கிறோம்.



நடவடிக்கை 1

**கதையைக் கூர்ந்து வாசித்து விடையளித்திடுக.**

இரவு நேரத்தில் அரசர் வியாபாரி ஒருவரைப் போல மாறுவேடத்தில் தம் குதிரைமீது வலம் வந்தார். ஒரு காலை இழந்த பிச்சைக்காரன் வழியில் உதவி கேட்டான். அவன் சொன்ன இடத்தில் இறக்கிவிட நினைத்தபோது, அவன் இறங்க மறுத்துவிட்டான். குதிரை தன்னுடையது என விவாதம் செய்தான்.

அக்கம் பக்கம் இருந்தவர்கள் பிச்சைக்காரனுக்குச் சாதகமாகப் பேசினர். இரவோடு இரவாக நீதிபதியின் வீட்டைத் தட்டி நியாயம் கேட்டனர்.

நடுநிசி ஆகிவிட்டதால் குதிரையை அங்கேயே விட்டுச் சென்று மறுநாள் வரும்படி பணித்தார் நீதிபதி. மறுநாள் காலை அனைவரும் திரண்டனர். இருபது குதிரைகளுக்கு மத்தியில் அக்குதிரை கட்டி வைக்கப்பட்டிருந்தது. இருவருமே அக்குதிரையை அடையாளம் கண்டுகொண்டு அதனருகில் சென்று நின்றனர். நீதிபதி வியாபாரியை அழைத்து, "இ∴து உங்கள் குதிரைதான் அழைத்துச் செல்லுங்கள்," என்றார்.



வியாபாரி, "எப்படி என் குதிரைதான் என்பதைத் தாங்கள் அறிந்தீர்கள்?" என்று வியப்புடன் கேட்க அதற்கு நீதிபதி, "குதிரை யார் தன் உரிமையாளன் என்று கண்டுபிடிக்கிறது எனப் பார்த்தேன். நீங்கள் அருகில் போனதும் அ∴து அன்புடன் வாலை ஆட்டி உங்கள் முகத்தோடு முகத்தைத் தேய்த்ததே," என்றார்.

**வினாக்களுக்கு விடை எழுதுக :**

1. மாறுவேடத்தில் வந்தவர் யார்?
2. நடுநிசி என்றால் என்ன?
3. அரசரின் குதிரையைச் சுற்றி இருந்த மற்றக் குதிரைகள் எத்தனை?
4. பிச்சைக்காரன் ஏன் குதிரையை விட்டு இறங்கவில்லை?
5. குதிரையின் சொந்தக்காரரை நீதிபதி எப்படி அறிந்தார்?
6. நீதிபதியின் பண்புநலன் பற்றிக் கூறுக.

**அருஞ்சொற்கள்**

- துல்லியம்
- குவிநிலைப்படுத்தி
- சாதகம்
- நடுநிசி
- வியப்பு
- உரிமை
- நியாயம்



## நடவடிக்கை 2

**கூர்ந்து வாசித்து அறிக.**

ஜூலையும் ஆகஸ்டும் அடுத்தடுத்து வரும் மாதங்கள். இவ்விரண்டு மாதங்களுக்கும் 31 நாள்கள் உள்ளன. கி.மு. 8ஆம் ஆண்டில்தான் இம்மாதத்திற்கு ஆகஸ்ட் எனப் பெயரிடப்பட்டது. முதல் ரோமானியச் சக்கரவர்த்தியான 'அகஸ்டஸ்' பெயரால் அமைந்தது. அதற்கு முன்பு இது, 'செக்ஸ்டிலிஸ்' எனும் ஆறாவது மாதமாகக் குறிப்பிட்டது. ஜூலியஸ் சீசரின் பெயரால் அமைந்த ஜூலை மாதத்தைவிட ஒருநாள் குறைவாக 30 நாள்கள்தான் அப்போது இருந்தன. ஜூலியஸ் சீஸரை விடத் தாம் குறைந்தவர் இல்லை என்பதைக் காட்டிக் கொள்ள விரும்பிய 'அகஸ்டஸ்' தம் பெயரால் அமைந்த ஆகஸ்டு மாதத்தின் நாள்களையும் 31 ஆக மாற்றினார். இதை ஈடு செய்யப் பிப்ரவரி மாதத்தின் நாள்களை 28 நாள்களாகக் குறைத்தார்.

BT Year 6 2_Layout 1 10/2/2015 1:23 PM Page 59




# பாடம் 3 தொண்டு செய்வோம்

## குழுவில் கலந்துரையாடி எழுதுக.

**மாணவரும் சமூகத் தொண்டும்**

- முதியோர் கல்வி வகுப்புகளை நடத்துதல்
- பொது இடங்கள் தூய்மை
- மரங்களை நடுதல்
- சமய வகுப்புகள்




- செஞ்சிலுவைச் சங்கத்தில் சேர்ந்து உதவி செய்தல்
- விபத்து நேரத்தில் முதலுதவி செய்தல்
- சுற்றுப்புறத் தூய்மை, நோய்த் தடுப்புப் பற்றி விழிப்பை ஏற்படுத்துதல்

- பொதுநலப் பணிகளைச் செய்வது
- தன்னார்வத் தொண்டு அமைப்புகள்
- சாரணர் இயக்கம்
- செஞ்சிலுவைச் சங்கம்

- மருத்துவ முகாம்களை நடத்துதல்
- பேருந்து நிற்கும் இடம்
- இயற்கைப் பேரிடர்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி செய்தல்

- திருவிழாக் காலங்களில் போக்குவரத்தை நெறிப்படுத்துதல்
- பாதசாரிகள் முறையாகச் செல்ல வழிகாட்டுதல்
- பள்ளிகளில் நடக்கும் போட்டி விளையாட்டுகளின் போது உதவி நல்குதல்



- பொதுநல எண்ணத்தில் குழுவாகச் செயல்படுவது
- பல திட்டங்களை வெற்றிபெறச் செய்யலாம்
- பிறர்நலம் கருதும் எண்ணம்
- நேரத்தைப் பயனுள்ள வழியில் செலவு செய்வது

3.10.21 — 120 சொற்களில் கருத்து விளக்கக் கட்டுரை எழுதுவர்.

மானிடராகப் பிறந்த நாம், வாழும் காலத்தில் பிறருக்கு நன்மைகளைத் தரும் பொது நலப் பணிகளைச் செய்வது மிகச் சிறந்த செயலாகும். இத்தகைய பணிகளைத் தன்னார்வத் தொண்டு அமைப்புகள், சாரணர் இயக்கம், செஞ்சிலுவைச் சங்கம் ஆகிய இயக்கங்கள் செவ்வனே செய்து வருகின்றன.

மாணவர்கள் அனைவரும் சமூகத் தொண்டுகளில் தங்களை ஈடுபடுத்திக் கொள்வது சிறப்பாகும்.

## நடவடிக்கை 1

**கொடுக்கப்பட்ட கருத்துகளைக் கொண்டு கருத்து விளக்கக் கட்டுரையை முழுமையாக எழுதுக.**

## நடவடிக்கை 2

**கருத்தோட்ட வரைபடத்தில் கொடுக்கப்பட்ட கருத்துகளைப் பயன்படுத்திக் கருத்து விளக்கக் கட்டுரைகளை எழுதுக.**

அ.

**புறப்பாட நடவடிக்கைகளினால் மாணவர்கள் அடையும் நன்மைகள்**

- மறைந்து கிடக்கும் திறமைகளை வெளிப்படுத்தும் களமாக அமைகின்றன
- பள்ளி, பெற்றோர், மாநிலம் நற்பெயரை ஈட்டித் தரும் வாய்ப்பு
- சிறந்த மதிப்பீடு புள்ளிகள் பெறலாம்
- நல்ல முறையில் நேர ஒதுக்கீடு செய்தல்
- மாணவர்கள் கட்டொழுங்குடன் செயல்படுதல்
- தன்னம்பிக்கை, தன்னாற்றல் பிறப்பதற்கு வழிகள்

ஆ.

**வாசித்தலே முன்னேற்றத்தின் தூண்**

- எழுத்தாற்றல் மிகும் கவிதை, கதை, சிறுகதை எழுதலாம்
- பல நூல்கள் கற்பதால் பொது அறிவை வளர்க்கலாம்
- மொழியில் சரளத் தன்மை பெறலாம்
- அடிப்படை மொழித்திறன் வலுப்படும்
- பிறரிடம் தொடர்பு கொள்ள தன்னம்பிக்கை இருக்கும்
- சொற்களஞ்சியம் பெருகும் பாடங்களில் ஏற்படும் சந்தேகங்களை நிவர்த்தி செய்யலாம்

# பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

## திருக்குறளை அறிக.

**கதை 1**

எம்மொழியைப் பயன்படுத்தினாலும் பிறர் அதனைக் கேட்டு மகிழும் வண்ணம் பயன்படுத்துதலே சிறப்பு. பேசுகின்ற ஒரு சொல், கேட்பவரை மகிழ்விக்கும்; வேறொரு சொல் கேட்பவருக்கு வருத்தத்தைத் தரும். ஒரு சொல் வெல்லும்; பிறிதொரு சொல் கொல்லும். ஒரு சொல் சினத்தை உண்டு பண்ணும்; இன்னொரு சொல் ஆறுதல் தரும். எனவே, ஒன்றைப் பேசுவதற்கு முன் சிந்தித்துச் சரியான சொற்களைத் தேர்ந்தெடுத்துப் பேச வேண்டும்.

ஓர் இரவு நேரம். பார்வையற்ற பெரியவர் ஒருவர் கையில் விளக்கை ஏந்தியபடி நடந்து வந்து கொண்டிருந்தார். எதிரில் வந்த மற்றொருவர் பெரியவரைப் பார்த்து, "நீங்கள்தான் குருடராயிற்றே! இருட்டிலேயே நடந்து பழக்கப்பட்டவர்தானே! அப்படியிருக்க எதற்காக இந்த விளக்கு?" என்று ஏளனமாகப் பேசினார்.

அவரின் பேச்சுப் பெரியவரைப் பெரிதும் புண்படுத்தியது. சற்று நேர மௌனத்திற்குப் பின், "உண்மைதான். எனக்கு விளக்குத் தேவையில்லை. ஆனால், எதிரில் வரும் ஆட்கள் இருட்டில் என் மீது மோதிவிடக்கூடாதல்லவா? அதற்காகத்தான் எச்சரிக்கையுணர்வோடு இந்த விளக்கைக் கொண்டு செல்கிறேன்," என்றார். தவறாகப் பேசிவிட்டதை எண்ணி அந்த மனிதர் வருந்தினார்.

பெரியவர் தொடர்ந்து நடந்தார். குடுகுடுவென்று ஓடிவந்த இளைஞன் ஒருவன் பெரியவர் மீது மோதிவிட்டான். பெரியவர் கோபத்துடன், "என்ன தம்பி... பார்த்து வரக்கூடாதா? எனக்குத்தான் பார்வை கிடையாது. உனக்குமா? இருட்டில் யாரும் என் மேல் மோதிவிடக்கூடாது என்பதற்காகத்தானே கையில் விளக்கை ஏந்தித் திரிகிறேன் நான்," என்றார்.



இளைஞன் உடனே, "மன்னித்துக் கொள்ளுங்கள் பெரியவரே! உங்கள் கையில் விளக்கு இருக்கிறது. ஆனால், அஃது எரியவில்லை. வெளிச்சம் தெரியாததால் நான் மோதிவிட்டேன்," என்று கூறிவிட்டு அந்த இடத்தைத் தாண்டிப் போய்விட்டான். சூழ்நிலையறியாது பேசியதை எண்ணிப் பெரியவர் மனம் வருந்தினார்.

4.6.6 ஆறாம் ஆண்டுக்கான திருக்குறளின் பொருளை அறிந்து கூறுவர்; எழுதுவர்.

## கதை 2

பேசும் மொழியைத் தவிர்த்து நாம் எப்பொழுதும் அவரவர் மனசாட்சிக்குப் பொய்யில்லாமல் நடந்துகொள்ள வேண்டும். பேரரசர் ஒருவரைத் தேடி முனிவர்கள் அடிக்கடி வருவார்கள். பேரரசரும் அவர்களுக்கு அரச மரியாதை கொடுத்து உபசரிப்பார். ஒரு முறை முனிவர் ஒருவர் வந்தார். அரசர் அவருக்குத் தம் கையாலேயே உணவைப் பரிமாறி, சாமரம் வீசித் தூங்க வைத்துவிட்டுப் பேரரசரும் உறங்கச் சென்றுவிட்டார். போகுமுன் தமது தங்க ஆபரணத்தைத் தவறுதலாக அங்கேயே விட்டுச் சென்றுவிட்டார். விலை உயர்ந்த ஆபரணத்தைக் கண்ணுற்ற முனிவரின் மனம் அதனைக் களவாட எண்ணியது. எனவே, எடுத்து வைத்துக் கொண்டார்.

மறுநாள் பேரரசர் அந்த விலையுயர்ந்த ஆபரணத்தைப் பல இடங்களில் தேடினார். பிறரையும் தேடச் சொன்னார். முனிவரிடம் பணியாளர்கள் விசாரித்தனர். அதனைத் தாம் பார்க்கவே இல்லை என்று பொய்யுரைத்தார். முனிவர் அங்கிருந்து சென்றும் விட்டார். தங்க ஆபரணத்தை வைத்துக் கொண்டு முனிவரால் ஒருநாள்கூட நிம்மதியாக இருக்க முடியவில்லை.



“இப்படி ஒரு தவறான காரியத்தைச் செய்துவிட்டோமே,” என்று அவரது மனசாட்சி அவரை வதைத்தது. மீண்டும் பேரரசரிடமே ஓடோடி வந்தார்.

“மன்னர் மன்னா! என்னை மன்னித்துவிடுங்கள். செய்நன்றி கொன்றவனானேன்,” என்று கூறி, காலில் விழுந்தார்.

### திருக்குறளும் பொருளும்

- **யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்**
  **சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு.** (127)

– எதை அடக்கியாளாவிட்டாலும் நாக்கை அடக்கியாள வேண்டும். அவ்வாறு அடக்கியாளாவிட்டால் குற்றமான சொல்லைப் பேசித் துன்பப்பட நேரிடும்.

- **உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார்**
  **உள்ளத்து ளெல்லாம் உளன்.** (294)

– ஒருவர் தம் மனசாட்சிக்குப் பொய்யில்லாமல் நடந்துகொண்டால், அவர் உலகத்தாரால் மதிக்கப்படுவார்.

**அருஞ்சொற்கள்**

- மகிழ்விக்கும்
- சிந்தித்து
- புண்படுத்தியது
- எச்சரிக்கை
- மனசாட்சி
- பொய்யுரைத்தார்

### நடவடிக்கை 1

**அ. குறளையும் பொருளையும் மனனம் செய்து ஒப்புவித்து அழகான வரிவடிவத்துடன் எழுதுக.**

**ஆ. மேற்கண்ட கதைகளைப் பாகமேற்று வகுப்பில் நடித்துக் காட்டுக.**

BT Year 6 2_Layout 1 10/2/2015 1:23 PM Page 63



# பாடம் 5 இலக்கணம்

## வலிமிகா இடங்களை அறிக.




**வலிமிகா இடங்கள்**

- சொற்றொடர்களில், வருமொழி ‘க், ச், த், ப்’ ஆகிய வல்லெழுத்துகளில் தொடங்கினாலும் நிலைமொழி ஈற்றில் சில இடங்களில் வலிமிகாது.
- ண்டு, ய்து என்று முடியும் வினையெச்சங்களின் பின் வலிமிகாது.

எடுத்துக்காட்டு

| | | | | |
|---|---|---|---|---|
| செய்து | + | காட்டினார் | = | செய்து காட்டினார் |
| கொண்டு | + | சென்றான் | = | கொண்டு சென்றான் |

## நடவடிக்கை 1

**சொற்களைச் சேர்த்து எழுதுக.**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| கொண்டு | + | சென்றாள் | = | | திரண்டு | + | சென்றனர் | = | |
| கண்டு | + | பிடித்தான் | = | | கொண்டு | + | செய்தனர் | = | |
| செய்து | + | பார்த்தாள் | = | | உண்டு | + | களித்தான் | = | |
| கொய்து | + | பார்த்தாள் | = | | துவண்டு | + | போயினர் | = | |
| கண்டு | + | கொண்டார் | = | | மாண்டு | + | போனான் | = | |

5.9.9 ண்டு, ய்து என முடியும் வினையெச்சத்தின் பின் வலிமிகா என்பதை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

## நடவடிக்கை 2

**கொடுக்கப்பட்ட பகுதியை வாசித்து ண்டு, ய்து என்று முடியும் வினையெச்சங்களைக் கண்டறிக.**

வேடன் ஒருவன் வேட்டைக்குச் சென்றான். காட்டில் ஜோடிக் கிளிகள் பழத்தைக் கொத்திக் கொண்டிருந்தன. கிளிகளில் வேடன் பெட்டைக் கிளியைப் பிடித்துக் கொண்டான். வீட்டிற்குக் கொண்டு செல்ல எண்ணம் கொண்டான். வீட்டில் ஒரு கூண்டைச் செய்து அதில் அடைத்தான். சோகமான பெட்டைக் கிளி வேட்டைக்காரனோடு பேசியது. "அடுத்த முறை வேட்டைக்குப் போகும் போது என் கணவரையும் பிடித்து வா. நான் கூண்டில் அடைக்கப்பட்டிருப்பதையும் கூறு. இல்லையேல், என் கணவரோடு என்னைச் சேர்த்துவிடு," என்று முரண்டு பிடித்தது.



வேடனும் காட்டுக்குச் சென்று வருத்தமாகத் திரும்பினான். பெட்டைக் கிளியிடம், "நான் உன்னைப் பற்றிக் கூறியதும் அந்தக் கிளி துவண்டு போனது; துடிதுடித்துக் கீழே விழுந்தது. இறக்கும் முன் 'கிச் முச் கிச் முச்' என்று கத்தியது. நான் அதை அங்கேயே விட்டு விட்டு வந்து விட்டேன்," என்றான். அடுத்த கணமே பெட்டைக் கிளியும் மயங்கி விழுந்தது. வருத்தமடைந்த வேடன் அதைத் தூக்கிக் குப்பையில் எறிந்தான். பெட்டைக் கிளி விர்ரென்று சிறகை விரித்துப் பறந்து மரக்கிளையில் உட்கார்ந்தது. வேடன் அதிசயத்து "நீ உயிரோடு இருக்கிறாயா?" என்றான்."வேடனே! என் துணைக் கிளி இறுதியாக எழுப்பிய ஒலியின் பொருள் என்ன தெரியுமா? இப்படி மயங்கி விழுவது போல் நடி... தூக்கி எறிந்ததும் பறந்து வா என்பதுதான்," என்று கூறி மகிழ்ச்சியுடன் பறந்தது.



## நடவடிக்கை 3

**சேர்த்து எழுதுக.**

1. கொய்து + கொடுத்தாள் =
2. கண்டு + பிடித்தார் =
3. முரண்டு + பிடித்தான் =
4. செய்து + கொடுத்தார்கள் =
5. பெய்து + கொண்டிருக்கிறது =

**சிந்தனைக்கு**

- தடைகள் மலையளவு இருந்தாலும் அதைத் தாண்டிவிடலாம் என்ற நம்பிக்கை இருந்தாலே போதும் வெற்றி பெற்று விடலாம்.
- நம்பிக்கை நிறைந்த ஒருவர் யார் முன்னிலையிலும் எப்போதும் மண்டியிடுவதில்லை.

# தொகுதி 7 வரலாறு அறிவோம்

## பாடம் 1 அன்றும் இன்றும்

### குழுவில் கலந்துரையாடுக.




பழங்குடி மக்கள் காடுகளிலும் குகைகளிலும் வாழ்ந்தனர். காரணம் அவர்களுக்கு வீடு கட்டத் தெரியாது நண்பர்களே!

அக்கால மனிதர்கள் பச்சைக் காய்கறிகள், கிழங்குகள் போன்றவற்றை உண்டு ஆரோக்கியத்துடன் வாழ்ந்தனர். இதற்குக் காரணம் இயற்கையின் மாசற்ற நிலைதான். ஆனால், இன்று நாம் உண்ணும் உணவுகள், காய்கறிகள் அனைத்தும்

1.10.8 காரணகாரிய விளக்கங்களோடு தன் கருத்துகளைப் பண்புடன் எடுத்துரைப்பர்.

BT Year 6 2_Layout 1 10/2/2015 1:24 PM Page 66

பூச்சிக் கொல்லி மருந்துகள், இரசாயன உரங்கள் ஆகியவற்றைப் பயன்படுத்தி மாசடைந்த உணவை உண்டு பல நோய்களுக்கு ஆளாகின்றோம் என்பது என் தாழ்மையான கருத்து.

நண்பர்களே! நாகரிக வளர்ச்சி இல்லாததால் அக்கால மக்கள் மரப்பட்டைகள், இலைகள், பிராணிகளின் தோல் ஆகியவற்றை உடைகளாக உடுத்திக் கொண்டனர். ஆனால், அதன் பிறகு ஏற்பட்ட பரிணாம வளர்ச்சியால் இன்று நாம் நாகரிக உடைகளை உடுத்தி மகிழ்கின்றோம்.

## நடவடிக்கை 1

**கொடுக்கப்பட்ட கருத்துகளைப் பயன்படுத்திக் காரணகாரிய விளக்கங்களோடு கருத்துகளைக் குழுவில் உரையாடுக.**

1. போக்குவரத்து - ஆறுகள் - மரக்கட்டை - நாளடைவில் கப்பல் ஆனது
2. சிக்கிமுக்கி கற்களை - உரசி - நெருப்பு - உணவைச் சுட்டு - சமைப்பது - அறிமுகம்
3. கண்டுபிடிப்புகள் - மட்பானை - இரும்பு - ஆயுதம் - இன்று - பயன்பாடு - ஈட்டி - கூர்மையான பல ஆயுதங்கள்

**சொல்லும் பொருளும்**

- அழுக்காறு - பொறாமை
- அலங்கு - அசைதல்
- அலங்கல் - மாலை
- அடவி - காடு
- அவல் - பள்ளம்
- அம்பி - படகு
- அளகு - கோழி
- அரிவை - நங்கை
- அசனி - இடி

## நடவடிக்கை 2

**வாசித்துக் காரணகாரியத்தைக் கூறுக.**



1. விடாமுயற்சியுடன் கல்வி கற்ற தமயந்தி வாழ்வில் சிறந்து விளங்கினாள்.
2. கைப்பேசியைப் பயன்படுத்திக் கொண்டே வாகனத்தைச் செலுத்தியதால்தான் சாலை விபத்து ஏற்பட்டது.
3. சரித்திரப் புகழ் வாய்ந்த சுற்றுலாத் தலங்கள் சுற்றுப் பயணிகளைக் கவர்கின்றன.
4. சமச்சீர் உணவுகளை உண்பதால் நோயின்றி வாழ இயலும்.
5. மழையில் நனைந்ததால் கடுமையான காய்ச்சல் கண்டு தங்கை துன்பப்பட்டாள்.
6. குப்பைகளைத் திறந்த வெளியில் எரிப்பதால் காற்றுத் தூய்மைக்கேடு அதிகரிக்கும்.
7. கால அட்டவணைப்படி பாடங்களை மீள்பார்வை செய்ததால் மாணவர்கள் சிறந்த தேர்ச்சியினை அடைந்தனர்.

BT Year 6 2_Layout 1 10/2/2015 1:24 PM Page 67



# பாடம் 2 வரலாற்று மாநிலம்

## வாசித்து அறிக.

மலாக்கா சரித்திரப் புகழ்பெற்ற இடங்களுள் ஒன்றாகும். கி.பி.14 ஆம் நூற்றாண்டு, பரமேஸ்வரா மலாக்கா வந்தடைந்தார். அச்சமயம் மலாக்கா சயாமின் ஆதிக்கத்தில் ஒரு சிறு கிராமமாக இருந்தது.



பரமேஸ்வரா சுங்கை பெர்தாம் ஆற்றங்கரையில் உருவாக்கிய ஆட்சியே மலாக்கா எனப் பெயர் பெற்று விளங்கியது. மலாக்கா முதலில் மீன்பிடி கிராமமாகவும் சிறிய துறைமுகமாகவும் விளங்கியது. பரமேஸ்வரா அதிவிரைவில் தமது அரசாட்சியைப் பலப்படுத்திக் கொண்டார். 15ஆம் நூற்றாண்டில் சீனச் சக்கரவர்த்தியின் நட்பைப் பெறத் தூதுவர்களை அனுப்பினார். அதன் மூலம் சீனச் சக்கரவர்த்தியிடமிருந்து விருதுகளையும் பரிசுகளையும் பெற்றார்.

பரமேஸ்வரா அங்கு வாழ்ந்த குடிகளுடனும் வியாபாரிகளுடனும் நட்பு பாராட்டினார். பலருக்கு விருதுகள் கொடுத்து ஆதரித்தார். மலாக்கா புகழ் பெற்ற ஒரு வியாபாரத் துறைமுகமாக விளங்கியது. பரமேஸ்வரா மலாக்காவை ஆட்சி புரிய ஆரம்பித்ததும் மலாக்கா செழிப்புடன் விளங்கியது. மலாக்காவின் அதிவிரைவான முன்னேற்றத்திற்குக் காரணம் பல நாடுகளுடன் ஏற்பட்ட வியாபாரத் தொடர்பே!

இந்தியா, சீனா, ஜாவா, அரேபியா, பாரசீகம், ஆப்பிரிக்கா ஆகிய நாடுகளிலிருந்து வியாபாரிகள் மலாக்காவிற்கு வந்து தங்களின் பண்டமாற்று வியாபாரத்தைச் செய்ய மும்முரம் காட்டினர். இதனால், மலாக்காவில் வர்த்தகப் பெருக்கம் பன்மடங்கு அதிகரித்தது. கி.பி.1414 இல் பரமேஸ்வரா இறந்த பிறகு அவரது மகன் சுல்தான் மெகாட் இஸ்கந்தர் ஷா மலாக்காவை ஆட்சிசெய்தார். கி.பி.1459ஆம் ஆண்டு சுல்தான் மன்சூர் ஷா ஆட்சிக்கு வந்தார்.



2.3.11 வரலாறு தொடர்பான பனுவல்களைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசிப்பர்.




மலாக்கா வியாபாரத்தைப் பல நாடுகளுடன் விரிவுப்படுத்தியது. அவ்வரிசையில் சீனா குறிப்பிடத்தக்க நாடாகத் திகழ்ந்தது. மேலும், வியாபார நெருக்கத்தை ஏற்படுத்த சீன மன்னர் தமது மகளான ‘புத்ரி ஹங் லி போ’வை மலாக்கா சுல்தானுக்குத் திருமணம் செய்து வைத்தார்.

அவ்வாறு ஏற்பட்ட கலப்புத் திருமணம் மூலம் ‘பாபா ஞோன்ஞா’ இன மக்கள் மலாக்காவில் உருவாயினர். சிறுபான்மை குடிமக்களான அவர்களை இன்றும் நாம் மலாக்காவில் காணலாம்.

சுல்தான் மன்சூர் ஷா ஆட்சியில் மலாக்கா புகழின் சிகரமாகத் திகழ்ந்தது. கி.பி.1488ஆம் ஆண்டு சுல்தான் மஹ்முட் ஷா மலாக்காவை ஆட்சி செய்ய ஆரம்பித்தார். சிறுவயதிலேயே ஆட்சிக்கு வந்த இவரால் சீரான முறையில் ஆட்சி செய்ய இயலவில்லை. மேலும், சுல்தானின் பக்கபலமானவர்களான துன் பேராக், ஹங் துவா போன்ற இருவரும் முதுமை அடைந்திருந்தனர். கி.பி.1511ஆம் ஆண்டு போர்த்துக்கீசியருக்கும் மலாயருக்கும் கடுமையான போர் நடந்தது. போரில் தோல்வியுற்ற சுல்தான், ஜோகூரை நோக்கி ஓடிவிட்டார். அதனால்தான், மலாக்கா போர்த்துக்கீசியரின் வசமானது. ஆனால், வீழ்ச்சி பெற்ற மலாக்கா சுல்தானும் போர்த்துக்கீசிய எதிர்ப்பாளர்களும் அடிக்கடி மலாக்காவைத் தாக்கிய வண்ணம் இருந்தனர். இதனால், போர்த்துக்கீசியர்களுக்கு அடிக்கடி தொல்லைகள் விளைந்தன.

கி.பி.1641ஆம் ஆண்டு வரை போர்த்துக்கீசியர் வசமிருந்த மலாக்கா டச்சுக்காரரின் ஆட்சிக்கு மாறியது. கி.பி.1824ஆம் ஆண்டு ஆங்கிலேய டச்சு உடன்படிக்கையின் மூலம் மலாக்கா ஆங்கிலேயரின் ஆட்சிக்கு மாறியது. நம் நாடு சுதந்திரம் அடைந்த பின்னர் மலாக்கா மாநிலம் மேலும் வளர்ச்சி பெற்றது. பண்டைக்காலச் சின்னங்களான போர்த்துக்கீசியரின் ‘ஆபாமோசா கோட்டை’, டச்சுக்காரர்களின் கோட்டைகள், கட்டடங்கள், ‘ஹங் துவா’ கிணறு, ‘ஹங் லி போ’ கிணறு போன்றவை இன்றும் மலாக்காவில் உள்ளன. இவையாவும் வரலாற்றுச் சான்றுகளாகப் போற்றப்பட்டு வருகின்றன. எனவேதான், மலாக்கா மாநிலம் வரலாற்று மாநிலமாகப் புகழ்பெற்றுத் திகழ்கின்றது.

**அருஞ்சொற்கள்**

- ஆதிக்கம்
- துறைமுகம்
- சக்கரவர்த்தி
- குடிமக்கள்
- வசம்
- தொல்லை
- சான்று



நடவடிக்கை 1

**பத்தியைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசித்திடுக; குழுவில் உரையாடுக.**



# பாடம் 3 உருவாக்குவேன்

## கருத்துகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.

**தலைப்பு : அபூர்வ சக்தி கிடைத்தால்**

**முன்னுரை**

பல பொருள்கள் - பார்க்கும்போது - அனைத்தையும் என் கற்பனைக்கு ஏற்பச் செயல்பட வைப்பேன்.

**கருத்து**

பறக்கும் மகிழுந்துகள் - கனவுந்துகள் பறக்க - தொடர்வண்டிகள் - வண்ணப் பறவைகள் - பேசும் சக்தி - சிரித்து மகிழும்படி - நானும் உடன் - மரத்தின் - அமர்ந்து - காற்று - மெய் - மறக்கப் பாடுவேன்.

பள்ளி மாணவர்களுக்கு - பேசும் எழுதுகோல் - சொல்வதை எழுதும் எழுதுகோல் - பேசும் புத்தகங்கள் - நடக்கும் புத்தகப்பைகள்

கடல் அலையில் - நடக்கும் காலணிகள் - கம்பீரமாக நடக்க - வெகுதூரம் - மீன்களிடம் பேசிக்கொண்டே - மகிழ்ச்சி

**முடிவு**

உருவாக்கத்தை - உலகெங்கும் - புகழ் - கற்பனை - உண்மையானால் - பாக்கியவான்

3.10.22 | 120 சொற்களில் கற்பனைக் கட்டுரை எழுதுவர்.

## நடவடிக்கை 1

**கொடுக்கப்பட்ட கருத்துகளைக் கொண்டு ஒரு கற்பனைக் கட்டுரை எழுதுக.**

## நடவடிக்கை 2

**கருத்து வரைபடத்தில் கொடுக்கப்பட்ட கருத்துகளைக் கொண்டு 120 சொற்களில் கட்டுரை எழுதுக.**

**சொல்லும் பொருளும்**

- ஆன்ற - உயர்ந்த
- ஆற்றல் - வலிமை
- ஆகடியம் - ஏளனம்
- ஆசனம் - இருக்கை
- ஆக்கம் - செல்வம்
- ஆலி - மழைத்துளி
- ஆறு - நல்வழி / நெறி

அ.

எதிர்காலத்தில் நடப்பதை முன்கூட்டியே அறியும் ஆற்றல் இருந்தால்

- நோய் பரவுதலைத் தடுப்பேன்
- பொதுமக்களுக்கு அறிவிப்பேன்
- உயிரைக் காப்பேன்

- போர் நடப்பதிலிருந்து காப்பாற்றுவேன்
- இறப்புகளைத் தடுப்பேன்



- விபத்துகள் நடக்காமல் தடுப்பேன்
- சாலை விபத்து, விமான விபத்து ஏற்படாமல் காப்பாற்றுவேன்.

- முன்கூட்டியே அறிவிப்பேன்
- மண் சரிவு, புயல், வெள்ளம் போன்ற இயற்கைப் பேரிடர்களைத் தடுப்பேன்.

ஆ. கொடுக்கப்பட்ட தலைப்புகளில் கற்பனைக் கட்டுரை எழுதுக.
- நான் ஒரு பறக்கும் வீடானால்
- நான் ஒரு வினோத மகிழுந்தானால்
- மறையும் தன்மை எனக்குக் கிடைத்தால்



# பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

## மரபுத்தொடர்களின் பொருளை அறிக.

அ. புவனா : உங்கள் பிள்ளைகள் இருவரும் அனைத்துலகப் புத்தாக்கக் கண்காட்சியில் சிறந்த படைப்புகளைப் படைத்து **வெளுத்து வாங்கிவிட்டனர்.**

தேவி : ஆமாம் புவனா. எனக்கு அவர்களை நினைத்தால் மிகவும் பெருமையாகவே இருக்கிறது.




ஆ. கண்மணி : உன் அண்ணன் வெளிநாட்டிற்கு வேலை தேடிச் சென்றதால் உன் அப்பா கோபம் அடைந்தாரா?

சுகந்தி : ஆமாம், கண்மணி. இனி, தகப்பன் பிள்ளை என்ற உறவே இல்லை என்று **தலை முழுகிவிட்டதாக** மிகவும் ஆவேசத்துடன் கூறிவிட்டார்.



இ. கோவலன் : மருதனின் நிலைமையை நினைத்தால் மிகவும் வருத்தமாக இருக்கிறது.

வரதன் : எனக்கும் அப்படித்தான் இருக்கிறது. ஒரே ஆண் பிள்ளை என்று செல்லமாக வளர்த்தான். போதைப் பொருள் கடத்திய குற்றத்திற்காக மகன் கைது செய்யப்பட்டதைக் கேள்விப்பட்ட மருதன் **தலைகுனிவிற்கு** ஆளாகி மயங்கி விழுந்ததை இன்னும் என்னால் மறக்க முடியவில்லை.



கோவலன் : இப்படித்தான் பிள்ளைகள் பலர் பெற்றோர்களுக்கு அவமானத்தைத் தேடித் தந்து விட்டுப் பிறகு வருத்தப்படுகின்றனர்.

4.12.6 ஆறாம் ஆண்டுக்கான மரபுத்தொடர்களின் பொருளை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

ஈ. அப்பா : நான் சொல்வதைக் கேட்டு நடந்திருந்தால் இன்று உனக்கு இக்கதி நேர்ந்திருக்குமா? இனி உன்னிடம் நான் என்றுமே பேச மாட்டேன். முழுமையாகத் **தலை முழுகிவிட்டேன்** என்று நினைத்துக்கொள்!

மகன் : உங்களுக்குத் **தலை குனிவை** ஏற்படுத்திய என்னை மன்னித்துவிடுங்கள் அப்பா!



உ. அம்மா : தமிழ்ப்பள்ளியில் பயிலும் நம் மாணவர்களை நினைத்தால் மிகவும் பெருமையாக உள்ளது.

அப்பா : மற்ற இன மாணவர்களுக்கு ஈடாகப் பல போட்டிகளில் கலந்து **வெளுத்து வாங்கும்** அவர்களை நிச்சயம் பாராட்ட வேண்டும்.



## மரபுத்தொடர்களும் பொருளும்

- **வெளுத்து வாங்குதல்** : பலரும் பாராட்டும்படி சிறப்பாகச் செய்தல்
- **தலை முழுகுதல்** : உறவைத் துண்டித்தல் / ஒன்றை முற்றிலுமாகக் கைவிடுதல்
- **தலை குனிதல்** : அவமானம் அடைதல்

### நடவடிக்கை 1

**மரபுத்தொடர்களின் பொருளை அறிந்து கூறுக; பொருள் விளங்க உரையாடல் ஒன்றனை எழுதுக.**

### நடவடிக்கை 2

**வாக்கியம் அமைத்திடுக.**

1. வெளுத்து வாங்குதல் - 
2. தலை முழுகுதல் - 
3. தலை குனிதல் - 


**சிந்தனைக்கு**

- முடியும் என்று தெரிந்தால் முயற்சி எடு. முடியாது என்று தெரிந்தால் பயிற்சி எடு.
- ஒரு முறை வந்தால் அது கனவு; இருமுறை வந்தால் ஆசை. பலமுறை வந்தால் அதுவே இலட்சியம்.



# பாடம் 5 இலக்கணம்

## வலிமிகும் இடங்களை அறிக.




சொற்றொடர்களில், வருமொழி ‘க், ச், த், ப்’ ஆகிய வல்லெழுத்துகளில் தொடங்கினால் நிலைமொழி ஈற்றில் சில இடங்களில் வல்லெழுத்து மிகும். அகர, இகர ஈற்று வினையெச்சங்களின் பின் வலிமிகும்.

**எடுத்துக்காட்டு**

| | | | | |
|---|---|---|---|---|
| செய்ய | + | சொல் | = | செய்யச் சொல் |
| ஆடி | + | பாடினாள் | = | ஆடிப் பாடினாள் |

## நடவடிக்கை 1

**சேர்த்து எழுதுக.**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | ஓடி | + | பிடித்து | = | 6. | தேடி | + | திரிந்தான் | = |
| 2. | பிடிக்க | + | செய் | = | 7. | கூடி | + | களித்தோம் | = |
| 3. | தேடி | + | பிடித்து | = | 8. | ஆடி | + | காட்டினார்கள் | = |
| 4. | செய்ய | + | சொன்னார்கள் | = | 9. | தேட | + | போனார்கள் | = |
| 5. | ஓடி | + | தாண்டினான் | = | 10. | பாட | + | பழகினோம் | = |

5.8.6 அகர, இகர ஈற்று வினையெச்சத்திற்குப்பின் வலிமிகும் என்பதை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

BT Year 6 3_Layout 1 10/2/2015 1:29 PM Page 74

## நடவடிக்கை 2

**விடுபட்ட இடங்களில் அகர, இகர ஈற்று வினையெச்சத்திற்குப் பின் வலிமிகும் சொற்றொடர்களைக் கொண்டு நிறைவு செய்க.**



1. மாணவர்கள் திடலில் ________ விளையாடினர்.
2. கடுமையான வெயிலின் காரணமாகப் பயிர்கள் அனைத்தும் ________.
3. காட்டு வழியே சென்ற சாரணர்கள் அனைவரும் ________ நடந்தனர்.
4. காணாமல் போன செல்லப்பிராணியை அப்பா ________.
5. ஆசிரியர் கொடுத்த பாடங்களை முறையாகச் ________ .
6. பாடகி மேடையில் ________ ஆடினாள்.



7. வெளிநாட்டிலிருந்து வந்த மாமா அத்தையிடம் நம் பாரம்பரிய பலகாரங்களைச் ________.
8. பிரியாவிடை நிகழ்ச்சியில் மாணவர்கள் ________.
9. சாலையில் நிகழ்ந்த கொடூர விபத்தைப் பலரும் ________.
10. சிறையிலிருந்து தப்பியோட முயற்சி செய்த கைதியைக் காவல் அதிகாரிகள் ________.



11. வீட்டு வேலைகள் அனைத்தையும் அம்மா ________.
12. மடிக்கணினியைப் பயன்படுத்தி மாணவர்கள் இணையத்தில் பல விவரங்களை ________ .
13. வீட்டில் யாரும் இல்லாத வேளையில் திருடன் பொருள்களை எல்லாம் திருடிக்கொண்டு ________ .
14. களைப்பைப் போக்கத் தொழிலாளர்கள் சற்று நேரம் ________ மகிழ்ந்தனர்.
15. நீச்சலடிப்பதில் ஆர்வம் கொண்ட பார்த்திபன், ஆற்று நீரில் ________ .

## இடுபணி

அகர, இகர ஈற்று வினையெச்சத்திற்குப் பின் வலிமிகும் சொற்களைப் பட்டியல் இட்டுத் திரட்டேடு ஒன்றனைச் செய்க.

BT Year 6 3_Layout 1 10/2/2015 1:29 PM Page 75



# தொகுதி 8 தகவல் உலகம்

## பாடம் 1 சாதகமா பாதகமா



குழுவில் கலந்துரையாடுக.






நடவடிக்கை 1

**அ. சூழலை அடிப்படையாகக் கொண்டு முக்கியக் கருத்துகளைக் கூறி உரையாடுக.**

**ஆ. குடும்ப உறவுகளை மேம்படுத்தும் நடவடிக்கைகள் சிலவற்றைக் கூறி உரையாடுக.**

**தகவல் உலகம்**

| வட சொல் | தமிழ்ச் சொல் |
|---|---|
| சாதம் | சோறு |
| சிகை | தலை |
| தரணி | உலகம் |
| திருப்தி | நிறைவு |
| தீபம் | விளக்கு |
| பிரபலம் | புகழ் |
| நிதி | செல்வம் |

1.4.9 செவிமடுத்தவற்றிலுள்ள முக்கியக் கருத்துகளைக் கூறுவர்.



## நடவடிக்கை 2

பத்திகளை வாசித்து முக்கியக் கருத்துகளைக் கண்டறிந்து உரையாடுக.

அ. இன்றைய காலத்தில் திரைப்படத்துறை மிகப் பெரிய அளவில் வளர்ந்து முன்னேற்றம் அடைந்துள்ளது. தொடக்கத்தில் வந்த திரைப்படங்கள் ஊமைப் படங்களாகவே வந்தன. திரைப்படங்களினால் பல நன்மைகள் இருக்கவே செய்கின்றன.

மனக் கவலைகளை மறக்கத் திரைப்படங்கள் பெரிதும் பங்காற்றுகின்றன. நம் பாரம்பரியக் கலைகள் வளரவும் இத்துறை ஒரு களமாகத் திகழ்கின்றது. மேலும், உலகில் நெடுந்தூரம் சென்று காண முடியாத பல அற்புதங்களை இருந்த இடத்திலேயே நம்மால் காண முடிகிறது. சில தீமைகளும் திரைப்படங்களின் ஆதிக்கத்தினால் ஏற்படுகின்றன என்றால் அது மிகையாகாது. வன்முறைக் காட்சிகளின் பாதிப்பு, வீண் செலவு, கண் பார்வை பாதிப்புப் போன்ற தீமைகளும் ஏற்படத் திரைப்படங்கள் முக்கியக் காரணங்களாகும்.

ஆ. ஓய்வு என்பது உறங்குவது மட்டுமன்று. நாம் விரும்பிய பொழுது போக்கு நடவடிக்கைகளில் இன்பமாய் ஈடுபடுவதும் ஒருவகை ஓய்வுதான். வீட்டில் ஓய்வாக இருக்கும் வேளையில் அஞ்சல் தலைகள் சேகரித்தல், வெளிநாட்டு நாணயங்களைச் சேகரித்தல், புகைப்படம் பிடித்தல், ஓவியம் தீட்டுதல், தையல் வேலைகள் செய்து பழகுதல், கவிதை, கட்டுரை போன்றவற்றை எழுதிப் பத்திரிகைகள், சஞ்சிகைகள் போன்றவற்றிற்கு அனுப்புதல் ஆகிய பல பொழுதுபோக்கு நடவடிக்கைகளில் நம்மை ஈடுபடுத்திக் கொள்ளலாம். இதனால், நம் பொழுது பயனுள்ள வழிகளில் கழிகிறது. சில நடவடிக்கைகள் நமக்குச் சிறிய வருவாயையும் ஈட்டித் தரும். பொது அறிவு வளரும். ஆன்மிகச் சொற்பொழிவுகள் கேட்பதன் மூலம் மனம் தூய்மை பெறும்.



# பாடம் 2 இணையத்தளம்



## வாசித்து அறிக.

உலகத்தில் நாம் பார்த்து இரசிக்க வேண்டிய அழகிய இடங்கள் எத்தனையோ உள்ளன. அவை அனைத்தையும் நாம் நேரில் சென்று பார்த்துவிட வேண்டும் என்றால் நேரம், பொருளாதாரம் எனப் பல்வேறு தடைகள் உள்ளன. உலகில் நடக்கும் பல நிகழ்வுகளை இணையம் மக்களுக்கு எடுத்துரைக்கின்றது. எழுத்து, பேச்சு, இசை, கடிதம் ஆகிய அனைத்தும் இணையத்திலேயே இடம்பெறுகின்றன.

நேரில் சென்று பார்க்க வேண்டிய இடங்களையும் காட்சிகளையும் நாம் பார்த்து மகிழ இணையத்தளம் உதவுகிறது. இணையத்தில் கடற்கரை, கட்டடங்கள், இயற்கை, நாடு, தீவு, அருவி என்று பல முதன்மைத் தலைப்புகள் உள்ளன.

நாம் செல்ல வேண்டிய நாட்டின் பெயரைச் சொடுக்கினால், நாம் செல்லக்கூடிய நாடு, நகரம், தட்பவெப்பம், அந்த நாட்டின் முக்கிய இடங்கள், வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்கள், அவற்றின் குறிப்புகள் என்று பல்வேறு செய்திகள் நம் கண் முன் தோன்றும்.

கடற்கரை என்று சொடுக்கினால், உலகில் உள்ள எல்லாக் கடற்கரைகளும் வரிசையாகப் படத்தோடு காட்சியளிக்கும். அந்தக் கடற்கரையின் படத்தைச் சொடுக்கினால் அதன் சிறப்புகளை விவரிக்கும் குறிப்புகளைக் கணினித் திரையில் காணலாம். அதே போன்று இயற்கை இடங்கள், பூங்காக்கள், ஏரிகள், அருங்காட்சியகங்கள், உணவகங்கள், தங்கு விடுதிகள், போக்குவரத்து வசதிகள் என்று எல்லாத் தகவல்களையும் பெற்றுக் கொள்ளலாம்.

அந்தக் குறிப்பிட்ட தலைப்பை அல்லது படத்தைச் சொடுக்கினால், தொடர்புடைய பக்கத்திற்குச் செல்லலாம். அங்கு மேற்கொண்டு நமக்குத் தேவையான குறிப்புகளும் தகவல்களும் கிடைக்கும்.




அந்த நாட்டிற்குச் சென்று வந்தவர்களின் கருத்துகளையும் அவர்களது அனுபவங்களையும் இணையத்தளத்தின் மூலம் அறிந்துகொள்ள முடியும். சிக்கலின்றிச் சிக்கனமாக நமது பயணத்தை அமைத்துக் கொள்ள இணையத்தளங்கள் பெரிதும்

2.3.9 தகவல் தொடர்புத் தொழில்நுட்பம் தொடர்பான பனுவல்களைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசிப்பர்.

BT Year 6 3_Layout 1 10/2/2015 1:30 PM Page 78

உதவுகின்றன. நாம் தங்கப் போகும் நாள்களுக்குத் தக்கபடி திட்டமிட்டுக் கொள்ள இணையத்தளங்கள் பெரிதும் பங்காற்றுகின்றன.

வெவ்வேறு இடங்களுக்குச் சென்று வர வசதி வாய்ப்பில்லாதவர்கள், இந்த இணையத்தளங்களில் பதிவேற்றப்பட்டுள்ள காணொளிகளின் மூலம் அந்த நாடுகளில் உள்ள பல்வேறு இடங்களையும் பார்த்து மன மகிழ்ச்சி அடையலாம்.




## நடவடிக்கை 1

**வினாக்களுக்கு விடையளித்திடுக.**

1. உலகத்தில் உள்ள எல்லா இடங்களையும் நாம் சென்று பார்க்க இயலாத காரணங்கள் யாவை?
2. ஒரு நாட்டிற்குச் செல்வதற்கு முன் இணையத்தளங்கள் எவ்வகையில் உதவுகின்றன?
3. நேரில் பார்க்க இயலாத இடங்களைப் பார்க்க உதவுவது எது?
4. காணொளிகளின் நன்மை யாது?
5. இணையத்தளம் வழி எவற்றையெல்லாம் பதிவிறக்கம் செய்ய முடியும்?
6. இணையத்தளத்தின் மூலம் நீ அடைந்த நன்மைகள் சிலவற்றைக் கூறுக.

## நடவடிக்கை 2

**இணையத்தில் பதிவிறக்கம் செய்த தகவலைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசித்திடுக.**

### தகவல் உலகம்

- நாற்றிசை - கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு
- நாற்பொருள் - அறம், பொருள், இன்பம், வீடு
- நாற்கரணம் - மனம், புத்தி, சித்தம், அகங்காரம்

### சிந்தனைக்கு

- செயலை விதையுங்கள் பழக்கம் உண்டாகும். பழக்கத்தை விதையுங்கள் குணம் உண்டாகும். குணத்தை விதையுங்கள் உங்கள் எதிர்காலம் உண்டாகும்.
- புறத்தில் உள்ள வறுமையைக் காட்டிலும் அகத்தில் உள்ள வறுமையே அபாயகரமானது.

BT Year 6 3_Layout 1 10/2/2015 1:30 PM Page 79



# பாடம் 3 தகவல் தொழில்நுட்பம்



## வாசித்து எழுதுக.

பழங்காலத்தில் மனிதர்களுக்கிடையிலான கருத்துப் பரிமாற்றம் புறாக்களின் மூலமாகவே நடந்தது. கால ஓட்டத்தில் பல முன்னேற்றங்களுக்குப் பிறகு அஞ்சல் முறை தோன்றியது. ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குக் கடிதங்களின்வழி செய்திகளை அனுப்பினர்.

அஞ்சல்துறை தொடங்கிய காலத்தில் நூற்றுக்கணக்கான அஞ்சல் நிலையங்கள் தோன்றின. உள்நாட்டு அஞ்சல், வெளிநாட்டு அஞ்சல், விரைவு அஞ்சல், பதிவு அஞ்சல், நூல் அஞ்சல், பண அஞ்சல், தந்தி என அஞ்சல் துறை மக்களுக்குப் பெரிதும் உதவ ஆரம்பித்தது.

அலெக்சாண்டர் கிரகம் பெல் தொலைபேசியைக் கண்டுபிடித்த பின் தொலைபேசியின் பயன் ஆரம்பமானது. இதன்மூலம் தொலைவில் உள்ளவர்களிடம் தொடர்பு கொண்டு பேச முடிந்தது. அறிவியலின் முன்னேற்றங்களும் தொடர்புத் தொழில்நுட்ப வளர்ச்சிகளும் கம்பியில்லாத் தந்தித் துறையையும் அதன் சாதனங்களையும் மேலும் வலுவடையச் செய்தன. அதனால், பல வடிவங்களையும் பயன்களையும் கொண்ட கைப்பேசிகள் கண்டுபிடிக்கப்பட்டன.

தொலைபேசியைத் தொடர்ந்து, தொலைநகல் முறையும் மக்களுக்குப் பயனளிக்கிறது. இக்கருவியின் மூலம் நிழற்படங்கள் முதல் செய்திகள் வரை பல இடங்களுக்கு அனுப்பப்படுகின்றன. இதற்குத் தொலைபேசி இணைப்பு அவசியமாகும். அதுமட்டுமின்றி மின்சக்தியும் தடையின்றி இருப்பது அத்தியாவசியமாகும். அதனைத் தொடர்ந்து இப்போது கைப்பேசி வந்துவிட்டது. இன்று கைப்பேசி இல்லாமல் இருப்பவர்கள் மிகவும் குறைவு.

தொடர்புத்துறை வளர்ச்சி மற்றோர் இலக்கையும் அடைந்தது. அதுதான் மின்னஞ்சல் முறை. இவ்வரிய கண்டுபிடிப்பின் மூலம் இணையச் செயல்பாட்டினை மக்கள் அறிந்து செயல்பட முடிந்தது.

இணையத்தைப் பயன்படுத்த ஒவ்வொருவரும் அதிலுள்ள குறிப்பிட்ட அகப் பக்கங்களில் உறுப்பினராகச் சேர்ந்தால்தான் மின்னஞ்சலைப் பயன்படுத்த முடியும். உறுப்பினராகச் சேர்பவர்களுக்குத் தனித்தனி மின்னஞ்சல் முகவரி தரப்படுகின்றது.

3.6.3 பனுவலில் உள்ள முக்கியக் கருத்துகளைச் சரியாகவும் தெளிவாகவும் குறிப்பெடுத்துக் கோவையாக எழுதுவர்.

BT Year 6 3_Layout 1 10/2/2015 1:30 PM Page 80

அவர்கள் தங்களுடைய மின்னஞ்சல் பாதுகாப்புக்கும் தனித்தன்மைக்கும் கடவுச் சொல்லைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். மின்னஞ்சல் முகவரியுடன் கடவுச் சொல்லைப் பயன்படுத்தினால்தான் மின்னஞ்சலைத் திறக்க முடியும். தொழில்நுட்ப வளர்ச்சியின் தொடர்ச்சியான முன்னேற்றங்கள் நாளுக்குநாள் அதிகரித்த வண்ணமே இருக்கின்றன.


சிறுவர் முதல் பெரியவர் வரை இன்று முகநூல், அகப்பக்கம், குறுஞ்செய்தி போன்ற சமூக வலைத்தளங்களின் மூலம் தகவல்களைச் சில நொடிகளில் பரிமாறிக்கொள்ள முடிகின்றது. இத்தகைய அபரிமிதமான வளர்ச்சி தொழில்நுட்பப் புரட்சியாகவே இன்று மலர்ந்துள்ளது. அதனால், உலகமே ஒரு கிராமம் என்று சொல்லும் அளவுக்குச் சுருங்கிவிட்டது.




இன்று உலகம் முழுவதும் மின்னியல் வணிகம் நடைபெறுகின்றது. இதன் மூலம் உலகின் எந்தப் பொருள் எங்கிருந்தாலும் அதனை மக்கள் இணையவழி வியாபார விண்ணப்பம் செய்து கொள்ள எளிதாகி விட்டது. எனவே, வியாபாரிகளுக்கும் மக்களுக்கும் கிடைத்த ஒரு பெரும்பேறு இணையம் எனலாம்.

## நடவடிக்கை 1

**வாசித்து முக்கியக் கருத்துளை எழுதுக.**



## நடவடிக்கை 2

**கருத்துகளைக் கோவையாக எழுதுக.**

BT Year 6 3_Layout 1 10/2/2015 1:30 PM Page 81



# பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

## இரட்டைக்கிளவிகளை அறிக.

### சூழல் 1

வெளியில் கனத்த மழை பெய்தது. அகல்யாவுக்கு வெகுநாள்களாகவே மழையில் விளையாட ஆசையாக இருந்தது. ஏற்கெனவே அவளுக்குச் சளி பிடித்து அவதிப்பட்டு வந்தாள்.பெற்றோர் இல்லாத அந்த நேரம் அகல்யாவுக்குச் சாதகமாக அமைந்தது. ஆசை தீர மழையில் விளையாடி மகிழ்ந்தாள். சற்றும் எதிர்பாராமல் வெளியில் சென்ற பெற்றோர் வீடு திரும்பினர். அகல்யாவின் தோற்றத்தைக் கண்டவுடன் அப்பாவிற்குக் கடுமையான கோபம் வந்தது. தம் மகளைப் **பளார்பளார்** என்று அறைய வேண்டும் போல் தோன்றியது. ஆனாலும், அகல்யாவின் குறுகுறுவென்ற குழந்தைத்தனமான பார்வை அப்பாவின் கோபத்தைக் குறைத்தது. சற்றுக் கடுமையான குரலில் அகல்யாவைக் கடிந்து கொண்டார்.



### சூழல் 2

பூவரசன் ஒரு தனியார் நிறுவனத்தில் வேலை செய்கிறான். அலுவலகத்திற்குத் தினமும் நேரத்தோடு வந்துவிடுவான். அந்நிறுவனத்தின் உயரதிகாரிக்குப் பூவரசனின் கட்டொழுங்கு பிடித்திருந்தது. அதனால், பூவரசனிடம் அவர் எப்பொழுதும் அன்பாகவே நடந்துகொண்டார். அதே நிறுவனத்தில் வேலை செய்யும் சிலர் காலத்தோடு வராமல் இருந்தனர். உயரதிகாரி பலமுறை அவர்களிடம் நயமுடன் கூறிப் பார்த்தார்; கடிந்தும் பேசினார்.

"நாம் வணங்க வேண்டிய இடம் கோயில் மட்டுமல்ல, பணியிடமும்கூட. ஆலயத்தில் மட்டுமல்ல, உழைக்கும் இடத்திலும் ஒழுக்க முறையோடு இருக்க வேண்டும். செய்யும் தொழில் தெய்வம் என்பது நமது முன்னோர் வார்த்தை. தயவுசெய்து புரிந்து நடந்துகொள்ளுங்கள்," என்று ஊழியர் கூட்டத்தில் கடகடவென்று பேசிவிட்டு விறுவிறுவென்று அறையை விட்டு அகன்றுவிட்டார்.



ஆனாலும், அந்தப் பணியாளர்கள் தங்கள் போக்கிலேயே

4.11.6 ஆறாம் ஆண்டுக்கான இரட்டைக்கிளவிகளைச் சூழலுக்கேற்பச் சரியாகப் பயன்படுத்துவர்.

நடந்துகொண்டிருந்தனர். மேலும், உயரதிகாரி எப்பொழுதும் **சிடுசிடு**வென்று முகத்தைக் காட்டுவதாகவும் பூவரசனிடம் மட்டும் அன்பு செலுத்துவதாகவும் புறம்பேசினர். உழைக்கத் தயாராக இல்லாத அந்தச் சோம்பேறிகளை நிருவாகம் வேலையை விட்டு நீக்கியது.

### சூழல் 3

ஆற்றோரத்தில் அமர்ந்திருந்தான் காவியன். நீர் சலசலவென ஓடிக் கொண்டிருந்தது. இதமான தென்றல் காற்று அந்த இரவு நேரத்தில் சிலுசிலுவென்று வீசியது. தான் எழுத வேண்டிய கவிதை வரிகளை முணுமுணுத்தவாறே கரையோரம் நடந்தான். அருகில் பூந்தோட்டம். அண்ணாந்து பார்த்தான். வானத்தில் **மினுமினு**த்துக் கொண்டிருந்தன நட்சத்திரங்கள். மளமளவென்று கவிதை வரிகள் மனத்தினுள் உதித்தன. எழுதத் தொடங்கினான். அதற்குள் நிசப்தத்தைக் கிழித்துக் கொண்டு ஒரு சத்தம்.



சற்றுத் தூரத்தில் பெரியவர் ஒருவர் தடுமாறி விழுவதைக் கண்டான். அவரால் எழ முடியவில்லை. "அடக் கடவுளே..!" என அவர் அரற்றினார்.

குடுகுடுவென்று அவரை நோக்கி ஓடினான். மெதுவாக அவரைத் தூக்கினான். "அடிபட்டதா?" என்று கனிவுடன் வினவினான். பெரியவரும், "காயம் எதுவுமில்லை," என்றார்.

#### இரட்டைக்கிளவிகளும் பொருளும்

| | |
|---|---|
| **சிடுசிடு** | - சினக்குறிப்புக் காட்டுதல் |
| **பளார்பளார்** | - கன்னத்தில் தொடர்ச்சியாய் விழும் அறை |
| **மினுமினு** | - விட்டு விட்டுப் பிரகாசத்துடன் ஒளிர்தல். |

## நடவடிக்கை 1


**கொடுக்கப்பட்ட சொற்களைக் கொண்டு இரட்டைக்கிளவிகளைப் பயன்படுத்திச் சூழலை நிறைவு செய்க.**

1. அண்ணன் - புத்தகத்தை - கிழித்த - தம்பி - கோபம்
2. கவிஞர் - கடல் அலை - விண்மீன்கள் - கவிதை - இயற்றினார்
3. அம்மா - தாமதமாக - திரும்பிய - அக்காள் - எரிந்து விழுதல்



# பாடம் 5 இலக்கணம்

## வலிமிகும் இடங்களை அறிக (க்கு, ச்சு, ட்டு).




**வலிமிகும் இடங்கள்**

- சொற்றொடர்களில், வருமொழி 'க்,ச்,த்,ப்' ஆகிய வல்லெழுத்துகளில் தொடங்கினால் நிலைமொழி ஈற்றில் சில இடங்களில் வல்லெழுத்து மிகும்.
- வருமொழியின் முதல் எழுத்து வல்லினமாக இருந்தால் வல்லினம் மிகும்.

**குறிப்பு:** நிலைமொழி - முதலில் நிற்கும் சொல்
வருமொழி - அடுத்து நிற்கும் சொல்

➤ வன்தொடர்க் குற்றியலுகரச் சொற்களுக்குப் பின் வலிமிகும்.

எடுத்துக்காட்டு ➤
மூக்கு + கயிறு = மூக்குக் கயிறு
விட்டு + கொடுத்தான் = விட்டுக் கொடுத்தான்

5.8.7 க்கு, ச்சு, ட்டு, த்து, ப்பு, ற்று என முடிவுறும் வன்தொடர்க் குற்றியலுகரத்தின் பின் வலிமிகும் என்பதை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

BT Year 6 3_Layout 1 10/2/2015 1:30 PM Page 84

## நடவடிக்கை 1

**சொற்களைச் சேர்த்து எழுதுக.**

1. பாக்கு + தோப்பு = ______
2. அச்சு + தொழில் = ______
3. விட்டு + சென்றான் = ______
4. மூச்சு + பயிற்சி = ______
5. சாக்கு + பைகள் = ______
6. சாக்கு + பைகள் = ______
7. தட்டு + தடவினான் = ______

### தகவல் உலகம்


உடலில் எல்லா உறுப்புகளும் ஒரே சமயத்தில் உறங்கத் தொடங்குவது இல்லை. முதலில் கண்கள், பிறகு வாசனையை அறியும் உறுப்புகள், பின்பு சுவை அறியும் உறுப்புகள், அதன் பிறகு காது, இறுதியில் சருமம். இதேபோல் விழிப்பு அடையும் போது கீழிருந்து வரிசையாக விழிப்பை அடைகின்றன.

## நடவடிக்கை 2

**வாக்கியங்களில் சரியான சொற்களை எழுதுக.**
**(க்கு, ச்சு, ட்டு)**

1. அப்பா தம்பியைப் பள்ளி வளாகத்தில் இறக்கி ______ சென்றார்.
2. அத்தைக்குப் ______ புடவை என்றால் மிகவும் பிடிக்கும்.
3. அசுத்தமான காற்றைச் சுவாசிப்பதால் ______ திணறல் ஏற்படலாம்.
4. பாட்டி ______ தோப்புக்குச் சென்று வந்தார்.
5. மாமா சிறுவயதிலிருந்தே ______ தொழிலில் ஈடுபட்டுள்ளார்.
6. கணினியைப் பயன்படுத்த அடம்பிடித்த தங்கைக்கு அண்ணன் ______ கொடுத்தார்.
7. காலில் ஏற்பட்ட காயத்திற்கு மருத்துவர் ______ போட்டார்.
8. காலாவதியான உணவுப் பொருள்களில் ______ தன்மை இருக்கும்.
9. விவசாயி பழங்களைச் ______ பைகளில் போட்டார்.





## நடவடிக்கை 3

**சொற்களைச் சேர்த்து வாக்கியங்களை எழுதுக.**

1. பாட்டு + பாடினான் = ______
2. கேட்டு + சென்றான் = ______
3. அச்சு + பலகை = ______
4. பட்டு + பூச்சி = ______
5. வாக்கு + கொடு = ______

### சிந்தனைக்கு

**சிலப்பதிகாரத்தின் சிறப்புப் பெயர்கள்**

- குடிமக்கள் காப்பியம்
- முத்தமிழ்க் காப்பியம்
- மூவேந்தர் காப்பியம்
- முதல் காப்பியம்
- சமுதாயக் காப்பியம்


மூலம்: மாணவர் களஞ்சியம்

BT Year 6 3_Layout 1 10/2/2015 1:30 PM Page 85

# தொகுதி 9 புராணங்களை அறிவோம்

## பாடம் 1 தசரத மன்னன்


குழுவில் கலந்துரையாடுக.




தசரத மன்னனுக்கு மூன்று அழகிய மனைவிகள் கோசலை, கைகேயி, சுமித்திரை.



தசரதனுக்குப் பல ஆண்டுகளாகப் பிள்ளைப்பேறு இல்லை. பல யாகங்களையும் தவங்களையும் செய்கிறார்.



பகவான் மகாவிஷ்ணு தசரத மன்னனின் மனைவி கோசலைக்கு மகனாக இராமன் அவதரிக்கிறார். கைகேயிக்குப் பரதனும் சுமித்திரைக்கு இலக்குவனும் சத்துருக்கனும் பிறந்தனர்.



இராமன் சகல திறமைகளும் படைத்தவனாகத் திகழ்ந்தான். பெற்றோரிடமும் உடன் பிறந்தோரிடமும் அன்பாகவும் இணைபிரியாமலும் பழகி வந்தான்.

1.11.7 புராணக் கதையைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்புடன் கூறுவர்.



தசரத மன்னனுக்கு எல்லாப் பிள்ளைகள் மீதும் பிரியம் உண்டு. ஆனால் மூத்த மகன் இராமன் மீது அளவற்ற பாசம் வைத்திருந்தார்.



அசுரர்களால் உலக மக்கள் துன்பப்படுகின்ற காலம் அதுவாகும்.



மனிதர்கள் செய்யும் யாகம் - தவம் இவற்றால் தேவர்கள் திருப்தி அடைகின்றனர் - மக்களை வாழ்த்துகின்றனர்



தர்மங்களுக்கு அழிவு நேரும்போது இறைவன் அவதரிக்கின்றார். மனித வடிவில் தோன்றி அரக்கர்களை அழித்து மனித இனத்தைக் காப்பாற்ற நினைக்கிறார்.

## நடவடிக்கை I

**கதையைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்புடன் கூறுக.**




# பாடம் 2 பாண்டவர்களின் தானம்

## வாசித்து அறிக.

பாண்டவர்கள் பாரதப் போரில் வெற்றி பெற்ற பிறகு, தங்கள் வெற்றியைக் கொண்டாடப் பெரியதோர் அசுவமேத யாகம் நடத்தினார்கள். அதில் மன்னர்கள் பலர் கலந்துகொண்டனர். வேதம் ஓதும் அந்தணர்களுக்குப் பொன்னும் பொருளும் வாரி வழங்கப்பட்டன.

அன்னதானமும் சத்திரங்களும் இரவும் பகலும் இடைவிடாமல் வந்தவர்களின் பசியைத் தீர்த்து வைத்தன. யாகம் முடிந்த பின்பும் அனைவரும் பாண்டவர்களைப் பாராட்டி இதுபோன்ற யாகத்தைப் பார்த்ததில்லை எனக் கூறிப் புகழ்ந்தார்கள்.



பாண்டவர்கள் மனத்தில் அனைவரையும் திருப்தி செய்த மகிழ்ச்சி உண்டாயிற்று. கூடவே அவர்களைப் போல இவ்வளவு விமரிசையாக யாகம் செய்தவர்கள் யாரும் இல்லை என்ற அகம்பாவமும் ஏற்பட்டது. அச்சமயம், அங்கே விசித்திரமான கீரி ஒன்று வந்தது. அதன் பாதி உடல் தங்க நிறமாகவும், மீதி உடல் சாதாரணமானதாகவும் இருந்ததைக் கண்ட பாண்டவர்கள் வியப்படைந்தனர். அடுத்துக் கீரி செய்த காரியம் அவர்களை மேலும் வியப்பில் ஆழ்த்தியது.

கீரி உணவுக் கூடத்தில் நுழைந்தது. அங்குத் தரையில் சிந்திக் கிடந்த மாவில் விழுந்து

2.6.23 புராணக் கதைகளை வாசித்துப் புரிந்து கொள்வர்.

இப்படியும் அப்படியுமாகப் நாலைந்து முறை புரண்டது. பிறகு பாண்டவர்களைப் பார்த்துக் கேலியாகச் சிரித்தது.

“ஏதோ பாண்டவர்களாகிய நீங்கள் பெரிய யாகம் செய்வதாகப் பேசிக் கொண்டார்கள். பார்த்துவிட்டுப் போகலாம் என்று வந்தேன். ஆனால், நான் முன்பு பார்த்த யாகத்தைவிட இஃது ஒன்றும் பெரிய யாகமில்லை,” என்றது.

பாண்டவர்கள் அதிர்ச்சியுற்றனர். “நம்மைவிடச் சிறப்பாக யாகம் செய்தவர் யாராக இருக்க முடியும்?” என்ற சந்தேகம் எழக் கீரியிடமே கேட்டனர்.

“பாரதப் போர் நடைபெறுவதற்கு முன்பு குருஷேத்திரத்தில் பெரியவர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவருடைய மனைவி, மகன், மருமகள் ஆகிய நால்வரும் தெருவில் சிந்திக் கிடக்கும் தானியங்களைச் சேகரித்து வருவார்கள். மாவாக்கிக் கடவுளுக்குப் படைத்தபின், நால்வரும் உண்பது அன்றாட வழக்கமாயிற்று.

ஒரு முறை அவர்களுக்கு இரண்டு நாள்களாகியும் எந்த ஒரு தானியமும் கிடைக்கவில்லை. பட்டினி கிடந்தனர். மூன்றாம் நாள் கிடைத்த தானியத்தை வழக்கம்போல் இறைவனுக்குப் படைத்துத் தாங்களும் உண்பதற்கு அமர்ந்தனர். அச்சமயம் அவர்கள் வீட்டுக் கதவு தட்டப்பட்டது. கதவைத் திறந்து பார்த்தால் ஓர் ஏழை, பசியின் கொடுமையால் உணவு வேண்டி நின்றான்.

அந்த ஏழையை அழைத்துப் பெரியவர் தமது பங்கு உணவைக் கொடுத்தார். இருப்பினும் அந்த ஏழையின் பசி அடங்கவில்லை. பெரியவரின் மனைவி தம் பங்கு உணவைக் கொடுத்தார். அதையும் உண்டு முடித்த பின்னர் பசி அடங்கவில்லை. மகனும் தன் பங்கு உணவைக் கொடுத்தான். பிறகு அந்த ஏழைக்கு மருமகளும் தனது பங்கை அளித்துவிட்டாள். அதையும் உண்டு முடித்த பின்னரே அந்த ஏழையின் முகத்தில் திருப்தி ஏற்பட்டது. பசியால் வாடிய ஏழைக்கு உணவு அளித்த மகிழ்ச்சி அப்பெரியவரின் குடும்பத்தினர் முகத்தில் தெரிந்தது.

சற்று நேரத்தில் பெரியவர் வீட்டிற்கு வந்த ஏழை தர்ம தேவன் என்பதை அவர்களுக்கு வெளிப்படுத்தினார். பெரியவரின் குடும்பத்தினரின் தியாகத்தைப் பாராட்டித் தமது தேரிலேயே சொர்க்கத்திற்கு அழைத்துச் சென்றார்.

தற்செயலாக அப்பெரியவரின் வீட்டிற்குச் சென்ற நான் அங்குச் சிந்தியிருந்த மாவில் புரண்டேன். அந்த மாவு பட்ட உடலின் பாகமெல்லாம் தங்க நிறமாக மாறிவிட்டது. மீதி உடலையும் தங்க நிறமாக்கிக் கொள்ள நானும் பல யாகங்களுக்குச் செல்கிறேன். ஆனால், என் மீதி உடல் அப்படியே இருக்கின்றது. மாறவில்லை.

பொன்னும் பொருளும் நிறைய பெற்றிருப்பவர்கள் தான தருமங்கள் செய்வது பெரிய காரியமல்ல. ஆனால், ஓர் ஏழை தனக்கு வைத்திருந்த ஒரு வேளை உணவையும், விருந்தினராக வந்தவருக்கு மன மகிழ்ச்சியுடன் அளிப்பானாகில், அதுவே தலைசிறந்த தானமாகும்,” என்று கீரி கதை கூறி முடித்தது. கீரியின் கதையைக் கேட்ட பாண்டவர்கள் வெட்கித் தலை குனிந்தனர்.

**மூலம் : மகாபாரதக் கதைகள்**

## நடவடிக்கை 1

**வினாக்களுக்கு விடையளித்திடுக.**

1. பாண்டவர்கள் போரில் வெற்றி பெற்றதைக் கொண்டாட என்ன செய்தனர்?
2. பாண்டவர்கள் மனத்தில் திருப்தி ஏற்படக் காரணம் யாது?
3. கீரியைக் கண்ட பாண்டவர்கள் வியப்புக் கொண்டதன் காரணம் என்ன?
4. கீரி கூறிய கதையில் பெரியவரின் குடும்பம் செய்த தானம் என்ன?
5. கீரி கூறிய கதையின் படிப்பினை யாது?
6. பாண்டவர்களின் பண்பு நலன்கள் பற்றி உனது கருத்தைக் கூறுக.
7. பஞ்சபாண்டவர்களும் பாரதப் போரும் எனும் தலைப்பில் சில விவரங்களைச் சேகரித்து எழுதுக.
8. தர்ம தேவன் முதியவர் இல்லத்திற்கு வருகை புரிந்ததன் நோக்கத்தைக் கூறுக.

**அருஞ்சொற்கள்**

- தடாகம்
- சாபமிட்டு
- தேர்ப்பாகன்
- பரிகாரம்
- நிந்தித்தல்
- அவதாரப் பணி
- வனவாசம்

## நடவடிக்கை 2

**சொற்றொடர்களைக் கொண்டு வாக்கியம் அமைத்து வாசித்திடுக.**

1. பொன்னும் பொருளும் ________
2. இரவும் பகலும் ________
3. மனைவி மக்கள் ________
4. உணவு அளித்த ________
5. மன மகிழ்ச்சி ________
6. பட்டினி கிடந்தனர். ________
7. தான தருமங்கள் ________

**தகவல் உலகம்**

- பஞ்ச கவ்வியம்
  தயிர், நெய், பால், கோசலம், கோமயம்
- பஞ்ச பட்சி - வல்லூறு ஆந்தை, காகம், கோழி, மயில்
- பஞ்ச பாண்டவர் - தருமன், பீமன், அர்ஜுனன், நகுலன், சகாதேவன்



# பாடம் 3 தன்னம்பிக்கை

## வாசித்து எழுதுக.

மனித வாழ்வு கிடைத்ததற்கு நாம் மாபெரும் தவம் செய்திருக்க வேண்டும். ‘அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது; மானிடராய்ப் பிறந்திடினும் ஞானமும் கல்வியும் நயத்தல் அரிது’ என்றார் அருந்தமிழ் மூதாட்டி ஒளவையார். கிடைத்த இவ்வரிய வாழ்க்கையை வாழ்நெறி முறைப்படி வாழக் கற்றுக் கொள்ள வேண்டும்.

நல்லதோர் வீணை செய்தே - அதை
நலங்கெடப் புழுதியில் எறிவதுண்டோ

என்றார் பாரதியார்.

இசை எழுப்பும் அழகிய வீணையைக் குப்பையில் வீசுவதுபோல் அற்புதமான இந்த வாழ்வை நன்றாக வாழத் தெரியாமல் தடம் மாறிச் செல்லக்கூடாது. இன்று நாம் அனைவரும் கல்வி கற்பதற்கான பல வாயில்கள் திறந்து விடப்பட்டுள்ளன. இவ்வரிய வாய்ப்புகளை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். வறுமையும் ஏழ்மையும் தோல்விகளும் நாம் படிப்பதற்கான தடைகள் அல்ல. நாம் உயர வேண்டும், வளர வேண்டும் என்பதற்கான உற்சாகத்தைத் தரும் படிகள்தாம் அவை.

வரலாறு படைத்த பலரும் வறுமையையும் ஏழ்மையையும் தாண்டித்தான் வாழ்வை வென்றிருக்கின்றார்கள். அமெரிக்காவின் குடியரசுத் தலைவர் ஆப்ரகாம் லிங்கன் வாழ்வில் சந்திக்காத தோல்விகள் இல்லை. 42 ஆண்டுகால வாழ்வு முழுவதும் தோல்விகள். ஆனாலும் தோல்விகளைக் கண்டு துவண்டு போகாமல் விடாமுயற்சியுடன் போராடி 1860ஆம் ஆண்டில் அமெரிக்கக் குடியரசுத்தலைவராகப் பதவி ஏற்றார்.

ஒழுக்கம், கட்டுப்பாடு, உழைப்பு, நேர்மை, வாய்மை ஆகிய மந்திரங்கள் எவரையும் நம்பி வாழாத நம்பிக்கையை நமக்குத் தரும். அறிவு என்பது கடந்த காலத்தைச் சார்ந்தது. நுண்ணறிவு என்பது தற்சமயம் நிகழ்வது. மாணவர்கள் வகுப்பறையில் பாடங்களைக் கற்கும்போது, மனம் சிதறாமல் ஒருங்கிணைந்து உற்றுநோக்கிக் கற்க வேண்டும். வாழ்க்கையிலும் அப்படித்தான். ஒவ்வோர் அனுபவமும் நமக்கு அரிய பாடமாகும்.

குறி பார்த்துத் துப்பாக்கி சுடும் போட்டியில் இளைஞர்கள் சிலர் குறி தவறிச்

3.6.3 பனுவலில் உள்ள முக்கியக் கருத்துகளைச் சரியாகவும் தெளிவாகவும் குறிப்பெடுத்துக் கோவையாக எழுதுவர்.

சுட்டுக் கொண்டிருந்தபோது அங்கு வந்த சுவாமி விவேகானந்தர், "நான் முயற்சி செய்து பார்க்கலாமா?" என்று கேட்டுத் துப்பாக்கியை வாங்கிக் குறி தவறாமல் பலமுறை சுடுகிறார்.



பிரமித்துப் போன இளைஞர்கள், "தங்களுக்குத் துப்பாக்கி சுடுதலில் பயிற்சி உண்டா?" என்றனர்.

"முதல் முறை முயன்றேன். இதற்கு முன்பு நான் துப்பாக்கி பிடித்தவன் இல்லை. முடியும் என்ற மனவுறுதியுடனும் நேர்மையுடனும் முயன்றேன்," என்றார் சுவாமி விவேகானந்தர்.


சுவாமி விவேகானந்தர் ஏழை எளியோரின் முன்னேற்றத்திற்காகவே தமது வாழ்க்கையை அர்ப்பணித்தார். இல்லாதவர்களுக்குத் தம்மிடம் உள்ள அனைத்தையும் கொடுத்து உதவும் தயாள குணம் படைத்தவர். இவரைப் போன்று, எளிமையாகவும் நேர்மையாகவும் வாழ்ந்த அறிஞர்கள் பலரும் இறந்தும் இறவாப் புகழை அடைந்தவர்களே.

**அருஞ்சொற்கள்**

- தவம்
- நயத்தல்
- வாயில்கள்
- உற்றுநோக்கி
- பிரமித்துப் போன
- அர்ப்பணித்தார்
- எளியோர்

## நடவடிக்கை 1

**பனுவலை வாசித்து முக்கியக் கருத்துகளைக் கண்டறிந்து கோவையாக எழுதுக.**



# பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

## வெற்றி வேற்கை அறிக.

இராமன் தனது சகோதரர்களுடன் காட்டில் வித்தைகளைக் கற்றுக் கொண்டிருந்தான். அச்சமயம் இராமனுக்கு நண்பன் ஒருவன் கிடைத்தான். அவன் பெயர் அனந்தன். அனந்தன் பரம ஏழை. இராமனோடு குருகுலத்தில் தங்கி பல சேவைகள் செய்வதில் பேரானந்தம் கொண்டான்.

ஏழை என்றும் பாராமல் அனந்தனிடம் அளவிலாத அன்பு காட்டினான் இராமன். இராமனுக்கு எல்லாப் பணிவிடைகளையும் அனந்தனே செய்வான். ஒவ்வொரு மாதமும் சில நாள்கள் வனத்திற்குச் சென்று தர்ப்பை எனும் புல் பறித்து வர வேண்டியது அனந்தனின் கடமையாகும். அதுபோல, ஒரு சமயம் அனந்தன் வனத்திற்குச் சென்றிருந்த நேரத்தில் இராமன் தன் குருவிடம் விடைபெற்று அயோத்தி சென்றுவிட்டான். வனத்திலிருந்து திரும்பி வந்த அனந்தன், விவரம் அறிந்து தாங்க முடியாத வருத்தம் கொண்டான். இராமனைக் காணத் துடித்தான். சில காலம் கடந்து அரண்மனைக்குச் சென்றான். ஆனால், அங்கே இராமன் இல்லை. வனவாசம் சென்றுவிட்டதை அறிந்தான். இராமன் காட்டில் பல இன்னல்களை எதிர்நோக்க வேண்டுமே என்றெண்ணிக் கலங்கினான்.

காட்டில் இராமனைத் தேடினான். “ராமா! ராமா!” என்று கூறிக்கொண்டே ஓரிடத்தில் அன்ன ஆகாரமின்றித் தியானத்தில் அமர்ந்தான். வெயில், மழை என எதையும் பாராமல் அமர்ந்திருந்தான். அவன் அமர்ந்த இடத்தில் புற்று வளர்ந்துவிட்டது. ஆனால், ‘ராம ஜெபம்’ மட்டும் அவன் நாவிலிருந்து நிற்கவில்லை.



ஆண்டுகள் பல கடந்தன. பல சம்பவங்கள் நடந்து முடிந்து இராமனின் பட்டாபிஷேகம் வந்தது. காட்டு வழியாக வந்த மகரிஷிகள் சிலர் ‘ராம’ நாமத்தைப் பாடிக்

4.5.3 ஆறாம் ஆண்டுக்கான வெற்றி வேற்கையின் பொருளை அறிந்து கூறுவர்; எழுதுவர்.

BT Year 6 3_Layout 1 10/2/2015 1:30 PM Page 93



கொண்டே நடந்தனர். அவர்களில் ஒருவர் கால் பட்டு அனந்தன் தவமிருந்த புற்று இடிந்தது. ராம நாமத்தைக் கேட்டு அனந்தன் தவம் கலைந்து, “ராமா..! ராமா..! எங்கிருக்கிறாய் நீ!” என்று கதறினான். தனக்கு வயதாகியிருப்பதையும்கூட அவன் அறியவில்லை. மகரிஷிகளின் மூலம் செய்தியறிந்து அரண்மனை நோக்கி ஓடி வருகிறான் அனந்தன்.

மன்னர் உடையில் இருந்த இராமனை நோக்கி, “அடே இராமா..! இத்தனை காலம் எங்கிருந்தாயடா? நான் எங்கெல்லாம் உன்னைத் தேடினேன் தெரியுமா?” என்று ஓடி வந்து இராமனைக் கட்டித் தழுவினான்.

“உன்னிடம் சொல்லிக் கொள்ளாமல் வந்துவிட்டேன். என் பிரிவால் நீ எவ்வளவு துயரம் அடைந்திருப்பாய் என்பதை அறிவேன். என்னை மன்னித்துவிடு நண்பனே,” என்றான் இராமன்.

“இவன் என் குருகுலத் தோழன். இந்த மாபெரும் அவையில் என்னை அடே இராமா என்று அழைக்க என் தந்தை தசரதன் இல்லையே என ஏங்கினேன். அந்தக் குறையைத் தீர்த்த இவன் என் தந்தைக்கு நிகரானவன். என்னைக் காண எத்தனையோ காலம் தவமிருந்தவன்,” என்றான் இராமன்.

## வெற்றி வேற்கையும் பொருளும்

- **ஒரு நாட்பழகினும் பெரியோர் கேண்மை**
  **இருநிலம் பிளக்க வேர்வீழ்க் கும்மே**

– நல்லவர்களோடு ஒருநாள் மட்டுமே தொடர்பும் நட்பும் கொண்டிருந்தாலும், அந்த நட்பானது பூமியைப் பிளந்து ஆழ ஊடுருவும் உறுதியான வேரைப் போன்றதாகும்.



## நடவடிக்கை I

1. **வெற்றி வேற்கையையும் பொருளையும் மனனம் செய்து கூறுக; வரிவடிவத்துடன் எழுதுக.**
2. **வெற்றி வேற்கைக்குப் பொருத்தமான சூழல் ஒன்றனை உருவாக்கி எழுதுக.**


**அருஞ்சொற்கள்**

- வித்தைகள்
- அளவிலாத
- வனவாசம்
- இன்னல்கள்
- ஆகாரமின்றி



# பாடம் 5 இலக்கணம்

## வலிமிகா இடங்களை அறிக.




➤ சொற்றொடர்களில், வருமொழி 'க், ச், த், ப்' ஆகிய வல்லெழுத்துகளில் தொடங்கினாலும் நிலைமொழி ஈற்றில் சில இடங்களில் வலிமிகாது.
'ன்று, ந்து' என முடியும் வினையெச்சங்களின் பின் வலிமிகாது.

எடுத்துக்காட்டு ➤

| | | | | |
|---|---|---|---|---|
| சென்று | + | பார்த்தாள் | = | சென்று பார்த்தாள் |
| அறிந்து | + | கொண்டார் | = | அறிந்து கொண்டார் |

## நடவடிக்கை 1

**சேர்த்து எழுதுக.**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சேர்ந்து | + | கரைந்தன | = | | மென்று | + | பார்த்தான் | = | |
| பறந்து | + | சென்றன | = | | சென்று | + | சேர்ந்தாள் | = | |

5.7.8 — ன்று, ந்து என முடியும் வினையெச்சத்தின் பின் வலிமிகா என்பதை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

BT Year 6 3_Layout 1 10/2/2015 1:30 PM Page 95

## நடவடிக்கை 2

**சேர்த்து எழுதுக.**

1. சென்று + சொன்னார் = ______
2. அறிந்து + கொண்டனர் = ______
3. வரைந்து + காட்டினான் = ______
4. புரிந்து + கொண்டனர் = ______
5. நின்று + கொண்டான் = ______
6. வந்து + சேர்ந்தனர் = ______
7. வென்று + சென்றனர் = ______
8. மறைந்து + போயின = ______

### தகவல் உலகம்

- ஒரு சாதாரண எறும்புக்கு 5 மூக்குகள் உண்டு. ஒவ்வொரு மூக்கினாலும் விதவிதமான வாசனைகளை உணர்ந்து கொள்ளும்.
- வாகனங்களில் முதன் முதலில் பதிவு எண்ணை அறிமுகப்படுத்திய நாடு பிரான்ஸ்.


## நடவடிக்கை 3

**சரியான சொற்களை எழுதுக.**



1. பள்ளி மாணவர்கள் தேயிலைத் தொழிற்சாலையைச் ______ .
2. மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நண்பனை வகுப்பு மாணவர்கள் ______ .
3. வேகமாக ஓடிய மாணவன் முடிவுக் கோட்டினை ______ .
4. எல்லா இனிப்புப் பலகாரங்களையும் அண்ணன் ______ .
5. அந்தத் தொழிற்சாலை மின்சாரக் கோளாறினால் ______ .
6. சுற்றுலா செல்வதன் மூலம் நாம் பல இடங்களைப் பற்றி ______ .
7. வேட்டையாடச் சென்ற வேடர்கள் வெறுங்கையுடன் வீடு ______ .
8. தையல்காரர் தைத்த ஆடையை அகிலா ______ .
9. அறிவன் வளர்த்த கிளி கூண்டிலிருந்து ______ .
10. மைதிலி கிராமத்துச் சமையல்களைப் பற்றி நன்கு ______ .







# தொகுதி 10 பண்பு போற்றுவோம்

## பாடம் 1 பள்ளியா சமுதாயமா



### குழுவில் கலந்துரையாடுக.

**மாணவர்களின் முன்னேற்றத்திற்கு அதிகம் பங்காற்றுவது சமுதாயமே.**



நண்பர்கள் அனைவருக்கும் வணக்கம். இன்று நம் மாணவர்கள் பள்ளிக்கு வருவதற்கு முன்பே நிறைய தகவல்கள் தெரிந்தவர்களாக இருக்கின்றனர். பள்ளியில் இருக்கும் நேரம் குறைவுதான். குடும்பத்திலும் சமுதாயத்திலும் இருக்கும் நேரமே அதிகம். எனவே, அவர்களின் முன்னேற்றத்தில் சமுதாயமே அதிகப் பங்காற்றுகின்றது.




எனதருமை தோழர்கள் அனைவருக்கும் என் வணக்கம். குழந்தைகள், சிறுவர்கள் ஆகியோர் எழுதப் படிக்கத் தெரியாமல் பள்ளிக்கு வருகின்றனர். அறியாக் குழந்தைகளுக்கு எழுத்தறிவை ஏற்படுத்திக் கற்றவர்களாகச் சமுதாயத்திற்கு வழங்குவது பள்ளியே. எனவே, மாணவர்களின் முன்னேற்றத்திற்கு அதிகம் பங்காற்றுவது பள்ளியே என்பது என் கருத்து. பல தகவல்களையும் முறையான கல்வியையும் பள்ளியில்தான் மாணவர்கள் கற்றுக் கொள்கின்றனர்.






1.10.9 — தலைப்பை ஒட்டியோ வெட்டியோ பண்புடன் வாதிடுவர்.

BT Year 6 3_Layout 1 10/2/2015 1:31 PM Page 97

## நடவடிக்கை 1

**தலைப்பினையொட்டிக் கொடுக்கப்பட்ட கருத்துகளை ஒட்டியோ வெட்டியோ பண்புடன் வாதிடுக.**

## நடவடிக்கை 2

**தலைப்பிற்கு ஏற்ப ஒட்டி, வெட்டிப் பேசும் கருத்துகளைப் பட்டியலிட்டுப் பண்புடன் வாதிடுக.**

### தகவல் உலகம்

- தமிழைப் போன்று மிகப் பழைமையான மொழிகளில் ஒன்று லத்தீன்.
- தொல்காப்பியம் 3 பிரிவுகளை உடையது. எழுத்து, சொல், பொருள்.
- உலக நாடுகளின் தேசிய கீதங்களுள் மிக நீளமானது ‘கிரீஸ்’ நாட்டுத் தேசிய கீதம்தான். இந்நாட்டு தேசிய கீதத்தில் 158 வரிகள் உள்ளன.

அ. ஒட்டி | மாணவர்கள் கல்வியில் வெற்றி பெறத் துணைபுரிவன பாடநூல்களே | வெட்டி



ஆ. மாணவர்கள் எதிர்கால ஆசையைத் தேர்ந்தெடுக்கப் பெரும் பங்காற்றுபவர்கள் பெற்றோர்களே



இ. மாணவர்களிடையே நற்பண்புகள் வளரத் துணைபுரிவது சமய அறிவே

BT Year 6 3_Layout 1 10/2/2015 1:31 PM Page 98



# பாடம் 2 எங்கள் வெற்றி



## நேர்காணலைப் பாகம் ஏற்று வாசித்திடுக.

நிருபர் : வணக்கம் மாணவர்களே!

மாணவர்கள் : வணக்கம் அண்ணா.

நிருபர் : நான் மதியழகன். சாதனை நாளிதழின் நிருபர். நடந்து முடிந்த அறிவியல் போட்டியில் முதல் நிலையில் வாகை சூடிய உங்களுக்கு என் மனமார்ந்த வாழ்த்துகள்.

மாணவர்கள் : மிக்க நன்றி.



நால்வர் அடங்கிய உங்கள் குழுவில் தலைவராகப் பொறுப்பேற்றவர் யார்?

நான்தான் அண்ணா. நான் செழியன். என் தோழிகள் கனகா, மல்லிகா, துளசி ஆகிய மூவரும் எங்கள் பள்ளியைப் பிரதிநிதித்தோம்.



நிருபர் : மிக்க நன்று. நீங்கள் செய்த அறிவியல் பரிசோதனை, தலைப்புப் போன்ற விவரங்களைக் கூற முடியுமா?

செழியன் : நாங்கள் இப்போட்டியில் கலந்துகொள்ள எடுத்துக் கொண்ட தலைப்பு நெல்லிக்கனியும் அதிலுள்ள உயிர்ச்சத்தும் அண்ணா.

நிருபர் : அறிவியல் பரிசோதனை பல இருப்பினும் நெல்லிக்கனியை நீங்கள் தேர்ந்தெடுத்த நோக்கம் என்ன என்று விளக்க இயலுமா?



நெல்லிக்கனியில் அடங்கியுள்ள உயிர்ச்சத்துதான் எங்களை மிகவும் கவர்ந்தது அண்ணா. ஒரு நெல்லிக்கனியில் உள்ள வைட்டமின் C சத்தானது பதினைந்து ஆரஞ்சுப் பழங்களுக்குச் சமம் என்பதைப் பரிசோதனைவழி நாங்கள் நிரூபித்தோம் அண்ணா.

நெல்லிக்கனியில் இருக்கும் உயிர்ச்சத்துதான் மூலிகை மருத்துவத்தில் முதலிடம் பெறக் காரணமாயிருக்கின்றது அண்ணா. நூறு கிராம் நெல்லிக்கனியில் அறுநூறு மில்லிகிராம் உயிர்ச்சத்து C இருப்பதை நாங்கள் எங்கள் பரிசோதனையின்வழி கண்டறிந்தோம்.



2.8.7 நேர்காணலில் உள்ள தகவல்களைச் சேகரிப்பர்.

BT Year 6 3_Layout 1 10/2/2015 1:31 PM Page 99



எனவே, நெல்லிக்கனியை உண்பதில் ஆர்வம் காட்ட வேண்டும். மேலும், இக்கனி நீரிழிவு நோயைக் குணப்படுத்த சிறந்ததொரு கனி எனவும் கூறலாம்.

நிருபர் : இதைத்தவிர வேறு ஏதேனும் பரிசோதனைகள் செய்தீர்களா?

துளசி : செய்துள்ளோம் அண்ணா. மிளகில் உள்ள நோய் எதிர்ப்புச் சக்தியையும் அதிலுள்ள வெப்ப ஆற்றலைப் பற்றியும் பரிசோதனை செய்தோம்.



மிளகைக் கொண்டு நீங்கள் செய்த பரிசோதனையின் அடைவுநிலையைக் கூற இயலுமா மாணவர்களே?



ஆம் அண்ணா. மிளகுக்கு உணவை எளிதில் செரிமானம் செய்யும் ஆற்றல் உண்டு. மேலும், உடல் வெப்பத்தை அதிகரிக்கும் ஆற்றலும் மிளகுக்கு உண்டு அண்ணா.

நிருபர் : அப்படியா! அதனால்தான் வெளிநாடுகளில் வசிக்கும் மக்கள் குளிர்காலத்தில் மிளகை அதிகம் தங்கள் உணவில் சேர்த்துக் கொள்கிறார்களோ!

மாணவர்கள் : அப்படியும் இருக்கலாம் அண்ணா.

நிருபர் : சிறப்பான முறையில் பரிசோதனைகள் செய்து தேசிய அளவில் முதல் இடத்தில் வாகை சூடிய உங்கள் நால்வருக்கும் மீண்டும் எனது வாழ்த்துகள். நன்றி.

## நடவடிக்கை 1

**நேர்காணலில் கூறப்பட்ட தகவல்களைத் தொகுத்துக் கருத்து வரைபடத்தில் எழுதுக.**

## நடவடிக்கை 2

**நேர்காணலைப் பாகமேற்று நடித்திடுக.**

**அருஞ்சொற்கள்**

- வாகை
- பிரதிநிதித்தோம்
- உயிர்ச்சத்து
- பரிசோதனை
- நிரூபித்தோம்
- அடைவுநிலை
- செரிமானம்

## இடுபணி

தேசிய அளவில் நடைபெற்ற கவிதைப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவன் ஒருவனை நேர்காணல் செய்தது போன்ற உரையாடலைத் தயாரித்துக் காட்டுக.

BT Year 6 3_Layout 1 10/2/2015 1:31 PM Page 100



# பாடம் 3 கவரும் ஊடகங்கள்



## வாசித்து எழுதுக.




**புத்தகங்களைவிடத் தகவல் ஊடகங்கள் மாணவர்களை வெகுவாகக் கவர்கின்றன.**

- சுலபமாகவும் குறுகிய நேரத்தில் விரும்பியவர்களுடன் தொடர்புகொள்ளவும் பயன்படுத்துகின்றனர்.
- விளம்பரத் தாக்கங்களால் விரைவில் கவரப்படுகின்றன.
- மாணவர்கள் தகவல் ஊடகங்களில் விருப்பம் கொள்கின்றனர்.
- எல்லா இடங்களிலும் நினைத்த நேரத்தில் பயன்படுத்த ஏதுவாக உள்ளதால் அவற்றைப் பெரிதும் விரும்புகின்றனர்.
- ஊடகச் சாதனங்களின் வடிவங்களும் பயன்பாடும் பயனீட்டாளர்களால் ஈர்க்கப்படுகின்றன.

அறிவியல் முன்னேற்றங்களின் அடையாளமாகத் தகவல் ஊடகங்கள் திகழ்கின்றன. இத்தகைய தகவல் ஊடகங்கள் மாணவர்களை வெகுவாகக் கவர்கின்றன.

மாணவர்கள் தகவல் ஊடகங்களைப் பயன்படுத்தி விவரங்களைச் சேகரிக்கவே பெரிதும் விரும்புகின்றனர். இன்றைய நாளில் இணையத்தின் வாயிலாக, அகப்பக்கம், முகநூல், புலனம், மின்னஞ்சல் போன்ற ஊடக வசதிகளைப் பயன்படுத்துவதில் மாணவர்கள் தங்களை ஈடுபடுத்திக் கொள்கின்றனர்.

3.10.23 120 சொற்களில் வாதக் கட்டுரை எழுதுவர்.

BT Year 6 3_Layout 1 10/2/2015 1:31 PM Page 101



## நடவடிக்கை 1

**கொடுக்கப்பட்ட கருத்துகளைப் பயன்படுத்தி 120 சொற்களில் வாதக் கட்டுரை எழுதுக.**



## நடவடிக்கை 2


**தலைப்புக்கு ஏற்ற கருத்துகளைக் கண்டறிந்து 120 சொற்களில் வாதக் கட்டுரை எழுதுக.**

**தகவல் உலகம்**


**கிரந்த எழுத்துச் சொற்களும் பொருளும்**

- ஸ்தலம் – இடம்
- ஜகம் – உலகம்
- ஜவுளி – துணி
- ஜீவன் – உயிர்
- ஜுரம் – காய்ச்சல்

அ.




ஆ.



BT Year 6 3_Layout 1 10/2/2015 1:31 PM Page 102

# பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

## பழமொழிகளை அறிக.

### கதை 1



தேன்மொழியும் பூங்குழலியும் ஒரே வகுப்பில் படிக்கும் தோழிகள். இருவரும் கெட்டிக்கார மாணவிகள். பள்ளியில் நடத்தப்படும் எல்லாப் போட்டிகளிலும் ஆர்வத்துடன் பங்கு பெறுவர். தேன்மொழி சில நேரங்களில் பதற்றம் கொள்வாள். இதனால், வேலைகளைச் சரியாகச் செய்ய இயலாமல் தவிப்பாள். பூங்குழலி எல்லா நிலையிலும் நிதானமாகவே செயல்படுவாள். **பதறாத காரியம் சிதறாது** என்பது போலப் பூங்குழலி பதற்றப்படாமல் எல்லா வேலைகளையும் பொறுமையுடன் சிறப்பாகச் செய்து ஆசிரியர்களின் பாராட்டுகளைப் பெறுவாள்.

### கதை 2



மோகனா சிறந்த நாட்டிய ஆசிரியராவார். தம் மகள் கயல்விழியையும் அத்துறையில் ஈடுபடச் செய்தார். ஓய்வு நேரத்தில் கயல்விழி தன் திறமையை மேலும் வளர்த்துக் கொண்டாள். ஒருமுறை மாநில ரீதியில் நடனப் போட்டியில் பங்கு பெற்றாள். வருகை புரிந்தோர் அனைவரின் பார்வையையும் ஈர்க்கும் விதத்தில் சிறந்த நடனத்தை வெளிப்படுத்தினாள்; முதல் பரிசை வென்றாள். **மீன் குஞ்சுக்கு நீச்சல் பழக்க வேண்டுமா?** எனப் பார்வையாளர்கள் அனைவரும் அவளது திறமையைப் பாராட்டினர்.

### கதை 3

வேலை தேடி நகரத்திற்கு வந்த தன் தோழன் மருதுவை மெய்யழகனின் குடும்பத்தினர் சிறப்பாக உபசரித்தனர். ஒருநாள் உறவினர் இல்லத் திருமணத்திற்கு மெய்யழகன் குடும்பத்தினருடன் சென்றிருந்தான். மருது மட்டும் தனியாக வீட்டில் இருந்தான். தன் தோழனின் வீட்டிலுள்ள சில வெள்ளிப் பொருள்கள் மருதுவின் பார்வையை ஈர்த்தன. அவனது கையில் பணம் இல்லை. தனது தேவைக்கு வெள்ளிப் பொருள்களை

4.13.6 ஆறாம் ஆண்டுக்கான பழமொழிகளின் பொருளை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

எடுத்துச் சென்று விற்றுவிடலாமா என்று எண்ணினான். இருதலைக் கொள்ளி எறும்பு போல அவன் மனம் தடுமாறியது.

ஆயினும், **அன்னமிட்ட வீட்டில் கன்னமிடலாமா?** நமக்கு உதவி செய்தவர்களுக்கு நாம் நன்மை செய்யாவிட்டாலும் கெடுதல் செய்யக்கூடாது என்பதை நினைவில் கொண்டான். தனக்கேன் தீய எண்ணம் உதித்தது என்று மனம் நொந்தான். நமக்கு உதவியவர்களுக்கு நாம் நன்றியுடையவர்களாகத்தான் இருக்க வேண்டும் என்ற தனது ஆசிரியர்களின் அறிவுரைகளை மனக்கண் முன் கொண்டு வந்தான். அந்த நல்லொழுக்க அறிவுரைகள் அவனைத் தடுமாற்றத்திலிருந்து மீட்டன.



மெய்யழகன் குடும்பத்தினர் திரும்பிவரும் வரை வீட்டைச் சுத்தம் செய்ததோடு, தோட்டத்துச் செடிகளுக்கெல்லாம் நீர் ஊற்றிப் பொறுப்புடன் பார்த்துக் கொண்டான்.

### பழமொழிகளும் பொருளும்

- **பதறாத காரியம் சிதறாது**

  பதற்றப்படாமல் பொறுமையுடன் ஒரு செயலைச் செய்தால் அச்செயல் சிறப்பாக முடிவுறும்.

- **மீன் குஞ்சுக்கு நீச்சல் பழக்க வேண்டுமா?**

  ஒன்றைப்பற்றி நன்கு அறிந்துள்ள ஒருவருக்கு அதைப்பற்றி மேலும் விளக்கமோ பயிற்சியோ தர வேண்டியதில்லை.

- **அன்னமிட்ட வீட்டில் கன்னமிடலாமா?**

  உதவி செய்தவருக்கு, அந்த நன்றியை மறந்து தீமை செய்யக்கூடாது.

### தகவல் உலகம்

- மாணிக்கவாசகரின் சிறப்புப் பெயர் - அமுது அடியடைந்த அன்பர்.
- மூதுரையின் சிறப்புப் பெயர் - வாக்குண்டாம்
- நாலடியாரின் சிறப்புப் பெயர் - வேளாண் வேதம்
- பெரிய புராணத்தின் சிறப்புப் பெயர் - திருத்தொண்டர் புராணம்

மூலம்: மாணவர் களஞ்சியம்

### நடவடிக்கை 1

**பொருத்தமான பழமொழியை எழுதுக.**

1. வேலை வாங்கிக் கொடுத்த தன் நண்பனின் பெயருக்குக் களங்கத்தை ஏற்படுத்தினான் பாலன்.
2. மாலினி பொறுமையாக எல்லா வினாக்களுக்கும் சரியான விடை எழுதிச் சிறந்த புள்ளிகளைப் பெற்றாள்.
3. ஓவியம் வரைவதைத் தன் தந்தையிடமே கற்றுக் கொண்ட அமுதன், பள்ளிச் சுவரில் கண்கவர் ஓவியங்களை வரைந்து அழகுபடுத்தினான்.

### அருஞ்சொற்கள்

- பதற்றம்
- தவிப்பாள்
- ஈர்க்கும்
- ஆர்வமூட்டினர்
- அடைக்கலம்
- தடுமாறியது

BT Year 6 3_Layout 1 10/2/2015 1:31 PM Page 104

# பாடம் 5 இலக்கணம்

## வடமொழிச் சந்தி அறிக.




➤ வடமொழித் தொடர்களில் நிலைமொழியின் ஈற்றில் குற்றொலி அல்லது நெட்டொலி இருந்து, வருமொழி குற்றொலி அல்லது நெட்டொலியில் தொடங்கினால் குற்றொலி மறைந்து நெட்டொலி தோன்றும்.

➤ நிலைமொழி ஈற்றில் ‘அ / ஆ’ + ‘இ / ஈ’ = ‘ஏ’ தோன்றும்.

எடுத்துக்காட்டு ➤

ராஜ + இந்திரன் = ராஜேந்திரன்
மகா + ஈஸ்வரி + மகேஸ்வரி
தேவ + இந்திரன் + தேவேந்திரன்

5.7.5 வடமொழிச் சந்தி இலக்கணம் பற்றி அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

## நடவடிக்கை 1

**கோடிட்ட சொற்களைப் பிரித்து எழுதுக.**

1. சிவராமன் தம்பதியினருக்கு ராஜேஸ்வரன் ராஜேஸ்வரி எனும் இரட்டைக் குழந்தைகள் பிறந்தனர்.
2. அடர்ந்த காட்டில் ஓர் ஆலமரத்தடியில் லிங்கேஸ்வரர் எனும் முனிவர் தவமிருந்தார்.
3. வேதேஸ்வரியும் மகேந்திரனும் புறப்பாட நடவடிக்கைகளில் சிறந்து விளங்கினர்.
4. கங்கேஸ்வரன் கடைக்குச் சென்று பல பொருள்களை வாங்கி வந்தான்.
5. மகேஸ்வரன் ஓய்வு நேரத்தைப் பயனுள்ள வழிகளில் செலவு செய்வான்.
6. பரமேஸ்வரனும் பரமேஸ்வரியும் பள்ளியின் சாரணர் இயக்கத்தைச் சிறந்த முறையில் வழிநடத்தினர்.



## நடவடிக்கை 2

**சேர்த்தெழுதுக.**

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | ராஜ | + | ஈஸ்வரன் | = | | 5. | கங்கா | + | ஈஸ்வரி | = | |
| 2. | மகா | + | இந்திரன் | = | | 6. | மகா | + | ஈசன் | = | |
| 3. | தேவ | + | ஈஸ்வரி | = | | 7. | தேவ | + | இந்திராணி | = | |
| 4. | மகா | + | ஈஸ்வரி | = | | 8. | ராஜ | + | இந்திரமதி | = | |

## இடுபணி

வடமொழிச் சந்தி இலக்கணம் அடங்கிய சில சொற்களைச் சேகரித்துக் கருத்து வரிப்படத்தில் எழுதுக.

# மீள்பார்வைப் பயிற்சிகள்

அ. சரியான விடையைத் தெரிவு செய்க.

1. கோடிட்ட சொல்லின் தன்மையைக் கூறுக.

   அக்காள் அழகான குழந்தையை ஈன்றாள்.

   A. வினைசொல்
   B. பெயரடை
   C. பெயர்ச்சொல்
   D. வினையடை

2. சூழலுக்குப் பொருத்தமான இரட்டைக்கிளவிகளைத் தெரிவு செய்க.



   i. மினுமினு
   ii. பளார்பளார்
   iii. சிடுசிடு
   iv. கிடுகிடு

   A. i , ii B. ii , iv
   C. i , iv D. ii , iii

3. வேலையில்லாமல் சுற்றித் திரியும் அண்ணனை அப்பா **கடுமையாகப்** பேசினார். கோடிட்ட சொல் எதைக் குறிக்கின்றது?
   A. பெயர்ச்சொல்
   B. பெயரடை
   C. வினைச்சொல்
   D. வினையடை

4. உண்பவர்க்குத் தக்க உணவுப் பொருள்களை விளைத்துத் தருவதோடு பருகுவார்க்குத் தானும் ஓர் உணவாக இருப்பது மழையாகும். இப்பொருளைக் கொண்டுள்ள திருக்குறளின் ஆரம்பம்.
   A. ஒருநாட் பழகினும் பெரியோர்
   B. செயற்கரிய செய்வார்
   C. துப்பார்க்குத் துப்பாய
   D. அறிவுடையார் எல்லாம்

5. கோடிட்ட சொல் எதைக் குறிக்கின்றது? மேடையில் பாடிய குழந்தையின் அழகைக் கண்டு பார்வையாளர்கள் இரசித்து மகிழ்ந்தனர்.
   A. வினைச்சொல்லை
   B. பெயர்ச்சொல்லை
   C. வினைமுற்றை
   D. பெயரெச்சத்தை

6. **சரியாகப் பொருள்** கொண்டுள்ள மரபுத் தொடரைத் தெரிவு செய்க.
   A. தலைகுனிதல் - வெட்கப்படுதல்
   B. முயல்கொம்பு - இல்லாத - பிறவாத ஒன்று
   C. ஆணித்தரம் - பொய்யான ஒன்று
   D. ஆழம் பார்த்தல் - கேலி செய்தல்

7. மூதுரையில் விடுபட்ட வரி யாது?

   நெல்லுக்கிறைத்த நீர் வாய்க்கால் வழியோடிப்
   புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம் - தொல்லுலகில்
   ______________________
   எல்லார்க்கும் பெய்யும் மழை

   A. நல்லார் ஒருவர் உளரேல் அவர்பொருட்டு
   B. இருப்பினும் ஒன்று இல்லாதவரே
   C. கறையிருளை நீக்கக் கருதா துலகில்
   D. உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே

8. சரியான விடையைத் தெரிவு செய்க.
   A. மகா + இந்திரன் = மகந்திரன்
   B. சக + உதரன் = சகதிரன்
   C. ஞான + உதயம் = ஞானாதயம்
   D. சூரிய + உதயம் = சூரியோதயம்

9. சரியாக வலிமிகுந்துள்ள சொற்றொடரைத் தெரிவு செய்க.
   A. பாக்குத் தோப்பு
   B. கொண்டுச் சென்று
   C. செய்துக்காட்டு
   D. சென்றுப் பார்த்தார்

10. சூழலுக்குப் பொருத்தமான பழமொழியைத் தெரிவு செய்க.
    நகுலன்: எந்த வேலையையும் என்னால் சிறப்பாகச் செய்ய முடியவில்லையே!

தயாளன்: நீ பதற்றப்படாமல் பொறுமையுடன் எல்லா வேலைகளையும் செய்தால் நிச்சயம் சிறப்பாகச் செய்ய இயலும்.

A. முன் வைத்த காலைப் பின் வைக்காதே
B. பதறாத காரியம் சிதறாது
C. தனிமரம் தோப்பாகாது
D. சுடர் விளக்காயினும் தூண்டுகோல் தேவை

11. சூழலுக்குத் தேவையான பழமொழியைத் தெரிவு செய்க.

ஆசிரியர் கொடுத்த குழு வேலைகளைப் பதற்றம் இல்லாமல் பொறுமையுடன் செய்து சிறப்பான படைப்பைத் தந்த அமலன் குழு மாணவர்களை ஆசிரியர் வெகுவாகப் பாராட்டினார்.

A. அன்னமிட்ட வீட்டில் கன்னமிடலாமா?
B. பதறாத காரியம் சிதறாது.
C. மீன் குஞ்சுக்கு நீச்சல் பழக்க வேண்டுமா?
D. மனம் உண்டானால் மார்க்கம் உண்டு.

12. ஏற்ற மரபுத்தொடரைத் தேர்ந்தெடுத்திடுக.

தன் தந்தை எவ்வளவோ எடுத்துக் கூறியும் வெளிநாடு சென்று மருத்துவத் துறையில் பயிலும் எண்ணத்தில் உறுதியாக நின்றான்.

A. கரை கண்டவர்
B. முயல் கொம்பு
C. ஆணித்தரம்
D. ஈடுகட்டுதல்

13. கோடிடப்பட்டுள்ள வினையெச்சம் எது?

சிறந்த பாடகியான பைரவி கலை நிகழ்ச்சியில் கலந்து கொண்டாள். அவள் <u>பாடிய பாடலும்</u> (A.) <u>ஆடிய நடனமும்</u> (B.) பார்வையாளர்களைப் பெரிதும் கவர்ந்தன. மனம் <u>மகிழ்ந்த மக்கள்</u> (C.) குதூகலமாக <u>ஆடிப் பாடினர்</u> (D.).

14. சேர்த்தெழுதுக.
வேத + ஆகமம்


A. வேதமாகம்
B. வேதாகமம்
C. வேதகமம்
D. வேத ஆகமம்

15. செய்யுளில் விடுபட்ட வரிகளைத் தெரிவு செய்க.

_______________
மதிகொடுக்கும் மதியே
_______________
நடுநின்ற நடுவே

A. கல்லார்க்கும் கற்றவர்க்கும் காணார்க்கும் கண்டவர்க்கும
B. மதியார்க்கும் மதிப்பவர்க்கும் நல்லார்க்கும் பொல்லார்க்கும்
C. வல்லார்க்கும் மாட்டார்க்கும் மதியார்க்கும் மதிப்பவர்க்கும்
D. நரர்களுக்கும் சுரர்களுக்கும் காணார்க்கும் கண்டவர்க்கும்

16. கொடுக்கப்பட்டுள்ள சூழலுக்குப் பொருத்தமான மரபுத்தொடரைத் தெரிவு செய்க.




A. தலை குனிதல்
B. மனப்பால் குடித்தல்
C. ஆழம் பார்த்தல்
D. ஈடுகட்டுதல்

17. A. தலை குனிதல்
B. கரி பூசுதல்
C. காது குத்துதல்
D. கை கழுவுதல்

18. சூழலுக்குப் பொருத்தமான மரபுத்தொடரைத் தெரிவு செய்க.




A. தலை குனிதல்
B. தலை முழுகுதல்
C.வெளுத்து வாங்குதல்
D. கம்பி நீட்டுதல்

19. சேர்த்து எழுதுக.

மென்று + தின்றேன் =

A. மென்றுத்தின்றேன்
B. மென்றுன்றேன்
C. மென்றும் தின்றேன்
D .மென்று தின்றேன்

20. எத்தகைய வறுமை நிலையிலும் கல்வி கற்பதை விடலாகாது.

எனும் பொருளை விளக்கும் வெற்றி வேற்கையைத் தெரிவு செய்க,

A. கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே

B. ஒருநாட் பழகினும் பெரியோர் கேண்மை
இருநிலம் பிளக்க வேர்வீழ்க் கும்மே

C. நூறாண்டு பழகினு மூர்க்கர் கேண்மை
நீர்க்குட் பாசிபோல் வேர் கொள்ளாதே

**ஆ. கொடுக்கப்பட்டுள்ள பத்தியில் காணும் எழுத்துப் பிழைகளைத் திருத்தி எழுதுக.**

தமிழை 'முத்தமிழ்' என்று சிரப்பித்துக் கூருவர். இயள், இசை, நாடகம் எணப் பகுப்பர். செய்யுல், உறைநடைகளைக் குறிப்பது இயற்றமிழ். இஃது எண்ணங்களை வெளிப்படுத்த உதவும். இசையுடன் கூடிய பாடல்களைக் குறிப்பது இசைத்தமிழ். இவை இதயத்தை ஈர்த்து நெகிலச் செய்வன. பேச்சாலும், நடிப்பாலும் கறுத்துகளை வெளிப்படுத்துவது நாடகத்தமிழ் ஆகும். கன்முண் காட்சிகளாகக் காட்டி மக்களை நெரிப்படுத்துவது ஆகும். இத்தகைய பகுப்புத் தண்மை நம் தாய்மொழியாம் தமிழுக்கே உண்டு.

**இ. கோடிட்ட சொல்லுக்குப் பொருத்தமான அதே பொருளுள்ள வேறொரு சொல்லை எழுதுக.**

1. நல்லவர்களின் தொடர்பும் நட்பும் வளர்ந்து கொண்டு போகும் தன்மையைக் கொண்டது.
2. அந்த ஏழை மூதாட்டியின் நிலையைக் கண்டதும் மலருடைய மனத்தில் இரக்கம் தோன்றியது.
3. யு.பி.எஸ்.ஆர் தேர்வுக்காகக் கடுமையான பயிற்சிகளை மேற்கொண்ட மாணவர்கள் சிறந்த புள்ளிகளைப் பெற்றனர்.
4. தீய நண்பர்களோடு சேர்ந்து தகாத காரியங்களைச் செய்த குமரனைக் காவல் துறையினர் கைது செய்தனர்.
5. தம் நாட்டின் மீது படையெடுத்து வரப்போவதாகத் தகவல் அறிந்த பாண்டிய மன்னர், உடனே தாமும் யுத்தத்திற்குத் தயாரானார்.
6. தங்கை சாவியைத் தொலைத்ததால் பூட்டப்பட்டிருந்த வீட்டின் கதவைத் திறக்க இயலவில்லை.
7. திக்கற்ற நிலையிலிருந்த முகிலனுக்கு அப்பெரியவர் அடைக்கலம் கொடுத்தார்.



# தொகுதி 11 நாட்டுப் பற்று

## பாடம் 1 வரலாற்றுத் திரட்டேடு

### குழுவில் கலந்துரையாடுக.

இளவரசு : வணக்கம் கவியாழினி.
கவியாழினி : வணக்கம் இளவரசு.
இளவரசு : கையில் என்ன புத்தகம் வைத்துள்ளாய்?
கவியாழினி : நம் வரலாற்று ஆசிரியர் தயாரிக்கச் சொன்ன திரட்டேடுதான் இது.
இளவரசு : நீங்கள் எந்தத் தலைப்பைத் தேர்ந்தெடுத்தீர்கள்?





கவியாழினி : அப்படியொன்றும் இல்லை. நம் நாட்டில் முதன்முதலில் ஈயம் லாருட் எனும் இடத்தில் லோங் ஜபார் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. மேலும், மலாயா என்று அன்று அழைக்கப்பட்ட நம் நாட்டில் சீனர்களே அதிகமாக ஈயம் எடுக்கும் தொழிலில் ஈடுபட்டு வந்திருக்கின்றனர்.
இளவரசு : இத்துறைக்குச் சீனர்கள் எவ்வாறு வந்தனர்?
கவியாழினி : சில நூற்றாண்டுகளுக்கு முன்னர், சீனர்கள் வர்த்தக மாற்றம் செய்து கொள்ள மலாயாவிற்கு வந்தனர். அவர்கள் பினாங்கு, மலாக்கா, சிங்கப்பூர் ஆகிய இடங்களில் குடியேறி வணிகத் துறையில் ஈடுபட்டு வந்தனர். ஈயச் சுரங்கப் பணிகளில் பெருமளவில் ஈடுபட்டு வந்தனர்.

1.6.23 — தலைப்பிற்கேற்பப் பொருத்தமான சொல், சொற்றொடர், வாக்கியம் ஆகியவற்றைப் பயன்படுத்திப் பேசுவர்

BT Year 6 4_Layout 1 10/2/2015 1:32 PM Page 110

இளவரசு : என் தாத்தா அடிக்கடி கூறுவார். சீனர்கள் அன்றே பொருளாதாரத்தில் சிறந்து விளங்கினர் என்று. அதற்கு அடிப்படை இதுவாகத்தான் இருக்குமோ?

கவியாழினி : அப்படியும் சொல்லலாம். ஈயம் அக்காலத்தில் உயர்ந்த விலைக்கு விற்றபடியால் சீனர்களில் பலர் விரைவில் செல்வந்தர்களாகத் திகழ்ந்தனர். இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு சீனாவிலிருந்து மக்கள் அணியணியாக மலாயாவிற்கு வரலாயினர்.




இளவரசு : நம் நாட்டிற்கு ரப்பர் எப்படி வரவழைக்கப்பட்டது?

கவியாழினி : நம் நாட்டில் ரப்பர் உற்பத்திக்குக் காரணமானவர் ஹெச்.என். ரிட்லி என்பவரே!

இளவரசு : நிறைய விவரங்கள் கூறினாய். நானும் என் திரட்டேடு செய்யும் வேலைகளைச் சிறப்பாக முடிக்க வேண்டும்.

கவியாழினி : நீயும் உன் குழுவினரும் என்ன தலைப்பைத் தேர்ந்தெடுத்தீர்கள்?

இளவரசு : நாங்கள் நம் நாட்டில் ஏற்பட்ட சாலைகளின் முன்னேற்றம் பற்றிய விவரங்களைச் சேர்த்துத் திரட்டேடு செய்ய உள்ளோம்.

கவியாழினி : அப்படியா! மிக நன்று. சிறப்பாக உங்கள் திரட்டேட்டினைச் செய்ய வாழ்த்துகள்.

## நடவடிக்கை 1

**உரையாடலில் கூறப்பட்ட சொல், சொற்றொடர், வாக்கியம் ஆகியவற்றைப் பட்டியலிட்டுக் கூறுக.**

**அருஞ்சொற்கள்**

- தோன்றிய
- வர்த்தகம்
- அடிக்கடி
- பொருளாதாரம்
- திகழ்ந்தனர்
- உற்பத்தியை
- வரவழைக்கப்பட்டது

## நடவடிக்கை 2

**வாக்கியம் அமைத்திடுக.**

| | | |
|---|---|---|
| அ. ஈயச்சுரங்கம் | இ. வணிகத்துறை | உ. உயர்ந்த விலை |
| ஆ. வர்த்தக மாற்றம் | ஈ. சுரங்கப்பணி | ஊ. அணியணியாக |



# பாடம் 2 நெகிரி செம்பிலான்

## வாசித்து அறிக.


நெகிரி செம்பிலான் எனும் மலாய்ச் சொல் ஒன்பது மாவட்டங்களைக் கட்டியணைத்துக் கொண்ட ஒரு மாநிலமான நெகிரி செம்பிலானைக் குறிக்கின்றது.

நெகிரி செம்பிலானில் வாழ்ந்த மக்கள் மீனாங்காபாவ் பரம்பரையினர். அவர்கள் சுமத்திராவிலுள்ள மீனாங்காபு எனும் இடத்திலிருந்து வந்தவர்கள். கூட்டங்கூட்டமாகச் சேர்ந்து வாழ்ந்த இவர்கள் பல புதுமையான பழக்க வழக்கங்களைக் கொண்டவர்களாவர்.

அமைதியை விரும்பும் மீனாங்காபாவ் மக்கள் அந்நாளில் மலாக்கா சுல்தான்களின் பாதுகாப்பிலும், ஜோகூர் சுல்தான்களின் மேற்பார்வையிலும் வாழ்ந்து வந்தனர். ஆனால், சுல்தான்களின் உதவி தொடர்ந்து கிடைக்கவில்லை. அரவணைப்பு இல்லாத அவர்களுக்குப் பூகிஸ்காரர்கள் தொல்லை கொடுக்க ஆரம்பித்தனர்.

தங்களுக்கென்று தலைவன் ஒருவன் இருந்தால்தான் பூகிஸ்காரர்களின் தொல்லையை அகற்ற முடியும் என்று உணர்ந்தனர். எனவே, அவர்களின் பரம்பரை வழிவந்த ஒருவரைத் தலைவனாக்க எண்ணினர். கி.பி. 1773ஆம் ஆண்டு ராஜா மெலேவார் எனும் அரசகுமாரன் சுமத்திராவிலிருந்து வரவழைக்கப்பட்டு ‘யாம் துவான்’ என்ற பட்டத்துடன் நெகிரி செம்பிலான் மாநிலத்திற்குத் தலைவனாக்கப்பட்டான்.

மற்ற மாநில சுல்தான்களைப் போன்று ராஜா மெலேவார் அதிகாரங்கள் பெற்றிருக்கவில்லை. ஆனாலும், பிற மாவட்டத் தலைவர்கள் ராஜா மெலேவாரைப் போன்று யாம் துவானாகப் பட்டம் பெற ஆவல் கொண்டு செயல்பட்டனர். இதனால், அவர்கள் ஒருவரோடொருவர் சண்டையிட்டுக் கொள்வது,




2.3.11 வரலாறு தொடர்பான பனுவல்களைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசிப்பர்.

விருப்பம் போல் வரி வசூல் செய்வது, ஆடம்பரச் செலவுகள் செய்வது போன்ற காரியங்களில் ஈடுபட்டனர்.

நெகிரி செம்பிலானிலுள்ள மாவட்டங்களில் சுங்கை உஜோங் அந்நாளில் சிறந்து விளங்கிற்று. இதற்கு முக்கியக் காரணம் அங்கு ஆயிரக்கணக்கிலான சீனர்கள் ஈயம் எடுக்கும் தொழிலில் ஈடுபட்டிருந்ததாகும். அச்சமயம் இம்மாவட்டத்தின் தலைவராக டத்தோ கிளானா என்பவர் பணியாற்றினார்.

சுங்கை ஊஜோங் மாவட்டத்தில் தோண்டப்பட்ட ஈயம், லிங்கி நதி வழியாகவே ஏற்றுமதி செய்யப்பட்டது. இதனைப் பயன்படுத்திக் கொண்ட ரெம்பாவ்வாசிகள் அவ்வழியாகச் செல்லும் கப்பல்களைத் தடுத்து நிறுத்தி ஒழுங்கீன முறையில் வரி வசூல் செய்து தொல்லைகள் கொடுத்தனர். இந்நிலையை அறிந்த டத்தோ கிளானா ரெம்பாவ்வாசிகளின் தொல்லைகளை ஒழிக்க முற்பட்டார். முடிவில் 1874ஆம் ஆண்டு அவர் ஆங்கிலேய கவர்னரான சர் ஆண்ட்ரு கிளார்க் என்பவரின் உதவியை நாடி பாதுகாப்பு ஒப்பந்தம் செய்துகொண்டார்.

ஆங்கிலேயப் படைகளின் உதவியினால் ரெம்பாவ்வாசிகளின் தொல்லைகள் நீங்கின. இதன் காரணமாக ஆங்கிலேயர்கள் மாநிலத்திற்குள் நுழைய ஆரம்பித்ததை மற்ற மாவட்டத் தலைவர்கள் விரும்பவில்லை. எனவே, அவர்கள் டத்தோ கிளானாவிற்கு எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

டத்தோ கிளானாவின் பகைவனான டத்தோ பண்டார் அத்தருணத்தைப் பயன்படுத்தி சுங்கை ஊஜோங் மீது படையெடுத்து வந்தான். நிலைமையை அறிந்த சர் ஆண்ட்ரு கிளார்க் தமது படையை அனுப்பி டத்தோ பண்டாரின் எதிர்ப்பை முறியடித்தார். சுங்கை ஊஜோங் மாவட்டம் மீண்டும் அமைதி பெற்றுச் சிறந்து விளங்கியது.



## நடவடிக்கை 1

அ. பனுவலைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசித்துக் காட்டுக.

ஆ. பனுவல்களில் கூறப்பட்ட வரலாற்றுக் கருத்துகளையும் நிகழ்வுகளையும் பட்டியலிட்டு உரையாடுக.


**அருஞ்சொற்கள்**

- மாவட்டம்
- சுல்தான்
- அதிகாரம்
- ஆடம்பரச் செலவு
- ஒப்பந்தம்
- தருணம்
- முறியடித்தார்
- பகைவன்
- படையெடுத்து

நடவடிக்கை 2

**சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசித்திடுக.**

## தேசியக் கொடி



சுபிட்சத்தையும் அமைதியையும் பிரதிபலிக்கும் நமது நாடு 31 ஆகஸ்டு 1957ஆம் ஆண்டு சுதந்திரம் பெற்றது. நம் நாட்டின் முக்கியச் சின்னமாக விளங்குவது 'ஜாலூர் கெமிலாங்' எனும் தேசியக் கொடியாகும்.

நான்கு நிறங்களைக் கொண்டு காட்சி தரும் நமது தேசியக் கொடி பல பொருளை உணர்த்துகின்றது. பிறை இஸ்லாமிய சமயத்தைக் காட்டுகிறது. பதினான்கு உச்சிகளைக் கொண்ட நட்சத்திரம் நம் நாட்டின் பதினான்கு மாநிலங்களைக் குறிக்கின்றது.

தேசியக் கொடியில் உள்ள சிவப்பு நிறம் நாம் நேசிக்கின்ற நாட்டின் வீரத்தைக் குறிக்கின்றது. நீல வண்ணமோ நாட்டில் வாழும் பல்லின மக்களின் ஒற்றுமை, நல்லிணக்கம் ஆகியவற்றின் அடையாளமாகும். மஞ்சள் நிறம் நம் நாட்டின் அரச பரம்பரையைச் சித்தரிக்கின்றது. வெள்ளை நிறமானது புனிதத்தை வெளிப்படுத்துவதாக அமைந்திருக்கின்றது. மேலும், நம் நாட்டின் கலாச்சாரத்தையும் பாரம்பரியத்தையும் மேம்படுத்துவதோடு தற்காக்கும் வகையிலும் அமைந்துள்ளது.

ஒவ்வோர் ஆண்டும் சுதந்திர தினத்தைக் குறிப்பிட்ட ஒரு கருப்பொருள் கொண்டு நாம் கொண்டாடுகின்றோம். இந்தச் சுதந்திர தினக் கருப்பொருளானது 1970ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. சுதந்திர தினச் சின்னம் 1976ஆம் ஆண்டு அதிகாரப்பூர்வமாக அறிமுகப்படுத்தப்பட்டது. ஒரு நாட்டின் தலைமைத்துவத்தை, இறையாண்மையை, புனிதத்தை, கௌரவத்தை, மதிப்பை வெளிப்படுத்தும் சின்னமாக விளங்குவது நம் நாட்டின் தேசியக் கொடியாகும். மேலும், நம் நாட்டின் பெருமையை உலகுக்கு வெளிப்படுத்தும் சின்னமாகவும் தேசியக் கொடி திகழ்கிறது.

உலக நாடுகள் ஒவ்வொன்றும் தத்தம் நாட்டிற்கெனத் தேசியக் கொடியைக் கொண்டுள்ளன. இதன் மூலம் அந்நாட்டு மக்களின் அமைதி, வளப்பம், வளர்ச்சி, ஒற்றுமை ஆகிய அனைத்தையும் வெளிப்படுத்தும் ஓர் உயர்ந்த சின்னமாக அமைகின்றது என்றால் அது மிகையாகாது.

BT Year 6 4_Layout 1 10/2/2015 1:32 PM Page 114

# பாடம் 3 ஆண்டுக் கூட்ட அறிக்கை

## வாசித்து எழுதுக.

தாமான் இண்டா நல்லுறவு இயக்கத்தின் நான்காம் ஆண்டுக் கூட்ட அறிக்கை

| | | |
|---|---|---|
| ஆலோசகர் | - | திரு. ரம்லி பின் ஹலிம் |
| தலைவர் | - | திரு. இரா. மணிவண்ணன் |
| துணைத் தலைவர் | - | திரு. லிம் கொக் யூ |
| செயலாளர் | - | திரு. பொ. இளங்கோவன் |
| பொருளாளர் | - | திரு. வ. பரஞ்சோதி |
| செயற்குழுவினர் | - | திருமதி பாத்திமா<br>திருமதி தீ பெய் லிங்<br>திரு. க. நாச்சியப்பன்<br>திரு உ. கதிரேசன்<br>திரு. ம. சுப்ரமணியம் |
| உட்கணக்காய்வாளர்கள் | - | திரு. ஜேம்ஸ்<br>திரு. ப. தர்மலிங்கம் |




1. **ஆண்டுக் கூட்டமும் செயலவை அறிக்கையும்**

தாமான் இண்டா நல்லுறவு இயக்கத்தின் நான்காம் ஆண்டுக்கான கூட்டம் கடந்த 11.04.2016 அன்று தாமான் இண்டா டேவான் முஹிபாவில் நடைபெற்றது. கூட்டத்திற்கு உறுப்பினர்கள் வருகை தந்திருந்தனர்.

செயலாளர் திரு. பொ. இளங்கோவன் அவர்களின் வரவேற்புரைக்குப் பின் தலைவர் திரு. இரா. மணிவண்ணன் தலைமையுரை ஆற்றினார். அவர் தமதுரையில் உறுப்பினர்களின் ஆதரவைப் பாராட்டிப் பேசினார். மேலும், வருங்காலத்தில் அவர்கள் தங்களது வற்றாத ஆதரவைக் கழகத்திற்கு வழங்க வேண்டுமென கேட்டுக் கொண்டார். இதனைத் தொடர்ந்து 2015-2016ஆம் ஆண்டிற்கான செயலறிக்கை வாசிக்கப்பட்டது. திருமதி குமுதா முன்மொழிய திருமதி ஜானகி வழிமொழிய இவ்வறிக்கை ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

3.5.12 அறிக்கை தொடர்பான கேள்விகளுக்குப் பதில் எழுதுவர்.

2. **கணக்கறிக்கை**
கழகத்தின் பொருளாளர் திரு. வ. பரஞ்சோதி கழகத்தின் வரவு செலவுக் கணக்கு அறிக்கையை வாசித்தார். கணக்கறிக்கையில் சந்தேகங்கள் இல்லாததால் திரு. அப்துல் ரஹீம் முன்மொழிய திரு. கிம் வழிமொழிய ஏகமனதாக இக்கணக்கறிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டது.

3. **புதிய செயற்குழுத் தேர்வு**
2016 -2017ஆம் ஆண்டிற்கான செயற்குழுத் தேர்வைக் கழக ஆலோசகர் திரு. ரம்லி பின் ஹலிம் அவர்கள் நடத்தினார். வந்திருந்த உறுப்பினர்கள் அனைவரும் நடப்புச் செயலவையினரே தொடர்ந்து பொறுப்பில் இருக்குமாறு கருத்துத் தெரிவித்தனர். ஆலோசகர் அதனை ஏற்றுக் கொண்டு முன்பு பொறுப்பில் இருந்தவர்களே தொடர்ந்து நீடிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார். பழைய செயற்குழு உறுப்பினர்களும் அதனை ஏற்றுக் கொண்டனர்.

4. **நன்றி நவிலல்**
செயற்குழுத் தேர்வுக்குப் பின், செயலாளர் நன்றியுரை நிகழ்த்த ஆண்டுக் கூட்டம் இரவு 10.00க்கு நிறைவு பெற்றது.

அறிக்கையைத் தயாரித்தவர், 18 ஏப்ரல் 2016

*இளங்கோவன்*

பொ. இளங்கோவன்
செயலாளர்,
தாமான் இண்டா,
நல்லுறவு இயக்கம்.






நடவடிக்கை 1

**வினாக்களுக்கு விடையளித்திடுக.**

1. ஆண்டறிக்கையைத் தயாரித்தவர் யார்?
2. ஆண்டுக் கூட்டம் எங்கு, எப்பொழுது நடத்தப்பட்டது?
3. ஆண்டுக் கூட்டத்தில் தலைமையுரை ஆற்றியவர் யார்?
4. இவ்வியக்கத்தின் பொருளாளர் யார்?
5. செயற்குழுத் தேர்வை நடத்தியவர் யார்?
6. உறுப்பினர்களின் ஒட்டு மொத்தக் கருத்து யாது?
7. கடந்த ஆண்டறிக்கையில் வாசிக்கப்பட்ட நிகழ்வு என்ன?

**அருஞ்சொற்கள்**

- வரவேற்புரை
- வற்றாத
- வருங்காலத்தில்
- வழிமொழிய
- ஏகமனதாக
- ஆலோசகர்
- நன்றியுரை
- முன்மொழிய
- செயற்குழு



# பாடம் 4 செய்யுளும் மொழியணியும்



## வெற்றி வேற்கையின் பொருள் அறிக.



தாத்தா : இந்தப் பூங்காவில் வீசுகின்ற இதமான தென்றலும் பூத்துக் குலுங்கும் வண்ண வண்ணப் பூக்களும் நம்மை மகிழ்ச்சிக்குள்ளாக்குகின்றன.

பேரன் : ஆமாம் தாத்தா. எனக்கும் இங்குள்ள இயற்கை எழிலைக் காண பெரும் மகிழ்ச்சியாக உள்ளது.

தாத்தா : நாம் என்றும் ஆரோக்கியமாக வாழ, நம்மிடம் தேக வலிமையும் சிந்தனைத் தெளிவும் இருப்பது அவசியம்.

பேரன் : நாம் ஆரோக்கியமாக இருக்க உடற்பயிற்சி செய்ய வேண்டும். மூடர்களோடு சேரக்கூடாது என்று அம்மா அடிக்கடி கூறுவார். மூடர்கள் என்றால் யார் தாத்தா?

தாத்தா : நான் ஒரு குட்டிக் கதை சொல்கிறேன்.

பேரன் : சொல்லுங்கள் தாத்தா. கதை கேட்டு வெகு நாள்களாகின்றன.

ஒரு கிராமத்தில் பழ வியாபாரிகள் இருவர் இருந்தனர். அவர்களில் கோமகன் படித்த திறமைசாலி. ஆனால், கதிரவன் படிக்காதவன். ஒரே வியாபாரம் செய்வதால் இருவரும் நண்பர்களாக இருந்தனர். சில நாள்களில் கோமகன் தனது வியாபாரத்தைப் பெருக்க நினைத்தான். ஆனால், அவனிடம் போதிய முதலீடு இல்லை. எனவே, திரைகடல் ஓடி திரவியம் தேட நினைத்தான்.

மூடனான கதிரவன் தன் நண்பன் வியாபாரத்திற்குச் செல்வதை மகிழ்ச்சியாக வரவேற்றான். அவனது மகிழ்ச்சிக்கு ஓர் உள்நோக்கம் இருந்தது.சக வியாபாரி போய்விட்டால் அனைத்து வியாபாரமும் தனக்குத்தான் என்று எண்ணி அளவிட முடியாத மகிழ்ச்சி கொண்டான்.

கோமகன் வெளிநாடு செல்வதற்கு முன்பு கதிரவனிடம் பூட்டப்பட்ட ஓர் இருப்புப் பெட்டியைக் கொடுத்தான். தான் திரும்பி வந்தபிறகு வாங்கிக் கொள்வதாகவும் அதனைப் பத்திரமாக வைத்திருக்கும்படியும் கூறினான்.

4.5.3 ஆறாம் ஆண்டுக்கான வெற்றி வேற்கையின் பொருளை அறிந்து கூறுவர்; எழுதுவர்.

BT Year 6 4_Layout 1 10/2/2015 1:33 PM Page 117

கதிரவனோ மறுநாளே அந்தப் பெட்டியைத் திறந்தான். அதில் கோமகனுடைய பூர்வீகச் சொத்தான தங்க நகைகள் இருந்தன. அவன் அவற்றை எடுத்துவிட்டுப் போலி நகைகளை வைத்துப் பெட்டியைப் பூட்டினான்.

கோமகன் ஓராண்டு கழித்து நாடு திரும்பினான். தனது தோழனிடம் கொடுத்திருந்த பெட்டியைப் பெற்றுக் கொண்டான். சில நாள்கள் கழித்து, தன் வியாபார நிமித்தமாகச் சில நகைகளை அடகு வைத்தான். அவனது நகைகள் போலியானவை என்பதை அறிந்து அதிர்ச்சிக்குள்ளானான். உடனே தன் நண்பனிடம் சென்று கேட்டான். அவன் தனக்கு எதுவுமே தெரியாது என்று கைவிரித்துவிட்டான்.



**நூறாண்டு பழகினு மூர்க்கர் கேண்மை**
**நீர்க்குட் பாசிபோல் வேர் கொள்ளாதே.**

என்பது போலப் பல ஆண்டுகள் பழகினாலும் மூடர்களது நட்பு வளராமலும் நீடிக்காமலும் இருக்கும் என்பதைக் கோமகன் உணர்ந்தான்.

நல்ல நண்பன் என்று எண்ணிய கோமகனுக்கு, கதிரவன் துரோகம் செய்துவிட்டான். மூடர்களின் நட்பு துன்பத்தையே தரும். ஆதலால், நாம் நல்லவர் நட்பையே நாடிச் செல்ல வேண்டும்.

### வெற்றி வேற்கையும் பொருளும்

➤ **நூறாண்டு பழகினு மூர்க்கர் கேண்மை**
**நீர்க்குட் பாசிபோல் வேர் கொள்ளாதே.**

– மூடர்களோடு நூறு வருடம் தொடர்பும் நட்பும் கொண்டிருந்தாலும் அந்த நட்பானது நீரிலுள்ள பாசிபோன்று வேர் ஊன்றாமல் உறுதியற்று இருக்கும்.

### அருஞ்சொற்கள்

- இதமான
- சிந்தனை
- வலிமை
- பூர்வீகம்
- நிமித்தமாக
- மூர்க்கர்
- நீடிக்காமல்
- உள்நோக்கம்

### நடவடிக்கை 1

**வெற்றி வேற்கையையும் பொருளையும் மனனம் செய்து கூறுக; எழுதுக.**

### நடவடிக்கை 2

**வெற்றி வேற்கையின் பொருளுக்குப் பொருத்தமான கதை ஒன்றனை உருவாக்கிக் கூறுக.**

### சிந்தனைக்கு

- ஒரு நல்ல புத்தகம் நூறு நல்ல நண்பர்களுக்குச் சமம். ஆனால், நல்ல நண்பன் ஒருவன், ஒரு நூலகத்திற்கே சமம்.
- நம்மை உயர்த்தும் ஏழு செயல்கள்:
  - ஏழ்மையில் நேர்மை
  - கோபத்தில் பொறுமை
  - தோல்வியில் விடாமுயற்சி
  - வறுமையிலும் உதவும் மனம்
  - துன்பத்திலும் துணிவு
  - செல்வத்திலும் எளிமை
  - பதவியிலும் பணிவு

# பாடம் 5 இலக்கணம்

## வலிமிகும் இடங்களை அறிக.

- சொற்றொடர்களில், வருமொழி 'க்,ச்,த்,ப்' ஆகிய வல்லெழுத்துகளில் தொடங்கினால் நிலைமொழி ஈற்றில் சில இடங்களில் வல்லெழுத்து மிகும்.
- வருமொழியின் முதல் எழுத்து வல்லினமாக இருந்தால் வல்லினம் மிகும். அகர, இகர ஈற்று வினையெச்சங்களின் பின் வலிமிகும்.

**எ.கா : i) செய்ய + சொல் = செய்யச்சொல் ii) ஆடி + பாடினாள் = ஆடிப்பாடினாள்**




வேடர்களின் தலைவன் குகன் இராமனைக் காணப் பேராவலுடன் வருகின்றான்.




5.8.6 அகர, இகர ஈற்று வினையெச்சத்திற்குப் பின் வலிமிகும் என்பதை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

BT Year 6 4_Layout 1 10/2/2015 1:33 PM Page 119




## நடவடிக்கை 1

**உரையாடலில் காணப்படும் அகர, இகர ஈற்று வினையெச்சங்களைக் கண்டறிந்து பட்டியலிடுக.**

BT Year 6 4_Layout 1 10/2/2015 1:33 PM Page 120




# தொகுதி 12 குறியீடுகளும் வரைபடங்களும்

## பாடம் 1 கணினிப் பயன்பாடு

### கலந்துரையாடுக.

தீபன் ஒரு மாதத்தில் கணினியைப் பயன்படுத்தும் நோக்கத்தைக் குறித்துக் காட்டுகின்றான்.




### நடவடிக்கை 1

**தீபன் கணினியைப் பயன்படுத்தும் நோக்கங்களை விளக்கிக் கூறி உரையாடுக.**

1.9.4 குறிவரைவில் காணப்படும் விவரங்களை விளக்கமாகவும் தெளிவாகவும் கூறுவர்.

BT Year 6 4_Layout 1 10/2/2015 1:33 PM Page 121

## நடவடிக்கை 2

**கொடுக்கப்பட்ட வினாக்களைக் கேட்டுக் குழுவில் உரையாடுக.**

1. தீபன் எந்த நோக்கத்திற்காகக் கணினியை அதிகமாகப் பயன்படுத்துகிறான்?
2. மிகக் குறைவாகக் கணினியைப் பயன்படுத்தும் நடவடிக்கை யாது?
3. உரையாடுவதற்குத் தீபன் எத்தனை விழுக்காடு கணினியைப் பயன்படுத்துகிறான் ?
4. கணினியை அதிக நேரம் பயன்படுத்துவது பற்றி உனது கருத்தைக் கூறுக.
5. தீபன் எந்த நடவடிக்கைக்காகக் கணினிப் பயன்பாட்டைக் குறைத்துக் கொள்ளலாம்?
6. விவரங்கள் திரட்டத் தீபன் எடுத்துக் கொண்ட கணினிப் பயன்பாடு போதுமானதா?
7. தீபனின் கணினிப் பயன்பாட்டினை வட்டக் குறிவரைவு மூலம் விளக்கிக் கூறுக.
8. நீ கணினியைப் பயன்படுத்தும் நோக்கத்தையும் விதத்தையும் விளக்கிக் கூறுக.

## நடவடிக்கை 3

**குறிவரையில் கொடுக்கப்பட்ட விபரங்களைப் பயன்படுத்திச் சிறு தகவல் ஒன்றனைக் கூறுக.**

## இடுபணி

உனது அன்றாட நடவடிக்கைகளைக் குறிக்கும் குறிவரைவு ஒன்றனைத் தயாரித்துக் காட்டுக.

### சிந்தனைக்கு


- நேரத்தை வீணாக்கும்போது கடிகாரத்தைப் பார். ஓடுவது முள் அல்ல. உன் வாழ்க்கை.
- உலகில் மிகச் சிறந்த வைரங்கள் மனிதன் மனத்தில் தோன்றும் நல்ல எண்ணங்களே!
- மனிதன் எதை எண்ணுகின்றானோ அதற்குரிய பலன்தான் அவனுக்குக் கிட்டும்.



# பாடம் 2 பொதிகைப் பேரங்காடி

## வாசித்து அறிக.

பொதிகைப் பேரங்காடியில் ஒவ்வொரு நாளும் வாடிக்கையாளர்கள் வாங்கும் பொருள்கள் பின்வருமாறு.




## நடவடிக்கை 1

**குறிவரைவிலுள்ள தகவல்களை விளக்கிக் கூறுக.**

2.8.6 குறிவரைவிலுள்ள தகவல்களைச் சேகரிப்பர்.

## நடவடிக்கை 2

**வினாக்களுக்கு விடைகளைக் கூறுக.**

1. பொதிகைப் பேரங்காடியில் விற்கப்படும் பொருள்கள் யாவை?
2. வாடிக்கையாளர்கள் மிக அதிகம் வாங்கும் பொருள் யாது?
3. மிகக் குறைவாக விற்கப்படும் பொருள் யாது?
4. பெண்கள் அதிகமாக விரும்பி வாங்கும் பொருள் என்னவாக இருக்கும்?
5. சிறுவர்களும் விளையாட்டுகளில் ஆர்வம் உள்ளவர்களும் விரும்பி வாங்கும் பொருள்கள் யாவை?
6. பொதிகைப் பேரங்காடியில் தினமும் விற்கப்படும் பொருள்களை மிகக் குறைந்த எண்ணிக்கையிலிருந்து மிக அதிகமான எண்ணிக்கை வரை வரிசையாக எழுதிக் கூறுக.
7. பொதிகைப் பேரங்காடியில் விற்பனையைப் பெருக்க என்னென்ன செய்யலாம்?
8. சிறந்த வியாபாரியிடம் இருக்க வேண்டிய குணங்கள் பற்றி வட்டக் கருத்து வரிப்படம் ஒன்றனை வரைந்து எழுதுக.
9. பள்ளி மாணவர்களுக்குப் பயனளிக்கும் வகையில் வேறு என்ன பொருள்கள் இப்பேரங்காடியில் விற்கலாம்?
10. பேரங்காடியின் உரிமையாளர் தமது வியாபாரத்தைப் பெருக்க மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை எழுதுக.

## நடவடிக்கை 3

**கொடுக்கப்பட்ட தகவல்களைப் பயன்படுத்திக் குறிவரைவு ஒன்றனை வரைந்து விளக்குக.**

ஒரு வகுப்பறையில் 40 மாணவர்கள் பயின்றனர். அவர்களில் 15 விழுக்காடு மாணவர்கள் மருத்துவராக வேண்டும் என ஆவல் கொண்டிருந்தனர்.
20 விழுக்காடு மாணவர்கள் சொந்த வியாபாரம் செய்ய ஆவல் கொண்டிருந்தனர். 25 விழுக்காடு மாணவர்கள் தொழில் நுட்ப ஆய்வாளர்களாக விரும்பினர்.
15 விழுக்காடு மாணவர்கள் வழக்கறிஞர்களாகப் பணியாற்ற விரும்பினர். மீதமுள்ள மாணவர்கள் தங்களின் எதிர்கால ஆசைகளை முடிவு செய்யாமல் இருந்தனர்.

**தகவல் உலகம்**

- பூமி உருண்டை என்பதைப் பார்க்க வேண்டும் என்றால் 36,000 கிலோ மீட்டர் உயரே சென்று பார்க்க வேண்டும்.
- நாம் சுவாசிக்கின்ற மூச்சுக் காற்றில் 25 விழுக்காடு நம் கண்களுக்குச் செல்கிறது. 75 விழுக்காடு மற்றப் பாகங்களுக்குச் செல்கிறது.




# பாடம் 3 சொல்வளம்

## வாசித்து எழுதுக.


அ.




ஆ.





சிந்தனை வரிப்படம்





3.3.29 தலைப்பிற்குத் தொடர்பான சொற்களை எழுதுவர்.

BT Year 6 4_Layout 1 10/2/2015 1:33 PM Page 125


இ.




ஈ.





உ.



BT Year 6 4_Layout 1 10/2/2015 1:33 PM Page 126

உள.

## சிற்றுண்டிச்சாலையின் பயன்கள்






### நடவடிக்கை 1

**பொருத்தமான சிந்தனை வரிப்படத்தைக் கொண்டு கொடுக்கப்பட்ட சொற்களை எழுதிக் காட்டுக.**

**புறப்பாட நடவடிக்கைகளினால் ஏற்படும் நன்மைகள்**

| | | | |
|---|---|---|---|
| நற்பண்புகள் | நேர நிருவகிப்பு | கட்டொழுங்கு | மொழி |
| உடல் நலம் | ஆற்றல் | விளையாட்டு | தன்னம்பிக்கை |
| பொறுப்புணர்வு | தன்னொழுக்கம் | | |



### நடவடிக்கை 2

**'நான் மேற்கொண்ட சுற்றுலா' எனும் தலைப்பில் இணைப்பு வரிப்படம் மூலம் முக்கியச் சொற்களை எழுதுக.**



BT Year 6 4_Layout 1 10/2/2015 1:33 PM Page 127



# பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

## மரபுத்தொடர்களின் பொருள் அறிக.

**கதை 1**



அரவிந்தன் மிகப் பெரிய செல்வந்தர். செல்வம் குவிந்து கிடந்தாலும் அரவிந்தன், சிவகாமி தம்பதிகளுக்குக் குழந்தைகள் இல்லை. தனிமையைப் போக்க உறவினர் ஒருவரின் குழந்தையை எடுத்து வளர்ந்து வந்தனர். அக்குழந்தையைச் சீராட்டிப் பாராட்டி வளர்த்தனர். தக்க வயது வந்ததும், அவனைப் பள்ளிக்கு அனுப்பினர். அச்சிறுவனும் நற்பண்புகள் அனைத்தும் உடையவனாகவே வளர்ந்தான். அரவிந்தன் தம்பதிகளுக்குப் பிள்ளை இல்லாத குறையைச் சிறுவன் **ஈடு கட்டினான்**. சிறுவனின் கல்வி முன்னேற்றத்திற்கு அரவிந்தன் தம்பதிகள் சிறப்பான ஏற்பாடுகளைச் செய்தனர்.

**கதை 2**



பள்ளி விடுமுறையில் சோமு தன் குடும்பத்தாருடன் மாமாவின் வீட்டிற்குச் சென்றான். மாமாவின் வீட்டில் உறவினர்கள் பலர் இருந்தனர். குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றாக உணவு உண்டு மகிழ்ந்தனர். இரவு நேரத்தில் உல்லாசமாகப் பேசிக் களித்தனர். விடுகதைகள், பொதுக் கேள்விகள், புதிர்க் கேள்விகள் கேட்டு உரையாடினர். சோமுவின் மாமன் மகள் நிர்மலா, சோமுவிடம் பல விடுகதைகளைக் கேட்டு **ஆழம் பார்க்க** நினைத்தாள். எல்லா விடுகதைகளுக்கும் சோமு சரியான விடையைக் கூறி அனைவரையும் வியக்க வைத்தான்.

**கதை 3**



காவேரியை அத்தோட்டத்தில் தெரியாதவர்கள் யாருமே இருக்க முடியாது. இளம் வயதிலேயே தன் பெற்றோரை இழந்தவள். தன் மூத்த அண்ணனின் பராமரிப்பில் வளர்ந்தாள். எல்லாரிடமும் கலகலவெனப் பேசுவாள். தன் வீட்டு வேலைகளை முடித்துவிட்டு, அண்டை அயலாருக்கு உதவி செய்வதுதான் காவேரியின் தினசரி

4.12.6 ஆறாம் ஆண்டுக்கான மரபுத்தொடர்களின் பொருளை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

வேலை. காவேரியின் வெகுளித்தனமான போக்கு, பலருக்கும் சாதகமாகவே இருந்தது. காவேரி அவர்களுக்கு **எடுப்பார் கைப்பிள்ளையாகவே** இருந்தாள்.

கதை 4



முரளியும் மூர்த்தியும் ஒரே பணிமனையில் வேலை செய்தனர். முரளியின் கட்டொழுங்கு, பணியில் நேர்மை போன்ற குணங்கள் அந்நிறுவனத்தின் உரிமையாளரைப் பெரிதும் கவர்ந்தன. முரளிக்குப் பதவி உயர்வு கொடுக்க எண்ணம் கொண்டார். முரளியின் முன்னேற்றம் மூர்த்திக்குப் பிடிக்கவில்லை. பொறாமை கொண்டான். முரளியிடம் பேசுவதைக் குறைத்துக் கொண்டான். இதை உணர்ந்த முரளி வேதனைப்பட்டான். மூர்த்தியின் மாற்றம் அவனை வெகுவாகப் பாதித்தது. தான் வகிக்கும் உயர் பொறுப்பைக் **கை கழுவ** நினைத்தான். ஆனால், அந்நிறுவன உரிமையாளர் மூர்த்திக்கும் உயர்ந்த பதவியைக் கொடுத்தார். முரளி தன் முடிவை மாற்றிக் கொண்டான். மூர்த்தியும் தன் தவறான எண்ணத்தை நினைத்து வருந்தினான்.

## மரபுத்தொடர்களும் பொருளும்

| | | |
|---|---|---|
| **ஈடு கட்டுதல்** | : | ஒன்றின் குறையை இல்லாமையை மற்றொன்றின் மூலம் நிறைவு செய்தல். |
| **ஆழம் பார்த்தல்** | : | ஒருவருடைய அறிவு, திறமை ஆகியவற்றை ஆராய்தல். |
| **எடுப்பார் கைப்பிள்ளை** | : | சுயமாகச் சிந்திக்காமல் பிறர் சொல்கிறபடியெல்லாம் நடப்பவர் எளிதாகப் பிறர் வசப்படக்கூடியவர். |
| **கை கழுவுதல்** | : | உதவி செய்வதிலிருந்து அல்லது பொறுப்பிலிருந்து விலகிக் கொள்ளுதல். |



### நடவடிக்கை 1

**சரியான மரபுத்தொடரை எழுதுக.**

1. முகிலன் தன் பணிமனையில் வேலை செய்யும் அனைவரின் சொற்படி கேட்டு எல்லா வேலைகளையும் செய்து கொடுப்பான்.
2. பணி ஓய்வு பெற்றதும் அப்பெரியவர் பல பொறுப்புகளிலிருந்து விலகிக் கொண்டார்.
3. குழந்தை இல்லாத ஏக்கம் சகோதரனின் பிள்ளைகள் மூலம் நீங்கின.

# பாடம் 5 இலக்கணம்

## விகாரப் புணர்ச்சியில் கெடுதல் அறிக.




➤ நிலைமொழியில் உள்ள 'மை' ஈறும் வருமொழியில் உள்ள முதலும் புணரும்போது 'மை' ஈறு மறைந்து (**கெட்டு**) வருமொழி **இனவெழுத்தாகத் திரிந்தும் தோன்றியும்** வரும்.

எடுத்துக்காட்டு ➤

| | | | | |
|---|---|---|---|---|
| செம்<u>மை</u> | + | கோல் | = | செங்கோல் |
| தண்<u>மை</u> | + | நீர் | = | தண்ணீர் |
| சிறு<u>மை</u> | + | ஊர் | = | சிற்றூர் |

5.7.4 விகாரப் புணர்ச்சியில் கெடுதல் பற்றி அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

## நடவடிக்கை 1

**சேர்த்து எழுதுக.**

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | சிறுமை | + | எறும்பு | = |
| 2. | இனிமை | + | சொல் | = |
| 3. | சிறுமை | + | ஒலி | = |
| 4. | பெருமை | + | ஒலி | = |
| 5. | பசுமை | + | கூழ் | = |
| 6. | கருமை | + | குதிரை | = |
| 7. | செம்மை | + | சொல் | = |
| 8. | செம்மை | + | நிறம் | = |
| 9. | வெண்மை | + | நிறம் | = |
| 10. | வெம்மை | + | நீர் | = |
| 11. | சிறுமை | + | அரசு | = |
| 12. | பெருமை | + | ஆண்மை | = |
| 13. | தீமை | + | ஒழுக்கம் | = |
| 14. | நன்மை | + | ஒழுக்கம் | = |
| 15. | வெண்மை | + | நீர் | = |
| 16. | பழைமை | + | மொழி | = |
| 17. | பசுமை | + | இலை | = |
| 18. | பெருமை | + | அரசு | = |
| 19. | வெறுமை | + | இலை | = |
| 20. | செம்மை | + | அடி | = |

## நடவடிக்கை 2

**கோடிட்ட சொற்களைப் பிரித்தெழுதுக.**

அ. பள்ளி விடுமுறையில் நாங்கள் பாட்டியின் இல்லத்திற்குச் சென்றோம். பாட்டியும் தாத்தாவும் சிற்றூர் ஒன்றில் வசித்தனர். மிகவும் அழகான ஊர். இயற்கை அழகைப் பார்த்து இரசித்துக் கொண்டே சென்றோம். வழியில் பைங்கிளி ஒன்று மரக்கிளையில் அமர்ந்திருந்ததைக் கண்டோம்.

ஆ. பாரியின் செங்கோல் ஆட்சியை அவ்வூர் மக்கள் போற்றிப் புகழ்ந்தனர்.

இ. பாட்டி வெற்றிலையைப் பறித்துக் கட்டுக் கட்டாகக் கட்டி இரவுச் சந்தையில் விற்றார்.

ஈ. ஆசிரியர் கொடுத்த பழமொழிகள் அனைத்திற்கும் மாணவர்கள் பொருள் கண்டறிந்தனர்.

உ. நன்மொழி பேசிப் பணிவுடன் நடப்பதே சிறந்ததென ஆசிரியர் வலியுறுத்தினார்.

ஊ. பிள்ளைகளின் வெற்றியைக் கண்டு பெற்றோர் பேரானந்தம் அடைந்தனர்.




BT Year 6 4_Layout 1 10/2/2015 1:33 PM Page 131



# தொகுதி 13 கதைகளும் அனுபவங்களும்

## பாடம் 1 முடிவைக் கூறுங்கள்

### கதையின் முடிவைக் கூறுக.



ஒரு குளத்தில் மூன்று மீன்கள் - வருமுன் காக்கும், வந்தால் காக்கும், வந்தபின் காக்கும் - பல நண்பர்களோடு வாழ்ந்தன.


மீனவர்கள் மீன்களைப் பிடிக்க எண்ணம் கொண்டு பேசிக் கொள்கின்றனர்.





நாம் இப்போதே வேறு இடத்திற்குப் போய்விடுவது நல்லது என்றது வருமுன் காக்கும் மீன்.

“வேண்டாம் - வேண்டாம் என்ன அவசரம்? வரும்போது பார்த்துக் கொள்ளலாம்” என்றது வந்தால் காக்கும் மீன்.





வருமுன் காக்கும் மீன் வேறு இடத்திற்குச் சென்றுவிட்டது. மறுநாள் மீனவர்கள் அக்குளத்திற்கு வந்தனர்......

1.11.6 முற்றுப்பெறாத கதையின் முடிவைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்புடன் கூறுவர்.

## நடவடிக்கை 1

**ஆசிரியர் இரண்டாவதாகக் கேட்ட கதைக்குப் பரிசளித்த காரணத்தை விளக்குக.**



தமிழ்மொழி ஆசிரியர் வகுப்பு மாணவர்களிடம் மனிதாபிமானத்தை அறியும் பொருட்டு ஒரு நடவடிக்கை நடத்தினார்.

“நீங்கள் காட்டு வழியாகச் செல்கிறீர்கள்..” என்று தொடங்கினார். முதல் மாணவன் கதையைக் கூறி முடிக்க ஆவல் கொண்டு தொடங்கினான்.

“நான் காட்டு வழியாகச் சென்றபோது ஒரு விறகுவெட்டி கால் வழுக்கி ஆற்றில் விழுந்து தத்தளித்துக் கொண்டிருந்தார். கடின முயற்சியால் அந்த விறகுவெட்டியைக் காப்பாற்றினேன்” என்று கதையை முடித்தான்.

இரண்டாவதாக எழுந்த மாணவன் கதையைக் கூற ஆரம்பித்தான். “நான் காட்டு வழியாகச் சென்று கொண்டிருந்தேன். ஏதோ ஒரு மிருகம் வலியால் முனகிக் கொண்டிருந்தது. அங்கே மான் குட்டி ஒன்றின் கால் மரக்கட்டையில் சிக்கிக் கொண்டதைக் கண்டேன். மான் குட்டியின் வேதனையைக் கண்டு இரக்கம் கொண்டேன். கனமான அம்மரக்கட்டையை நகர்த்தி மான் குட்டியைக் காப்பாற்றினேன்,” என்றான்.

மூன்றாவதாக எழுந்த மாணவன் “நான் காட்டு வழியாகச் சென்றபோது அங்கே ஒரு முதியவர் எதையோ தேடிக் கொண்டிருந்தார். அருகில் சென்று விசாரித்தபோது தமது தங்க மோதிரம் எங்கோ விழுந்துவிட்டது என்றார். நானும் அவரின் மோதிரத்தைத் தேடினேன். என் கண்ணில் அம்மோதிரம் பட்டது. நானே எடுத்துக் கொள்ள ஆசைப்பட்டேன். ஆனால், முதியவரின் நிலையைக் கண்டு மனம் இரங்கினேன். மோதிரத்தை அவரிடமே திருப்பிக் கொடுத்தேன்,” என்று முடித்தான்.

மாணவர்கள் மூவரும் கூறிய கதையின் முடிவைக் கேட்ட ஆசிரியர், இரண்டாவதாகக் கூறிய மாணவனின் கதையைப் பாராட்டிப் பரிசளித்தார்.

## நடவடிக்கை 2

**இக்கதையின் முடிவை நீ கூற விரும்பினால் எவ்வாறு முடித்திருப்பாய்?**



இளைஞன் ஒருவன் குரங்கு ஒன்றைச் செல்லப் பிராணியாக வளர்த்தான். குரங்கு எப்பொழுதும் அவ்விளைஞன் உடனேயே இருக்கும். ஒரு நாள் உறங்குவதற்காக அறைக்குள் அவன் சென்றான். தனக்குக் காவலாக இருக்கும்படி குரங்கிடம் கூறினான். மிகவும் எச்சரிக்கையாகக் காவலிருந்த குரங்கின் கண்களில் அங்குமிங்கும் பறந்த ஒரு பூச்சி தட்டுப்பட்டது. பூச்சியை விரட்டுவதற்குக் குரங்கு பலமுறை முயற்சி செய்தது. இறுதியில் பூச்சி இளைஞனின் மூக்கின் மேல் அமர்ந்தது. குரங்கும் பொறுமை இழந்தது. அருகிலிருந்த மேசை மீது ஒரு கத்தி இருக்கக் கண்டது! ........................................

BT Year 6 4_Layout 1 10/2/2015 1:34 PM Page 133



பாடம் 2

# சுகாதாரக் கருத்தரங்கு

## வாசித்து அறிக.

மாணவர் : வணக்கம் ஐயா. டிங்கிக் காய்ச்சல் அண்மையில் நம் நாட்டில் பரவிய கடுமையான நோய்களில் ஒன்றாகிவிட்டது. இந்த நோயைப் பற்றிய விவரங்களை அறியவே உங்களைக் காண வந்தேன் ஐயா.

அதிகாரி : வணக்கம். மிக்க மகிழ்ச்சி. டிங்கிக் காய்ச்சல் பற்றிய விவரங்களை பொது மக்கள் தெரிந்து வைத்திருக்க வேண்டியது அவசியம்.

மாணவர் : இந்நோய் பற்றிய விவரங்களைச் சற்றுக் கூறுங்களேன்.

அதிகாரி : டிங்கிக் காய்ச்சல் ‘ஏடிஸ்’ எனும் ஒரு வகை கொசுவினால் பரவுகிறது. நான்கு வகையான டிங்கிக் கிருமிகள் அறியப்பட்டுள்ளன. டிங்கிக் காய்ச்சலானது சாதாரணக் காய்ச்சல் என்றும், மூன்று அல்லது ஐந்து நாள்களில் சரியாகிவிடும் தன்மையுடைய காய்ச்சல் என்றும் 1950ஆம் ஆண்டுகளில் உணரப்பட்டது. ஆனால், இன்றைய நாளில் இக்காய்ச்சலினால் இரத்தக்கசிவு, நாடித்துடிப்புக் குறைதல், உயிரிழப்புப் போன்ற கொடிய விளைவுகள் ஏற்படுகின்றன.

மாணவர் : தற்பொழுது டிங்கிக் காய்ச்சல் கண்டவரின் எண்ணிக்கை ஏன் ஏற்றம் கண்டுள்ளது ஐயா?

அதிகாரி : டிங்கிக் காய்ச்சலுக்கான கிருமிகளைக் கொண்டு வரும் கொசுக்களின் இனப் பெருக்கமே இம்மாற்றத்திற்கும் ஏற்றத்திற்கும் காரணம் எனலாம். திட்டமிடாத குடியிருப்புப் பகுதிகள், மக்களின் அலட்சியப் போக்கு, சுகாதாரமற்ற நீர்த் தேக்கங்கள், தேங்கி நிற்கும் சாக்கடை போன்றவை இக்கொடிய கொசுக்களின் உற்பத்திக்குக் காரணமாக அமைகின்றன.



மாணவர் : இந்நோயைக் கொண்டுவரும் கொசு பெரும்பாலும் பெண் கொசுவே என்றும் இக்காய்ச்சல் கண்டவருக்குப் பலவித அறிகுறிகளும் ஏற்படும் என்றும்

2.8.7 நேர்காணலில் உள்ள தகவல்களைச் சேகரிப்பர்.

கேள்விப்பட்டுள்ளேன். அதைப் பற்றி விளக்கம் தர இயலுமா ஐயா?

அதிகாரி : டிங்கிக் காய்ச்சலைப் பரப்பும் ஏடிஸ் கொசுக்கள் இருட்டான இடங்களில் வாழ்கின்றன. பெண் கொசுவே இந்நோயைப் பரப்பும் கொசுவாகும். தேங்கிக் கிடக்கும் நீரின் மேற்பரப்பில் இடும் முட்டையில் இனப்பெருக்கம் கொள்கின்றன. பொதுவாகப் பகல் வேளைகளில் இந்தக் கொசு கடிக்கும். இந்நோய் தாக்கிப் பத்துப் பன்னிரண்டு நாள்களுக்குப் பிறகே இந்தக் கிருமி உடலைத் தாக்கியிருப்பதைக் கண்டறிய முடியும். டிங்கிக் கிருமிகளால் பாதிக்கப்பட்ட ஒருவரின் இரத்தத்தில் சாதாரணமாகக் காணப்படும் வெள்ளை அணுக்களும் இரத்த வடுக்களும் அளவில் குறைந்து காணப்படும்.

மாணவர் : காய்ச்சலைத் தவிர வேறு ஏதேனும் அறிகுறி இருக்குமா ஐயா?

அதிகாரி : இந்நோயின் அறிகுறிகள் தொடர்ச்சியான காய்ச்சல், கடுமையான தலைவலி, கண் கூசுதல், தசை வலி, முதுகுவலி, உடல்வலி, கைகால் வலி, மூட்டு வலி போன்றவை ஆகும். அவ்வப்போது வயிற்றுவலி, மார்பு, முதுகுப் பகுதிகளில் சிவந்த திட்டுத் திட்டான மாற்றங்களும் தோலில் காணப்படும். இந்நோய் முற்றிய நிலையில் இரத்தக்கசிவு ஏற்படும். மூக்கு, பற்களின் ஈறுகள், குடல், இரைப்பை ஆகிய பகுதிகளில் இந்நிலை ஏற்படலாம்.

மாணவர் : இந்நோய்க்கு நாட்டு வைத்திய முறையைக் கையாள முடியுமா ஐயா?

அதிகாரி : பப்பாளி இலையின் சாற்றைப் பிழிந்து இந்நோய் கண்டவருக்குக் கொடுக்கலாம். எனினும் முதன்மையாக மருத்துவரின் ஆலோசனை பெறுவதே நலம்.

மாணவர் : உங்கள் விளக்கத்திற்கு நன்றி ஐயா.

அதிகாரி : மிகவும் சிறப்பான கேள்விகளைக் கேட்டு நிறைய விவரங்களைப் பகிர்ந்து கொள்ள எனக்கு வாய்ப்பு அளித்தமைக்கு மிக்க நன்றி. வணக்கம்.


**அருஞ்சொற்கள்**

- அண்மையில்
- இருப்பிடம்
- சாக்கடை
- சாதகமாக
- அறிகுறிகள்
- மேற்பரப்பில்
- அணுக்கள்
- அசைவுகள்
- இரத்தக் கசிவு

**தகவல் உலகம்**

**ஏடிஸ் கொசுவின் சுழற்சி**

ஏடிஸ் கொசு முழு வளர்ச்சியை அடைய 7 நாள்கள் மட்டுமே




ஏடிஸ் கொசுவை ஒழிப்போம்
கொசுவின் உற்பத்தி இடங்களை அழிப்போம்



நடவடிக்கை 1

**நேர்காணலில் கூறப்பட்ட தகவல்களைச் சேகரித்து வகுப்பில் கலந்துரையாடுக.**



# பாடம் 3 அன்புப் பரிசு

## வாசித்து எழுதுக.

என் மேனியின் பளபளப்பைப் பார்த்தீர்களா! எவ்வளவு அழகு! பார்ப்போரின் கண்களுக்கு நிச்சயம் நான் ஒரு கவர்ச்சிப் பொருளாகவே தெரிவேன். என்னை விரும்புபவர்களின் வரிசையில் முதலிடம் பிடித்தவர்கள் பெண்களாகத்தான் இருப்பர்.

ஆமாம்! நான் ஒரு தங்க வளையல். என்னை இயற்கையாக பெண்கள் கையில் அணிந்து வெளியில் செல்ல எவ்வளவு பிரியப்படுவார்கள் தெரியுமா? மாணவர்களே! என்னை உருவாக்கிய விதத்தை உங்களிடம் பகிர்ந்துகொள்ள ஆசைப்படுகின்றேன். நீங்களும் தெரிந்துகொள்ளுங்கள்.

முதலில் தங்கக் கட்டிகளை உருக்கித் திரவமாக்கினர். திரவமாக்கிய தங்கத்துடன் மற்றோர் உலோகமான செம்பைக் கலந்தனர். சிறப்பாக வடிவமைக்கப்பட்ட அச்சுகளில் என்னை உருக்கி ஊற்றினர். கவரும் வகையில் பல பூக்களையும், கோலங்களையும் மேற்பரப்பில் வரைந்து அழகுபடுத்தினர். இவ்வளவு நுணுக்கமான வேலைகளையும் பொற்கொல்லர்கள் செய்து முடித்தவுடன் என்னைப் பளபளப்பாக்கத் தேய்த்துக் கழுவினர். கழுவித் துடைத்தபின் விற்பனைக்கு அனுப்பினர்.

மற்றவர்களைப் போலவே உருவாக்கப்பட்ட நான், உடல் எடைக்கு ஏற்ப விலையிடப்பட்டுக் கண்ணாடிப் பேழையில் வைக்கப்பட்டேன். சுற்றும் முற்றும் என்னைப் போன்ற நண்பர்கள் பலர் இருந்தனர். ஒவ்வொரு நாளும் பலர் நகைக் கடைக்கு வந்து எங்களைப் பார்த்து மகிழ்வது வழக்கமாகிப் போனது. ஒரு சிலர் விலையைக் கேட்டு ஏமாற்றத்துடன் செல்வதைக் கண்டு பல நாள்கள் நானும் ஏக்கப் பெருமூச்சு விட்டிருக்கிறேன்.



அன்னையர் தினத்திற்கு முதல்நாள் ஓர் இளம் தம்பதியர் நான் இருக்கும் நகைக் கடைக்கு வந்தனர். என்னையும் என் நண்பர்கள் பலரையும் பார்த்து யாரைத் தேர்ந்தெடுப்பது என்று தெரியாமல் திக்குமுக்காடினர்.

3.10.20 — 120 சொற்களில் தன்கதை எழுதுவர்.

BT Year 6 4_Layout 1 10/2/2015 1:34 PM Page 136

சிறிது நேரத்திற்குப் பிறகு நான் அவர்கள் கண்களில் பட்டுவிட்டேன். என்னைப் பக்குவமாக எடுத்து தனது மென்மையான கையில் அணிந்து பார்த்தாள் அந்த இளம் பெண். அவளின் கணவன் என்னை அணிந்த அவளது கையின் அழகை வர்ணித்த வார்த்தைகளைக் கேட்டு ஒரு கணம் நானும் வெட்கப்பட்டேன். எல்லையில்லா ஆனந்தம் அவர்கள் இருவரின் முகங்களை அலங்கரித்தது.

அடுத்த ஓரிரு நிமிடங்களில் சிறிய பெட்டிக்குள் வைக்கப்பட்டு அப்பெண்ணின் கைப்பையில் நான் பத்திரப்படுத்தப்பட்டேன். ஆம், என்னை விலை கொடுத்து வாங்கிக் கொண்டு வீடு நோக்கிச் சென்றனர். அன்னையர் தினத்தை முன்னிட்டு, அவ்விளைஞனின் அன்னைக்குப் பரிசுப் பொருளாகப் போகிறேன் என்று உள்ளப் பூரிப்பில் பயணம் செய்தேன்.

வீட்டை அடைந்ததும் வாசலை நோக்கி ஓடி வந்தார் வயது முதிர்ந்த பெண்மணி ஒருத்தி. அவர்தான் அந்த இளைஞரின் தாயார் என நான் ஊகித்துக் கொண்டேன். கலகலப்பான பேச்சினால் மகனையும் மருமகளையும் இன்முகத்துடன் வரவேற்றார் அந்த அன்னை. பத்திரமாக வைத்திருந்த என்னை எடுத்துத் தன் மாமியார் கரத்தில் அணிவித்தார் அந்த இளம் பெண்.

“இஃது எங்கள் அன்னையர் தினப் பரிசு” என்று கூறியதைக் கேட்டு அந்தத் தாய் ஆனந்தக் கண்ணீர் வடித்தார். என்னையே உற்றுப் பார்த்த அந்த அன்னையையும் இளம் தம்பதியினரின் அன்பையும் நினைத்துப் பெருமூச்சு விட்டேன். இஃது ஆனந்தப் பெருமூச்சு. இப்போது பெருமையோடு அந்த அன்னையின் கரங்களை நான் அலங்கரித்துக் கொண்டிருக்கிறேன். அவரின் கைகளைப் பளபளக்கச் செய்த என்னை இங்கும் அங்கும் அசைத்து, சிறுபிள்ளைபோல் சிரித்த அந்த அன்னையை நினைத்து எனக்குள் பெருமை கொண்டேன்.

## நடவடிக்கை 1

**தன் கதையை வாசித்து மனனம் செய்து எழுதுக.**

## நடவடிக்கை 2

**தலைப்புகளைத் தெரிவு செய்து தன் கதை ஒன்றனை எழுதுக.**

1. நான் ஒரு மிதிவண்டி
2. நான் ஒரு கவிதை நூல்
3. நான் ஒரு நீர்ப்புட்டி
4. நான் ஒரு நாளிதழ்
5. நான் ஒரு நூலகம்

### தகவல் உலகம்

| வடசொல் | தமிழ்ச்சொல் |
|---|---|
| அற்புதம் | அழகு |
| அசல் | முதல் |
| அவதாரம் | பிறப்பு |
| ஆத்மா | மனம் |
| இனாம் | கொடை |
| இம்சை | கொடுமை |
| உதயம் | தோற்றம் |
| கடிதம் | மடல் |
| காருண்யம் | கனிவு |
| கிராமம் | சிற்றூர் |

BT Year 6 4_Layout 1 10/2/2015 1:34 PM Page 137



# பாடம் 4 செய்யுளும் மொழியணியும்



## இணைமொழிகளை அறிக.

14 பிப்ரவரி 2015
என் நண்பனின் அண்ணன் திருமணத்திற்குச் சென்றோம். நல்ல வரவேற்பைப் பெற்ற நானும் என் குடும்பத்தினரும் அகம் மகிழ்ந்தோம். வீட்டில் இனிப்புப் பலகாரங்களும் பல வகையான உணவுப் பதார்த்தங்களும் செய்வதில் அனைவரும் மும்முரமாக ஈடுபட்டிருந்தனர். இன்று மாலைதான் முகூர்த்தக் கால் ஊன்றுவார்கள் என்று அம்மா கூறினார். அது தமிழர் திருமணத்திற்கு முன் கடைப்பிடிக்கப்படும் **பழக்க வழக்கங்களில்** ஒன்று என அப்பா விளக்கினார்.

15 பிப்ரவரி 2015
நேற்று நடந்த முகூர்த்தக் கால் ஊன்றும் நிகழ்வைப் பற்றி அனைவரும் உரையாடி மகிழ்ந்தனர். மாலையில், நண்பனின் அண்ணனுக்கு இரண்டாவது நாளாக நலுங்கு வைத்தார்கள். தரையில் அமரச் செய்து சந்தனம் பூசிச் சில சடங்குகளைச் செய்தனர். கிண்டலும் கேலியும் செய்து மணமகனை மகிழ்ச்சிப்படுத்தினர். நலுங்கு முடிந்தவுடன் அனைவருக்கும் சிற்றுண்டி வழங்கப்பட்டது.

16 பிப்ரவரி 2015
நாளை திருமணம். நண்பனின் வீட்டிற்கு உறவினர்கள் வந்த வண்ணமே இருந்தனர். வீடு முழுதும் ஒரே கலகலப்பான பேச்சுக் குரலாக இருந்தது. பதற்றத்துடன் அம்மா ஓடிவந்து அப்பாவின் காதில் எதையோ கூறினார். அப்பா அதிர்ச்சியுடன் பார்த்தார். எனக்குக் குழப்பமாக இருந்தது.

4.9.6 ஆறாம் ஆண்டுக்கான இணைமொழிகளின் பொருளை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

இருவரும் சேர்ந்து **மூலை முடுக்குகளில்** எதையோ தேடினர். ஓர் ஓரத்திலிருந்து ஒரு சிறிய பொருளை எடுத்து அப்பா அம்மாவிடம் நீட்டினார். அம்மா அதை முகம் மலர்ந்து பெற்றுக் கொண்டார். அம்மாவின் காதணிகளில் ஒன்று அஃது என்று அப்போதுதான் அறிந்தேன்.

17 பிப்ரவரி 2015
இன்றிரவு திருமணம் நடைபெறும். காலையில் அவர்கள் தங்களின் பிறந்த ஊருக்குச் சென்று குலதெய்வ வழிபாட்டை மேற்கொண்டு அங்குள்ள ஏழை எளியோருக்குப் புத்தாடைகளைத் **தான தர்மமாக** வழங்கி மன மகிழ்வோடு இல்லம் திரும்பினர். இரவில் திருமணம் வெகு விமரிசையாக நடந்தேறியது. மூத்த மகனின் திருமணம் என்றாலும் அனைத்தும் **வரவு செலவு** பார்த்தே நடைபெற்றன. மணமக்களை வாழ்த்திப் பரிசளித்தனர் அம்மாவும் அப்பாவும்.

**இணைமொழிகளும் பொருளும்**

| | |
|---|---|
| பழக்க வழக்கம் | - தொடர்ந்து பின்பற்றப்பட்டு வரும் நடைமுறை |
| தான தர்மம் | - கொடை தருதல் |
| மூலை முடுக்கு | - எவ்விடத்தும் |
| வரவு செலவு | - வருமானமும் செலவினமும் |

**அருஞ்சொற்கள்**

- பதார்த்தம்
- மும்முரமாக
- நலுங்கு
- காதணி
- கலகலப்பு
- விமரிசையாக
- சடங்கு
- முகூர்த்தம்
- முகமலர்ந்து



## நடவடிக்கை 1

**சூழலுக்கு ஏற்ற இணைமொழியை எழுதுக.**

1. மணப்பெண்ணின் கை விரல்களுக்கு மருதாணி இடுதல்.
2. காணாமல் போன தங்க மோதிரத்தை வீடு முழுவதும் தேடினர்.
3. திட்டமிட்டுச் சிக்கனமான முறையில் பெருநாள்களைக் கொண்டாடுவதுதான் சிறப்பு.
4. ஏழை எளியோருக்குக் கொடையளிப்பது சிறந்த செயலாகும்.





# பாடம் 5 இலக்கணம்

## வலிமிகா இடங்களை அறிக.

➤ **வலிமிகா இடங்கள்**

சொற்றொடர்களில் வருமொழி, க், ச், த், ப் ஆகிய வல்லெழுத்துகளில் தொடங்கினாலும் நிலைமொழி ஈற்றில் சில இடங்களில் வலிமிகாது.

ன்று, ந்து, என்று முடியும் வினையெச்சங்களின் பின் வலிமிகாது.

எடுத்துக்காட்டு ➤

| | | | | |
|---|---|---|---|---|
| சென்று | + | பார்த்தாள் | = | சென்று பார்த்தாள் |
| அறிந்து | + | கொண்டார் | = | அறிந்து கொண்டார் |



திலகன் : கடந்த விடுமுறையில் லங்காவித் தீவிற்குச் சென்றாயா?

மாறன் : ஆமாம் திலகன். நாங்கள் அங்குள்ள புகழ்பெற்ற பல இடங்களையும் சென்று பார்த்தோம்.



ஆசிரியர் : மாணவர்களே, நேற்று நாம் கற்ற இலக்கணத் தகவல்களைப் பற்றி அறிந்து கொண்டீர்களா?

மாணவர்கள் : ஆமாம், ஐயை! அத்தலைப்பையொட்டி நீங்கள் தந்த அனைத்து விவரங்களையும் அறிந்து கொண்டோம்.




ஆசிரியர் : உங்கள் பிள்ளைகள் இருவரும் நம் பள்ளியைப் பிரதிநிதித்து அறிவியல் போட்டியில் கலந்து வென்று சாதனை படைத்துள்ளனர்.

பெற்றோர் : ஆசிரியர்களின் வழிகாட்டுதலினால் அவர்கள் நிச்சயம் வாகை சூடுவர் என்று நாங்கள் உறுதியாக நம்பினோம்.

5.௭.8 ன்று, ந்து என முடியும் வினையெச்சத்தின் பின் வலிமிகா என்பதை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

## நடவடிக்கை 1

**வாக்கியங்களில் 'ன்று, ந்து' என்று முடியும் வினையெச்சங்களைக் கொண்டு நிறைவு செய்க.**

1. கபிலன் அரங்கத்தில் நடைபெற்ற இலக்கிய நாடகங்களை ________ .
2. அம்மா செய்த பலகாரங்கள் அனைத்தையும் தம்பி ________ .
3. ஆடு மாடுகள் புல்லை ________ .
4. ஆசிரியர் போதித்த பாடங்களை மாணவர்கள் நன்கு ________.
5. ஆசிரியர் வகுப்பறையில் நுழைந்ததும் மாணவர்கள் அனைவரும் ________ .
6. புதிதாக வாங்கிய புத்தாடைகளை மாலதி ________ .

## நடவடிக்கை 2

**கொடுக்கப்பட்ட பகுதியை வாசித்து 'ன்று, ந்து' என்று முடியும் வினையெச்சங்களைப் பட்டியலிடுக.**

அ. சிறுவன் ஒருவன் அப்பாவிடம் மிதிவண்டி ஒன்றை வாங்கித் தரச் சொன்னான். அதற்கு அப்பா, "நீ இன்னும் மிதிவண்டி உயரம்கூட வளரவில்லை. அதற்குள் எதற்கு மிதிவண்டி?" என்று கேட்டார்.


சிறுவனோ விடுவதாக இல்லை. "அப்பா, கப்பலைச் செலுத்துகின்ற மாலுமி கப்பல் அளவிற்குப் பெரியதாக இல்லையே! இரயில் ஓட்டுநரும் அதைப்போன்று நீளமான உடல் அமைப்பைக் கொண்டிருக்கவில்லையே!" என்றான். அப்பா மறுநாளே மிதிவண்டியை மனமுவந்து பரிசாகக் கொடுத்தார்.

சிறுவன் மிதிவண்டியை மனமகிழ்ச்சியுடன் மிதித்துச் சென்றான். அவ்வூரையே வலம் வர நினைத்தான். ஆனால், கால் வலிக்க ஆரம்பித்தது. வழியிலிருந்த ஒரு கடையில் தனது புதிய மிதிவண்டியை நிறுத்தி வைக்க நினைத்தான். ஆனால், 'இங்கு மிதிவண்டியை நிறுத்தக்கூடாது' என்ற வாசகம் எழுதப்பட்டிருந்தது. சிறிது யோசித்த சிறுவன், ஒரு முடிவுக்கு வந்தவனாக, மிதிவண்டியைப் படுக்க வைத்துச் சென்றான்.

வானத்தை அண்ணாந்து பார்த்துத் தன் அப்பாவிடம், "அப்பா! வானத்தில் ஏன் இவ்வளவு நட்சத்திரங்கள் உள்ளன?" என்று கேட்டான். "தெரியவில்லையே," என்றார் அப்பா. பையன் சட்டென, "இரவு நேரத்தில் மனிதர்கள் யாரேனும் தவறு செய்கிறார்களா என்று இறைவன் பல கோடிக் கண்களால் கண்காணித்துக் கொண்டிருக்கிறார் அப்பா,"என்றான். "நன்று கண்ணா," என்று புகழ்ந்தார் அப்பா.



ஆ. சிறு வயதிலேயே யாருடைய உதவியும் இன்றி வியப்பூட்டும் விதத்தில் கணிதத்தின் மிக அடிப்படையான ஆழமான உண்மைகளைக் கண்டு அறிந்தவர் இராமானுஜம்.




எண்களின் பண்புகள் என்று கூறப்படும் கோட்பாடுகளிலும் செறிவெண் கோட்பாடுகளிலும் இவர் கண்டுபிடித்துக் கூறிய உண்மைகள் இன்று பயன்படுத்தப்படுகின்றன. லோனியின் முக்கோணவியலையும் கார் என்பவரின் தொகையையும் சிறு வயதிலேயே இராமானுஜம் தெரிந்து கொண்டிருந்தார். இப்புத்தகத்தைப் படித்ததன் மூலம் வரலாற்றில் அழியாப் புகழ் பெற்றார். அப்புத்தகத்தில் ஏறக்குறைய ஆறாயிரம் தேற்றங்கள் இருந்தன. அனைத்தையும் படித்து முடித்து புதிதாகக் கணிதத் தேற்றங்களை உருவாக்கினார். கணிதத்தில் அவர் செய்த பல ஆராய்ச்சிகளின் விளைவாக பூமத்திய ரேகையின் சுற்றளவு கண்டுபிடிக்கப்பட்டது.

பதினாறு வயதிற்குள் கணித இயலர் என்ற தகுதியை அடைந்துவிட்டார். ஆனால், உலகம் பத்து ஆண்டுகள் கழித்தே அவரைக் கணித இயலர் என்று கண்டறிந்து கொண்டது.

இராமானுஜம் மனத்திலும் கையிலும் இருந்ததெல்லாம் விந்தையான சதுரங்கள், தொடர்பின்னம், பகா எண்கள், கலப்பு எண்கள், எண் பிரிவினைகள், நீள் வட்டதொகையீடுகள், மிகைப் பெருக்கத் தொடர்கள் போன்றவைதான். இவற்றைப் பற்றி இராமானுஜம் மூன்று குறிப்பேடுகளில் எழுதி வைத்தார். அவை புத்தகங்களாக வெளி வந்து பலரும் கற்றுத் தெரிந்துகொண்டனர்.

கணித மேதை இராமானுஜத்திற்குக் கனவில்கூட எண்கள் தான் வருமாம். உடனே தமது நோட்டுப் புத்தகத்தை எடுத்து அக்கணிதத் தொடர்களை ஒன்று தவறாமல் குறிப்புகளாக எழுதி வருவார். இப்படியே ஏறத்தாழ நான்காயிரம் குறிப்புகள் வரை எழுதி வைத்துள்ளார். இராமானுஜம் அறிந்து எழுதி வைத்துள்ள தேற்றங்களுக்கு இன்று வரை விளக்கம் தேடிக் கொண்டிருக்கிறார்கள்.

**தகவல் உலகம்**

- 1917 ஆம் ஆண்டு இராமானுஜம் காச நோயால் பாதிக்கப்பட்டார்.
- 1920 ஆம் ஆண்டு தமது 33 ஆவது அகவையில் காலமானார்.
- தேற்றம் - நிரூபிக்கப்பட்ட கூற்று.

BT Year 6 4_Layout 1 10/2/2015 1:34 PM Page 142




# தொகுதி 14 கதம்ப மேடை

## பாடம் 1 தனித்திறமை வேண்டும்

பண்புடன் உரையாடுக.

மாணவர்கள் பள்ளிப் படிப்பைத் தவிர்த்து வேறு ஏதேனும் ஒரு கலையில் திறமை பெற்றிருப்பது அவசியம்.



| ஓட்டிப் பேசுதல் | வெட்டிப் பேசுதல் |
|---|---|
| • நேரத்தைப் பயனுள்ள வழிகளில் செலவிடலாம் | • நேரம் ஒதுக்கப்பட வேண்டும் |
| • நம்மிடமுள்ள தனித்திறமைகளை வெளிப்படுத்த இயலும் | • கல்வியில் பின்தங்க வாய்ப்புண்டு |
| • சுயகாலில் நிற்க வருமானம் பெறச் சிறந்த வழி | • செலவு அதிகமாகும் |
| • தன்னம்பிக்கை, தைரியம் போன்ற நற்பண்புகளை வளர்க்கும் | • வசதி குறைந்த மாணவர்களுக்கு ஏற்றதல்ல |

1.10.9 தலைப்பை ஒட்டியோ வெட்டியோ பண்புடன் வாதிடுவர்.

## நடவடிக்கை 1

**தலைப்பினை ஒட்டியோ வெட்டியோ பண்புடன் பேசுக.**

எடுத்துக்காட்டு..




## நடவடிக்கை 2

**வினாக்களுக்கு விடையளித்திடுக.**

1. தலைப்பிற்கேற்ப வகுப்பறையில் குழு முறையில் பண்புடன் வாதிடுக.



# பாடம் 2 இயற்கைச் சீற்றம்



## வாசித்து அறிக.

உலகம் சந்தித்துக் கொண்டிருக்கும் ஆபத்துகள் பட்டியலில் நிலநடுக்கம் என்ற பூகம்பமும் ஒன்று. நிலநடுக்கம் எப்போது வேண்டுமானாலும் ஏற்படும்.

பூமிக்கு அடியில் ஏற்படுகின்ற எல்லை மீறிய அழுத்தம் காரணமாக நிலப்பகுதியில் நடுக்கம் ஏற்படும். அதன் விளைவாகவே நிலப்பகுதியில் சிறிய அல்லது பெரிய பிளவுகள் ஏற்படும். இதைத்தான் நிலநடுக்கம் என்கிறோம்.

எல்லா நிலநடுக்கங்களும் ஆபத்தானவை என்று சொல்ல முடியாது. பல நிலநடுக்கங்கள் எவ்வித பெரிய ஆபத்தையும் ஏற்படுத்துவதில்லை. ஆனால் சில நில நடுக்கங்கள் பேரழிவை உண்டாக்கிவிடுகின்றன. நிலப்பகுதியில் பிளவுகள் ஏற்படும்போது அங்குள்ள மரம், செடி, கொடிகள் தொடங்கிக் கட்டடங்கள் வரை இயற்கை, செயற்கை அமைப்புகளும் பாதிப்புக்குட்படுகின்றன.

கட்டடங்கள் இடிபாடுகளுக்கு உள்ளாகும்போது உயிரிழப்புகளைத் தவிர்க்க முடியாமல் போகின்றது. உலகளாவிய கட்டடச் சேதங்களால் ஏற்பட்ட பொருளாதார இழப்புகள் அளவிட முடியாதவை. நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்டு மீண்டும் உயிர்பெறாமல் போன நிலப்பகுதிகள் வரலாற்றில் இன்னும் இருக்கின்றன.

சில சமயங்களில் எரிவாயு செல்லும் குழாய்கள், மின்சாரக் கம்பிகள் சேதமடைந்து அவற்றின் காரணமாக ஏற்படும் நாசங்கள் மிகப் பயங்கரமானவையே. 1906ஆம் ஆண்டு சான்பிரான்சிஸ்கோ எனும் இடத்தில் ஏற்பட்ட அதிகமான உயிரிழப்புக்குக் காரணமே தீ விபத்துதான். இத்தகைய நிலநடுக்கத்தை அளவிடுவதற்குக் கடந்த காலங்களில் வெவ்வேறு முறைகள் பின்பற்றப்பட்டாலும் இன்று நடைமுறையில் இருப்பது ரிக்டர் அளவீட்டு முறை என்பதாகும். இந்த முறையைக் கண்டுபிடித்தவர் அமெரிக்காவைச் சேர்ந்த நில அதிர்வியல் நிபுணர் சார்லஸ் ரிக்டர் என்பவர்.



இரண்டுக்கும் குறைவான ரிக்டர் அளவுகொண்ட நிலநடுக்கங்களைச் சாதாரண மனிதர்களால் உணர முடியாது. மாறாக ஆறுக்கும் மேலான ரிக்டர் அளவு கொண்ட நிலநடுக்கங்கள் மனிதர்களின் உயிருக்கும் கட்டடங்களுக்கும்

2.3.10 சுற்றுச்சூழல் தொடர்பான பனுவல்களைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசிப்பர்.

பெரும் ஆபத்தை உருவாக்கக்கூடியவை. இவற்றுக்கு மேக்ரோ நிலநடுக்கங்கள் என்று பெயர். 7.5 ரிக்டர் அளவுக்கு மேற்பட்ட நிலநடுக்கங்கள் ஆழிப்பேரலையை (சுனாமி) ஏற்படுத்தக்கூடியவையாகும்.

புயல், மழை வருவதை முன்கூட்டியே கணித்துவிடுவதற்கு இப்போது நவீன தொழில்நுட்ப வசதிகள் உள்ளன. ஆனால், குறிப்பிட்ட இடத்தில் நிலநடுக்கம் ஏற்படுவதை முன்கூட்டியே உணர்வது இன்றளவும் சாத்தியப்படவில்லை. ஆனாலும், நிலநடுக்கம் ஏற்படுவதை விலங்குகள் முன்கூட்டியே தங்கள் புலனறிவால் அறிந்துகொள்கின்றன. உண்பது, உலவுவது, உறங்குவது என்று பூமியோடு தொடர்பு வைத்துள்ளவை என்பதால் விலங்குகள் முன்கூட்டியே ஆபத்தை உணர்ந்துகொள்கின்றன என்பது ஜப்பானியர்களின் கண்டுபிடிப்பாகும்.



நிலநடுக்கம் ஏற்படுவதற்கு முன்பு நிலத்தின் மீது கந்தக வாடை வீசும்; அதனை உணர்ந்துகொண்டு விலங்குகளும் பறவைகளும் வேறு இடங்களுக்கு மாறிச் சென்றுவிடுகின்றன. ஆனால், இவற்றுக்கெல்லாம் உறுதியான அறிவியல் சான்றுகள் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. இன்றைய சூழலில் பரபரப்புக்கு மத்தியில் வாழ்க்கையை நடத்திவரும் மனிதர்களால் மெல்லிய அதிர்வுகளை உணர்வது சாத்தியமற்றதாகிவிட்டது.

## நடவடிக்கை 1

**வினாக்களுக்கு விடையளித்திடுக.**

1. நிலநடுக்கம் ஏற்படக் காரணம் யாது?
2. நிலநடுக்கத்தினால் ஏற்படும் பாதிப்புகளைக் கூறுக.
3. நிலநடுக்கத்தினால் தீ விபத்துகள் எங்கே ஏற்படும்?
4. நிலநடுக்கத்தை அளக்க உதவும் கருவி யாது?
5. மேக்ரோ நிலநடுக்கத்தைப் பற்றி விளக்கிக் கூறுக.
6. பறவைகளும் விலங்குகளும் எவ்வாறு நிலநடுக்கத்தை உணர்கின்றன?

**அருஞ்சொற்கள்**

- சந்தித்து
- எல்லை
- நிலநடுக்கம்
- உயிரிழப்பு
- எரிவாயு
- அதிர்வியல்
- கணித்தல்

## நடவடிக்கை 2

**இயற்கைப் பேரிடர்களைப் பட்டியலிட்டுச் சிறுசிறு குறிப்புகள் எழுதி வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசித்திடுக.**



# பாடம் 3 அலுவல் கடிதம்



## வாசித்து எழுதுக.

செயலாளர்,
பசுமைத் திட்டக் கழகம்,
கலைமகள் தமிழ்ப் பள்ளி,
32400 ஆயர் தாவார்,
பேராக்.

---

தலைவர்,
ஆயர் தாவார் நகராண்மைக் கழகம்,
32400 ஆயர் தாவார்,
பேராக்.

திகதி: 16 ஜூலை 2016

மதிப்பிற்குரிய ஐயா,

**பசுமைத் திட்டத்திற்கான தாவரங்கள் கோருதல்**

வணக்கம். எங்கள் பள்ளியின் பசுமைத் திட்டக் கழகத்தின் ஆண்டு நடவடிக்கைகளில் பள்ளிச் சுற்றுச் சூழலைப் பசுமையாக்குவது முதன்மைத் திட்டமாகும்.

2. எங்களின் திட்டத்தை நிறைவேற்றும் வகையில் தங்களிடமிருந்து நிறைவான ஆதரவை எதிர்பார்க்கின்றோம். எங்களுக்கு நூறு பூச்செடிகளும் நூறு மரக்கன்றுகளும் வழங்கி உதவும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

3. எங்கள் பள்ளியைச் சுற்றிலும் பசுமைத் தோற்றத்தை உருவாக்கவும் மாணவர்கள் பசுமையான சூழலில் சிறப்புறக் கல்வி கற்கவும் நாங்கள் இந்நடவடிக்கையில் இறங்கியுள்ளோம். தாங்கள் கொடுக்கும் பூச்செடிகளையும் மரக்கன்றுகளையும் நட்டு வைத்துச் சிறந்த முறையில் பாதுகாத்து வளர்ப்போம் என்று உறுதியளிக்கின்றோம்.

3.10.19 — 120 சொற்களில் அலுவல் கடிதம் எழுதுவர்.

BT Year 6 4_Layout 1 10/2/2015 1:34 PM Page 147

4. எங்கள் பள்ளியில் அறிவியல் பூங்காப் பகுதியில் மூலிகைத் தோட்டத்தையும் உருவாக்க எண்ணியுள்ளோம். நாங்கள் வைத்திருக்கும் சில மூலிகைச் செடிகள் எங்களது நோக்கத்தை முழுமையாக நிறைவு செய்யவில்லை. எனவே, பெருமனத்துடன் தாங்கள் மேலும் பல மூலிகைச் செடிகளைக் கொடுத்து உதவுமாறு கேட்டுக் கொள்கின்றோம். மூலிகைச் செடிகளின் பெயர்கள், பயன்கள் போன்றவற்றை மாணவர்களாகிய நாங்கள் நன்கு அறிந்து கொள்ள உங்கள் உதவி பயனாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

5. ஆங்காங்கே மரங்களை நட்டு வைத்துச் சுற்றுச்சூழலைக் காப்போம் எனும் நம் அரசாங்கத் திட்டத்தை நாங்களும் ஆதரிக்கின்றோம். எனவே, தாங்கள் அன்பளிப்பாகத் தரும் மரக்கன்றுகளையும் எங்கள் பள்ளியைச் சுற்றிலும் நட்டு வைப்போம். மரங்களையும் செடிகளையும் நடுவதால் மட்டுமே நாம் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதோடு அழகுபடுத்தவும் முடியும். இதன்வழி தூய்மையான காற்று சமூகத்திற்கும் கிட்டும் என்பது தாங்கள் அறிந்ததே.

6. இம்மாத இறுதிக்குள் எங்கள் வேண்டுகோள்களைச் சீர்தூக்கிப் பார்த்து உரியதைச் செய்வீர்கள் என்று பெரிதும் எதிர்பார்க்கின்றோம். மாணவர்களாகிய எங்களது எதிர்பார்ப்பை நிறைவேற்றுவீர்கள் என உறுதியாக நம்புகின்றோம்.

தங்களின் பதிலை ஆவலோடு எதிர்பார்க்கின்றோம்.

நன்றி,

இக்கண்,
தங்கள் உண்மையுள்ள,

கா. விமலன்

(விமலன் த/பெ காந்தன்)





நடவடிக்கை 1

**அலுவல் கடிதத்தை வாசித்துக் கருத்துகளை எழுதுக.**



நடவடிக்கை 2

**அலுவல் கடிதத்தை எடுத்துக்காட்டாகக் கொண்டு நீ வசிக்கும் குடியிருப்புப் பகுதியைத் தூய்மைப்படுத்தக் கோரி நகராண்மைக் கழக அதிகாரிக்கு அலுவல் கடிதம் ஒன்றனை எழுதுக.**

**அருஞ்சொற்கள்**
- முதன்மைத் திட்டம்
- தோற்றம்
- உறுதியளிக்கின்றோம்
- எண்ணியுள்ளோம்
- ஐயமில்லை
- ஆங்காங்கே
- சீர்தூக்கிப் பார்த்தல்
- மூலிகைத் தோட்டம்



# பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

## பல்வகைச் செய்யுளை அறிக.

அப்பாவின் அறைக்குள் மடிக்கணினியை எடுக்க நுழைகிறான் தமிழன்பன். அப்பா அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்தார். மேசை மீது சிவப்பிரகாச சுவாமிகளால் இயற்றப்பட்ட நன்னெறி எனும் நீதி நூல் இருந்ததைக் கண்டு மனம் மகிழ்ந்தான்.

எடுக்க வந்த மடிக்கணினியையும் மறந்து அந்நீதி நூலை எடுத்துக் கொண்டு வெளியில் சென்றான். தனது அறையில் அமர்ந்து நூலை வாசிக்கத் தொடங்கினான். மாணிக்கவாசகரின் திருவாசகத்தில் மனத்தைப் பறிகொடுத்தவரே இந்நூலாசிரியர் சிவப்பிரகாச சுவாமிகள். இம்மையிலும் மறுமையிலும் சிறப்பளிக்கும் நல்ல நெறிகளை எடுத்துக்கூறும் நூலாக அமைந்திருந்தது. தமிழன்பன் நீண்ட நாட்களாகத் தேடிய நூல் கையில் கிடைத்ததை எண்ணி மேலும் மகிழ்ந்தான். நாற்பது நேரிசை வெண்பாக்கள் கொண்ட நூல்தான் இந்நூல் என அறிந்தான். ஒவ்வொரு வெண்பாவும் ஒவ்வொரு உவமை மூலம் ஒவ்வொரு நீதியை விளக்குகிறது.



இளைஞர்களுக்கும் மாணவர்களுக்கும் அறிவுரை கூறும் வகையில் அமைந்திருந்த நூலை வாசிப்பதற்கு இன்பமாக இருந்ததை உணர்ந்தான் தமிழன்பன். நகர்ந்து கொண்டிருந்த அவனது கண்கள் திடீரென ஓரிடத்தில் நின்றன. ஆம், கடந்த வாரம் தமிழ்மொழி ஆசிரியை கற்பித்த செய்யுள்தான் அதற்குக் காரணம்.

**தங்குறைதீர் வுள்ளார் தளர்ந்து பிறர்க்குறூஉம்**
**வெங்குறைதீர்க் கிற்பார் விழுமியோர் - திங்கள்**
**கறையிருளை நீக்கக் கருதா துலகில்**
**நிறையிருளை நீக்குமே யின்று**

செய்யுளின் பொருளுக்கு ஏற்ப ஆசிரியர் கூறிய கதையை நினைவுகூர்ந்தான் தமிழன்பன்.

| 4.8.4 | ஆறாம் ஆண்டுக்கான பல்வகைச் செய்யுளின் பொருளை அறிந்து கூறுவர்; எழுதுவர் |
|---|---|

அன்னை தெரசாவைப் பற்றிய கதைகள் சிலவற்றை நினைத்துப் பார்த்தான். தம் வாழ்நாள் முழுவதையும் மக்களுக்காகவே செலவழித்த அன்னை தெரசா உலகம் போற்றும் மாந்தர். துன்பப்பட்டோர், துயருற்றோர், ஏழை எளியோர் ஆகிய அனைவருக்கும் உண்ண உணவு, உடுத்த உடை, இருக்க இடம், நோய் தீர்க்க மருந்து என்று அளித்து அருட்பிரகாச வள்ளலார் போன்று இவரும் வள்ளல் பெண்ணரசியாய் ஒளிர்ந்தார்.

தொழுநோய்க் கண்டவர்களையும் முகம் சுளிக்காமல் அவர்களைக் கையில் பிடித்து மருந்திட்டு; விருந்திட்டு; விழித்துத் துயர் போக்கினார். ஒருமுறை செல்வந்தர் ஒருவரிடம், "என்னிடம் உள்ள ஏழைக் குழந்தைகளுக்கு ஏதேனும் தாருங்கள்," எனக் கையேந்தினார். பண்பில்லா அம்மனிதர் அன்னையின் கையில் எச்சிலை உமிழ்ந்தார். உடனே, "எனக்கு இதை அளித்தீர்கள், ஏற்றுக் கொள்கிறேன். என் குழந்தைகளுக்குக் கொடுப்பதைக் கொடுங்கள்," என மீண்டும் கையேந்தினார். கருங்கல் மனமும் சட்டெனக் கனிந்தது. இரக்கம், தெய்வீகப் பண்பு, தாய்மை ஆகிய அனைத்தும் உண்மை மனிதருக்கு எடுத்துக்காட்டுகளாய் விளங்கின.

அப்பாவின் குரல் கேட்டுத் தமிழன்பனின் நினைவுகள் தற்காலிகமாக நின்றன.



அன்னை தெரசா

**அருஞ்சொற்கள்**

- எய்தினார்
- கடுந்தவம்
- அவதூறான
- கூற்றுகள்
- வாதங்கள்
- விழித்துயர்
- இம்மை
- மறுமை
- மாந்தர்

## பல்வகைச் செய்யுளும் பொருளும்

- சந்திரன் தன்னுடைய களங்கத்தை நீக்கிக்கொள்ள நினையாமல், வானத்திலே நின்று உலகின் இருளைப்போக்குவது போல், மேலோர் தன் துன்பத்தைப் பெரிதாகக் கருதாமல் பிறருக்கு நேரிட்ட துன்பத்தைப் பெரிதாக நினைத்து நீக்குவர். மேலான குணமுடையார், தம் நலம் கருதாமல் பிறர் நலத்துக்கே பாடுபடுவர்.

**தகவல் உலகம்**

- பஞ்ச வண்ணங்கள் என்பன கருமை, செம்மை, பச்சை, மஞ்சள், வெண்மை.
- பஞ்சரத்தினம் என்பன வைரம், முத்து, மாணிக்கம், நீலம், மரகதம்.



நடவடிக்கை 1

**நன்னெறிச் செய்யுளையும் அதன் பொருளையும் மனனம் செய்து சரியான வரிவடிவத்துடன் எழுதுக.**

BT Year 6 5_Layout 1 10/2/2015 1:38 PM Page 150



# பாடம் 5 இலக்கணம்

## பெயரெச்சம், வினையெச்சம் அறிக.

➤ எச்சம் இருவகைப்படும்
- பெயரெச்சம்
- வினையெச்சம்

1. பெயரெச்சம் : எச்சம் பெயர்ச்சொல்லைத் தழுவி நின்றால் பெயரெச்சம் எனப்படும்

எடுத்துக்காட்டு ➤ ஓடிய (எச்சம்) பையன் (பெயர்ச்சொல்)

2. வினையெச்சம் : எச்சம் வினைமுற்றைத் தழுவி நின்றால் வினையெச்சம் எனப்படும்.

எடுத்துக்காட்டு ➤ படித்து (எச்சம்) முடித்தான் (வினைமுற்று)

## நடவடிக்கை 1

**பத்தியில் வரும் பெயரெச்சத்தைக் கண்டறிக.**

அ. கனிமொழி மாலை வேளையில் பூங்காவிற்குச் சென்றாள். அங்கே வேகமாக ஓடிய சிறுவர்களைக் கண்டாள். ஓரிடத்தில் அனைவரும் நின்றனர்; இராகத்துடன் பாடினர். அவர்கள் பாடிய பாட்டுக் கனிமொழியைக் கவர்ந்தது. குயிலின் குரல் போல் இனிமையாக இருக்கின்றது எனத் தனக்குள் சொல்லி மகிழ்ந்தாள்.

5.3.26 பெயரெச்சம், வினையெச்சம் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

ஆ. சபைக்கூடலில் தலைமையாசிரியர் ஆற்றிய உரை மாணவர்களை உற்சாகப்படுத்தியது. மேலும், மாணவர் தலைவர் வாசித்த கவிதை அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியது.



## நடவடிக்கை 2

**வினையெச்சத்தைக் கண்டறிக.**

அமலன் நூல்நிலையத்திற்குச் சென்றான். கதைப் புத்தகங்களைப் புரட்டிப் பார்த்தான். அவனுக்குப் பிடித்த புத்தகம் ஒன்றனை எடுத்து வந்தான். ஓரமாகச் சென்று அமர்ந்தான். புத்தகத்தின் ஏடுகளைத் திருப்பினான்; கதைப் படங்களை ஆவலுடன் பார்த்தான். கதையைக் கருத்தூன்றிப் படித்தான். கதை ஓட்டத்தில் மெய்மறந்து போனான். நூலகப் பொறுப்பாளர் குரலைக் கேட்டான். திடுக்கிட்டு எழுந்தான். கதையைப் படித்து முடித்தோம் என்ற மகிழ்ச்சியில் வீட்டிற்குத் திரும்பினான்.




## நடவடிக்கை 3

**வாக்கியங்களில் சரியான பெயரெச்சம், வினையெச்சம் அறிந்து எழுதுக.**

1. தேன்மொழி தான் வாங்கிய புதிய கதைப் புத்தகங்கள் அனைத்தையும் ______ . (வினையெச்சம்)
2. சுற்றுலாவிற்கு வந்த சுற்றுப்பயணிகள் அனைவரும் தோகை விரித்து ______ கண்டு அதிசயித்து நின்றனர். (பெயரெச்சம்)
3. நூலகப் பொறுப்பாசிரியர் மாணவர்களிடம் ______ எடுத்த இடத்திலேயே வைக்கும்படி கூறினார். (பெயரெச்சம்)
4. போட்டியில் முதல் பரிசை வெல்வதற்காக வாசுகி விரைவாக ______ . (வினையெச்சம்)

### தகவல் உலகம்

- புல்லாங்குழலின் பழைய பெயர் வங்கியம் என்பதாகும் மூங்கில், சந்தனம், செங்கனி, கருங்காலி ஆகிய நான்கு மரங்களாலும் வெண்கலத்தினாலும் புல்லாங்குழல் செய்யப்படுகின்றது. இவற்றில் மூங்கிலில் செய்வதே சிறந்தது எனப் பழந்தமிழ் நூல்கள் கூறுகின்றன.

BT Year 6 5_Layout 1 10/2/2015 1:38 PM Page 152

5. நாடகத்தில் மன்னர் வேடம் பூண்ட மாணவன் மிகவும் சிறப்பாக ________ . (வினையெச்சம்)
6. திருடர்களைக் கண்டு ________ (பெயரெச்சம்) சத்தம் கேட்டு அண்டை வீட்டார் அனைவரும் விழித்துக் கொண்டனர்.
7. விவசாயத் துறையின் பாதிப்பினால் கிராம மக்கள் ஏழ்மையில் ________ . (வினையெச்சம்)
8. கார்த்திகைத் திருநாளன்று அம்மா ________ (பெயரெச்சம்) அனைத்தும் வீட்டைப் பிரகாசமாக்கின.
9. அக்காள் ________ (பெயரெச்சம்) அணிந்து கொண்டு தங்கை திருவிழாவிற்குச் சென்றாள்.
10. வயதானபோதிலும் அவர்கள் தன்னம்பிக்கையுடன் ________ . (வினையெச்சம்)







## நடவடிக்கை 4

**படங்களின் துணைகொண்டு பெயரெச்சம், வினையெச்சம் ஆகியவற்றைப் பட்டியலிடுக.**



________
________
________
________



________
________
________
________



________
________
________
________

BT Year 6 5_Layout 1 10/2/2015 1:38 PM Page 153




# தொகுதி 15 பழைமையில் இனிமை

## பாடம் 1 சமையலோ சமையல்

### குழுவில் கலந்துரையாடுக.

இந்தியர்கள் உணவு பரிமாறும் முறையை அறிவோம்.

| உணவுகள் | பரிமாறும் விதம் |
|---|---|
| 1. உப்பு<br>2. இனிப்புப் பலகாரம் அல்லது பாயசம்<br>3. பச்சடி, கூட்டு, பொரியல், அவியல், வறுவல், ஊறுகாய் ஆகியவற்றை வலமிருந்து இடப் பக்கமாகப் பரிமாற வேண்டும்.<br>4. அப்பளம், வடை போன்ற நொறுக்குத் தீனி வகைகள்<br>5. சித்ரான்னம் (புளி சாதம், எலுமிச்சைச் சோறு போன்றவை)<br>6. சோறு | சோற்றில் முதலில் பருப்பு, நெய் பரிமாறவும்.<br>அடுத்துக் குழம்பும்<br>பின்னர் ரசமும்<br>இறுதியில் தயிர் அல்லது மோர் ஊற்றிக் கொள்ளவும். |




### நடவடிக்கை 1

**வினாச் சொற்களைப் பயன்படுத்திக் கேள்விகள் கேட்டு உரையாடுக.**

எடுத்துக்காட்டு :

1. வாழையிலையில் உண்பதால் கிடைக்கும் நன்மைகள் யாவை?

1.7.6 விளக்கம் பெறப் பொருத்தமான வினாச் சொற்களைப் பயன்படுத்திக் கேள்விகள் கேட்பர்.

BT Year 6 5_Layout 1 10/2/2015 1:38 PM Page 154


## நடவடிக்கை 2

**பாரம்பரியத்தைக் கடைப்பிடிக்கும்போது நாம் எதிர்நோக்கும் சவால்களைக் குழுவில் உரையாடுக.**

## நடவடிக்கை 3

**வினாச் சொற்களைப் பயன்படுத்தி உரையாடுக.**

அ.



காலம் மாறிவிட்டது. காலத்திற்கு ஏற்ப நம்மை நாமும் மாற்றிக் கொள்வதே சிறப்பு.

ஆ.



சிறுவன் சிக்கலிலிருந்து தன்னை எவ்வாறு காப்பாற்றிக் கொள்வான்?

## நடவடிக்கை 4

**வினாக்கள் கேட்டு விடை பெறுக.**

1. வெளியில் சென்றுவிட்டு வீட்டிற்குள் வரும்பொழுது கைகால்களைக் கழுவ வேண்டும்.
2. மஞ்சள் நீரை வாசலில் தெளிக்க வேண்டும்.
3. மூக்குத்தி, காதணி அணிவதன் அவசியம்.
4. வாழையிலை நறுக்கியப் பகுதி வலப் பக்கமாக இருக்க வேண்டும்.
5. வடக்குத் திசையில் தலை வைத்துப் படுக்கக்கூடாது.
6. நகத்தைக் கடிக்கக்கூடாது.
7. அரச மரத்தையும் வேப்ப மரத்தையும் சுற்றி வலம் வருதல்.
8. விரல்களுக்கு மருதாணி இடுதல்.





# பாடம் 2 கவிதை மேடை



கவிதையை நயத்துடன் வாசித்திடுக.

## நீ நினைத்தால் பொழுது விடியும்!




வானம் என்ன வானம் - நீ
முயன்றால் தொட முடியும்
சூரியன் என்ன சூரியன் - நீ
நினைத்தால் பொழுது விடியும்
துணிந்து போராடு தம்பி - வெற்றி
துள்ளி விளையாடும் தம்பி (வானம்)

தாழ்வு மனப்பான்மை இருந்தால் - உன்
வாழ்வில் முன்னேற முடியாது
தகுதி இல்லையென்று நினைத்தால் - நீ
வாழ்ந்து பயனேதும் கிடையாது
முயன்று பார்க்காமல் முடிவு செய்யாதே
மூளையில் நீயும் விலங்கு போடாதே
துணிந்து போராடு தம்பி - வெற்றி
துள்ளி விளையாடும் தம்பி (வானம்)

சோம்பல் இல்லாத மனிதன் - சொந்தக்
கடமைகள் தவறாத வீரன்
வெற்றி முகம் கண்டு வருவான் - அதைச்
சுற்றி இருப்போர்க்கும் தருவான்
தேவையில்லாமல் பொழுதைக் கழிக்காதே
நாவை அசைக்காமல் பேச்சை வளர்க்காதே
துணிந்து போராடு தம்பி - வெற்றி
துள்ளி விளையாடும் தம்பி (வானம்)

- கவிஞர் தீப்பொறி பொன்னுசாமி



2.6.22 கவிதைகளை வாசித்துப் புரிந்து கொள்வர்.

BT Year 6 5_Layout 1 10/2/2015 1:39 PM Page 156

## நடவடிக்கை 1

**வினாக்களுக்கு விடையளித்திடுக.**

1. முதல் கண்ணியில் கவிஞர் எதைப்பற்றி வலியுறுத்துகிறார்?
2. தாழ்வு மனப்பான்மை உள்ளவர்களின் நிலைமை என்ன?
3. கவிஞர் எதற்காகத் துணிந்து போராட வேண்டும் என்றார்?
4. சோம்பல் இல்லாத மனிதன் எப்படிப்பட்டவனாக இருப்பான்?

## நடவடிக்கை 2

**கவிதையை வாசித்துப் பொருள் கூறுக.**

**பள்ளித் தொடக்கப் பாட்டு**

கண்கள் விழித்தன; செவிகள் திறந்தன;
கருத்துகள் முளைத்தன உள்ளத்திலே!
பண்கள் பிறந்தன; பாக்கள் எழுந்தன;
பாய்ந்திடுவோம் கல்வி வெள்ளத்திலே!


இளம்புது நெஞ்சம்; இளம்புது மூளை;
இணைந்தன ஒன்றாய்க் கூடத்திலே!
வளம்பெறும் அறிவே வாழ்க்கையின் பூக்கள்
வந்தமர்வீர் கல்வி ஓடத்திலே!

கைகள் புதியன; கால்கள் புதியன;
காண்பன முற்றும் விளைநிலங்கள்!
பைகள் முழுதும் புதுப்புது நூல்கள்!
பாய்வதால் நிரம்பும் உளக்குளங்கள்!

புத்தம் புதிய சிறுமலர் நெஞ்சம்
புகுவிழா நடத்தும் அறிவுமனை!
தொத்திப் படரும் இளம்பசுங் கொடிகள்
துருதுரு வென்னும் உணர்வுமுனை!

பெரியதோர் உலகம்; பெரியதோர் வானம்!
பேசிடப் பேசிடப் புதுப்பெருமை!
அரிதாய் முளைத்த மாந்தரின் மாண்பு
அடடா! காண்போம் பெரும்புதுமை!

- பாவலரேறு பெருஞ்சித்திரனார்





# பாடம் 3 நினைவில் கொள்வோம்



## வாசித்து எழுதுக.

New Message

To | semmalar_2020@tamilmail.com Cc Bcc

Subject செய்யுள் விளக்கம்

அன்புள்ள மகள் செம்மலருக்கு, இங்கு நாங்கள் அனைவரும் நலம். அதுபோல அங்கு நீயும் உன்னுடன் பயிலும் தோழிகளும் நலமாக இருக்க இறைவனை வேண்டுகிறேன்.

மின்னஞ்சல் வழி சில செய்யுள்களை அனுப்பி அவற்றின் பொருளை விளக்கக் கேட்டிருந்தாய். மிக்க மகிழ்ச்சியடைந்தேன். செய்யுள் வரிகளை இவ்வளவு அக்கறையுடன் நீ கேட்டுத் தெரிந்து கொள்வதை நினைத்தால் எனக்கு மிகவும் பெருமையாக இருக்கின்றது.

**தெள்ளிய ஆலின் சிறுபழத்து ஒருவிதை**
**தெண்ணீர்க் கயத்துச் சிறுமீன் சினையினும்**
**நுண்ணிதே ஆயினும் அண்ணல் யானை**
**அணிதேர் புரவி ஆட்பெரும் படையொடு**
**மன்னர்க்கு இருக்க நிழலா கும்மே**

என்ற வெற்றிவேற்கையில் உள்ள செய்யுளைப் பற்றிக் கேட்டிருந்தாய். அதிவீரராம பாண்டியரால் இயற்றப்பட்ட வெற்றிவேற்கை எனும் நூலில் இடம்பெற்றது இச்செய்யுள். சின்னஞ்சிறு மீன் முட்டையைவிடச் சிறிதான ஆலவிதை முளைத்து, அடர்ந்த பெரிய மரமாகி, மன்னனும் அவனது நான்கு வகைப் படைகளும் தங்குவதற்குத் தகுந்த நிழலினைக் கொடுக்கும். அது போலவே, குறைந்த செல்வம் பெற்றவர் என்றாலும், ஈகை குணம் உடையவர்கள் அனைவருக்கும் பயன்படுவர். இதுவே இச்செய்யுள் வரிகளின் பொருளாகும்.

நல்ல நெறிகளைக் கூறும் இந்நூல் தொடக்கக் காலத்தில் நறுந்தொகை என்று அழைக்கப்பட்டது.

Sans Serif

Send

3.8.5 செய்யுளைச் சொல்வதெழுதுதலாக எழுதுவர்.

அடுத்து மூதுரையில் உள்ள செய்யுள்களைப் பற்றியும் கேட்டிருந்தாய். ஔவையார் இயற்றிய நீதி நூல்களில் மூதுரையும் அடங்கும். இப்பகுதியில் மானிடர் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்க நெறிகளை எளிய முறையில் இனிய தொடர்களைக் கொண்ட நேரிசை வெண்பாக்களாகப் படைத்துள்ளார்.

**அட்டாலும் பால்சுவையில் குன்றா தளவளாய்**
**நட்டாலும் நண்பல்லார் நண்பல்லர்**
**கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே - சங்கு**
**சுட்டாலும் வெண்மை தரும்**

என்ற வரிகளைப் பற்றியும் கேட்டிருந்தாய். பாலை எவ்வளவு சுண்டக் காய்ச்சினாலும் தனது சுவையிலிருந்து மாறுபடாது. சங்கு எவ்வளவு நேரம் சுட்டுப் பொசுக்கப்பட்டாலும் அதன் வெண்மை நிறம் மாறுபடாது. இவற்றைப் போலவே, பண்பிற்சிறந்த சான்றோர் வறுமை நிலையில் அவதியுற்றாலும், தமது உயர்ந்த பண்புகளிலிருந்து சிறிதளவும் மாறுபடாமல், மேன்மை மிக்கவராகவே திகழ்வர். ஆனால், பண்பற்ற கீழோர் எவ்வளவு பழகினாலும் நண்பராக மாட்டார்கள்.

**நீரளவே ஆகுமாம் நீராம்பல் தான்கற்ற**
**நூலளவே ஆகுமாம் நுண்ணறிவு - மேலைத்**
**தவத்தளவே ஆகுமாம் தான்பெற்ற செல்வம்**
**குலத்தளவே ஆகுமாம் குணம்**

தண்ணீரின் அளவிற்கே அல்லி மலர் உயர்ந்து தோன்றும். அவ்வாறே எதனையும் ஆய்ந்து தெளியும் நுண்ணறிவானது தான் கற்ற நூல்களின் தன்மையைப் பொறுத்தே அமையும். தான் பெற்ற செல்வம் முற்பிறவியில் செய்த தவத்தின் அளவே அமைந்திருக்கும். பண்பு என்பது தான் பிறந்த குடியின் தன்மையைப் பொறுத்தே அமையும்.

எனதருமை மகளே! நீ அனுப்பியிருந்த செய்யுள் வரிகளுக்கு ஏற்ற விளக்கங்களைக் கொடுத்துள்ளேன். தொகுப்பு நூல் செய்ய இது நிச்சயம் உனக்குப் பேருதவியாக இருக்கும் என நினைக்கிறேன். தமிழ்மொழியில் நீ காட்டும் ஆர்வத்தைப் பார்த்து நான் மெய்சிலிர்க்கின்றேன்.

நானும் என் கல்லூரி வாழ்க்கையில் உன்னைப் போன்று மிகவும் துடிப்பாகவே இருப்பேன். அந்த வேகத்தையும் விவேகத்தையும் இப்போது உன்னுள் காண்பதில் பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

வேறேதேனும் உதவி தேவைப்பட்டால் மின்னஞ்சல்வழி தெரியப்படுத்தவும்.

வாழ்க, வணக்கம்.

என்றும் அன்புடன்,
உனது தந்தை.

மூலம்: நீதிநூல் கொத்து

Sans Serif | B I U A | Send

BT Year 6 5_Layout 1 10/2/2015 1:39 PM Page 159

## நடவடிக்கை 1

**மின்னஞ்சலில் கொடுக்கப்பட்ட செய்யுள்களைச் சொல்வதெழுதுதலாக எழுதுக.**

## நடவடிக்கை 2

**வினாக்களுக்கு விடையெழுதுக.**

1. மின்னஞ்சல் அனுப்பியவர் யார்?
2. மின்னஞ்சல் அனுப்பியதன் நோக்கம் யாது?
3. அதிவீரராம பாண்டியரால் கூறப்பட்ட செய்யுளின் பொருள் யாது?
4. மூதுரைப் பகுதியில் கூறப்பட்ட செய்யுள்களின் பொருளை எழுதுக.
5. பாலும் சங்கும் எப்படிப்பட்ட பண்புக்கு உவமைப்படுத்தப்படுகின்றன?
6. தண்ணீரின் அளவிற்கே அல்லி மலர் உயர்ந்து தோன்றும் எனும் பொருளை உணர்த்தும் செய்யுள் வரி யாது?

## நடவடிக்கை 3

**கொடுக்கப்பட்ட செய்யுள்களின் பொருளை எழுதி வாசித்திடுக.**

## இடுபணி

**செய்யுள் வரிகளைச் சரியாக எழுதிப் புத்தக அடையாள அட்டைகளைத் தயாரித்திடுக.**

## தகவல் உலகம்

### கனிகளின் மருத்துவ குணம்

**நெல்லி**



**இரத்த ஓட்ட மண்டலம்**

- கால் வீக்கம் நீங்கும்
- தலைமுடி உதிராது
- பல வகைக் கட்டிகள் தோன்றா

**செந்தாழை**



**ஜீரண மண்டலம்**

- பசியின்மை போக்கும்
- காய்ச்சல் வாராது
- புற்றுநோய் தடுக்கும்

**பப்பாளி**



**சுரப்பி மண்டலம்**

- புளித்த ஏப்பம் வாராது
- வெண்தோல் வாராது
- வெள்ளைப் போக்கு நீங்கும்

**அரசாணி**



**நீணநீர் மண்டலம்**

- ஒவ்வாமை ஏற்படாது
- வாந்தி, பேதி உண்டாகா
- பித்தப்பைக் கல் கரையும்

**பூசணி**



**சிறுநீர் மண்டலம்**

- மலச்சிக்கல் ஏற்படாது
- தலைபாரம் குறையும்
- சிறுநீரகச் செயலிழப்பு ஏற்படாது



# பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

## பழமொழிகளின் பொருளை அறிக.




வான்மதி : வணக்கம் அண்ணா!

பயிற்றுநர் : வணக்கம்.

வான்மதி : நீங்கள் இப்பகுதியில் மிகவும் பிரபலமான உடற்பயிற்சிப் பயிற்றுநர் என்பதில் மிக்க மகிழ்ச்சி. உங்களிடம் சில விளக்கங்களைப் பெற வேண்டும். சுமார் எத்தனை ஆண்டுகள் பயிற்றுநராகப் பணியாற்றுகிறீர்கள்? உடற்பயிற்சி செய்வதால் ஒருவர் என்னென்ன நன்மைகளைப் பெற முடியும் அண்ணா?

பயிற்றுநர் : ஏழு ஆண்டுகளாக நான் இப்பணியைச் செய்து வருகின்றேன். உடற்பயிற்சி செய்வதால் நாம் வலுவான உடலைப் பெறலாம். நமது இருதயம் சீராக இயங்கும். மேலும் உடலில் உள்ள கொழுப்பைக் குறைப்பதோடு இரத்த ஓட்டத்தையும் சீராக்குகின்றது. உடல் எடையைக் கட்டுப்படுத்திப் பொலிவான தோற்றத்தையும் பெறலாம். **சுவரை வைத்துத்தான் சித்திரம் வரைய வேண்டும்** என்பதுபோல நமது உடல் நலமாக இருந்தால்தான் எண்ணங்களும் சிறப்பாக அமையும்.

வான்மதி : மிகச் சரியாகச் சொன்னீர்கள் அண்ணா. சராசரியாக ஒருவர் நாள் ஒன்றுக்கு எவ்வளவு நேரம் உடற்பயிற்சி செய்ய வேண்டும்? சிலர் உடற்பயிற்சி செய்வதை இடையிடையே நிறுத்திவிடுகின்றனரே!

பயிற்றுநர் : முழுமையான பயனை அடைய ஒரு நாளுக்குச் சுமார் முப்பது நிமிடங்களாவது நாம் உடற்பயிற்சி செய்ய வேண்டும்.

4.13.6 ஆறாம் ஆண்டுக்கான பழமொழிகளின் பொருளை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

BT Year 6 5_Layout 1 10/2/2015 1:39 PM Page 161

**முன் வைத்த காலைப் பின் வைக்காதே** என்ற பழமொழிக்கேற்ப எந்தத் தடைகள் வந்தாலும் ஒரு காரியத்தில் ஈடுபட்டுவிட்டால் பின்வாங்கலாகாது.

வான்மதி : உங்கள் உடற்பயிற்சி மையத்திற்குப் பலரும் வந்து பயனடைய நீங்கள் ஏதேனும் விளம்பரம் செய்வதுண்டா அண்ணா?

பயிற்றுநர் : ஒரு சிலருக்கு விருப்பமும் ஆற்றலும் இருக்கும். ஆனால், கூச்சப்படுவர். **சுடர் விளக்காயினும் தூண்டுகோல் தேவை**தானே! அவர்களுக்குக் கிடைக்கும் நன்மைகளைக் கூறி உற்சாகமும் ஊக்கமும் கொடுப்போம்.

வான்மதி : அண்ணா, இந்தக் குறுகிய நேரத்தில் பல அரிய கருத்துகளை வழங்கிய உங்களுக்கு என்னுடைய நன்றி.

## பழமொழிகளும் பொருளும்

- **சுவரை வைத்துத்தான் சித்திரம் வரைய வேண்டும்.**

  நம் உடல் நலமாக இருந்தால்தான் நமது எண்ணங்களுக்குச் செயல்வடிவம் கொடுத்துக் காரியத்தைச் சிறப்பாகச் செய்து முடிக்க முடியும்.

- **முன் வைத்த காலைப் பின் வைக்காதே.**

  ஒரு காரியத்தில் ஈடுபட்டால் இடையில் எவ்வளவு தடைகள் ஏற்பட்டாலும் அதிலிருந்து பின்வாங்காமல் தொடர்ந்து செய்து முடிக்க வேண்டும்.

- **சுடர் விளக்காயினும் தூண்டுகோல் தேவை.**

  ஆற்றல் கொண்டு இயங்குபவருக்குத் தொடர்ந்து உற்சாகமும் ஊக்கமும் ஊட்டினால், அஃது அவரது ஆற்றலை மேலும் ஊக்கப்படுத்தும்.



## நடவடிக்கை 1

**சூழலுக்கு ஏற்ற பழமொழியினை எழுதுக.**

1. நகுலன் தினமும் காலைச் சிற்றுண்டியை உண்ட பிறகே பள்ளிக்குச் செல்வான். உடல் நலமாக இருந்தால்தான் சிறப்பாகக் கல்வி கற்க முடியும் என்பதை நன்கு உணர்ந்திருந்தான்.
2. சிறு வயதிலிருந்தே தந்தை அளித்த நம்பிக்கையும் ஆதரவும் கனிமொழி விளையாட்டுத் துறையில் சிறந்து விளங்க உந்துதலாய் இருந்தன.
3. நீச்சல் வீராங்கனையாக வாகை சூட வேண்டும் என்ற உறுதி கொண்ட நிர்மலா, காலில் ஏற்பட்ட காயத்தையும் பொருட்படுத்தாமல் போட்டியில் பங்கு கொண்டாள்.

BT Year 6 5_Layout 1 10/2/2015 1:39 PM Page 162

# பாடம் 5 இலக்கணம்

## விகாரப் புணர்ச்சியில் கெடுதல் அறிக.




**எண்ணுப்பெயர்ப் புணர்ச்சி**

ஒன்று முதல் பத்து வரையிலான நிலைமொழி எண்ணுப்பெயருடன் பத்து என்னும் வருமொழி இணைதல்.

எடுத்துக்காட்டு

இரண்டு + பத்து = இருபது
மூன்று + பத்து = முப்பது

## நடவடிக்கை 1

**சேர்த்து எழுதுக.**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| நான்கு | + பத்து | = | | எட்டு | + பத்து | = | |
| ஐந்து | + பத்து | = | | ஒன்பது | + பத்து | = | |
| ஆறு | + பத்து | = | | பத்து | + பத்து | = | |
| ஏழு | + பத்து | = | | | | | |

5.7.4 விகாரப் புணர்ச்சியில் கெடுதல் பற்றி அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

BT Year 6 5_Layout 1 10/2/2015 1:39 PM Page 163

## நடவடிக்கை 2

**எண்ணுப்பெயரைப் பிரித்து எழுதுக.**




1. சுற்றுலா செல்வதற்காக மாணவர்கள் ஒவ்வொருவரும் அறுபது ரிங்கிட் செலுத்த வேண்டுமெனப் பொறுப்பாசிரியர் கூறினார்.
2. முன்னாள் மாணவர்கள் முப்பது பேர் சேர்ந்து பள்ளியில் கூட்டுப்பணியை மேற்கொண்டனர்.
3. இருபது மாணவர்கள் கொண்டு தொடங்கப்பட்ட நடன வகுப்பில் தற்சமயம் எண்பது மாணவர்கள் பயின்று வருகின்றனர்.
4. மாணவர்களை ஒன்பது முதல் தொண்ணூறு வரையிலான எண்களை எழுத்தில் எழுதுமாறு ஆசிரியர் பணித்தார்.
5. அன்று இருபது மாணவர்கள் மட்டுமே பயின்ற அப்பள்ளியில் இன்று எழுபது மாணவர்கள் பயில்கின்றனர்.
6. பனிக்கூழ் வாங்குவதற்காக அப்பா தம்பியிடம் ஓர் ஐம்பது சென் நாணயத்தையும் மேலும் அறுபது சென்னையும் கொடுத்தார்.
7. ஒவ்வொரு மாதமும் முரளிதரன் அப்பா கொடுக்கும் செலவுப் பணத்திலிருந்து நாற்பது ரிங்கிட் சேமித்து வைப்பான்.

## நடவடிக்கை 3

**பிரித்து எழுதுக.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| இருபது | = | ____ | ஐம்பது | = | ____ |
| முப்பது | = | ____ | நாற்பது | = | ____ |
| எழுபது | = | ____ | அறுபது | = | ____ |

### தகவல் உலகம்

**ஓரெழுத்து ஒரு மொழி**

| | |
|---|---|
| அ - எட்டு | மோ- முகர்தல் |
| ஆ - பசு | தா - கொடு |
| ஈ - கொடு | தீ - நெருப்பு |
| ஊ - இறைச்சி | து - பிரிவு |
| ஏ - அம்பு | தூ - தூய்மை |
| ஐ - அழகு | சா - மரணம் |
| ஒ - விழா | சே - எருது |
| மா - பெரிய | சோ- பதில் |
| மீ - மேலே | பா - பாட்டு |
| மு - மூப்பு | பூ - மலர் |
| மே - அன்பு | பை- பசுமை |
| மை- இருள் | போ- செல் |

- மாணவர் களஞ்சியம்

BT Year 6 5_Layout 1 10/2/2015 1:39 PM Page 164



# தொகுதி 16 பொதுநலம் பேணுவோம்

## பாடம் 1 சாலை விபத்து

### குழுவில் கலந்துரையாடுக.



- சாலை விபத்து
- அவசர மருத்துவ வாகனம்
- சாலைப் பாதுகாப்பு
- புகைப்படம் எடுப்பது
- பொதுமக்களின் போக்கு
- சுயநலம் கூடாது
- நற்பண்புள்ள சமுதாயம்
- போக்குவரத்து நெரிசல்
- முதலுதவி செய்தல்
- பார்வையிடுதலும் வேடிக்கை பார்த்தலும்
- பொதுமக்களின் மனப்போக்கு மாற்றம்
- கைப்பேசியில் பதிவு செய்வது

1.6.23 தலைப்பிற்கேற்பப் பொருத்தமான சொல், சொற்றொடர், வாக்கியம் ஆகியவற்றைப் பயன்படுத்திப் பேசுவர்.

## நடவடிக்கை 1

**கொடுக்கப்பட்ட தலைப்பிற்கேற்பப் பொருத்தமான சொல், சொற்றொடர், வாக்கியம் ஆகியவற்றைப் பயன்படுத்தி உரையாடுக.**

## நடவடிக்கை 2

**சூழலுக்கேற்ற சொல், சொற்றொடர், வாக்கியம் ஆகியவற்றைப் பயன்படுத்தி உரையாடுக.**



அ. காவியாவும் மாதவியும் நெருங்கிய தோழிகள். இருவரும் ஒன்றாகவே பள்ளிக்குப் பேருந்தில் பயணம் செய்வர். ஒரு நாள் பள்ளி முடிந்து வெகு நேரமாகியும் காவியா பள்ளிப் பேருந்து நிற்குமிடத்திற்கு வரவில்லை. மாதவி இச்சூழலில் என்ன செய்திருப்பாள்?



ஆ. கம்பன் வகுப்பு மிகச் சுத்தமான வகுப்பறை என்றும் அந்த வகுப்பில் பயிலும் மாணவர்கள் அனைவரும் மிகச் சிறந்த மாணவர்கள் என்றும் தலைமையாசிரியர் புகழாரம் சூட்டினார். மாணவர்கள் அனைவரும் மிக்க மகிழ்ச்சியுடன் வகுப்பறையில் நுழைந்ததும் தங்களின் உணர்வைப் பகிர்ந்து கொள்கின்றனர். எவ்வாறு?



இ. வெள்ளப் பேரிடரில் பாதிக்கப்பட்ட மாணவர்களின் குடும்பத்திற்குச் சக மாணவர்கள் தங்களால் இயன்ற உதவிகளைச் செய்ய எண்ணினர். எப்படி?

## நடவடிக்கை 3

**சொல், சொற்றொடர் பயன்படுத்தி உரையாடுக.**

வீர மரணம்

நாட்டுப் பற்று



நாட்டுச் சின்னம்

தேசத்தைக் காத்தல்

பாடம் 2

# சுற்றுலா அறிக்கை

வாசித்து அறிக.

## கம்பர் தமிழ்ப்பள்ளியின் கல்விச் சுற்றுலா அறிக்கை

கடந்த 6.8.2016ஆம் நாள் கம்பர் தமிழ்ப்பள்ளியின் அறிவியல் கழகம் கேமரன் மலைக்குக் கல்விச் சுற்றுலா ஒன்றனை மேற்கொண்டது.

இச்சுற்றுலாவில் மொத்தம் நாற்பது மாணவர்களும் பத்து ஆசிரியர்களும் கலந்து கொண்டனர். சுற்றுலா நாளன்று மாணவர்கள் காலை 6.00 மணிக்கெல்லாம் பள்ளிக்கு வந்திருந்தனர். காலை 7.30 மணியளவில் பேருந்து பள்ளியை விட்டுப் புறப்பட்டது.

மாணவர்கள் சிலருக்குக் கேமரன் மலைக்குச் செல்வது அதுவே முதல் அனுபவமாக அமைந்தது. பள்ளிப் பேருந்து தாப்பா எனும் ஊர் வரும் வரை நெடுஞ்சாலையிலேயே சென்றது. அதன் பிறகு, கேமரன் மலைக்குச் செல்லும் சாலை வளைந்து நெளிந்து இருந்தது. சாலையின் இரு பக்கமும் பசுமையான காடுகள் இருந்தன.

மலைச் சரிவினில் பசுமையான தேயிலைத் தோட்டங்கள் இருந்தன. பேருந்து நண்பகல் மணி 12.00 அளவில் தானா ராத்தா எனும் இடத்தை அடைந்தது. அங்குள்ள தமிழ்ப்பள்ளியில் மதிய உணவு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அப்பள்ளியின் ஆசிரியர்களும் மாணவர்களும் இன்முகத்துடன் வரவேற்றனர். மதிய உணவை முடித்துக் கொண்டு மாணவர்கள் செம்புற்றுப் பழத்தோட்டத்திற்குச் சென்றனர்.



பழத்தோட்டத்தின் உரிமையாளர் மாணவர்களை வரவேற்று அத்தோட்டத்தைச் சுற்றிக் காண்பித்தார். செம்புற்றுப் பழங்களை மாணவர்களுக்குக் கொடுத்தார். செம்புற்றுப் பழச்சாறு, பழக்கூழ் செய்யும் விதத்தையும் மாணவர்கள் பார்க்க வாய்ப்புக் கிட்டியது.

2.6.20 அறிக்கையை வாசித்துப் புரிந்து கொள்வர்.

அப்பழத்தோட்டத்தின் உரிமையாளர் சில செம்புற்றுக் கன்றுகளை மாணவர்களுக்கு வழங்கினார். மாணவர்கள் காரணம் அறியாது விழித்தனர். சற்று நேரத்தில் கறுப்பு நிற நெகிழிப் பைகளைக் கொடுத்து மண் நிரப்பி அதில் அக்கன்றுகளை நட்டு வைக்கப் பணிக்கப்பட்டனர்.

மாணவர்கள் தத்தம் பெயர்களை நெகிழிப் பையின் வெளிப்புறத்தில் எழுதினர். அது மாணவர்களுக்கு இனிமையான அனுபவமாக அமைந்தது.

மாணவர்களும் ஆசிரியர்களும் தேவையான பழங்கள், பழக்கூழ் போன்றவற்றையும் வாங்கினர். அடுத்துச் சுற்றுலாப் பேருந்து தேயிலைத் தோட்டத்திற்குச் சென்றது. தேயிலையைப் பறிப்பது, பதனிடுவது, தூளாக்கித் தரம் பிரிப்பது, பொட்டலங்களாக்குவது போன்ற செயல்முறைகள் விளக்கப்பட்டன. வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் தேயிலைப் பொட்டலங்கள் ஓரிடத்தில் அடுக்கி வைக்கப்பட்டிருந்ததைக் கண்டனர்.

அன்றிரவு பிரிஞ்சாங் பட்டணத்தில் உள்ள விடுதி ஒன்றில் மாணவர்கள் தங்கினர். சில்லென்று வீசிய காற்று, பிரிஞ்சாங் பட்டணம் கேமரன் மலையிலேயே மிக உயரமான இடத்தில் இருப்பதை உறுதிப்படுத்தியது.

மறுநாள் காலைச் சிற்றுண்டியை முடித்துக் கொண்டு காய்கறித் தோட்டம், பூந்தோட்டம் போன்றவற்றைச் சுற்றிப் பார்த்தனர். மாணவர்களில் சிலர் காய்கறிகள், பூக்கள் ஆகியவற்றை வாங்கிக் கொண்டனர். நண்பகலில் மதிய உணவை முடித்துக் கொண்டு அனைவரும் பேருந்தில் ஏறினர். பேருந்தும் புறப்பட்டது.


பேருந்து மலையிலிருந்து கீழே இறங்கும்போது மாணவர்கள் சற்றுப் பயத்துடன் காணப்பட்டனர். எனினும், பேருந்து ஓட்டுநர் பாதுகாப்பாகவே பேருந்தைச் செலுத்தினார். இரவு மணி 7.00க்குப் பேருந்து பள்ளியை வந்தடைந்தது.

இந்தச் சுற்றுலா ஓர் இன்பச் சுற்றுலாவாகவே அமைந்தது.

அறிக்கையைத் தயாரித்தவர், 18 ஆகஸ்ட் 2016

மணிவண்ணன்

(மணிவண்ணன் த/பெ அரவிந்தன்)
ஏற்பாட்டுக்குழுச் செயலாளர்
கம்பர் தமிழ்ப்பள்ளி.



BT Year 6 5_Layout 1 10/2/2015 1:39 PM Page 168

## நடவடிக்கை 1

**வினாக்களுக்கு விடையளித்திடுக.**

1. கல்விச் சுற்றுலா யாரால் மேற்கொள்ளப்பட்டது?
2. சுற்றுலாவில் கலந்து கொண்டவர்கள் மொத்தம் எத்தனை பேர்?
3. சுற்றுலாப் பேருந்து முதலில் நின்ற இடம் எது?
4. மதிய உணவிற்குப் பிறகு மாணவர்கள் என்ன செய்தனர்?
5. மாணவர்களுக்குச் சிறந்த அனுபவமாக அமைந்தது எது? ஏன்?
6. மாணவர்கள் தங்கள் சுற்றுலாவின் இரண்டாவது நாளன்று மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை?
7. இவ்வாறு மேற்கொள்ளும் கல்விச் சுற்றுலாவினால் ஏற்படும் நன்மைகளைப் பட்டியலிட்டு விளக்குக.


## நடவடிக்கை 2

**கொடுக்கப்பட்ட தலைப்புகளில் ஏதேனும் ஒன்றனைத் தெரிவு செய்து அறிக்கை எழுதி வாசித்திடுக.**

1. தன்முனைப்பு முகாம்
2. பள்ளியில் நடைபெற்ற மும்முனைச் சந்திப்பு
3. தமிழ்மொழி வாரம்

## நடவடிக்கை 3

**பள்ளியில் நடந்த சிறுவர் தினக் கொண்டாட்டம் பற்றி ஓர் அறிக்கை எழுதுக.**



BT Year 6 5_Layout 1 10/2/2015 1:39 PM Page 169



# பாடம் 3 கூட்டுப்பணி

## வாசித்து எழுதுக.

**கூட்டுப்பணி அறிக்கை**

1. **நோக்கம்**
   பள்ளி வளாகத்தைச் சுத்தம் செய்வது
   பூச்செடிகள் நடுவது, மரம் நடுவது
   பசுமைத் திட்டம்

2. **நிகழ்வின் விபரங்கள்**
   நாள், கிழமை
   இடம், பள்ளி

3. **கலந்துகொண்டவர்கள்**
   ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள்

4. **குழுவாகப் பிரித்தல்**
   தேவையான உபகரணங்கள்
   மண்வெட்டி, செடிகள்
   ஒதுக்கப்பட்ட இடங்கள்

5. **இடைவேளை**
   தேநீர், பலகாரம்
   பணியைத் தொடருதல்

6. **முடிவு - சுத்தம்**
   பசுமையான காட்சி
   தலைமையாசிரியர் பாராட்டு
   பெற்றோர் மகிழ்ச்சி
   வீடு திரும்புதல்

## நடவடிக்கை 1

**கொடுக்கப்பட்ட விவரங்களைக் கொண்டு கூட்டுப்பணி தொடர்பான அறிக்கை ஒன்றனை எழுதுக.**





3.10.26 120 சொற்களில் நிகழ்ச்சியறிக்கை எழுதுவர்.


BT Year 6 5_Layout 1 10/2/2015 1:39 PM Page 170

## நடவடிக்கை 2

அ. **தலைப்புகளுக்கேற்ற குறிப்புகளை எழுதி நிகழ்ச்சியறிக்கை ஒன்றனை எழுதுக.**




ஆ. **உணவுச் சந்தை தொடர்பான குறிப்புகளைக் கொண்டு நிகழ்ச்சியறிக்கை ஒன்றனை எழுதுக.**



BT Year 6 5_Layout 1 10/2/2015 1:39 PM Page 171



# பாடம் 4 செய்யுளும் மொழியணியும்



## உவமைத்தொடர்களை அறிக.

**சூழல் 1**



நிறைமதி : அம்மா! இராவணனால் சிறையெடுத்துச் செல்லப்பட்ட சீதாபிராட்டி இருக்கும் இடத்தை அறிந்து வரக் கடல் கடந்து இலங்கை சென்றது அனுமன் தானே!

அம்மா : ஆமாம். அசோகவனத்தில் சீதையைக் கண்டு ஆறுதல் கூறி இராமன் தந்த கணையாழியை அன்னையிடம் தந்து, பதிலுக்கு அவரிடமிருந்து சூடாமணியைப் பெற்று வந்தார் அனுமன்.



நிறைமதி : அனுமனைக் கண்டதும் இராமன் மகிழ்ச்சி அடைந்திருப்பாரே அம்மா!

அம்மா : நிச்சயமாக நிறைமதி. **சூரியனைக் கண்ட பனி போல**, அவரின் அனைத்துத் துன்பங்களும் விலகியதாக உணர்ந்தார் அவர்.

**சூழல் 2**



பசுபதி : உன் நண்பன் மருதப்பனைப் பற்றிக் கேள்விப்பட்டாயா முத்தழகா?

முத்தழகன் : ஆமாம் பசுபதி. வேலையில்லாமல் சிரமப்படுகிறான் என நினைத்து மருதப்பன் தன் மாமன் மகனை வீட்டில் தங்க வைத்து அடைக்கலம் கொடுத்தான். ஆனால், அவனோ வீட்டில் ஆளில்லாத நேரம் பார்த்து விலை உயர்ந்த பொருள்களை எல்லாம் திருடிச் சென்றுவிட்டான்.



பசுபதி : பாவம் மருதப்பன். மாமன் மகன் நல்லவன் என்று எண்ணினான். ஆனால், அவனோ **பசுத்தோல் போர்த்திய புலி போல** நடந்து கொண்டான்.

4.10.4 ஆறாம் ஆண்டுக்கான உவமைத்தொடர்களின் பொருளை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

## சூழல் 3




### உவமைத்தொடரும் பொருளும்

| | | |
|---|---|---|
| **சூரியனைக் கண்ட பனி போல** | : | துன்பம் நீங்குதல் |
| **பசுத்தோல் போர்த்திய புலி போல** | : | நல்லவன் போல் நடிக்கும் தீய குணம் உள்ளவன் |
| **யானை வாயில் அகப்பட்ட கரும்பு போல** | : | ஒரு பொருள் சேதமடைவதைத் தடுக்க முடியாமை / பாதிப்பு ஏற்படுவது உறுதி |

### நடவடிக்கை 1

**சரியான உவமைத்தொடரை எழுதுக.**

1. வறுமையில் வாடிய முருகப்பனின் குடும்பத்தினர் மகன் வேலைக்குச் சென்றதும் மகிழ்ந்தனர்.
2. நண்பனின் வீட்டிலுள்ள நகைகளைக் கொள்ளையடித்துச் சென்றான் மருதன்.
3. சட்ட விரோதமான முறையில் இயங்கிய சேமிப்புத் திட்டத்தில் பணம் சேர்த்தனர்.

### நடவடிக்கை 2

**உவமைத்தொடர்களுக்கு ஏற்ப வாக்கியங்களை அமைத்து வாசித்திடுக.**

### தகவல் உலகம்

**சரியாகக் கூறுவோம்**

| தவறு | | சரி |
|---|---|---|
| இளனி | - | இளநீர் |
| உலந்து | - | உலர்ந்து |
| உந்தன் | - | உன்றன் |
| உடமை | - | உடைமை |
| ஒம்பது | - | ஒன்பது |
| கோடாலி | - | கோடரி |
| தேனீர் | - | தேநீர் |
| பேதம் | - | பேதமை |
| ஏழ்மை | - | ஏழைமை |
| சிகப்பு | - | சிவப்பு |
| முன்னூறு | - | முந்நூறு |
| வெங்கலம் | - | வெண்கலம் |
| முந்தாணி | - | முன்றானை |
| கோர்வை | - | கோவை |
| தாப்பாள் | - | தாழ்ப்பாள் |

BT Year 6 5_Layout 1 10/2/2015 1:39 PM Page 173

# பாடம் 5 இலக்கணம்

## வலிமிகும் இடங்களை அறிக. (த்து, ப்பு, ற்று)




➤ வன்தொடர்க் குற்றியலுகரச் சொற்களுக்குப் பின் வலிமிகும்.

**எடுத்துக்காட்டு** ➤

| | | | | |
|---|---|---|---|---|
| பத்து | + | காசு | = | பத்துக் காசு |
| விற்று | + | தந்தான் | = | விற்றுத் தந்தான் |
| தப்பு | + | கணக்கு | = | தப்புக் கணக்கு |
| சாக்கு | + | செய்தான் | = | சாக்குச் செய்தான் |
| அச்சு | + | தொழில் | = | அச்சுத் தொழில் |
| விட்டு | + | கொடுத்தாள் | = | விட்டுக் கொடுத்தாள் |

5.8.7 'க்கு, ச்சு, ட்டு, த்து, ப்பு, ற்று' என முடிவுறும் வன்தொடர்க் குற்றியலுகரத்தின் பின் வலிமிகும் என்பதை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

## நடவடிக்கை 1


**சேர்த்தெழுதுக.**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| குத்து | + சண்டை | = | | முத்து | + குவியல் | = | |
| பெற்று | + தருவாள் | = | | ஏற்று | + கொண்டார் | = | |
| உப்பு | + தண்ணீர் | = | | மாற்று | + சட்டை | = | |
| காப்பு | + கட்டினார் | = | | தோப்பு | + கரணம் | = | |
| பத்து | + பாட்டு | = | | தோற்று | + போனாள் | = | |

## நடவடிக்கை 2

**கோடிட்ட சொற்களைச் சேர்த்து எழுதுக.**

1. தோட்டத்தில் வண்ண மலர்கள் பூத்து + குலுங்கின.
2. மாணவர்கள் செம்புற்று + கன்றுகளை நட்டு வைத்து நீர் ஊற்றினர்.
3. நல்ல மனம் கொண்ட அப்பெரியவரைக் கோபக்காரர் எனத் தப்பு + கணக்குப் போட்டு விட்டோம்.
4. அத்தை வெளிநாட்டிலிருந்து முத்து + சரம் ஒன்றை வாங்கி வந்தார்.
5. பேரங்காடியில் மலிவு விலையில் விற்ற அனைத்துப் பொருள்களும் விற்று + தீர்ந்தன.
6. கீழே விழுந்து கன்றிப் போன அண்ணன் காலில் மூலிகை மருந்துகளால் பத்து + போட்டார் பாட்டி.
7. மறந்து வைத்துவிட்ட கொத்து + சாவியைத் தேடிக் கொடுத்தார் அம்மா.
8. பேச்சுப் போட்டியில் தோற்று + போன தன் நண்பனுக்கு ஆறுதல் கூறினான் சுந்தரம்.
9. பார்வை தெளிவாக இல்லாததால் விருந்தினர்களை உற்று + பார்த்தார் தாத்தா.
10. மாற்று + திறனாளிகளுக்கான விளையாட்டுப் போட்டிகளைக் கண்டு களித்தனர்.
11. கேள்வி பதில் அங்கத்துடன் நிகழ்ச்சி முற்று + பெற்றது.
12. கீழே விழுந்த முதியவரின் கைத்தடியை எடுத்து + கொடுத்தேன்.



BT Year 6 5_Layout 1 10/2/2015 1:39 PM Page 175



# தொகுதி 17 நம்மைச் சுற்றி அறிவோம்

## பாடம் 1 வாழ்க்கைத் தரம்

### பண்புடன் வாதிடுக.

மதிப்பிற்குரிய அவைத் தலைவர் அவர்களே, நீதியை நிலைநாட்ட வந்திருக்கும் நீதிமான்களே, என் சக மாணவக் கண்மணிகளே, எங்களுடன் எதிர்வாதம் புரிய வந்திருக்கும் தோழர்களே, உங்கள் அனைவருக்கும் முத்தான முத்தமிழ் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.




அன்பார்ந்த அவையோர்களே! உங்கள் அனைவரையும் வணங்குகின்றேன். காலத்தின் கட்டாயத்தையும் அறிவியலின் முன்னேற்றங்களையும் பார்த்தோமானால் கல்வியைத் தவிர்த்து வேறு பல கூறுகளும் மனிதர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துகின்றன. வசதிகளைத் தருகின்ற செல்வமும் சிறந்தது என்பது எனது முதல் கருத்தாகும். மனிதர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் ஆயுதம் செல்வமே என்று பணிவுடன் கூறிக் கொள்கிறேன். செல்வம் இருந்தால் எதனையும் நாம் வாங்க முடியும் என்பது எனது கருத்து.

1.10.9 தலைப்பை ஒட்டியோ வெட்டியோ பண்புடன் வாதிடுவர்.

BT Year 6 5_Layout 1 10/2/2015 1:39 PM Page 176

## நடவடிக்கை 1

**கொடுக்கப்பட்ட தலைப்பை வெட்டியோ ஒட்டியோ பண்புடன் குழுவில் வாதிடுக.**

தலைப்பு

1. விளம்பரங்கள் மனித வாழ்வை மேம்படுத்துகின்றன.
2. மாணவர்களிடையே ஏற்படும் கட்டொழுங்குச் சிக்கல்களுக்கு நண்பர்களே காரணம்.
3. அறிவியல் கண்டுபிடிப்புகள் மனித வாழ்விற்குத் துணை புரிகின்றன.
4. செல்வத்தினால் வாழ்க்கைத் தரம் உயர்கின்றது.
5. தொழிற்கல்வி மாணவர்களுக்குச் சிறந்தது.
6. சுயமுயற்சியே ஒருவரின் வெற்றிக்கு அடிப்படை.

## நடவடிக்கை 2

**அவையோரே, தயவுசெய்து, நன்றி, மன்னிக்கவும், தோழர்களே போன்ற பண்புச் சொற்களைப் பயன்படுத்திக் கொடுக்கப்பட்ட தலைப்பை ஒட்டியோ வெட்டியோ உரையாற்றுக.**

அ. தாய்மொழியைக் கற்பதால் மட்டுமே நற்பண்புள்ள மாணவர்களை உருவாக்க முடியும்.

**எடுத்துக்காட்டு :**

அவையோர்களே, தாய்மொழியைக் கற்பதன் மூலம் நம் மாணவர்கள் ஒழுக்கம், மரியாதை, பணிவு போன்ற நற்பண்புகளைக் கற்றுக் கொள்கின்றனர்.

ஆ. கல்வியே சிறந்த வாழ்வுக்கு வழிகாட்டி.

### தகவல் உலகம்

தொடரும் பொருளும்

- பஞ்சாய்ப் பறத்தல் - அலைந்து திரிதல்
- அத்தி பூத்தாற்போல - அரிய செயல்
- அடியற்ற மரம் போல - வீழ்தல்
- குட்டிச் சுவர் - பயனின்றி இருத்தல்
- கண்கட்டு வித்தை போல - மாயத்திரை
- சூரியனைக் கண்ட தாமரை போல - மகிழ்ச்சி
- நீர்மேல் எழுத்துப்போல - நிலையற்றது.

BT Year 6 5_Layout 1 10/2/2015 1:39 PM Page 177



பாடம்
2

# சுத்தம் பேணுவோம்



## வாசித்து அறிக.

மாணவர்களே! உங்கள் கைகளைப் பாருங்கள். நகங்களை வெட்டிச் சுத்தமாக வைத்திருப்பீர்கள் என்று எனக்கு நன்றாகவே தெரியும்.

மாணவர்களே, இன்று நகங்களைப் பற்றிச் சில விவரங்களை உங்களுக்குக் கூறப் போகிறேன். நகம் என்பது கை, கால் விரல்களின் நுனியில் வளரும் ஓர் உறுப்பு. ‘கெரோட்டீன்’ எனும் புரதப் பொருளாலான அமைப்பு. நகமும் சதையும் சந்திக்கின்ற நகக்கண் தோலிலிருந்து நகம் வளர்கின்றது. புதிய நகம் வளரும்போது பழைய நகம் உயிரற்றதாகிவிடும். இதனால்தான் நகத்தின் நுனியை வெட்டும்போது வலிப்பதில்லை. ஆனால், நகக் கண்ணில் அடிபட்டால் அதிகம் வலிக்கும். இதற்குக் காரணம், இங்குதான் நுண்ணிய இரத்தக் குழாய்களும் நரம்பு முனைகளும் அதிகம் உள்ளன. நகங்கள் விரல் நுனிகளுக்குப் பாதுகாப்பைத் தருகின்றன.

ஒரு நகம் ஒவ்வொரு வாரமும் 0.5 மில்லி மீட்டர் அளவில் வளர்கின்றது என்பது உங்களுக்குத் தெரியுமா? கால் விரல் நகங்கள் சற்று மெதுவாக வளருகின்றன. நகத்தின் இயல்பான வளர்ச்சிக்குப் புரதம், பயாட்டின், சுண்ணாம்புச் சத்து, துத்தநாகம், இரும்பு ஆகிய சத்துகள் தேவை. பால், முட்டை, மீன், இறைச்சி, வாழைப்பழம், கீரை வகைகளில் இந்தச் சத்துகள் நிறைய உள்ளன. அதனால், இந்த உணவுகளை நாம் தினசரி உணவில் சேர்த்துக் கொண்டால் நகங்கள் ஆரோக்கியமாக வளரும்.

அன்பானவர்களே, நகம் என்பது நோய் காட்டும் கண்ணாடி என்பது உங்களுக்குத் தெரியுமா? ஆம், நகத்தின் நிறம், வடிவம் மாறுவதிலிருந்தும் நகத்தை அழுத்தி அதில் காணப்படும் இரத்த ஓட்டத்தைப் பார்த்தும் இரத்தச் சோகை, இருதய நோய், சுவாசப்பைக் கோளாறு, நீரிழிவு, கல்லீரல் பாதிப்பு என்று பல நோய்களையும் கண்டுபிடித்துவிட முடியும்.

நாள்தோறும் நாம் பல பொருள்களைத் தொடுகிறோம். அவற்றிலிருந்து அழுக்கும் கண்ணுக்குத் தெரியாத நுண்கிருமிகளும் கை விரல்களில் ஒட்டிக் கொள்கின்றன. அசுத்தமான நகங்களால் நமக்குப் பல்வேறு நோய்த் தொற்றுகள் ஏற்படுகின்றன. வாந்தி, வயிற்றுப் போக்கு, குடற்புழு போன்ற நோய்களுக்கு முக்கியக் காரணம் அழுக்கான நகங்களே. நகம் கடிப்பது, விரல்களை வாய்க்குள் வைப்பது


2.3.12 சுகாதாரம் தொடர்பான பனுவல்களைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசிப்பர்.

BT Year 6 5_Layout 1 10/2/2015 1:39 PM Page 178

போன்ற பழக்கங்கள், நகத்தின் அழுக்கில் உள்ள கிருமிகள் உடலுக்குள் எளிதாகச் சேர்ந்துவிட வழிவகுக்கும்.

மாணவர்களே, நாம் அனைவரும் விரல்களைச் சுத்தமாகவும் நகங்களை ஒட்டவெட்டியும் வைத்துக் கொள்வது அவசியமாகும். நகத்தினால் வரும் நோய்களில் முதன்மையானது நகச்சுற்று. அசுத்தமான நகம், நகத்தில் அடிபடுவது, நகத்தை வெட்டும்போது சதையோடு வெட்டுவது, நகம் கடிப்பது போன்றவற்றால் கிருமிகள் நகத்தைச் சுற்றியுள்ள தோலையும் தசையையும் தாக்கும். இதன் விளைவாக நகத்தைச் சுற்றி வீக்கமும் வலியும் உண்டாகி நகச்சுற்று ஏற்படும்.

நகச்சுற்றுக்குப் பாட்டி வைத்திய முறையில் எலுமிச்சைப் பழத்தை விரலில் செருகி வைப்பார்கள். சிலர் பனிக் கட்டிகளை நெகிழிப் பையில் வைத்து ஒத்தடம் கொடுப்பர். நகப் பாதுகாப்பில் அக்கறை கொள்வதில் கவனம் செலுத்த வேண்டும். எனவே, கைகளைச் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். கைகளின் முன்புறம், பின்புறம், விரல்களுக்கு இடையில், மணிக்கட்டு ஆகிய பகுதிகளைச் சுத்தமாகக் கழுவ வேண்டும். உலர்ந்த சுத்தமான துண்டுகளைப் பயன்படுத்தி ஈரத்தைத் துடைக்க வேண்டும். நகங்களின் சுத்தம் நல்ல ஆரோக்கியத்தின் அடையாளம் என்பதை அனைவரும் உணர வேண்டும்.



## நடவடிக்கை 1

**வினாக்களுக்கு விடை கூறுக.**

1. நகம் என்பது என்ன?
2. ஏன் நகத்தின் நுனியை வெட்டும்போது வலிப்பதில்லை?
3. நகத்தின் வளர்ச்சிக்குத் தேவையான சத்துகள் யாவை?
4. ஏன் நகத்தை நோய் காட்டும் கண்ணாடி என்கிறோம்?
5. நோய்த் தொற்றுகள் ஏற்பட எவ்வாறு நகங்கள் காரணமாகின்றன?
6. நகச்சுற்று வருவதற்கான காரணங்கள் யாவை?
7. கைகளை எவ்வாறு சுத்தப்படுத்த வேண்டும்?

**அருஞ்சொற்கள்**

- நுனியில்
- பாதுகாப்பு
- இயல்பு
- தானியம்
- இரத்தச் சோகை
- புகுந்துவிட்டது
- முதன்மையானது

## நடவடிக்கை 2

**சொற்களுக்கு ஏற்ற வாக்கியம் அமைத்திடுக.**

சுத்தம் | வளர்ச்சி | எளிதாக | நகக்கண் | கிருமிகள்

BT Year 6 5_Layout 1 10/2/2015 1:39 PM Page 179




# பாடம் 3 உலக அதிசயங்கள்

## வாசித்து எழுதுக.

வணக்கம். அன்பான நேயர்களே, இன்றைய உலகச் செய்திகளை ஒரு கண்ணோட்டமிடுவோம். உலக அதிசயங்கள் பற்றியதுதான் இன்றைய நமது செய்தி.

நேயர்களே! உலக அதிசயங்களை முதன்முதலில் பட்டியலிட்டவர்கள் கிரேக்க சுற்றுலாப் பயணிகள். வரலாற்றுப் பூர்வமாக முதன்முதலில் பதிவு செய்தவர்கள் ‘ஹெரோடோட்டஸ்’. ஆரம்பத்தில் அவரவர் தங்கள் விருப்பப்படி உலக அதிசயங்களைப் பட்டியலிட்டனர். நீண்ட காலத்துக்குப் பிறகு கனடா நாட்டைச் சேர்ந்த பெர்னார்ட் வெபர் என்பவரால் புதிய ஏழு அதிசயங்கள் என்ற அறக்கட்டளை உருவானது. இவ்வறக்கட்டளையின்படி உலக அதிசயங்கள் மனிதனால் உருவாக்கப்பட்டிருக்க வேண்டும்; 2000ஆம் ஆண்டுக்குள் உலக மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்க வேண்டும்; தொடர்ந்து, பாதுகாக்கப்பட்டதாக இருக்க வேண்டும் என்ற நிபந்தனைகள் விதிக்கப்பட்டன. உலகம் முழுவதிலும் இருந்து 177 பரிந்துரைகள் வந்தன. அவற்றுள் கடைசிச் சுற்றுக்கு 21 இடங்கள் போட்டிக்கு உட்படுத்தப்பட்டன.



உலக மக்களின் வாக்குகள் அடிப்படையில் புதிய உலக அதிசயங்களாக 7.7.2007ஆம் ஆண்டு அவை அறிவிக்கப்பட்டன. தாஜ்மஹால் ஏழு அதிசயங்களில் ஒன்றானது. இ∴து இந்தியாவின் ஆக்ரா நகரில், யமுனை நதிக்கரையில் அமைந்துள்ளது. முகலாய மன்னர் ஷாஜஹான் அவர்களால் தம் மனைவி மும்தாஜின் நினைவாக வெள்ளைப் பளிங்குக் கற்களால் கட்டப்பட்டதுதான் தாஜ்மஹால்.



அடுத்ததாக, சிசென் இட்ஸா. இது மெக்சிகோ நாட்டில் யுகாட்டன் எனும் இடத்தில் அமைந்துள்ள தொல்லியல் களம். மாயன் நாகரிக காலத்தைச் சேர்ந்த இது கொலம்பஸுக்கு முந்தைய காலத்தைச் சேர்ந்தது.

3.6.4 செய்தியில் உள்ள முக்கியக் கருத்துகளைச் சரியாகவும் தெளிவாகவும் குறிப்பெடுத்துக் கோவையாக எழுதுவர்.

BT Year 6 5_Layout 1 10/2/2015 1:40 PM Page 180

இதனையடுத்து இயேசு கிறிஸ்து சிலை - பிரேசில் நாட்டின் ரியோ டி ஜெனிரோ நகரில் 2,333 அடிகள் கொண்ட கார்கோவடா மலை மீது இந்தச் சிலை அமைந்துள்ளது. இது 125 அடிகள் உயரமும் 127 அடிகள் அகலமும் உடையதாகும்.






கொலோசியம் அரங்கம் - இத்தாலியில் ரோம் நகரில் உள்ள எக்யூலைன், பலாட்டைன் ஆகிய மலைகளுக்கு இடையே கட்டப்பட்டுள்ளது. 80 நுழைவாயில்களுடன் நூற்றுக்கும் மேற்பட்ட ஜன்னல்களுடன் நான்கு அடுக்குகளில் அமைந்திருந்தது. கி.பி 72இல் வெஸ்பாசியன் என்ற ரோம் நகரப் பேரரசரால் தொடங்கப்பட்ட இப்பணி கி.பி 80ஆம் ஆண்டில் அவரது மகன் டைட்டஸ் காலத்தில் முழுமை பெற்றது.

நேயர்களே, அடுத்ததாகச் சீனப் பெருஞ்சுவர். சீனாவின் வடக்கு எல்லைப் பகுதியில் இ∴து உள்ளது. எதிரிகளின் குதிரைப் படைகளைத் தடுப்பதற்காக கி.மு 221இல் சிறுசிறு தடுப்புகளாகக் கட்டப்பட்டது. பிற்காலத்தில் வந்த அரசர்கள் அந்தத் தடுப்புகளுக்கு இடையே சுவர்களை எழுப்பிக் கொண்டே செல்ல 1368ஆம் ஆண்டில் பிரமாண்டமான அரணாக அது மாறிவிட்டது. இச்சுவரின் நீளம் 21,196 கிலோ மீட்டர் ஆகும்.





அடுத்தபடியாக இடம் பிடித்திருப்பது மச்சுபிச்சு. 'பெரு' நாட்டின் 'காஸ்கோ' நகரிலிருந்து 80 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. தங்களின் தலைநகராக விளங்கிய 'காஸ்கோ' நகரை ஸ்பானியர்களிடம் இழந்த பின்னர் காடுகளுக்குள் தப்பி ஓடிய 'இன்கா' மக்கள் உருவாக்கிக் கொண்ட நகரம். அடர்ந்த காட்டில் அமைந்துள்ள இந்த நகரத்தின் கட்டடங்கள் 1450ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டிருக்கலாம் என ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

இறுதியாக நேயர்களே, ஏழு அதிசயங்களில் இடம் பெற்றிருப்பது 'பெட்ரோ'. ஜோர்டான் நாட்டின் தலைநகரான ஏமனுக்குத் தெற்கே 262 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ள தொல்லியல் நகரம் பெட்ரா. கி.மு. 6ஆம் நூற்றாண்டில் 'நெபாடியர்கள்' எனும் பழைமையான இனத்தைச் சேர்ந்த அரேபியர்களால் இது கட்டப்பட்டது.



பெட்ரா எனும் கிரேக்க சொல்லுக்குப் பிளவுபட்ட பாறை என்று பொருள். பெயருக்கேற்ப மலைகளைக் குடைந்து உருவாக்கப்பட்ட பிரமாண்டமான குகைக் கோயில்கள்தான் இந்த நகரின் அதிசயம்.

சரி நேயர்களே, இவைதான் இன்றைய உலகச் செய்திகளின் கண்ணோட்டம். மீண்டும் சந்திக்கும் வரை உங்களிடமிருந்து விடைபெறுபவர் புகழேந்தி பாரதி. நன்றி, வணக்கம்.

## நடவடிக்கை 1

**செய்தியில் கூறப்பட்ட முக்கியக் கருத்துகளைக் கோவையாக எழுதுக.**

### தகவல் உலகம்

**பண்டைய உலக அதிசயங்கள்**
- கிசாவின் பெரிய பிரமிட்
- பபிலோனாவின் தொங்குத்தோட்டம்
- ஒலிம்பியாவின் ஸேயுஸ் சிலை
- ஆர்ட்டெமிஸ் கோயில்
- மௌசோல்லொஸின் மௌசோலியம்
- ரோடொஸின் கொலோசஸ்
- அலெக்சாந்திரியாவின் கலங்கரை விளக்கம்

## நடவடிக்கை 2

**வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. உலக அதிசயங்களைக் கண்டறிந்த விதத்தை எழுதுக.
2. ஏழு அதிசயங்கள் எனும் அறக்கட்டளையின் நிபந்தனைகள் என்ன?
3. சீனப் பெருஞ்சுவரின் சிறப்பு அம்சங்கள் யாவை?
4. ‘இன்கா’ மக்கள் உருவாக்கிய நகரம் எங்கு அமைந்துள்ளது?
5. பிளவுபட்ட பாறை எனும் பொருள் கொண்ட இடத்தின் சிறப்பை எழுதுக.
6. பண்டைய உலக அதிசயங்களின் சிறப்புகளைக் கண்டறிந்து எழுதுக.

## நடவடிக்கை 3

**தலைப்புகளுக்கேற்ப முக்கியக் கருத்துகளைக் கோவையாக எழுதுக.**

1. சுயமாகக் காய்கறிகள் பயிரிடுவதால் ஏற்படும் நன்மைகள்.
2. குடும்ப உறவுகள் ஒன்றுகூடும் நிகழ்வின் பயன்கள்.

### சிந்தனைக்கு

சினம் அன்பை அழிக்கும். கர்வம் அடக்கத்தைக் கெடுக்கும். விவேகம் வாழ்வைக் கொடுக்கும்.

மற்றவர்களை மகிழ்விப்பதால் உண்டாகும் உண்மையான மகிழ்ச்சி உள்ளத்தைத் தூய்மைப்படுத்தும்.

BT Year 6 5_Layout 1 10/2/2015 1:40 PM Page 182



பாடம் 4

# செய்யுளும் மொழியணியும்



## திருக்குறளின் பொருளை அறிக.

அன்பு மாணவர்களே!
இன்று உங்கள் அனைவருக்கும் மிகவும் மகிழ்ச்சியானதொரு நாள். நேற்று நான் கொடுத்த சிறுகதையின் ஆரம்பத்தைப் படித்துவிட்டுச் சிறப்பாக எழுதி முடித்துள்ளீர்கள் அதற்காக உங்கள் அனைவருக்கும் என் மனமார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உங்கள் அனைவரின் கற்பனை வளத்தைப் படித்துப் பூரித்துப் போனேன். நான் கற்பித்த முறையைச் சிறப்பாகச் செவிமடுத்துள்ளீர்கள் என்று உங்கள் சிறுகதைப் படைப்பு நன்கு புலப்படுத்துகின்றது. உங்களின் கேட்டல் திறன் நன்கு பயனளித்துள்ளது. பார்த்தீர்களா! அதுவே உங்களின் படைப்பாற்றலுக்கு உறுதுணையாக இருக்கிறது. அனைத்துச் செல்வங்களிலும் சிறந்த செல்வம் செவிச் செல்வமே. அதனை நன்கு பயன்படுத்தினால் மற்ற அனைத்துச் செல்வங்களையும் அடைந்துவிடலாம் என்பதற்கு உங்களின் சிறுகதைப் படைப்புகளே சிறந்ததொரு உதாரணமாகும்.

மாணவர்களே! இச்சிறுகதையை நீங்கள் எழுதிச் சென்ற விதம் மிகவும் அருமையாக இருக்கின்றது. இரண்டு நண்பர்களின் பாசத்தையும் நேசத்தையும் அழகான வருணனையுடன் எழுதி முடித்த உங்கள் அனைவரையும் பாராட்டியே ஆக வேண்டும்.

இணைபிரியாத் தோழர்கள் இருவருக்கிடையில் ஏற்பட்ட சிறு சண்டையில் ஆரம்பித்த மனக்கசப்பு பிறகு புதியதொரு திருப்புமுனையில் கதை ஓட்டத்தைக் கொண்டு சென்ற செண்பகம் குழுவினர் மிகவும் திறமைசாலிகள். நல்ல சிறுகதை எழுதும் ஆற்றல் இப்பொழுதே உங்கள் படைப்பில் வெளிப்படுகின்றது.

என்னதான் மனக்கசப்பு ஏற்பட்டாலும் தனது நண்பனுக்குத் துன்பம் வந்தபோது அக்கணமே ஓடிச் சென்று உதவி செய்து உயிர்ப் பிச்சை அளித்ததுபோல இரத்த தானம் செய்து நண்பனைக் காப்பாற்றிய சூழல் இக்கதையில் உச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. கதையின் திடீர் திருப்பமே அங்கிருந்துதான் ஆரம்பிக்கின்றது என்பதைப் படிப்பவர் நிச்சயம் அறிவர்.

4.6.6 — ஆறாம் ஆண்டுக்கான திருக்குறளின் பொருளை அறிந்து கூறுவர்; எழுதுவர்.

மல்லிகைக் குழு மாணவர்கள் அனைவரும் தனிப்பட்ட உத்தி முறையைக் கையாண்டு இச்சிறுகதையை அழகாக வடித்துள்ளீர்கள். கதையின் இறுதிப் பகுதியில் நண்பர்கள் இருவரும் கண்ணீர் விட்டு மனம் திறந்து உரையாடுவது என் கண்களையே குளமாக்கிவிட்டன. உங்களின் படைப்பாற்றலுக்கு இத்துணைப் பலம் எங்கிருந்து வந்ததோ!



தாமரைக் குழு மாணவர்களும் சளைத்தவர்கள் அல்லர் என நிரூபித்து விட்டனர். நண்பர்கள் இருவருக்கிடையிலான நட்பு, இடையில் ஏற்படும் கோபம், சண்டை, பிரிவு , மீண்டும் நண்பனுக்காக உயிரையும் கொடுப்பான் தோழன் எனும் கருத்தைக் கற்பனையில் எழுதியுள்ளனர் என்றாலும் அனைத்தும் உயிரோட்டமாகவே அமைந்துள்ளன. உங்கள் அனைவரின் திறமைகளைப் பாராட்டி என் அன்புப் பரிசாக பினாங்கு சு. கமலா எழுதியுள்ள இளையோர் கதைகள் எனும் நூலைப் பரிசாக அளிக்கிறேன். எழுத்துப் படைப்பாற்றலை வளர்க்க நிறைய எழுதுங்கள், உங்கள் முயற்சியைத் தொடருங்கள். வாழ்த்துகள்! வாழ்க!

## திருக்குறளும் பொருளும்

- செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்
  செல்வத்துள் எல்லாம் தலை. (411)

– ஒருவர் அடையத்தகுந்த செல்வங்களுள் சிறந்த செல்வம் செவிவழி பெறும் அறிவுச்செல்வமாகும். அவ்வறிவுச் செல்வம் மற்றச் செல்வங்களைவிடச் சிறந்ததாகக் கருதப்படுகின்றது.

- உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
  இடுக்கண் களைவதாம் நட்பு. (788)

– உடுத்திய ஆடை நழுவும்போது ஒருவருடைய கை அவரறியாமல் உடனே ஆடையை இழுத்து மானத்தைக் காப்பது போன்று நண்பருக்குத் துன்பம் வந்த கணமே ஓடிச்சென்று அதனைப் போக்குவதே நட்பாகும்.

### நடவடிக்கை 1

**திருக்குறள்களின் பொருளை அறிந்து மனனம் செய்து கூறுக.**
**முறையான வரி வடிவத்தில் எழுதுக.**

BT Year 6 5_Layout 1 10/2/2015 1:40 PM Page 184



# பாடம் 5 இலக்கணம்

## விகாரப் புணர்ச்சியில் கெடுதல் அறிக.




➤ ‘பத்து’ எனும் நிலைமொழியுடன் ஒன்று முதல் பத்து வரையிலான வருமொழி எண்ணுப்பெயர் இணைதல்.

எடுத்துக்காட்டு ➤
பத்து + ஒன்று = பதினொன்று
பத்து + பத்து = பப்பத்து

## நடவடிக்கை 1

**சேர்த்தெழுதுக**

| | | |
|---|---|---|
| பத்து + இரண்டு = | பத்து + ஐந்து = | பத்து + எட்டு = |
| பத்து + மூன்று = | பத்து + ஆறு = | பத்து + ஒன்பது = |
| பத்து + நான்கு = | பத்து + ஏழு = | பத்து + பத்து = |

5.7.4 விகாரப் புணர்ச்சியில் கெடுதல் பற்றி அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

BT Year 6 5_Layout 1 10/2/2015 1:40 PM Page 185

## நடவடிக்கை 2

**எண்ணுப்பெயர்ப் புணர்ச்சிச் சொற்களைக் கண்டறிந்து பிரித்து எழுதுக.**

1. அம்மா பதினான்கு மீட்டர் நீளமுள்ள துணியை வாங்கி வந்தார்.
2. பதின்மூன்று மாணவர்கள் குளத்தில் நீச்சல் பழகினர்.
3. பன்னிரண்டு மாதங்கள் கொண்டது ஒரு வருடம்.
4. பதினேழு பேருந்துகள் சாலையோரம் நிறுத்தப்பட்டிருந்தன.
5. பத்தொன்பது பழங்களைச் சமமாகப் பங்கிடுவது எப்படியென ஆசிரியர் கேட்டார்.
6. பதினெட்டு என்று எண்ணிடப்பட்ட அறைக் கதவைத் திறந்து பார்க்கச் சொன்னார் ஆசிரியர்.
7. பதினாறு மாணவர்கள் பள்ளியைப் பிரதிநிதித்து விளையாடச் சென்றனர்.




## நடவடிக்கை 3



**வினாக்களை வாசித்து விடைகளைச் சொற்களால் எழுதுக.**

1. மாமா சந்தையில் இருபது தேங்காய்களை வாங்கி வந்தார். அவற்றில் மூன்று தேங்காய்களை அண்டை வீட்டாருக்குக் கொடுத்தார். மாமாவிடம் உள்ள தேங்காய்கள் எத்தனை?
2. அரங்கத்தில் நூறு நாற்காலிகள் இரு நிறங்களில் அடுக்கப்பட்டன. அவற்றுள் எண்பத்து ஒன்பது வெள்ளை நிற நாற்காலிகள். மீதம் உள்ள நீல நிற நாற்காலிகள் எத்தனை?
3. இனியனும் குமாரும் ஆளுக்கு முப்பது கோலிகள் வாங்கினர். இருவரும் அனைத்துக் கோலிகளையும் சிறு கூடையில் போட்டனர். இனியனின் தம்பி அவற்றிலிருந்து நாற்பத்தாறு கோலிகளை எடுத்துக் கொண்டான். கூடையில் மீதமுள்ள கோலிகள் எத்தனை?

### சிந்தனைக்கு

- வாழ்வில் அணியாகவும் தாழ்வில் தக்க துணையாகவும் விளங்குவது கல்வி.
- எண்ணங்கள் எப்பொழுதும் தூய்மையானவையாகவும் எளிமையானவையாகவும் பிறருக்கு நன்மை தருவனவாகவும் இருக்க வேண்டும்.
- மூச்சு இருக்கும் வரை முயற்சி செய்து கொண்டிருப்பவனே மனிதன்.

## இடுபணி

நடவடிக்கை 1இல் உள்ள சொற்களில் ஐந்தனைத் தேர்ந்தெடுத்து உரையாடல் ஒன்றனைத் தயாரித்திடுக.




# தொகுதி 18 வளம் பெறுவோம்

## பாடம் 1 சீரான உணவுப் பழக்கம்



### குழுவில் கலந்துரையாடுக.




1.10.6 தலைப்பையொட்டிப் பண்புடன் உரையாற்றுவர்.




## நடவடிக்கை 1

**தலைப்பையொட்டிய கருத்துகளைப் பண்புடன் வகுப்பில் உரையாடுக.**

- சிறந்த புள்ளிகள் பெறலாம்.
- விடுப்பு இல்லாமல் பள்ளிக்குச் செல்லும் வாய்ப்பு.
- கற்றல் நடவடிக்கைகளில் சுறுசுறுப்பாக இயங்குதல்.
- தன்னாற்றலை வெளிப்படுத்த இயலும்.
- புத்தாக்கச் சிந்தனை வளரும்.

### சிந்தனைக்கு

- முயற்சிகள் தவறலாம். ஆனால், முயற்சி செய்யத் தவறாதே.
- செய்யும் தொழிலில் எதுவுமே சிறுமையானது கிடையாது. அது செய்யப்படும் விதத்தில்தான் அதன் பெருமை அடங்கியுள்ளது.
- நட்பையும் மகிழ்ச்சியையும் அனைவருக்கும் கொடுங்கள்.

## நடவடிக்கை 2

**கொடுக்கப்படும் தலைப்புகளில் பண்புடன் உரையாற்றுக.**

1. மாணவர்கள் தினசரி நாளிதழ்களை அவசியம் வாசிக்க வேண்டும்.
2. பாடநூல்கள் மாணவர்களுக்குப் பெரிதும் துணைபுரிகின்றன.
3. ‘நம் பள்ளி நம் வீடு’ என்ற கொள்கையை மாணவர்கள் அனைவரும் கடைப்பிடிக்க வேண்டும்.
4. சக நண்பர்களை மதித்து நடப்பது நமது உயர்ந்த பண்புகளில் ஒன்றாகும்.

## நடவடிக்கை 3

**தலைப்பில் கூறப்பட்ட கருத்துகளைப் பாகமேற்று உரையாற்றுக.**



# பாடம் 2 பறக்கும் பட்டம்

## கூர்ந்து வாசித்திடுக.

பட்டம் என்பது காகிதம், சில குச்சிகள், ஒரு வால், கொஞ்சம் நூல் சேர்த்த ஒரு பொழுதுபோக்கு விளையாட்டுப் பொருள் என்று எண்ணிவிடாதீர்கள். இன்றைய வானவியல் கண்டுபிடிப்புகள், விமானங்கள் போன்ற பல துறைகளின் முன்னேற்றத்திற்கு அடித்தளமாக விளங்கியது பட்டங்கள்தான்.

மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சீனாவில் பட்டம் விடுவது பழக்கமாக இருந்தது. நூல் அறுந்து கீழே விழுந்த வேறு ஒருவரின் பட்டத்தை நாம் பயன்படுத்தக்கூடாது. அஃது அவருடைய துன்பங்களை நாம் எடுத்துக் கொண்டதைப் போல ஆகிவிடும் என்பது சீனர்களின் பழங்கால நம்பிக்கை. சீனாவில்,விவசாயி ஒருவர் வயலில் வேலை செய்யும்போது, தமது தொப்பி காற்றில் பறந்துவிடாமல் இருக்க, ஒரு கயிற்றில் கட்டி வைத்தாராம். பலத்த காற்று வீசியதால், அந்தக் கயிற்றின் நீளம் அனுமதித்த தூரம் வரைக்கும் வானத்தில் அத்தொப்பி பறந்ததாம். இதுவே பட்டம் பிறக்கக் காரணமான சம்பவம் என்று சொல்லப்படுகிறது.

கதைகளை விடுத்து, வரலாற்று ஆதாரங்களைத் தேடினாலும் சீனாவில்தான் சான்றுகள் கிடைக்கின்றன. 2,500 ஆண்டுகளுக்கு முன்பு, சீன அரசர் ஒருவரின் கோட்டையை வேறொரு தேசத்தின் அரசர் சுற்றி வளைத்துவிட்டார். கோட்டைக்கு உள்ளிருந்து ஒரு பட்டம் மூலமாகவே உதவி கேட்டுச் செய்தி அனுப்பினார்கள். காற்றோடு போன பட்டம், பக்கத்துத் தேசத்து அரசரின் உதவியை அழைத்து வந்தது என்பது வரலாறு.



நம் மலேசியத் திருநாட்டில் திரெங்கானு மாநிலத்தில் வண்ணமயமான பட்டங்கள் செய்து பறக்க விடுகிறார்கள். பட்டம் விடும் போட்டியும் நடத்துகிறார்கள். இவ்வகையான பட்டங்களை 'வாவ்' என்று அழைக்கிறார்கள். இதனைக் காண வெளிநாட்டுச் சுற்றுப் பயணிகளும் நம் நாட்டிற்கு அதிகளவில் வருகின்றார்கள்.

2.7.2 கூர்ந்த வாசிப்பின் வழி தகவல்களைப் பெறுவர்.

## நடவடிக்கை 1

**பனுவலைக் கூர்ந்து வாசித்து வினாக்களுக்கு விடையளித்திடுக.**

1. வானவியல் கண்டுபிடிப்புகளுக்கு அடித்தளமானது எது?
2. பட்டம் பிறந்த வரலாற்றினை விவரித்துக் கூறுக.
3. வரலாற்று ஆதாரங்கள் எங்கு அதிகம் கிடைக்கின்றன?
4. எதிரியிடம் பிடிப்பட்ட அரசர் எவ்வாறு அடுத்த நாட்டு அரசரின் உதவியைப் பெற்றார்?
5. நம் நாட்டில் எந்த மாநிலத்தில் பட்டம் விடும் போட்டி நடத்தப்படுகிறது?

**அருஞ்சொற்கள்**

- வானவியல்
- அடித்தளம்
- சம்பவம்
- ஆதாரங்கள்
- அதிகளவில்
- துறைகள்
- தேசத்தின்

## நடவடிக்கை 2

**கூர்ந்து வாசித்துத் தகவல்களைப் பட்டியலிடுக.**

மனித நாகரிகத்தின் தொடக்கக் காலத்தில் உலகத்தின் அனைத்துப் பகுதிகளிலும் ஒரு பொருளை வாங்குவதற்கும் விற்பதற்கும் பண்டமாற்று முறையைப் பயன்படுத்தினர். இம்முறையில் ஒருவர் தம்மிடமுள்ள நெல்மணிகளைக் கொடுத்து மற்றொருவரிடமிருந்து வேறு ஒரு தானிய வகையைப் பெற்றுக் கொண்டனர். மீனைக் கொடுத்துப் பால், தயிர் போன்றவற்றைப் பிறரிடமிருந்து வாங்கினர்.

இம்முறையில் மிகுதியான பொருள்களைப் பண்டமாற்றம் செய்கையில் பல இடர்பாடுகள் ஏற்பட்டன. எனவே, ஏதாவது ஒரு பொருளை மையப் பொருளாகக் கொள்ளத் திட்டமிட்டனர். தொடக்கத்தில் மாடு ஒரு மையப் பொருளாக இருந்தது. அது ஹரப்பா நாகரிக காலமாக இருக்கலாம். இந்நாகரிக காலத்தில்தான் களிமண் தகடுகளில் காளை உருவம் மிகப் பெரியதாகக் காணப்பட்டது.



மாடு, மிகுந்த அளவில் பொருள்கள் வாங்குவதற்கு மட்டுமே பயன்பட்டது. குறைந்த அளவில் பொருள்கள் வாங்குவதில் சிரமங்கள் ஏற்பட்டன. ஆதலால், சோழிகளை மையப் பொருளாகப் பயன்படுத்தினர். இத்தகைய சோழிகளைக் கொண்டு குறைந்த அளவில் பொருள்கள் வாங்குவது எளிதாக இருந்தது. இம்முறையில் உயர்ந்த மதிப்பில் உள்ள பொருள்களை வாங்க வேண்டுமானால் மூட்டை மூட்டையாகச் சோழிகளைத் தர வேண்டி இருந்தது. அதுமட்டுமின்றி, சோழிகள் எளிதில் உடைந்து போகக்கூடிய தன்மை கொண்டவை. இதற்குப் பிறகு உலோகம் பயன்பாட்டுக்கு வந்துவிட்டது. எனவே, உலோகத் தகட்டை மையப் பொருளாகக் கொள்ள முடிவெடுத்தனர். உலோகங்களில் செம்பு, தங்கத்தைப் பயன்படுத்தத் தொடங்கினர்.

BT Year 6 6_Layout 1 10/2/2015 1:43 PM Page 190

## நடவடிக்கை 3

**கூர்ந்து வாசித்துப் பரிசோதனையை மேற்கொள்க.**

# சீனியை உண்ணும் தீக்குச்சி


### தேவையான பொருள்கள்

கண்ணாடிக் குடுவை, தண்ணீர், தீக்குச்சி, சீனி (சிறிதளவு), துணி, நூல்.




### செய்முறை

- மீன் தொட்டி போன்ற ஒரு கண்ணாடிக் குடுவையில் நீரை நிரப்பிக் கொள்ளவும்.
- தண்ணீர் தெளிவாகும் வரை காத்திருக்கவும்.
- ஒரு தீக்குச்சியை எடுத்துத் தண்ணீருக்குள் போடவும்.
- தீக்குச்சி குடுவையின் அடித்தளத்தில் சென்றுவிட்டதா?
- சீனியைச் சிறு துணியில் பொட்டலமாகக் கட்டவும்.
- அதை ஒரு நூலால் கட்டித் தண்ணீரின் உள்ளே தொங்கவிடவும்.
- நூலின் மறு நுனியைப் பிடித்துக் கொள்ளவும். தீக்குச்சி சீனியை உண்ண மேலே வருகின்றதா?



**காரணம் என்ன?**

பொட்டலத்தில் உள்ள சீனி தண்ணீரில் கரைகிறது. இதனால், அங்கே சீனி கரைசல் உருவாகிறது. சாதாரண நீரைவிடச் சீனி கரைசலின் எடை கூடுதல் என்பதால் ஈர்ப்பு விசை காரணமாகக் கீழ்நோக்கிக் கரைகிறது. அந்த இடத்தை நிரப்பத் தண்ணீர் மேல்நோக்கிச் செல்கிறது. எனவே, தீக்குச்சியும் மேலே உயர்கிறது.

### சிந்தனைக்கு

- பூனைக்கும் எலிக்குமான ஓட்டப் பந்தயத்தில் பெரும்பாலும் எலியே வெற்றி பெறுகின்றது. காரணம் பூனை உணவுக்கு ஓடுகிறது. எலி உயிருக்கு அஞ்சி ஓடுகிறது. தேவையை விடக் குறிக்கோளே திறமையை அதிகம் வெளிப்படுத்தும்.

## இடுபணி

இணையத்தளத்தைப் பயன்படுத்தி அறிவியல் தொடர்பான பகுதிகளைக் கூர்ந்து வாசித்திடுக; அவற்றைச் சேகரித்துத் திரட்டேடு செய்திடுக.



# பாடம் 3 பல பொருள் அறிவோம்



## வாசித்து எழுதுக.

1. பார் : 
   - **பாரினில்** வாழும் உயிர்கள் அனைத்தும் இறைவனின் படைப்புகள் எனப் போற்றப்படுகின்றன.
   - மாணவர்கள் தொடர்படங்களைப் **பார்த்துக்** கதை ஒன்றனை எழுதுவர்.

2. திங்கள் : 
   - **திங்கட்கிழமை**தோறும் எங்கள் பள்ளியில் சபைக்கூடுதல் நடைபெறும்.
   - பௌர்ணமியன்று அழகிய **திங்கள்** வானில் தோன்றியது.

3. படி : 
   - மின்தூக்கி பழுதடைந்துவிட்டதால் பலர் **படிகளில்** ஏறிச் சென்றனர்.
   - தேர்வில் சிறந்த புள்ளிகளைப் பெறத் தமயந்தி மீள்பார்வை நூல்களை வாங்கிப் **படித்தாள்**.

4. இசை : 
   - அக்காள் வீணையின் **இசையைக்** கேட்டு மெய்மறந்து போனாள்.
   - எங்களுடன் சுற்றுலா வருவதற்குத் தாத்தாவும் பாட்டியும் **இசைந்தனர்**.

5. மறை : 
   - அரிய கருத்துகளைக் கொண்ட திருக்குறள் தமிழர்களின் **மறை** எனப் போற்றப்படுகின்றது.
   - அண்ணனின் கதைப் புத்தகத்தை எடுத்துத் தம்பி **மறைத்து** வைத்தான்.

6. ஆறு : 
   - ஆதிமனிதர்கள் **ஆறு**களையே தங்களின் முக்கியப் போக்குவரத்தாகப் பயன்படுத்தினர்.
   - ஆசிரியர் **ஆறு** மாணவர்களை அறிவுப்புதிர்ப் போட்டிக்கு அழைத்துச் சென்றார்.

7. நகை : 
   - மேடையில் கோமாளி செய்த செய்கைகளைக் கண்ட இரசிகர்கள் **நகைத்தனர்**.
   - பொது நிகழ்ச்சிகளுக்கு அதிகமான **நகையை** அணிந்து செல்வது ஆபத்தான செயலாகும் என்று மக்கள் அறிந்திருக்க வேண்டும்.

3.4.20 — பல பொருள் தரும் சொற்களை வேறுபாடு விளங்க வாக்கியங்களில் அமைப்பர்.

BT Year 6 6_Layout 1 10/2/2015 1:43 PM Page 192

8. வேழம்
- **வேழம்** தன் தும்பிக்கையால் மரத்தை வேரோடு பிடுங்கியது.
- பொங்கலன்று வாசலில் மாவிலைத் தோரணத்துடன் **வேழம்** கட்டுவது தமிழர் பண்பாடு.

9. உடுக்கை
- அக்கிராமத்தில் குடுகுடுப்புக்காரன் **உடுக்கை** அடித்துக் குறி சொன்னான்.
- தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு இந்துக்கள் பாரம்பரிய **உடுக்கைகளை** வாங்குவதில் மும்முரம் காட்டினர்.

## நடவடிக்கை 1

**பல பொருள் தரும் சொற்கள் கொண்ட வாக்கியங்களை எழுதி வாசித்திடுக.**

## நடவடிக்கை 2

**சொற்களுக்குப் பல பொருள் தேடுக; பொருள் வேறுபாடு விளங்க வாக்கியம் அமைத்திடுக.**

| | சொல் | பொருள் | | சொல் | பொருள் |
|---|---|---|---|---|---|
| 1. | நாண் | கயிறு | 6. | பொறி | |
| | | வெட்கம் | | | |
| 2. | வலி | வலிமை | 7. | அன்னம் | |
| | | நோவு | | | |
| 3. | மெய் | உடல் | 8. | மாடு | |
| | | உண்மை | | | |
| 4. | பிடி | பிடிப்பது | 9. | மதி | |
| | | பெண்யானை | | | |
| 5. | திரை | | 10. | மடி | |
| | | | | | |



# பாடம் 4 செய்யுளும் மொழியணியும்



## பழமொழிகளின் பொருளை அறிக.

### கதை 1

கடகம் எனும் ஊரில் மிருகண்டு என்பவரும் மருத்துவதி எனும் அவரது மனைவியும் வாழ்ந்தனர். இருவரும் இல்லை என்று சொல்லாமல் வருவோர்க்குத் தங்களால் இயன்ற உதவிகளைச் செய்து உபசரித்து வந்தனர். இத்தம்பதியினருக்குக் குழந்தைகள் இல்லை. புத்திர பாக்கியம் வேண்டி இறைவனை வணங்கித் துதித்தனர்.



ஒருநாள் மிருகண்டு வெளியில் சென்றிருந்த சமயம், அவரது வீட்டிற்குத் துறவிகள் சிலர் பசியோடு வந்தனர். அவர்களைக் கண்ட மருத்துவதி இன்முகத்துடன் வரவேற்று உணவு பரிமாறினாள். இறைபக்தர்கள் உணவை உண்பதற்கு முன் “எங்களுடன் ஒன்றாக அமர்ந்து உண்ண உமது புத்திரனைக் கூப்பிடு,” என்றனர். அதைக் கேட்ட மருத்துவதி வேதனையுடன் கண்ணீர் மல்க, “அடியவளுக்குப் புத்திரனில்லையே, நானென்ன செய்வேன்,” என்றாள். “புத்திரனில்லாத வீட்டில் யாம் உணவருந்தோம்!” என்று கூறி அவர்கள் வெளியேறிவிட்டனர்.




மிருகண்டு இல்லம் திரும்பியதும் நடந்தவற்றை மருத்துவதி கூறினாள். இருவரும் காட்டிற்குச் சென்று இறைவனை நோக்கித் தவம் புரிந்தனர். இவர்களின் தவ வலிமையைக் கண்டு மகிழ்ந்த இறைவன் மிருகண்டுவை நோக்கி, “புத்தியில்லாத நூறு வயதுள்ள புத்திரன் வேண்டுமா? அல்லது மிகுந்த புத்திசாலியான பதினாறு வயதுள்ள புத்திரன் ஒருவன் வேண்டுமா?” என்று

4.13.16 ஆறாம் ஆண்டுக்கான பழமொழிகளின் பொருளை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

கேட்டார். தம்பதிகள், புத்திசாலியான புத்திரன் ஒருவனையே விரும்பினார்கள். இறைவனும் அவர்களுக்கு வரமளித்து மறைந்தார்.

**அவனன்றி ஓரணுவும் அசையாது** அல்லவா! இறைவனின் அருளால் ஓர் அழகிய ஆண் குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்கு மார்கண்டேயன் என்று பெயர் சூட்டி மகிழ்ந்தனர்.

## கதை 2



தயாளன் தனித்து வாழ ஆசைப்படுபவன். திருமணத்திற்குப் பிறகு தன் பெற்றோரைப் பிரிந்து பட்டணத்திற்குத் தனிக்குடித்தனம் சென்றான். அடிக்கடி வேலை நிமித்தம் அவன் தன் மனைவியைத் தனியாகவே வீட்டில் விட்டுச் செல்வான். தனிமையைச் சிறிதும் விரும்பாத தயாளனின் மனைவி வேதனைப்பட்டாள். குடும்ப உறவுகளோடு கலந்து சேர்ந்து வாழ்வது சிறப்பு என்பதைத் தன் கணவனுக்கு உணர்த்தப் பாடுபட்டாள். இறுதியில் **தனிமரம் தோப்பாகாது** என்பதைத் தயாளன் உணரத் தொடங்கினான். வேலை இடமாற்றம் பெற்றுத் தன் பெற்றோரையும் தன்னுடன் பட்டணத்திற்கு அழைத்துக் கொண்டு மகிழ்ச்சியாக வாழத் தொடங்கினான்.

### பழமொழிகளும் பொருளும்

**அவனன்றி ஓரணுவும் அசையாது.**

உலகமும் அதிலுள்ள உயிர்கள் அனைத்தும் இறைவனின் பேராற்றலினாலேயே இயங்குகின்றன.

**தனிமரம் தோப்பாகாது.**

ஒரு மனிதன் தனித்து வாழாமல் சுற்றத்தாரோடும் உறவினரோடும் சேர்ந்து வாழ்வதே சிறந்த வாழ்வாகும்.

### சிந்தனைக்கு

- ஒருவருக்கு உபகாரம் செய்ய வேண்டும் என்றால் முதலில் தாய்க்குச் செய். ஒருவருக்கு மரியாதை செய்ய வேண்டும் என்றால் முதலில் தந்தைக்குச் செய்.
- உன் மீது நம்பிக்கை இருந்தால் தோல்விகூட உன்னை நெருங்க பயப்படும்.
- கவலைகள் ஒருபோதும் வெற்றியைத் தருவதில்லை. முயற்சிகள் மட்டும்தான்.



## நடவடிக்கை 1


**வாக்கியத்திற்கு ஏற்ற பழமொழியைக் கண்டறிந்து விளக்குக.**

1. உலகில் நடக்கும் எல்லாவற்றிற்கும் காரணம் இறைவனே.
2. பெற்றோர், உறவினர்கள், உடன்பிறந்தவர்களுடன் ஒற்றுமையாக வாழ்ந்தால் பல இன்னல்களைக் களையலாம்.



# பாடம் 5 இலக்கணம்

## வடமொழிச் சந்திகளை அறிக.




வடமொழித் தொடர்களில் நிலைமொழியின் ஈற்றில் குற்றொலி அல்லது நெட்டொலி இருந்து, வருமொழி குற்றொலி அல்லது நெட்டொலியில் தொடங்கினால் குற்றொலி மறைந்து நெட்டொலி தோன்றும்.

➤ நிலைமொழி ஈற்றில் ‘அ / ஆ’ + ‘உ / ஊ’ = ‘ஓ’ தோன்றும்.

எடுத்துக்காட்டு ➤

ஞான + உதயம் = ஞானோதயம்
சூரிய + உதயம் = சூரியோதயம்
சக + உதரன் = சகோதரன்

5.7.5 வடமொழிச் சந்தி இலக்கணம் பற்றி அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.



## நடவடிக்கை 1

**சேர்த்து எழுதுக.**

1. சூரிய + உதயம் = 
2. சக + உதரன் = 
3. சர்வ + உதயம் = 
4. சந்திர + உதயம் = 
5. சுந்தர + உபதேசன் = 
6. பாத + உதகம் = 
7. மகா + உற்சவம் = 
8. கங்கா + உத்பத்தி = 
9. பர + உபகாரம் = 
10. மந்திர + உபதேசம் = 



## நடவடிக்கை 2

**வாக்கியங்களில் கோடிட்ட சொற்களைப் பிரித்தெழுதுக. வாக்கியங்களை மீண்டும் எழுதி வாசித்துக் காட்டுக.**

1. நண்பர்களின் அறிவுரைகளால் போதைப் பொருளுக்கு அடிமையான மருதப்பன் ஞானோதயம் பெற்றான்.
2. பூங்காவில் அமர்ந்திருந்த கவிஞர், சந்திரோதயம் பற்றிய கவிதையை எழுதிப் பாடினார்.
3. பெற்றோரின் அறிவுரைகள் அனைத்தும் என்றுமே மந்திரோபதேசம் எனக் கடைப்பிடித்து வந்தான் சுதர்சனன்.



## நடவடிக்கை 3

**வாக்கியம் அமைத்திடுக.**

1. ஞானோதயம்
2. சூரியோதயம்
3. சகோதரன்
4. தயோர்ச்சிதன்

### சிந்தனைக்கு

- புறத்தில் உள்ள வறுமையைக் காட்டிலும் அகத்தில் உள்ள வறுமையே அபாயகரமானது.
- மனிதன் உணவின்றி 40 நாள்களும் நீரின்றி 3 நாள்களும் காற்றின்றி 3 நிமிடமும் உயிர் வாழலாம். ஆனால், நம்பிக்கையின்றி 3 நொடிகூட வாழ இயலாது.

### தகவல் உலகம்

**சொல்லும் வேர்ச்சொல்லும்**

- அலறல் - அலறு
- உழுதான் - உழு
- கற்க - கல்
- கேட்க - கேள்
- சிதறிய - சிதறு
- சுட்டது - சுடு
- சூடினான் - சூடு
- தாழ்வு - தாழ்
- நட்டான் - நடு
- தோற்றான் - தோல்வி
- உருக்கும் - உருக்கு
- கொய்து - கொய்

BT Year 6 6_Layout 1 10/2/2015 1:43 PM Page 197



# தொகுதி 19 தொழில்நுட்பமும் அறிவியலும்

## பாடம் 1 புத்தாக்கம்

### செய்திகளை வாசித்துக் கலந்துரையாடுக.




- ஸ்டீவ் ஜொப்ஸ் என்பவரின் அயரா உழைப்பில் தோன்றியதுதான் ஆப்பிள் எனும் கணினி நிறுவனம்.
- ஒரு புத்தாக்கச் சிந்தனைச் சிற்பியான இவர், பல நவீன தொலைபேசிகளையும் மென்பொருள் தொழில்நுட்பங்களையும் உருவாக்கினார்.
- ஒரு புதிய உருவாக்கத்தைப் பார்க்கும்போதுதான் மக்கள் அதன் தேவையை உணர்கின்றனர் என்பது இவரின் கருத்தாகும்.
- ஸ்டீவ் கண்டுபிடித்த பல தொழில்நுட்பச் சாதனங்களைச் சிறு கடைகளில் வைத்துப் பிரபலப்படுத்தினார்.
- அவர் உருவாக்கிய கணினிப் பொருள்களைப் பயனீட்டாளர்கள் வாங்கிப் பயன்படுத்த வழிசெய்தார்.

### நடவடிக்கை 1

**செய்தியில் கூறப்பட்ட விவரங்களில் முக்கியக் கருத்துகளைப் பட்டியலிட்டுக் கூறுக.**

1.4.9 செவிமடுத்தவற்றிலுள்ள முக்கியக் கருத்துகளைக் கூறுவர்.

## நடவடிக்கை 2

**படங்கள் கூறும் முக்கியக் கருத்துகளைக் கண்டறிந்து உரையாடுக. தொகுத்துக் கூறுக.**

அ.

எண்ணெயுடன் சேர்த்துக் காய்ச்சித் தலைக்குத் தேய்த்தால் தலைமுடி நன்கு வளரவும் வெப்பத்தைத் தணிக்கவும் உதவுவேன்.

இனிப்புச் சுவையும் குளிர்ச்சித் தன்மையும் கொண்டவன் நான்.


பொன்னாங்கண்ணி கீரை

உடலுக்குப் பிரகாசத்தையும் பொலிவையும் தரும் ஆற்றல் படைத்தவன் நான்.

பொன் + ஆம் + காண் + நீ என்ற நான்கு வார்த்தைகளின் சேர்க்கையே என் பெயர்.

தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் கண் தொடர்பான நோய்களைக் குணப்படுத்துவேன்.

துவையலாக அரைத்தும் உண்ணலாம். தோலில் ஏற்படும் நோய்கள் என 96 வகையான கண்ணோய்களைக் குணப்படுத்தும் வல்லமை படைத்தவன்.

ஆ.


வெந்தயக் கீரை

வெந்தயத்தை மண்ணில் தூவினால் நான்கு ஐந்து நாள்களில் முளைத்துவிடுவேன்.

மூளையின் செயல்திறனை அதிகரிப்பேன்; உடல் சோர்வை நீக்குவேன்.

சுண்ணாம்புச் சத்து அதிகம் உள்ளதால் கண், எலும்புகளுக்குச் சிறந்தவனாக விளங்குகிறேன்.

சிறிது கசப்புச் சுவை கொண்டவன். ஆனாலும், உணவுச் செரிமானக் குறைகளை நீக்குவேன்.

வயிறு தொடர்பான உபாதைகளைக் குணப்படுத்துவேன்.



# பாடம் 2 செல்லிடப்பேசி



## வாசித்து அறிக.

நம்மை வியக்க வைக்கும் அறிவியல் விந்தைகளில் செல்லிடப் பேசியும் ஒன்று. இதைப் பல்வகைப் பயன்பாட்டுக்கு உதவும் கருவியாகக் கண்டுபிடிப்பாளர்கள் அறிமுகப்படுத்தினர்.

இன்றைய அறிவியல் உலகம், தகவல் தொடர்புத் தொழில்நுட்பங்களின் மூலம் உன்னதமான பிணைப்பை உலக மக்களிடையே ஏற்படுத்தியுள்ளது.

கண்ணிமைக்கும் நேரத்தில் கடல் கடந்து பறக்கும் குரல் ஒலிகளின் ஒப்புயர்வற்ற செயல்பாடுகளுக்குச் செல்லிடப்பேசிகள் முக்கியப் பங்களிக்கின்றன. காடு, மேடு எல்லாம் உழைத்துக் களைத்துப் போன ஏழை மக்கள் வாழும் பகுதிகளில்கூடச் சந்தடியில்லாமல் நுழைந்து சாதனை படைத்து, அவர்தம் வாழ்க்கைத் தொடர்பை வலுவாக்கி வருவதும் இத்தகைய செல்லிடப்பேசிகளே!

செல்லிடப்பேசிகளின் பயன்பாட்டினை அறிந்து அவற்றைப் பயன்படுத்துவோரின் எண்ணிக்கையும் நாளுக்குநாள் அதிகரித்துக் கொண்டே இருக்கின்றன. இயற்கையான கதிர்வீச்சுகளிடையே அறிவியல் கண்டுபிடிப்புகளாகிய செல்லிடப்பேசிகளின் மூலம் வெளியாகும் கதிரியக்க அதிர்வுகள் மனிதர்களுக்குப் பலவித விளைவுகளை ஏற்படுத்துகின்றன.




செல்லிடப்பேசிகளின் ஒலிக் கம்பிகளிலிருந்து வெளியாகும் பாதுகாப்பற்ற நுண்ணலைக் கதிர்வீச்சுகள் பயனீட்டாளர்களின் மூளையிலும் ஊடுருவிச் செல்வதாகக் கண்டறிந்துள்ளனர். பெரியவர்களைவிடக் குழந்தைகளையே இக்கதிர்வீச்சுகள் அதிகமாகப் பாதிக்கின்றன. செல்லிடப்பேசிகளின் தீய விளைவுகள் பற்றிப் பல்வேறு நாட்டைச் சேர்ந்த அறிவியல் அறிஞர்களின் ஆய்வுகளில் தெரிய வந்துள்ளது.

கண்களுக்கு அருகில் செல்லிடப்பேசி கதிர்வீச்சு செல்லும்போது வெப்பநிலை சுமார் $3^{\circ}c$ அதிகரிப்பதால் கண்புரை நோய்கள் எளிதில் ஏற்படுவதை நிரூபித்துள்ளனர். மேலும், செல்லிடப்பேசியின் கதிர்வீச்சுகள் மூளையைப் பாதிப்பதனால்

2.3.௯ தகவல் தொடர்புத் தொழில்நுட்பம் தொடர்பான பனுவல்களைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசிப்பர்.

BT Year 6 6_Layout 1 10/2/2015 1:43 PM Page 200

வலிப்பு, மூளைப் புற்று நோய் போன்ற பாதிப்புகளும் ஏற்பட வாய்ப்புண்டு என்கின்றனர் ஆராய்ச்சியாளர்கள்.

எனவே, இக்கருவியைப் பயன்படுத்துவோர் பேசும்போது சற்றுத் தொலைவில் வைத்துப் பேசுவதும், வாய்ப்புகள் உள்ளபோது சாதாரணத் தொலைபேசிகளை அதாவது நிலப்பேசிகளைப் பயன்படுத்துவதும் நல்லது. வாகனங்களைச் செலுத்தும்போது கண்டிப்பாகச் செல்லிடப்பேசிகளைப் பயன்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும். அவசர அழைப்பென்றால், வாகனத்தைச் சாலை ஓரத்தில் நிறுத்திவிட்டுப் பேசலாம்.

செல்லிடப்பேசிகளால் ஏற்படும் விளைவுகளை அறிந்து அவற்றை அளவாகப் பயன்படுத்துவதை வழக்கமாக்கிக் கொள்ள வேண்டும்.

## நடவடிக்கை 1


**பனுவலில் கூறப்பட்ட முக்கியக் கருத்துகளை எழுதிடுக; வாசித்திடுக.**

## நடவடிக்கை 2

**செல்லிடப்பேசிகளால் ஏற்படும் நன்மை, தீமைகளைக் கருத்து வரைபடம் மூலம் எழுதி விளக்குக.**

## நடவடிக்கை 3

**இரு பொருளுக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை வரைபடம் மூலம் எழுதுக.**




### அருஞ்சொற்கள்

- காய்ச்சி
- தணிக்க
- பொலிவை
- சேர்க்கை
- கண்ணோய்
- செயல்திறன்
- செரிமானம்

### தகவல் உலகம்

பொருளுக்கேற்ற வினை மரபு

- சோறு உண்
- தீ மூட்டு
- கோலம் இடு
- படம் வரை
- பாட்டுப் பாடு
- தயிர் கடை
- கவிதை இயற்று
- விளக்கை ஏற்று
- நெல் தூற்று
- பழம் தின்னு
- மலர் கொய்
- இலை பறி
- கூரை வேய்




பாடம் 3

# படித்ததில் பிடித்தது

செய்தியை வாசித்து எழுதுக.

## மின்னஞ்சலை உருவாக்கிய தமிழருக்குப் பாராட்டு!

கோலாலம்பூர், மார்ச் 15 - மின்னஞ்சலைக் கண்டுபிடித்த அமெரிக்கத் தமிழரான திரு. வி. ஏ. சிவா அய்யாதுரை அவர்களுக்கு மலேசிய நிருவாகக் கழகத்தின் சார்பில் பாராட்டுவிழா தலைநகரிலுள்ள மலாயாப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது.





தற்சமயம் நாம் பயன்படுத்திக் கொண்டிருக்கும் மின்னஞ்சல் ஏறக்குறைய 32 வயதைத் தொட்டுள்ளது. சிறுவர் முதல் பெரியவர் வரை பயன்படுத்தும் மின்னஞ்சலை உருவாக்கியவர் வி.ஏ.சிவா அய்யாதுரை என்பவர்தான் என்பதில் நாம் அனைவரும் பெருமிதம் கொள்ள வேண்டும். இவர் சிறுவயது முதற்கொண்டே அமெரிக்காவில் வசித்து வருகின்றார். 1978ஆம் ஆண்டு அவர் மேல்நிலைப்பள்ளி மாணவராக இருந்தபோதே மின்னஞ்சலைக் கண்டுபிடித்துப் பயன்படுத்த ஆரம்பித்தார்.

1981ஆம் ஆண்டு மின்னஞ்சலை வெளியுலகுக்கு அறிமுகப்படுத்தினார். அதற்காக அவருக்கு அமெரிக்க அரசாங்கம் பல விருதுகளை வழங்கிக் கௌரவித்தது. பின்னர், அதனை மருத்துவப் பல்கலைக்கழகத்திற்கும் கற்றுக் கொடுத்து அவர்களிடம் ஒப்படைத்தார். சிவா அய்யாதுரை மின்னஞ்சல் கண்டுபிடித்த சமயத்தில் கணினி மென்பொருள்களின் காப்புரிமை பெற, சட்டத்தில் இடம் இல்லாத நிலை இருந்தது. அதனால், அவர் புகழ் உலகெங்கும் பரவத் தடையாக அமைந்தது. கால முன்னேற்றத்தில் பலரும் மின்னஞ்சலை உருவாக்கியவர்கள் என உரிமை கொண்டாடினர். இந்நிலை அவருக்குச் சவாலாகவே அமைந்தது எனலாம். எனினும், வி.ஏ.சிவா அய்யாதுரைதான் மின்னஞ்சலின் தந்தை என்பதில் கிஞ்சிற்றும்

3.5.13 செய்தி தொடர்பான கேள்விகளுக்குப் பதில் எழுதுவர்.

ஐயமில்லை. இன்று பரபரப்புடன் இயங்கிக் கொண்டிருக்கும் மின்னஞ்சல் வி.ஏ.சிவா அய்யாதுரையின் உழைப்பின் பயனே என்பதை நாம் அனைவரும் நினைவில் கொள்ள வேண்டும்.

(மூலம்: மலேசிய நண்பன் 23.11.2014)




இந்திய முன்னாள் அதிபர் மேதகு ஏபிஜே அப்துல் கலாம் அவர்களுடன் திரு.வி.ஏ.சிவா அய்யாதுரை.

## நடவடிக்கை 1

**வினாக்களுக்கு விடையளித்திடுக.**

1. பாராட்டுவிழா எங்கு, எதற்காக நடைபெற்றது?
2. மின்னஞ்சலின் வயது என்ன?
3. திரு. வி.ஏ. சிவா அய்யாதுரை எப்பொழுது மின்னஞ்சலைக் கண்டுபிடித்துப் பயன்படுத்தினார்?
4. வெளியுலகம் எப்பொழுது இச்சேவையை அறிந்தது?
5. திரு. வி.ஏ. சிவா அய்யாதுரை மின்னஞ்சல் கண்டுபிடித்த காலத்தில் ஏற்பட்ட இடையூறுகள் யாவை?
6. இவர் எதிர்நோக்கிய சவால்கள் என்னென்ன?
7. நாம் ஏன் இவரைப் பற்றிப் பெருமிதம் கொள்ள வேண்டும்?
8. மின்னஞ்சலின் மூலம் நாம் பெறும் நன்மைகள் யாவை?
9. இவருடைய கண்டுபிடிப்புக்கு அமெரிக்க அரசாங்கம் எவ்வாறு கௌரவிப்புச் செய்தது?

**அருஞ்சொற்கள்**

- காப்புரிமை
- சவாலாக
- பெருமிதம்
- வெளியுலம்
- உரிமை
- கருத்து
- மென்பொருள்

## நடவடிக்கை 2

**செய்தியில் காணப்படும் முக்கிய விவரங்களைத் தொகுத்து எழுதுக.**

**தகவல் உலகம்**

- கண்ணாடியைக் கண்டுபிடித்த நாடு சீனா.
- ராடாரைக் கண்டுபிடித்தவர் ராபர்ட் வாட்சன்.
- கண்பார்வையற்றோர் படிக்கும் பிரெயில் முறையைக் கண்டு பிடித்தவர் லூயி பிரெயில்.

BT Year 6 6_Layout 1 10/2/2015 1:43 PM Page 203



# பாடம் 4 செய்யுளும் மொழியணியும்



## திருக்குறள்களையும் பொருளையும் அறிக.

### கதை 1

“அங்கே என்ன கூட்டம்?” “யாரோ ஒருத்தன் தெருவுல வித்தை காட்டறான். கயித்து மேல் நடக்கப் போறானாம்!” இளைஞனுக்கு ஆர்வம் மிகுந்தது. அவனும் கூட்டத்தோடு சேர்ந்து முண்டியடித்துக் கொண்டு உள்ளே எட்டிப் பார்த்தான்.

தரையிலிருந்து சில அடி உயரத்தில் ஒரு நீண்ட கயிறு கட்டப்பட்டிருந்தது. கழைக்கூத்தாடி ஒருவர் அதன் மீது ஏறி நடப்பதற்குத் தயாராகிக் கொண்டிருந்தார். கூட்டத்தில் இருந்த எல்லோரும் அவரை ஆர்வத்துடன் பார்த்தபடி தங்களுக்குள் ஏதோ முணுமுணுத்துக் கொண்டிருந்தனர். இளைஞன் அந்தக் கயிற்றைக் குறுகுறுவெனப் பார்த்துக் கொண்டிருந்தான். இதில் ஒருவன் நடக்க முடியுமா என்று யோசித்துக் கொண்டிருக்கும்போதே கூத்தாடி கயிற்றின் மீது ஏறிவிட்டார். அவரது கையில் ஒரு குடை இருந்தது. குடை எதற்காக? மழை இல்லையே! கூத்தாடி குடையைச் சமநிலைக்காகப் பயன்படுத்தினார்.




அவர் கயிற்றின் மீது நடக்கும்போது விழுவதுபோல் தோன்றிய நேரமெல்லாம் குடையை அங்கும் இங்கும், மேலும் கீழும் நகர்த்தினார். கூட்டத்தில் இருந்த அனைவரும் ஆர்ப்பரித்துக் கைத் தட்டினர். இளைஞனை ஈர்த்தது கூத்தாடியின் குடைதான். இளைஞன் குடையைப் பயன்படுத்தி ஒரு பரிசோதனை செய்து பார்க்க நினைத்தான்.

சில நாள்களில் இளைஞன் ஒரு குடையைத் தயாரித்தான். குடையைப் பரிசோதிக்க எண்ணிச் சில மிருகங்களை அந்தக் குடையில் கட்டி உயரமான இடத்திலிருந்து கீழே இறக்கினான். குடை விரிந்து அழகாக கீழிறங்கியது. மிருகங்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை.

| 4.6.6 | ஆறாம் ஆண்டுக்கான திருக்குறளின் பொருளை அறிந்து கூறுவர்; எழுதுவர். |
|---|---|

BT Year 6 6_Layout 1 10/2/2015 1:43 PM Page 204



இளைஞன் மகிழ்ச்சி அடைந்தான். இரு கைகளிலும் ஒவ்வொரு குடையை வைத்துக் கொண்டு மரத்திலிருந்து குதித்தான். சின்னக் கீறல்கூட ஏற்படாமல் அழகாகத் தரையிறங்க முடிந்தது. இளைஞனின் ஆய்வு படிப்படியாக முன்னேறியது. உயரமான கட்டடத்தின் முதல் மாடி, இரண்டாவது மாடி, மூன்றாவது மாடி எனப் படிப்படியாக உயர்ந்தது.

ஒரு நாள், ஊர் மக்கள் அனைவரின் முன்னிலையிலும் மிகப் பெரிய கட்டடம் ஒன்றின் மீதேறித் தான் கண்டுபிடித்த விநோதமான குடையைக் கொண்டு கீழே குதித்தான் அந்த இளைஞன். குடை விரித்துப் பத்திரமாகக் கீழிறங்கினான். தன்னுடைய கண்டுபிடிப்புக்கு ‘பாராசூட்’ என்று பெயர் சூட்டினான் அந்த இளைஞன். அவன் பெயர் செபஸ்டியன். கிரேக்க மொழியில் ‘பாரா’ என்றால் எதிராக என்றும் ‘சூட்’ என்றால் விழுவது என்றும் பொருள். விழுவதற்கு எதிராகப் பாதுகாப்புத் தருவதால் அப்படி ஒரு பெயரை வைத்தான்.



செபஸ்டியன் என்ற அந்த இளைஞன் ‘பாராசூட்’ எனும் குடையை வடிவமைத்துத் தன்னையே ஒரு பரிசோதனை எலியாக மாற்றிக் கொண்டு உயிரைப் பணயம் வைத்து ஆய்வு நடத்தியதால், லூயி செபஸ்டியன் லெனொர்மன்ட் எனும் அந்த இளைஞன்தான் ‘பாராசூட்’ தந்தையாக அறியப்படுகிறான்.

## கதை 2

அறிவியல் உலகம் இன்று நம் உள்ளங்கையில் வந்துவிட்டது போன்று பல முன்னேற்றங்களும் அறிவியலாளர்களும் தெரிவிக்கின்றனர். சர்.சி.வி.இராமன் என்பவர் அறிவியல் ஆராய்ச்சித் துறையில் நிலையான இடம் பிடித்தவர். இவர் தமது பதினெட்டாவது அகவையிலேயே முதுகலைப் பட்டதாரியானார். வேங்கடராமன் என்னும் இயற்பெயரைக் கொண்ட இவர், இளம் வயதிலேயே அறிவியல் ஆராய்ச்சியில் ஆர்வம் கொண்டிருந்தார். ஓய்வு நேரங்களைப் பரிசோதனைக் கூடங்களிலேயே செலவு செய்தார்.

சர்.சி.வி.இராமன் கண்டுபிடித்த ‘இராமன் விளைவு’ தற்செயலாகக் கண்டுபிடிக்கப்பட்டதல்ல. ஏறத்தாழ ஏழு ஆண்டுகளாகத் தொடர்ந்து பொறுமையுடன் செய்த ஆய்வின் விளைவே அது.

1921 ஆம் ஆண்டின் கோடைக்காலத்தில் இவர் முதன் முதலில் ஐரோப்பாவிற்குக் கடல் பயணம் செய்த போதுதான் இந்த ஆய்வுகள் நடந்தன. ஆழ்கடலில் இருந்து வெளிப்பட்ட அழகிய நீல நிறம் இராமனின் கவனத்தைக் கவர்ந்தது. ஒளி ஊடுருவும் ஊடகங்களின் மூலக் கூறுகளால் ஏற்படும் ஒளிச் சிதறல் பற்றிய கருத்தியலையும் ஆய்வுகளையும் மேற்கொண்டார்.



பேராசிரியர் சர். சி.வி. இராமன் செய்த சோதனை, சிதறிய ஒளியானது படுகின்ற ஒளியிலிருந்து மாறுபட்டது என்பதைக் காட்டியது. இதுவே புதிய விளைவைக் கண்டுபிடிக்க வழிவகுத்தது.

வானமும் கடலும் ஏன் நீல நிறமாய்க் காட்சியளிக்கின்றன என்பதே சி.வி.இராமன் அவர்களின் ஆய்வாக இருந்தது. சூரியனிலிருந்து வெளியேறும் கதிர்களில் நீலநிறம் அதிகமாகச் சிதறல் அடைவதால்தான் இந்நிலை ஏற்படுகின்றது என்பதே அவரது ஆய்வின் முடிவாகும். எனவே, அந்த ஆய்வுக்கு 'இராமன் விளைவு' என்று பெயரிட்டனர்.

சர் சி.வி. இராமன் அவர்களுக்கு அறிஞர்கள் பலரிடமிருந்து பாராட்டுகளும், இங்கிலாந்து அரசின் உயர் விருதான 'சர்' பட்டமும் வழங்கப்பட்டன. உலகின் உயரிய பரிசான நோபல் பரிசு சர்.சி.வி. இராமனுக்குக் கிடைத்தது. நோபல் பரிசு பெற்ற முதல் இந்தியர் என்ற பெருமை சர்.சி.வி. இராமனையே சாரும். இந்தியர்கள் அறிவியலில் சளைத்தவர்களல்லர் எனும் நிலை உலக மக்களிடையே உருவாயிற்று. இவரது அரிய கண்டுபிடிப்புகளினால் 'மாட்சி', 'உரியூஸ்' போன்ற பதக்கங்களும் இவருக்கு அளிக்கப்பட்டன.

## திருக்குறள்களும் பொருளும்

**செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்**
**செயற்கரிய செய்கலா தார். (26)**

செய்வதற்கு அருமையான செயல்களைச் செய்யவல்லவரே பெரியோர். செய்வதற்கு அரிய செயல்களைச் செய்யமாட்டாதவர் சிறியோர்.

**அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்**
**என்னுடைய ரேனும் இலர். (430)**

அறிவுடையார் எல்லாம் உடையவரே ஆவர்; அறிவில்லாதவர் வேறு என்ன உடையவராக இருப்பினும் ஒன்றும் இல்லாதவரே ஆவர்.



### நடவடிக்கை 1

**திருக்குறளையும் அதன் பொருளையும் மனனம் செய்து கூறுக.**



### நடவடிக்கை 2


**திருக்குறளின் பொருள்களுக்கேற்பப் பொருத்தமான சூழலை உருவாக்கிக் கூறுக.**

**அருஞ்சொற்கள்**

- கழைக்கூத்தாடி
- சமநிலை
- நகர்த்தினார்
- விநோதம்
- முதுகலை
- தற்செயல்
- ஒளிச்சிதறல்

# பாடம் 5 இலக்கணம்

## விகாரப்புணர்ச்சியில் கெடுதல் அறிக.




➤ ஒன்று முதல் பத்து வரையிலான நிலைமொழியுடன் அதே வருமொழி எண்ணுப்பெயர் புணர்தல்.

எடுத்துக்காட்டு ➤

| | | | | |
|---|---|---|---|---|
| ஒன்று | + | ஒன்று | = | ஒவ்வொன்று |
| இரண்டு | + | இரண்டு | = | இவ்விரண்டு |

5.7.4 விகாரப் புணர்ச்சியில் கெடுதல் பற்றி அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

BT Year 6 6_Layout 1 10/2/2015 1:43 PM Page 207

## நடவடிக்கை 1

**சேர்த்தெழுதுக.**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| மூன்று | + | மூன்று | = | ____ | ஏழு | + | ஏழு | = | ____ |
| நான்கு | + | நான்கு | = | ____ | எட்டு | + | எட்டு | = | ____ |
| ஐந்து | + | ஐந்து | = | ____ | ஒன்பது | + | ஒன்பது | = | ____ |
| ஆறு | + | ஆறு | = | ____ | பத்து | + | பத்து | = | ____ |

## நடவடிக்கை 2

**சரியான எண்ணுப் பெயர்ப் புணர்ச்சிச் சொற்களைக் கொண்டு நிறைவு செய்க.**

இந்துமதி கடைக்குச் சென்றாள். கடையில் உள்ள பொருள்களை (1+1) ஆக எடுத்துப் பார்த்தாள். (2+2) பொருள்களின் விலை என்ன? என்று கடைக்காரரிடம் கேட்டாள். கடைக்காரர் விலையைக் கூறினார். (5+5) ஆக மிட்டாய்கள் நெகிழிப் பைகளில் அடைக்கப்பட்டிருந்தன. அவற்றில் சில பொட்டலங்களை எடுத்துக் கூடையில் போட்டுக் கொண்டாள். மேலும், (9+9) துண்டுகளாக வெட்டப்பட்ட அணிச்சலைக் கண்டாள். அதையும் எடுத்துக் கொண்டாள். பணம் செலுத்துமிடத்திற்குச் சென்றாள். அவள் வாங்கிய (10+10) பொருள்களின் விலைக்கான பணத்தைக் கொடுத்தாள். மன நிறைவுடன் வீட்டிற்குத் திரும்பினாள்.

### சிந்தனைக்கு

தேனீயிடம் ஒரு பறவை கேட்டது. "ஓய்வில்லாத கடின உழைப்பின்மூலம் நீ தேனைச் சேகரிக்கின்றாய். ஆனால், மனிதன் அந்தத் தேனை உன்னிடமிருந்து சுலபமாக எடுத்துக் கொள்கிறான். அதற்காக நீ வருந்துவதில்லையா?" அதற்குத் தேனீ, "இல்லவே இல்லை! ஏனென்றால், மனிதன் என்னிடமிருந்த தேனை மட்டும்தான் எடுக்க முடியும். ஆனால், தேனை உண்டாக்கும் கலையை ஒருபோதும் என்னிடமிருந்து திருட முடியாது," என்றுரைத்தது.

## நடவடிக்கை 3

**பிரித்து எழுதுக.**

1. நந்நான்கு = ____
2. அவ்வாறு = ____
3. பப்பத்து = ____
4. மும்மூன்று = ____
5. எவ்வேழு = ____
6. இவ்விரண்டு = ____
7. ஒவ்வொன்று = ____
8. ஐவைந்து = ____


BT Year 6 6_Layout 1 10/2/2015 1:43 PM Page 208



# தொகுதி 20 காரணங்களும் காரியங்களும்

## பாடம் 1 பண்புடன் உரையாடுக

### குழுவில் கலந்துரையாடுக.









| காரணம் | காரியம் |
| --- | --- |
| குறித்த நேரத்தில் பள்ளிக்குச் சென்று விடுவதால் | மாணவர்கள் அனைவரும் வாசிப்பு நேரத்தில் பங்கெடுத்துப் பயனடைந்தனர். |
| பணிபுரியும் இடத்தில் சிறப்பாக வேலை செய்ததால் | அப்பா சிறந்த பணியாளர் எனும் விருதைப் பெற்றார். |
| பள்ளிப் பாடங்களில் கவனம் செலுத்திப் படித்ததாலும் முறையாகப் பாடங்களை மீள்பார்வை செய்ததாலும் | அதிகமான மாணவர்கள் தேர்வில் சிறந்த தேர்ச்சியினைப் பெற்றுப் பள்ளிக்கும் பெற்றோருக்கும் பெருமை சேர்த்தனர். |

1.10.8 காரணகாரிய விளக்கங்களோடு தன் கருத்துகளைப் பண்புடன் எடுத்துரைப்பர்

BT Year 6 6_Layout 1 10/2/2015 1:43 PM Page 209

## நடவடிக்கை 1

**காரணகாரியங்களுக்கு ஏற்பக் கருத்துகளைக் கூறுக.**

| காரணம் | | | காரியம் |
|---|---|---|---|
| 1. தேனீக்கள் கூட்டினில் சிறுவர்கள் கல் எறிந்தனர். |  |  | ______ |
| 2. ______ |  |  | தேசிய அளவில் வெற்றி அடைந்து பலரின் பாராட்டுகளைப் பெற்றனர். |
| 3. ______ |   |  | மருத்துவமனைக்குச் சென்று இரத்ததானம் செய்தனர். |
| 4. தாத்தா இனிப்பு வகை உணவுகளைத் தவிர்த்தார். |  |  | ______ |
| 5. ______ |  |  | சாலையில் போக்குவரத்து நெரிசல் பெரிதும் குறைந்திருந்தது. |
| 6. பெற்றோர் கொடுக்கும் பணத்தை அறிவழகன் சேமித்து வைத்தான். |  |  | ______ |

BT Year 6 6_Layout 1 10/2/2015 1:44 PM Page 210

## நடவடிக்கை 2

**சரியான காரணகாரியங்களைக் கூறிப் பண்புடன் உரையாடுக.**

| காரணம் | காரியம் |
|---|---|
| ஆர்வம், முயற்சி பயிற்சி, தன்னம்பிக்கை. |  இசைக் கருவியைச் சிறப்பாக மீட்டினாள். |
| பரிவு மனப்பான்மை, உதவி நல்குதல். காலம் அறிந்து செயல்படும் பண்பு. |  வெள்ள நிவாரண நிதி திரட்டப்பட்டது. பாதிக்கப்பட்டோருக்கு நன்கொடை அளிக்கப்பட்டது. |
|  பாதுகாப்புப் பட்டை | காவல் அதிகாரி மகிழுந்தை நிறுத்தினார். |
| டிங்கிக் காய்ச்சலின் அறிகுறிகள் தென்பட்டன. |  மருத்துவமனை |
|  கணினி விளையாட்டு, தொலைக்காட்சி அதிகம் பார்ப்பது. | கல்வியில் பின்தங்குதல், குறைந்த புள்ளிகளைப் பெறுதல். |

## நடவடிக்கை 3

**வாக்கியங்களை வாசித்துக் காரணகாரியங்களை எழுதுக.**

1. வெள்ளப் பேரிடரால் மக்கள் தங்களின் பல முக்கியமான உடைமைகளை இழந்து துன்பப்பட்டனர்.
2. சுழல் காற்றினால் சேதமடைந்த வீடுகள் சீரமைக்கப்பட்டன.
3. தாய்மொழியின் சிறப்பினை அறிந்த பெற்றோர் தங்களின் பிள்ளைகளைத் தமிழ்ப்பள்ளியில் சேர்த்தனர்.

BT Year 6 6_Layout 1 10/2/2015 1:44 PM Page 211



# பாடம் 2 சுற்றுச்சூழலைப் பேணுக

## வாசித்து அறிக.

மனித வாழ்வு இயற்கையோடு இணைந்திருப்பின் வளம் பெறும்; இல்லையேல் இருண்டு போகும். இன்றைய உலகில் பல துறைகளிலும் முன்னேற்றம் கண்ட நாடுகள் சுற்றுப்புறச் சூழலில் கவனம் செலுத்தாத காரணத்தினால் பலவித நோய்கள், இயற்கைப் பேரிடர்கள் போன்றவற்றினால் பாதிக்கப்பட்டுள்ளன.

அறிவியலின் துரித வளர்ச்சி மனித வாழ்வை மகிழ்ச்சிக் கடலுக்கு இட்டுச் சென்றாலும் பல வகையில் சுற்றுச்சூழலை மாசுபடுத்தியுள்ளது என்றுதான் கூற வேண்டும். எண்ணிலடங்கா மேம்பாடுகள் இயற்கையை மாற்றிப் பல வகையில் தூய்மைக்கேடுகள் ஏற்பட வழிவகுத்துள்ளன.

நிலம், நீர், காற்று, ஒலி போன்ற அனைத்தும் அறிவியல் வளர்ச்சியினால் பாதிக்கப்பட்டுள்ளன. ஒரு நாட்டின் மேம்பாட்டிற்குத் தொழிற்சாலைகள் பெரிதும் பங்காற்றுகின்றன. இத்தகைய தொழிற்சாலைகள் பல இடங்களில் கட்டப்படுவதால், குடியிருப்புப் பகுதிகளும் அங்கு வாழும் மக்களும் அவதிக்குள்ளாகின்றனர். தொழிற்சாலைகளிலிருந்து வெளியாகும் நச்சுப்புகை காற்று மண்டலத்தை மாசுபடுத்துகின்றது. மக்கள் நச்சு வாயுவைச் சுவாசித்துப் பலவித நோய்களால் அவதியுறுகின்றனர்.

தொழிற்சாலைகளிலிருந்து வெளியாகும் இரசாயனக் கழிவுகள் பூமிக்கடியில் உள்ள நீரையும், குளம், குட்டை, ஆறு, கடல் ஆகிய நீர்நிலைகளையும் மாசுபடுத்துகின்றன. மாசு படிந்த குடிநீர் பல உயிர்களுக்குத் தீமை விளைவிக்கின்றது.

தொழிற்சாலைகள் மட்டுமின்றி வாகனங்களிலிருந்து வெளியாகும் கழிவுப் புகையும் காற்று மண்டலத்தைத் தூய்மைக்கேடு அடையச் செய்கின்றது. நாளுக்குநாள் எண்ணிக்கையில் அதிகரித்து வரும் வாகனங்கள் இச்சூழலை மேலும் மோசமடையச் செய்கின்றன. ‘கார்பன் மோனாக்சைட்’ எனும் நச்சுக் காற்று, காற்றில் கலப்பதினால் மக்கள் நுரையீரல் நோய்களால் பாதிக்கப்படுகின்றனர்.



தொழிற்சாலைகள், வாகனங்கள் போன்றவை ஒலி மாசுபாடு அடையவும் காரணிகளாகத் திகழ்கின்றன.

2.3.10 சுற்றுச்சூழல் தொடர்பான பனுவல்களைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசிப்பர்.

BT Year 6 6_Layout 1 10/2/2015 1:44 PM Page 212

வாகனங்களின் அதிகமான சத்தம், தொழிற்சாலைகளிலிருந்து வெளியாகும் இரைச்சல், அமைதிச் சூழலை மாசுபடச் செய்து முதியோர், குழந்தைகள் எனப் பலருக்கும் தீமையை விளைவிக்கின்றன.

முன்னேற்றங்களைச் சுயநலத்திற்காகப் பயன்படுத்தும் மனிதர்களும் சுற்றுச் சூழலை மாசுபடுத்துகின்றனர் என்பது மிகவும் வேதனைக்குரிய செய்தி. சட்ட விரோதமான முறையில் காடுகளை அழித்து வீடமைப்புத் திட்டங்களுக்கும், பயிர் நிலங்களில் தொழிற்சாலைகளை எழுப்பியும் நாசப்படுத்துகின்றனர். மேலும், மலைகளைக் குடைந்து பாறைகளை வெட்டி எடுத்தும் பேரிடர்களுக்கு வழிவகுக்கின்றனர். காடுகள்தான் மண்ணரிப்பைத் தடுக்கும் முக்கியக் கருவி என்பதை இவர்கள் மறந்தே விடுகின்றனர். பொதுநலனைவிடத் தன்னலமே முதன்மை எனக் கருதி அழிவு வேலைகளில் ஈடுபடுகின்றனர்.

இவர்களின் இத்தகைய நடவடிக்கையால் மண்சரிவு, வெள்ளம் போன்ற பேரிடர்கள் உண்டாகின்றன. இதனால், பொது மக்கள் பலரும் வீடுகள், சொந்த உடைமைகள், வாகனங்கள், வளர்ப்புப் பிராணிகள் ஆகியவற்றை இழந்து தவிக்கும் நிலை ஏற்படுகின்றது.

இந்நிலை மாற வேண்டுமாயின், மக்கள் சமுதாயச் சிந்தனையுடன் செயலாற்ற வேண்டும். குடியிருப்பு இடங்களின் தூய்மையைப் பேண வேண்டும். காற்றைத் தூய்மையாக்கும் தன்மை மரங்களுக்கு உண்டு. எனவே, நம் வீட்டின் சுற்றுப் புறத்தையும் சாலையின் இருமருங்கையும் சோலைகளாக மாற்ற வேண்டும். ஆறு, குளம், ஏரி, கடல் போன்ற இயற்கைச் செல்வங்களைத் தூய்மையாகப் பாதுகாக்க வேண்டும். கண்ட இடங்களில் கழிவுகளைக் கொட்டுவதை நிறுத்த வேண்டும்.

இப்புவியில் வாழும் அனைவருக்கும் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற வாக்கு நிலைபெற நோக்கிய திசையெல்லாம் நாமின்றி வேறில்லை என்ற மனப்பக்குவம் ஏற்பட வேண்டும். ஒவ்வொருவரின் வீடும் வளம்பெறின், நாடும் வளம் பெறும். நாடு வளம்பெறின் இவ்வுலகம் நலம்பெறும். நாம் அனைவரும் உலகத்தோடு ஒன்றி ஒழுகி, 'யான்' 'எனது' என்ற குறுகிய மனப்பான்மையிலிருந்து விலகி 'நாம்' 'நமது' என்ற பரந்த மனப்பான்மை கொண்டு சுற்றுச்சூழலைப் பேணிப் பாதுகாப்போம்.



## நடவடிக்கை 1

**வினாக்களுக்கு விடையளித்திடுக.**

1. முன்னேற்றம் அடைந்த நாடுகள் சுற்றுச்சூழலில் கவனம் செலுத்தாத காரணத்தினால் ஏற்படும் விளைவுகள் யாவை?
2. இயற்கைக்கு மாறான தூய்மைக் கேடுகள் யாவை?
3. காற்றுத் தூய்மைக் கேட்டிற்கு முக்கியக் காரணங்கள் யாவை?
4. நீர் எவ்வாறு மாசுபடுகின்றது?
5. சுயநலமான மனிதர்கள் இயற்கைக்குப் புறம்பாகச் செய்யும் காரியங்கள் யாவை?

BT Year 6 6_Layout 1 10/2/2015 1:44 PM Page 213



# பாடம் 3 சிறந்தது

## வாசித்து எழுதுக.



துரித வளர்ச்சி கண்டு வரும் பல்வேறு நாடுகளில் மலேசியாவும் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. நாட்டின் வளர்ச்சிக்கு ஏற்ப இங்கு வாழும் மக்களின் வாழ்க்கைத் தரமும் உயர்ந்து கொண்டிருக்கின்றது.

இந்நாட்டு மக்களும் நாட்டின் வளர்ச்சிக்கு ஈடாகத் தங்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ள வேண்டும். வாழ்க்கைத் தரம் மேம்பாடு காண்பதற்குக் கிராம வாழ்க்கையைவிட நகர்ப்புற வாழ்க்கையே மிகச் சிறந்ததாகும்.

ஒவ்வொரு மனிதரின் வாழ்க்கைத் தரமும் உயர்வதற்குக் கல்வி மிகவும் அத்தியாவசியமாகக் கருதப்படுகின்றது. இத்துணை அவசியம் வாய்ந்த கல்வியை நாம் குறைவின்றிப் பெற நகர்ப்புறமே பெரும் பங்காற்றுகின்றது. ஒருவர் நிறைவான கல்வியைப் பெறுவதற்கான பல வசதிகள் நகர்ப்புறங்களில்தான் அதிகமாகக் காணப்படுகின்றன.

பாலர் பள்ளிகள், தொடக்கப் பள்ளிகள், இடைநிலைப் பள்ளிகள் ஆகியவற்றைத் தவிர்த்து உயர் கல்விக் கூடங்களும் பல்கலைக் கழகங்களும் நகர்ப்புறங்களில் உள்ளன. மாணவன் ஒருவன் பள்ளிக் கல்வியைத் தொடர்ச்சியாகவும் முழுமையாகவும் கற்றுத் தேர்வதற்கு வாய்ப்புகளும் வசதிகளும் அதிகமாக உள்ள நகர்ப்புறங்களே முதலிடம் வகிக்கின்றன.

கல்விக்கு அடுத்தபடியாக வேலை வாய்ப்புகள் என்று எடுத்துக் கொண்டாலும் அவற்றிற்கும் முதலிடத்தைப் பிடிப்பது நகர்ப்புறமே. அதிகமான வேலை வாய்ப்புகள் கிராமப்புறங்களைக் காட்டிலும் நகரங்கல்தான் இருக்கின்றன.

3.10.24 | 120 சொற்களில் விவாதக் கட்டுரை எழுதுவர்.

BT Year 6 6_Layout 1 10/2/2015 1:44 PM Page 214

இவற்றிக்குக் காரணம் எண்ணிலடங்கா அலுவலகங்கள், தொழிற்சாலைகள், கட்டுமானப் பகுதிகள், துரித வளர்ச்சித் திட்டப் பணிகள் என்று அடுக்கிக் கொண்டே போகலாம்.

நாகரிகமான முறையில் அடிப்படை வசதிகள் பொதுப் போக்குவரத்துச் சாதனங்கள், கண்களை ஈர்க்கும் தங்குமிடங்கள் ஆகியவை கிராமங்களைவிட நகர்ப்புறங்களே ஆக்கிரமித்துள்ளன. எனவேதான், பல இன மக்களும் போட்டி போட்டுக் கொண்டு நகர்ப்புற வாழ்க்கையை வாழ விரும்புகின்றனர்.

முன்னேற்றங்களின் அடையாளச் சின்னங்களாய் விளங்கும் பல மாடிக் கட்டடங்களை மட்டும் காணும் நாம், இயற்கை அழகையும் பசுமையையும் தரும் கிராமப் புறச் சூழ்நிலையை மறந்துவிட்டோம் என்றால் அது முற்றிலும் உண்மையே. பசுமைக் காட்சிகளையும் பச்சைப் புல்வெளிகளையும் கிராமப்புறங்களில் மட்டுமே அனுபவிக்க முடியும்.

ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நிமிடமும் பரபரப்பான வாழ்க்கையாக நகர்ப்புற வாழ்க்கை ஓடிக் கொண்டிருக்கிறது. காற்றுத் தூய்மைக்கேடு, ஒலித் தூய்மைக்கேடு, நீர்த் தூய்மைக்கேடு என்று பலவித அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளும் நகர்ப்புறத்தைவிட இதமான காற்று, இசையெழுப்பும் பலவிதப் பறவைகள், அவை தேடி அமரும் பசுமை மரங்கள், இளங்காலை சூரியோதயம், மாலை அஸ்தமனம் போன்ற இயற்கைப் புதையல்கள் அனைத்தும் அடங்கிய கிராமப்புறமே பல வகையிலும் சிறந்து விளங்குகிறது என்று சொல்ல வேண்டும்.



## நடவடிக்கை 1

**கொடுக்கப்பட்ட தலைப்புகளைக் கொண்டு விவாதக் கட்டுரை ஒன்றனை எழுதுக.**

1. கட்டுமானத்துறையைவிட விவசாயமே சிறந்தது.
2. அரசாங்கத் தொழிலைச் சார்ந்திருப்பதைவிடச் சொந்தத் தொழில் செய்வதே சிறப்பு.
3. நவீன உடையைவிடப் பாரம்பரிய உடையே சிறந்தது.



## நடவடிக்கை 2

**ஏதேனும் ஒரு தலைப்பினைத் தெரிவு செய்து வகுப்பறையில் விவாதம் செய்க.**

### தகவல் உலகம்

**விவாத விதிமுறைகள்**

- கருப்பொருளை மட்டும் விவாதிக்கவும்.
- கருத்தைத் தெளிவாகவும் விரிவாகவும் முன்வைக்க வேண்டும்.
- ஒருவரின் கருத்தை மட்டும் எடுத்துக் கொண்டு விவாதிக்கவும்.
- கருத்துகளுக்கு மேற்கோள் காட்டலாம்.
- நடுவரின் கருத்திற்குக் கட்டுப்படுதல் வேண்டும்.




# பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

## பழமொழிகளையும் பொருளையும் அறிக.

ஐயோ! என்ன இது? இன்று எனக்கு வேலையே ஓடவில்லையே! மனமே சரியில்லை. பாவம் என் மகன்; என்றுமே அவனை அடிக்காத நான் இன்று அவனை அடித்துவிட்டேனே! அவன் கதறி அழுதது இன்னும் என் மனக்கண்ணில் நிழலாடுகிறது.

ஐந்து வயதே நிரம்பிய என் மகன் பிடிவாதம் கொண்டவன். அப்பா சொல்லுக்குக் கட்டுப்படாதவன் என் சொல்லுக்கு அப்படியே 'பெட்டிப் பாம்பு' போல் அடங்கிவிடுவான். **கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும்** என்பார்கள். உண்மைதான். ஆனால், இன்று மட்டும் ஏன் அப்படி நடந்து கொண்டான் அவன். மனம் வேதனைப்பட்டது.

வழக்கம்போல் அலுவலகத்திற்குப் புறப்படுவதற்கு முன் காலைச் சிற்றுண்டியை ஊட்டிவிட நினைத்தேன். சாலை நெரிசல், சரியான நேரத்திற்குள் பணிமனை சென்று சேர வேண்டும். இப்படிப் பல பிரச்சினைகளினூடே அவசர அவசரமாகக் கிளம்பினேன். நிலைமையை மேலும் மோசம் அடையச் செய்தது எனக்கும் என் கணவருக்கும் ஏற்பட்ட வாக்குவாதம். தொலைக்காட்சி பழுதாகிவிட்டதால் என்னால் நாடகங்களைப் பார்க்க முடியாமல் போனதுதான் எங்களின் வாக்குவாதத்தின் காரணமாகும். ஒரு கணம் என்னையே நொந்து கொண்டேன்.



கோபக் கனல் கண்களில் தெறிக்க மகனை அழைத்தேன். பாசத்துடன் ஓடிவந்தவனை வற்புறுத்திக் காலைச் சிற்றுண்டியை ஊட்டினேன். விளையாடிக் கொண்டிருந்தவனைத் திடீரென்று அழைத்து அமர வைத்ததால் சாப்பிட முடியாதென அடம் பிடித்தான்.

ஆத்திரம் என் கண்களை மறைத்தது. என் உள்ளுணர்வு அவனைக் கட்டாயப்படுத்தி உணவை ஊட்டத் தூண்டியது. 'ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு' என்பதற்கு என் செயலே சாட்சியானது. வேண்டாம் என்று மறுத்து என் கையை ஒதுக்கினான். அடுத்து, என் கையைத் தட்டிவிட்டான். அவனது கன்னத்தையும் முதுகையும் என் கைகள் பதம் பார்த்தன.


4.13.6 ஆறாம் ஆண்டுக்கான பழமொழிகளின் பொருளை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

BT Year 6 6_Layout 1 10/2/2015 1:44 PM Page 216

ஏன் எனக்கு இவ்வளவு சினம்?
**'எய்தவன் இருக்க அம்பை நோவானேன்'**

துக்கம் தொண்டையை அடைக்க விருட்டென்று அலுவலகத்திற்குப் புறப்பட்டுவிட்டேன். எனக்கு அங்கு வேலை ஓடவில்லை. மனம் வருந்தினேன். நாள் முழுக்க மகனின் நினைவுதான். வேலை முடிந்தவுடன் மகனுக்குப் பிடித்த விளையாட்டுப் பொருள்களை வாங்கிக் கொண்டு இல்லத்தில் நுழைந்தேன். அவனோ என்னைப் பார்த்ததும் ஓடிவந்து கட்டிக் கொண்டான்.

தன் மழலைக் குரலில், "அம்மா ஏன் இவ்வளவு நேரம்?" என்று என் கன்னத்தில் மாறி மாறி முத்தமிட்டான். மனத்திற்குள் என்னை மன்னித்துவிடு கண்ணா என்று வாரி அணைத்துக் கொண்டேன்.



## பழமொழிகளும் பொருளும்

- **கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும்**

எப்படிப்பட்ட பிடிவாத குணம் கொண்டவரிடமும் பக்குவமாக எடுத்துக்கூறினால் அவர் மனம் இரங்கி விடுவார்.

- **எய்தவன் இருக்க அம்பை நோவானேன்**

குற்றத்திற்குக் காரணமாக உள்ளவனை விடுத்து மற்றவரை நொந்து கொள்வதில் பயனில்லை

## தகவல் உலகம்

**வாக்கிய இயைபு**
- வண்டிகள் ஓடா
- செய்திகள் வாரா
- அவை இங்கே உள
- மக்கள் இல்லை
- அவை எல்லாம்
- ஒன்றோ இரண்டோ தருக
- மலாக்கா எனும் நகரம்
- ஏற்கத்தக்கது அன்று
- அவள் தங்கை

## நடவடிக்கை 1

**சூழலுக்கு ஏற்ற பழமொழியை எழுதுக.**


1. வீட்டிற்கு வந்த அப்பாவிடம் கயல்விழி, நயமாகப் பேசி வெளியே செல்ல அனுமதி பெற்றாள்.
2. நண்பனுடன் ஏற்பட்ட வருத்தத்தினால் சக தொழிலாளர்களிடம் எரிந்து விழுந்தான் கோபி.

BT Year 6 6_Layout 1 10/2/2015 1:44 PM Page 217



# பாடம் 5 இலக்கணம்

## வலிமிகா இடங்களை அறிக.




➤ சொற்றொடர்களில் வருமொழி ‘க், ச், த், ப்’ ஆகிய வல்லெழுத்துகளில் தொடங்கினாலும் நிலைமொழி ஈற்றில் சில இடங்களில் வலிமிகாது.

ன்று, ந்து என்று முடியும் வினையெச்சங்களின் பின் வலிமிகாது.

**எடுத்துக்காட்டு** ➤

| | | | | |
|---|---|---|---|---|
| சென்று | + | பார்த்தான் | = | சென்று பார்த்தான் |
| அறிந்து | + | கொண்டனர் | = | அறிந்து கொண்டனர் |

## நடவடிக்கை I

**சேர்த்து எழுதுக.**

1. விரைந்து + சென்றார் = ______
2. வரைந்து + பார்த்தேன் = ______
3. மென்று + தின்றது = ______
4. புரிந்து + கொண்டாள் = ______

5.9.8 ன்று, ந்து என முடியும் வினையெச்சத்தின் பின் வலிமிகாது.

## நடவடிக்கை 2


**சேர்த்து எழுதுக.**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| வென்று | + | சென்றான் | = | | கொன்று | + | தின்றது | = | |
| தெரிந்து | + | கொண்டோம் | = | | சிவந்து | + | போனது | = | |
| சென்று | + | கூறினான் | = | | பறந்து | + | சென்றன | = | |
| அறிந்து | + | கொண்டாள் | = | | கறந்து | + | கொடுத்தான் | = | |
| மறைந்து | + | போனது | = | | மறந்து | + | சென்றார் | = | |
| மென்று | + | தின்றன | = | | திறந்து | + | பார்த்தாள் | = | |

## நடவடிக்கை 3

**வாக்கியங்களில் சரியான வினையெச்சங்களை எழுதுக.**

**எடுத்துக்காட்டு :** துருவன் விளையாட்டுப் போட்டியில் பல பரிசுகளை வென்று குவித்தான்.



1. ஆதிமனிதர்கள் காட்டு விலங்குகளைக் ________.
2. மாடுகள் தோட்டத்திலுள்ள பயிர்களை ________.
3. குமுதன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த தன் மாமாவைச் ________.
4. அம்மா வீட்டின் அழைப்பு மணியைக் கேட்டு வாசல் கதவைத் ________.
5. ஆசிரியர் கூறிய கருத்தை மாணவர்கள் ________.
6. பூனையைப் பார்த்ததும் புறாக்கள் அனைத்தும் ________.
7. முகிலனின் கண்ணில் தூசு விழுந்ததால் ________.
8. அம்மா சமைத்த உணவுகளைக் கபிலன் ________.
9. அக்காள் அலுவலகத்திற்குத் தினமும் சேலை ________.
10. மோதிரத்தை வைத்த இடத்தை அம்மா ________ வீட்டில் பல இடங்களில் தேடினார்.

